# ஸ்ரீ பகவத் கீதாஸாரமும் பாத்ம புராண கதைகளும்

கீதா மாஹாத்ம்யம் கீதாநுஷ்டாநம்
ஸ்ரீ சர்மாவின் கீதோபதேச ரத்நமாலை
ஸ்ரீ தேசிகனது கீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டு
ஸ்ரீ பகவத்பாதகீதாசயமும் உள்ளது.


பிரும்மஸ்ரீ நாராயணயஜ்வாவின் சிஷ்யன்
ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா
அவர்களால் இயற்றப்பட்டது.



N. ராஜம் & கம்பெனி,
வேப்பேரி, சென்னை.

காபி ரைட்] 1940. [விலை 6 அணா

Printed at

GODLAND & Co.,

3/19, Armenian Street, G. T., Madras



Swami Sivananda

OM.

# FOREWORD

BY

H. H. SRI SWAMI SIVANANDA SARASWATHI,
Founder & President,
The Divine Life Society, 'Ananda Kutir'—Rishikesh.

---

The Bhaghavad Gita is a gospel for the whole world. It is meant for the generality of mankind. It was given out in the battlefield of Kurukshetra by Lord Krishna to Arjuna.

The Gita is not only a Yoga-Sastra or the Scripture of Yoga but also Brahma-Vidya or the Science of the Eternal in the form of a song. It contains the quintessence of the Upanishads.

Its teachings are broad, universal and sublime. Its teachings do not belong to any cult, sect, creed, particular age, place or country. Its teachings are meant for the people of the whole world at large. The teachings are based on the Upanishads, the ancient metaphysical classics of India which contain the ancient wisdom of the Seers, Rishis and Sages. It teaches a method which is within the reach of all. It has a message for the solace, peace, freedom, salvation and perfection of all human beings.

It helps to solve not only Arjuna's problems and doubts but also the world problems and doubts of every individual. What a magnanimous and wonderful book! Glory to Gita! Glory to Lord Krishna the friend of the cowherds of Gokula, the Joy of Devaki!!

The whole world is a big battle-field. The real Kurukshetra is within you. The battle of Mahabharat is still raging within you. The Indweller who dwells in your heart is Lord Krishna, the Charioteer. Body is your chariot. The Indriyas are horses. Mind, egoism, senses, samskaras, vasanas, cravings, raga-dwesha, lust, jealousy, greed, pride, hypocrisy, are your dire enemies.

Hold the magnificient torch of faith. Float high the unique banner of peace. Wear the magnanimous shield of dispassion. Put on the marvellous coat-of-arms of discrimination. Sing the immortal song of Soham or Sivoham or Rhade Shyam or Sita Ram. March boldly with the band of Pranava, Om, Om, Om. Blow the wonderful conch of courage. Kill the enemies, doubt, ignorance, passion and egoism and enter the illimitable kindgdom of Atma. Taste the Divine Immortal Essence. Drink the Nectar of Immortality!

It is highly gratifying to note that the lectures delivered on the greatness of Gita by Srivatsa Pandit V. Somadeva Sarma, a great scholar of vast erudition and direct disciple of Sri Sankaracharya of Kanchi Kamakoti Peetam, under the auspices of the Villupuram Branch of Divine Life Society are now printed in a book form.

This work is a masterly treatise. It explains the greatness of the Gita, with connected stories from Padmapurana which are very impressive.

The learned author has indeed handled the subject in a masterly manner. The style is very lucid and charming.

We recommend this valuable book to all Tamil-knowing people, all libraries and all aspirants. Even if one man is really benefitted by the study of this book, the author's endeavour to serve the humanity is indeed amply rewarded.

Sri Somadeva Sarma, Sahitya Vangmukh Bhusan, is a great asset to the spiritual world. He is an able propagandist, and a fine exponent of Gita and other Scriptures. He works hard for the dissemination of spiritual knowledge. His lectures are thrilling and inspiring. May he Shine as a Dynamic Yogi! May lord bestow on Him long life, all Iswaryas, Vidya and Kaiwalya!

"ANANDA KUTIR,"
*Rishikesh,*
1—10—1940.

SWAMI SIVANANDA.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரும்
ஹ்ருஷீகேசம் தெய்வநெறிக் கழக தலைவருமான

# ஸ்ரீ ஸ்வாமி சிவாநந்தரவர்கள் ஸ்ரீமுகம்.

உலகமனைத்திற்கும் உபதேச நூலாக விளங்குவது பகவத்கீதை. அது பொதுவாக மனித ஸமூகத்திற்கே ஏற்பட்டது. அது குருக்ஷேத்ரத்தில் யுத்தரங்கத்தில் கிருஷ்ண பகவானுல் அர்ஜுநனுக்கு வெளியிடப்பட்டது.

கீதை யோக சாஸ்த்ரம் மாத்ரமல்ல. சுலோகவடிவமான அமிருதத்தை அளிக்கும் பிரும்மவித்தையுமாகும்! அது உபநிஷத்துகளின் ஸாரம் நிறைந்தது.

அதன் உபதேசங்கள் மஹத்தானவை. இஹபர சாதகங்களானவை. மிகமிகச் சிறந்தவை. அதன் உபதேசங்கள் ஒரு மதத்திற்கோ வகுப்பிற்கோ ஜாதிக்கோ ஒரு காலத்திற்கோ இடத்திற்கோ தேசத்திற்கோ மாத்ரம் சொந்தமானதல்ல. அது விசாலமான ஸமஸ்த உலகிற்கும் ஏற்பட்டதாகும். பிரும்ம சாக்ஷாத்காரம்செய்த ரிஷிகளின் அறிவு நிறைந்ததும் இந்தியாவின் சிறந்தனமான அத்யாத்ம பரோக்ஷ க்ஞானமாயுள்ள உபநிஷத்துக்களையே அடிப்படையாகக்கொண்டது கீதையின் உபதேசங்கள். அது எல்லோரும் சுலபமாக அடையக்கூடிய வழியைப் போதிக்கிறது. அது சகல ஜநங்களும் ஆறுதல் சாந்தி ஸ்வாதந்த்ரியம் மோக்ஷம் பூர்ணதை இவைகளை அடைவதற்காக வந்த ஒரு ஸந்தேசமாகும்.

அது அர்ஜுநனது துன்பத்தையும் சந்தேஹத்தையும் மாத்ரம் அகற்றவந்ததல்ல. உலக துன்பத்தையும் ஒவ்வொரு ஜீவனது துன்பத்தையும் சந்தேஹத்தையும் அகற்றி உபகரிக்கும் நூலாம். ஆஹா! கீதை எவ்வளவு பெருந்தன்மையும் ஆச்சர்யமும்வாய்ந்த நூல்!! கீதையின் பெரு-

மையே! பெருமை!! தேவகியின் பேராநந்தமும் கோகுலத்திலுள்ள கோபாலர்களின் மித்ரனுமான கிருஷ்ண பகவானது பெருமையே! பெருமை!!

ஸமஸ்த உலகமுமே ஓர் யுத்தபூமி! உண்மையான குருக்ஷேத்ரம் உன்னிடமே உள்ளது. மஹாபாரத யுத்தம் உன்னிடமே நடக்கிறது. திருதராஷ்டரனே அக்ஞானம். தனித்தனி ஜீவனும் அர்ஜுனனும். உனது உள்ளே வஸிக்கும் பகவான் கிருஷ்ணனே ஸாரதி. உனது உடலே ரதம். இந்திரியங்களே குதிரைகள். புத்தி அஹங்காரம் புலன்கள் ஸம்ஸ்காரம் வாசனை பேரவா ராகம் த்வேஷம் லோபம் மாத்ஸர்யம் பேராசை கர்வம் கபடம் முதலியவைகளே உனது பயங்கரமான சத்ருக்கள்.

திவ்யமான ச்ரத்தை எனும் பந்தத்தைப்பிடி! சாந்தி எனும் அரிய த்வஜத்தை உயரே பரக்கவிடு! வைராக்யமெனும் கேடயத்தை எடுத்துக்கொள்! விவேகமெனும் அற்புதமான கவசத்தை அணிந்துகொள்! ஸோஹம்! சிவோஹம்! ராதேச்யாம்! ஸீதாராம்! எனும் சாச்வதமான யுத்த கானத்தைப்பாடு! ஓம் ஓம் என யுத்த படஹம் ஒலிக்க தீரனுக நட! தைர்யமெனும் சங்கைஊது. ஸம்சயம் அக்ஞானம் ஆசை அஹங்காரம் முதலிய சத்ருக்களைக் கொல்! எல்லையில்லாத ஆத்ம ராஜ்யத்தில் நுழை! அழிவற்ற ஆத்ம தநத்தை ஸ்வாதீநமாக்கிக்கொள்! திவ்யமாய் அழிவற்றதாயுள்ள சாரத்தின் ருசியைப்பார்! அழிவில்லா அமிருதத்தை அருந்து!!

நன்ருகக் கற்றுணர்ந்த பண்டிதரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் பிரிய சிஷ்யருமான பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா விழுப்புரத்திலுள்ள தெய்வநெறி கழகத்தின் ஆதரவில் ஸ்ரீ கீதையின் மாஹாத்ம்யத்தைப் பற்றி செய்த உபன்யாசம் புஸ்தக வடிவமாக வருவதைக்காண மிகவும் சந்தோஷமாயிருக்கிறது.

இது மிகவும் சிறந்த நூல். மநதில் ஆழ்ந்து ஊன்றும் படியான பாத்மபுராண கதைகளால் கீதையின் பெருமை மிக அழகாக வர்ணிக்கப்படுகிறது. வித்வானுன ஆசிரியர் இவ்விஷயத்தை மிகத் திறமையுடன் கம்பீரமாகக் கையாண்டிருக்கிருர். இதன் நடை மிகத்தெளிவாகவும் மனோஹரமாகவும் இருக்கிறது.

இவ்வரிய நூல் ஒவ்வோர் தமிழர் வீட்டிலும் புத்தக சாலையிலும் முமுக்ஷுவினிடமும் அவச்யம் இருக்க வேண்டியது. இதைப் படிப்பவரில் ஒருவரேனும் நன்மை பெற்ருல் இவ்வாசிரியர் செய்துவரும் சமூஹத்தொண்டிற்கு சரியான சன்மாநம் செய்ததாகும். ஸாஹித்ய வாங்முக பூஷணம் ஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா வேதாந்த உலகிற்கு ஒரு பெரும் நிதியாவார். அவர் ஒரு சிறந்த உத்தம ப்ரசாரகர். கீதையையும் மற்ற புராணங்களேயும் மிக அழகாகவும் ரசமாகவும் உபன்யஸிப்பதில் சமர்த்தர். வேதாந்த ஞானம் உலகில் பறவுவதற்காக அவர் மிக ச்ரமப் பட்டு வேலைசெய்கிருர். அவரது உபன்யாசம் உருக்கமாகவும் கேட்பவர் பரவசமாகும்படியு மிருக்கிறது. அவர் ஓர் ஒப்பற்ற சக்திவாய்ந்த யோகியாய் ப்ரகாசிப்பாராக! இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையும் வித்தையையும் கைவல்யத்தையும் அளிப்பாராக!!

**ஸ்வாமி சிவாநந்தா,**

ஆநந்தகுடீரம், ஹ்ருஷீகேசம்,

*1—10—1940.*

# ஆசிரியர் முன்னுரை.

ஹ்ருஷீகேசத்திலிருந்து ஸ்ரீஸ்வாமி சிவாநந்தா செய்யும் மத ப்ரசாரம் மட்டல்ல, அவர் எழுத்துகளைவிடை அபார மான ஆத்யாத்மிகசக்தி அதிவிசித்ரமான ப்ரசாரம் செய் கிறது, அன்னவர் அருளுக்குப் பாத்ரமான டாக்டர் V. S. மணி தெய்வநெறிக்கழக மஹாநாடு நடத்தி அதன்சார்பில் கீதோபன்யாசம்வைத்து அதை அச்சிட நினைத்ததற்கு ஸ்ரீ சிவாநந்தர் அருள்மாத்ரமின்றி அருணையில் கருணையின் வடிவமாயமைந்த ஸ்ரீ ரமணனின் கடாக்ஷமும் காரணமாம்.

சென்னையில் பல அரிய நூல்களை வெளியிட்டு ஸ்ரீ மாதாவின் அநுக்ரஹத்திற்குப் பாத்ரமான N. ராஜம் & கம்பெனி, இதை அச்சிட முந்தியதும், அரிய பல அம்சங் களை இத்துடன் சேர்க்கப் பிரார்த்தித்ததும், இதைக் கடா க்ஷித்து, அத்புதமான ஸ்ரீமுகத்தை ஸ்ரீ சிவாநந்தர் அருளிய தும், ஸ்ரீ காசிகீதாமடம் நைஷ்டிக பிரும்மசாரி அபிநவ காளிதாஸரெனத் தகும் பிரும்மஸ்ரீ. கிருஷ்ண சாஸ்திரி கள், அபிநந்தந மெழுதியதும் எனக்கு மாத்ரமில்லாமல் தக்ஷிண தேசத்திற்கே ஓர் பாக்யமெனக் கருதுகிறேன்.

கோரக்பூர் கீதாபிரஸில் அதிகாரிகள் செய்யும் கீதா பிரசாரம் இத்தகையதென தமிழ்மக்கள் அறியவேண்டும் என அதில் வெளியான கீதாமாஹாத்ம்யம், கீதாநுஷ்டா னம், இவைகளை இதில் சேர்த்தேன். இதில் கண்டபடி ஜபம்செய்தோ அல்லது கீதையின் பெருமையை உணர்ந்து *பாராயணம் செய்தோ பக்தர்கள் இஹபரசுகம் பெற வேண்டுமென்பது எனது அவா. இவ்வரிய வேதாந்த

* இந்நூலைப் பூஜைசெய்து ப்ரதிதிநம் ஒரு அத்யாயமா வது படிக்கவும்.



ஸாஹித்ய வாங்முக பூஷணம்

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவ சர்மா

நூலில் பலருக்குப்ரவிருத்தி உண்டாகாது. கதையுடன் கலந்தால் சர்க்கரையுடன் கலந்த மருந்துபோல் எல்லோரும் எளிதில் உண்ணலாமென பாத்ம கதை இத்துடன் சேர்க்கப்பட்டது.

இவ்வளவு சுறுக்கமாகவும் எளிதாகவும் உள்ள நூலைக்கூட சிலர் படிக்க அவகாசமில்லை என்பர். அவர் பொருட்டு கீதோபதேசரத்னமாலை எழுதப்பட்டது. அதற்கும் அவகாசமில்லை என்போர், ஸ்ரீ தேசிகனது கீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டையேனும் படிக்கட்டுமென அதைச் சேர்த்தேன். இவ்வளவு விஷயத்தில் எதையேனும் கைக்கொண்டு எவரேனும் நற்கதியடையட்டுமென்பதே எங்கள் எண்ணம். அதற்கிசைய விலையும் அதிகம் வைக்கவில்லை. எதைக் கருதியேனும் தமிழ் படிக்கத்தக்க ஒவ்வொருவரும் இதைப்படிக்க பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீமுகத்தினுல் இந்நூலுக்கே ஓர் திவ்ய சக்தியை அநுக்ரஹித்த ஸ்ரீ பரமஹம்ச ஸ்ரீ சிவாநந்த ஸ்வாமிகள் திவ்ய பதகமலங்களுக்கு அநந்தகோடி வந்தனம். ஸ்ரீ காசி கீதாமடம் ஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகள் உத்ஸாஹப் படுத்தியதற்காக அன்புடன் அநேக நமஸ்காரம். உபந்யாசம் செய்வித்ததுடன் அச்சிட முயற்சித்து அழகிய முகவுரையும் எழுதிய மித்ரமணியான டாக்டர் V. S. மணியின், தேஹாரோக்யத்துடன் இஹபர சிரேயஸ்ஸையும் வேண்டுவது என் கடன். அச்சு இயற்றிய N. ராஜம் & கம்பெனிக்கும், காட்லண்ட் கம்பெனிக்கும், அளவில்லா நன்றி செலுத்தல் அவசியத்திலும் அவச்யமாம்.

ஓம் தத் ஸத்.

சாந்தாச்ரமம்,
சென்னை.

ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவ சர்மா.

# முகவுரை.

கண்ணன்கறந்த ஆவின்பால் பாரதத்தில்உளது. வேத சாரமான உபநிஷதங்களே பசுக்கள். நந்தகோப குமார னுன பரமாத்மாவே பாலைக்கறந்தவர். பார்த்தனேகன்று. சித்திசுத்தியுள்ள மஹான்களே அதை அருந்துபவர்கள். கீதையே பெரியோரருந்தும் பால். என்னே அதன் மஹிமை! பாத்ம புராணத்தில் கீதாமாகாத்ம்யம் வெகு அருமையாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. பாத்ம புராண கதைகளுடன் ஸ்ரீ பகவத்கீதையின் கருத்து எல்லோர் மனதிலும் பசுமரத்தாணிபோல் பதிவதற்கு அநேக புராண கதைகளுடன் பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவ சர்மா அவர்கள், விழுப்புரம் தைவநெறிக் கழகத்தினுதரவில் விக்ரம ஆண்டு வைகாசி மாதத்தில் பல உபன்யாஸங்களைச் செய்தார்கள்.

பிரமாதி ஆண்டு மார்கழி மாதத்தில் (1939 டிஸம்பர்) விழுப்புரத்தில் கூடிய சென்னை மாகாண தெய்வநெறிக் கழகத்தின் முதல் மகாநாட்டில் பற்பல மதஸ்தர்களும் சிறியோரும் பெரியோரும் ஆண்மக்களும் பெண்மக்களும் உத்யோகஸ்தரும் அல்லாதாரும் கற்றவரும் மற்றவரும் தனிகரும் ஏழையும் ஒன்றுகூடி இருந்தனர். நவாப் தோப்பில் அதற்கென அமைக்கப்பட்டிருந்த அழகிய விஸ்தாரமான பந்தலிலே பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடி நிச்சப்தமாகயிருந்து காலங்கடப்பதையும் பசியையும் மழையையும் மழைபோல் பெய்த பனியையும் மதியாது பக்தி ச்ரத்தையுடன் பல பண்டிதர்கள் கூறிய அருள்மொழிகளைச் செவியுற்றனர்.

அவ்வமயம் ஸ்ரீமான் சர்மா அவர்கள் பக்தி ஜபம் முதலிய விஷயங்களைப்பற்றி செய்த உபன்யாஸம் எல்லோராலும் மிகக்கொண்டாடப்பட்டது. விழுப்புரம் வாஸிகள்

ஸ்ரீசர்மா புராணப்ரவசநத்தைக்கேட்க அவாகொண்டனர். சென்னை வாஸிகள் ஸ்ரீ சங்கர மடத்தில் ப்ரதிதிநம் கேட்கும் புராணங்களைத் தாங்கள் கேட்க முடியவில்லையே என ஏங்கினர். இங்கு கீதோபன்யாஸம் ஏற்படுத்தப்பட்டது ஜநங்களிடையே மிக குதூஹலத்தை உண்டுபண்ணிற்று. ஹநுமார் கோவில் பிராகாரத்தில் வெகு அழகாக ஓர் மண்டபம் நிறுவி அதன் மத்தியில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் படமும் எங்கள் குருநாதர் ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ சிவாநந்த ஸரஸ்வதிகளின் படமும் வைக்கப்பட்டது.

மண்டபத்தின்முன் வியாஸபீடம் அமைத்து கோயிலை மின்சார விளக்குகளால் அலங்கரித்தோம். பூஜைக்குப் பிறகு உபன்யாசகரை வ்யாஸபீடத்திலமரச் செய்து பக்தி சிரத்தையுடன் எல்லோரும் கீதா உபன்யாஸங்களைக் கேட்டோம். அந்த வைபவத்தை நேரில் அனுபவித்தாலன்றி எழுத்தால் வர்ணிப்பது ஸாத்யமில்லை. மஹாஜநங்கள் விசேஷமாக பெண்மக்கள் கூட்டம் கூட்டமாக வெகு தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்துவந்து முன்னுதாகவே அமர்ந்து உபன்யாஸத்தைக்கேட்டு இரவு விழுப்புரத்திலேயே தங்கி காலையில் ஊர்சென்றனர். விச்வரூப தர்சந கட்டத்தை அதிவிமர்சையாக நடத்தியதும், அன்று ஆயிரக் கணக்கான பக்தர்களுக்குப் பாநகம் முதலிய ப்ரஸாதமளித்ததும், உக்ரமான விச்வரூபம் சாந்தமானதுபோல் உஷ்ணதாபமடங்க தேவர்கள் ஆநந்த பாஷ்பம் சொறிந்ததுபோல் நல்ல மழை பொழிந்ததும், அந்த அடை மழையிலும் திரள் திரளாக ஜநங்கள் உபன்யாஸம் கேட்கவந்த விந்தையும் சொல்லிலடங்காதது.

உபன்யாஸத்தின் வசீகரத் தன்மையால் பக்தர்கள் பரவசமாக ச்ரவணம் செய்ததும் குருக்ஷேத்ரத்தில் இப்படித்தான் கீதை நடந்திருக்கும் என்ற எண்ணத்தைஉண்டு பண்ணிற்று. அந்த ஸபைச் சிறப்பை அனுபவித்தவர்தான்

அறியமுடியும். அங்கு பகவத் ஸான்னித்யம் அமைந்திருந்தது என்பது அதிசயோக்தி ஆகாது. கலியினாலும் ஆங்கில ஆக்ஷியினாலும் நமது ஸநாதந தர்மத்திலுள்ள ச்ரத்தை குறைந்து அவநம்பிக்கை அதிகமாயிருக்க அதர்மம் செழிக்கும்போதும் தர்மம் குறையும்போதும் யான் அவனியில் அவதரிக்கிறேன் என்று கண்ணன் கூறியதுபோல் இச் சமயம் இக்கீதா உபன்யாஸம் ஏற்பட்டது தைவஸம்மதமே போலும். இதைக் கேட்டவரது மநதிலுள்ள அவநம்பிக்கை அடியோடு அகன்று கூடியவரை ஸதாசாரங்களைப் பின்பற்றியது குறிப்பிடத்தக்கதாம்.

மிக ரசமாகவும் அற்புதமாகவும் அமைந்த இவ்வரிய உபன்யாஸத்தை இச்சபையின் சார்பிலேயே அச்சிட அவா தோன்றிற்று. ஆஸ்திகத்தை வலிவுறச் செய்யும் இவ்வுபன்யாசரத்நங்களைப் புத்தகமாகவெளியிட பரோபகார சிந்தையுள்ள சென்னை N. ராஜம் & கம்பெனியாரவர்கள் முந்திக்கொண்டார்கள். அவர்களுக்கு ஆஸ்திகரனைவரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இச்சபை ஆரம்பித்தவரும் தலைவருமான ஸ்ரீ குருநாதர் ஸ்ரீ சிவாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகளின் மிகப்பெருமைவாய்ந்த முன்னுரையும் சேர்ந்தது பொன்மலர் வாஸனையுமுள்ளது போலாயிற்று.

ஆதலின் இம்மை மறுமைச் சுகங்களை வேண்டும் ஒவ்வோர் இந்தியன் வீட்டிலும் இந்நூல் இருத்தலவச்யமாம். உபன்யாஸ சிரமத்துடன் அக்குறிப்பைப் புத்தகவடிவமாக வெளிவர பேருதவிசெய்த பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸசர்மா அவர்களுக்கு நன்றிசெலுத்துவதுடன் குருநாதர்கூறியவண்ணம் நீண்ட ஆயுளையும் ஆரோக்யத்தையும் அவருக்கு அளிக்குமாறு பரமனை வணங்கி வேண்டுகிறேன்.

ரமணாலயம்,
விழுப்புரம்,
விக்ரம புரட்டாசி 21

**வெ. சு. மணி,**
தெய்வநெறிக் கழகத் தலைமைச்
சங்க நிர்வாஹ சபை, அங்கத்தினர்.

# அபிநந்தநம்.

प्रत्यध्याय समस्तसार भगवद्गीता प्रभावं पुरा
ख्यातं पद्मपुराण सुन्दर कथाजालेन संपादितं ।
अस्मद्द्राविडभाषया सरलया दृष्ट्वानुमोदेऽधुना
श्रीवत्सान्वयभूषणेन विदुषा श्री सोमदेवेनच ॥
शास्त्राभ्यासविहीन साधुजनतानन्दाय भूयादयं
ग्रन्थः पण्डित पामराखिल मनस्सन्तोषदायी सदा ।
चित्रापूर्वकथामुखेन सरसं सारोपदेशेनच
श्रीमद्देशिक गीतसार वचन व्याख्यानदानेनच ॥

மஹாமஹோபதேசக ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்களைப் பார்த்து கொஞ்சம் பழகும்படி பாக்யம் கிடைத்தது. இவர்களைப் போன்ற உத்தமர்களின் பழக்கம் கிடைப்பது அரிது. இவர் சிறந்த பாண்டித்யத்துடன் அபாரமான வாக்விலாஸத்தால் பகுஜநங்களுடைய மநதைக் கவரக்கூடிய சக்தியும் ஆசாரமும் நற்குணங்களுமுடையவர். இவர் தன்னுடைய உத்யோக காலத்தைத் தவிர பாக்கி சமயத்தை எல்லாம் அதிகமாக பரோபகாரத்திற்கே அர்ப்பணம் செய்துவருகிறார். நீண்ட காலமாகவே நித்யம் பல விடங்களில் பல புராண ப்ரவசநங்களாலும் ஸரசமான உபன்யாசங்களாலும் இவர் பகுஜநங்களை நல்வழிக்கு ஆளாக்கிவரும் விஷயம் எல்லோரும் அறிந்திருக்கலாம். தவிர,

ஸ்ரீ சங்கரோபதேச ரத்நம், பாத்ம, பிரும்ம, பிரும்ம வைவர்த்த, கூர்ம, வாமந, மார்க்கண்டேய எனும் புராணங்களையும் எளிய தமிழ் நடையில் வெளியிட்டிருக்கிறார். இப்போது இவர் வெளியிடும். "ஸ்ரீ பகவத் கீதாஸாரமும் பாத்மபுராண கதைகளும்" என்ற நூலை நான் பார்த்தேன். இதில் கீதையின் ஒவ்வோர் அத்யாய ஸாரத்தையும், பாத்ம புராணத்தில் கதையால் கூறியிருக்கும் அபாரமான அதன் மாஹாத்ம்யத்தையும் தமிழில் எளிய நடையில் எல்லோருக்கும் நன்கு விளங்கும்படி ஸரசமாகக் கூறிஇருக்கிறார்.

நமது வீட்டில் வெகுநாளாக தெரியாமலிருந்த நிதியை ஆப்தரான ஒருவர் ஏழையான நமக்கு எடுத்துக்கொடுத் தாற்போல் அநேகம் பண்டிதர்களுக்குக்கூட பகுகாலமாக தெரியாத பத்மபுராண கதைகளால் கூறியிருக்கும் ஒவ் வோர் அத்யாயத்தின் வைபவத்தை இவ்விதம் ஆபாலகோ பாலம் பரவச் செய்யுமிவர்கள் முயற்சி எல்லோராலும் சிலாகிக்கத்தக்கதே.

அதிகமான சாஸ்த்ர பரிசயமில்லாத முமுக்ஷு ஜநங் களுக்கு இந்நூல் அதிகமான உபகாரத்தைச் செய்யும் என்றே நம்புகிறேன். அன்றியும் மதுரமாயும் ஹிதமாயு மிருக்கும் மருந்தை ரோகிகள் ஆதரித்துப் பிரியப்படுவது போல் ரசமாயும் சாரமாயும் இருக்கும் இந்நூலை எல்லோ ரும் விரும்புவார்களென்று நிச்சயமாக நம்புகிறேன். இதில் ஸ்ரீ தேசிகன்கூறிய கீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டு களைச் சேர்த்து அதற்குக் கருத்தும் மற்றும்பல எழுதி யிருக்கிறார்.

இவ்விதம் பரோபகாரபரரான ஸ்ரீ சர்மா அவர்களின் உயர்ந்த பரிச்ரமமானது அச்சிட சௌகரியமில்லாமல் குறைந்துபோவதாகத் தெரிகிறது. பர்த்ருஹரி சொல்வது போல் அக்குற்றம் நமது தேசத்திலிருக்கும் தநிகர்களைச் சார்ந்ததே தவிர அவரைச்சார்ந்ததல்ல. இச்சமயம் இதை வெளியிட முன்வந்த N. ராஜம் & கம்பெனியாரவர்கள் இக்குறையைச் சிறிது அகற்றினார். என்றாலும் இது போதாது. ஆஸ்திகரனைவரும் தன்தன் சக்திக்கேற்ற படி பொருளைத்தந்து ஸ்ரீ சர்மாவையும், இவரைப்போன்ற பண்டிதர்களையும் இவ்விதமான விஷயங்களில் உத்சாஹப் படுத்தவேண்டியது அவச்யமான விஷயம்.

தமிழ் நாட்டிற்குப் பெரும் நிதியைத் தேடித்தந்த ஸ்ரீ பண்டித சர்மாவும் அதை எல்லோரும் பங்கிட்டுக்கொள்

ளும்படி பிரசுரித்த N. ராஜம் & கம்பெனி தலைவரும் நீண்ட ஆயுள்பெற்று மற்றும் பல தொண்டுசெய்யும்படி அருள கீதாசார்யனை வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

| | |
|---|---|
| **ஸ்ரீ கீதாஸ்வாமி மடம்,** | ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சிருங்கேரி, |
| ஹநுமான்கட், | ஸ்ரீ நரஸிம்மபாரதிகளின் சிஷ்யர் |
| வாராணஸி. | **காசி - கிருஷ்ண சாஸ்திரிகள்.** |



## விஷய விளக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஸ்ரீ சிவாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஸ்ரீமுகம் ... | 2 |
| 2. | ஆசிரியர் முன்னுரை ... | 8 |
| 3. | டாக்டர் V. S. மணி முகவுரை ... | 10 |
| 4. | காசி ஸ்ரீ கீதாமடம் ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள் அபிநந்தநம் ... | 13 |
| 5. | ஸ்ரீ பகவத் கீதாஸாரமும் பாத்ம புராண கதைகளும் ஸ்ரீ தேசிகர் பாட்டு கருத்துகளுடன் ... | 1 |
| 6. | ஸ்ரீ கீதா மாஹாத்ம்யம் ... | 113 |
| 7. | ஸ்ரீ கீதாநுஷ்டாநம் ... | 118 |
| 8. | ஸ்ரீ கீதோபதேச ரத்ந மாலா ... | 121 |
| 9. | ஸ்ரீ பகவத்பாத கீதாசயம் ... | 143 |

உ

பிரும்ம ஸ்ரீ அபிநவ வியாஸ சுவேதாரண்யம்

## நாராயண யஜ்வா அவர்களின்



பாதார விந்தங்களில் பக்தியுடன் இந்நூல்
ஸமர்ப்பிக்கப்பட்டது.

உ

ஸ்ரீ க்ருஷ்ணாயநம :

# ஸ்ரீ கீதாஸாரமும் பாத்ம புராண கீதா கதைகளும்

(விழுப்புரம் தைவநெறிக் கழகத்தில்
பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்களால்
உபன்யஸிக்கப்பட்டது).

## முகவுரை.

## ஸ்ரீ கீதாப்ரபாவம்.

ஸ்ரீ வாஸுதேவனால் பார்த்தனுக்குப் பாரதப்போரிலே உபதேசிக்கப்பட்ட உத்தம நூலுக்கே ஸ்ரீ கீதை என்று பெயர். ஐந்தாம் வேதமெனும் மஹாபாரதத்திலே ஸ்ரீவேத வ்யாஸர் இதைத் தொகுத்தார். இதன் மஹிமையைப் போற்றாத நூல்களில்லை. இதை ப்ரமாணமாகக் கொள்ளாத மதமே இல்லை எனலாம். ஒவ்வோர் ஸமயத்தவரும் கடவுளைத் தன் தெய்வம் தன் தெய்வமென தனித்தனி பெயரிட்டழைக்கின்றனர். கீதையையோ வேறு பெயரிடாமல் சைவ நூல், வைணவ நூல், சாக்த நூல், கர்ம நூல், வேதாந்த நூல் என்று ப்ரமாணமாகக் கூறுகின்றனர். வேதத்திற்கடுத்தபடி கீதையே இங்ஙனம் எல்லோராலும் போற்றப்படுகிறது. பர சமயத்தவரும் பிற நாட்டினரும் இம்மண்மீது வாழ்வதை விண்ணிலும் சிறப்பாக எண்ணுபவருங்கூட இதைப்போற்றிப் புகழ்கின்றனர் எனில் இதன் பெருமையை எவரே சொல்லவல்லவர்?

பாத்ம புராணம் உத்தர கண்டம் நூற்று எழுபத் தோரும் அத்யாயம் முதல் பதினெட்டு அத்யாயங்களால் ஓர் அத்யாயத்திற்கு ஓர் கதையாக கீதையின் பெருமை வர்ணிக்கப்படுகின்றது. இதைக் கேட்பவள் உமையவள். கூறுபவர் பரமசிவனும். பாற்கடலில் பன்னக சயநத்தில் பள்ளி கொண்டிருக்கும் பரந்தாமனை, லக்ஷ்மி பிராட்டியார் "ஐயனே! உலக இன்பத்தைவிட்டு ஸதா தாங்கள் உறங்குவதேன்?" என்று வினவினாள். தேவி! யான் நித்ரை கொள்ளவில்லை. ஸகல உபநிஷத்துகளையும் கடைந்தெடுத்த கீதை எனும் அமிருதத்தை அருந்தி அந்த ஆநந்தத்தில் அமிழ்ந்திருத்தல் பிறர்க்கு உறக்கம்போல் தோன்றுகிறதென்றார் புண்டரீகாக்ஷன். விரூபாக்ஷனும் "கீதையின் முதல் ஐந்து அத்யாயங்கள் எனது ஸத்யோஜாதம் முதலிய ஐந்து முகங்கள். அடுத்த பத்து அத்யாயங்கள் எனது கரங்கள். பதினாறாமத்யாயம் என் உதரம். பதினேழாவது பதினெட்டாவது அத்யாயங்கள் இருகால்கள்" என்றுரைத்தார்.

பானைக்கோர் அரிசி பதம்பார்ப்பதுபோல் ஓர் புராணங் கூறும் கீதா ப்ரபாவம் இங்குகூறப்பட்டது. இதேபோல் வாராஹபுராணம் முதலிய பற்பல புராணங்கள் இதை வர்ணிக்கின்றன. "கீதை ஒன்றை நன்கு கற்றால்போதும்" தேவகீ புத்ரன்கூறிய இது ஒன்றே சாஸ்த்ரம் என்றும் பல புராணங்கள் இதைத் துதிக்கின்றன. இதற்கு விரிவுரை எழுதாத ஆசார்யர்களே இல்லை. பஜகோவிந்தமெனும் நூலில் ஸ்ரீ சங்கரர் "பகவத்கீதா கிஞ்சிததீதா?" கீதையைச் சிறிதாவது கற்றாயா? ஆனால் எமன் உன்னிடம் அஞ்சுவான் என்கிறார். பகைவரை வென்றுப் பாண்டவர் பாரினைப் பரிபாலிக்கும்போது அந்த யுத்த ஸமய நெருக்கடியில் கேட்ட கீதையை மறந்துவிட்டேன். அதை மறுபடியுங் கூறுங்கள் என்று பார்த்தன் கேட்க, சிறிது கோபமும் துக்கமும்

கொண்டவர்போல் பகவான், "*அர்ஜுந! புத்தியில்லாமல் நீ எனக்கு மிகவும் அப்ரியத்தைச் செய்தாய்: எனக்கு முன்போல் அது தோற்றப் போகிறதா" என்று கடிந்து பேசுகிறார். ஆதலால் அதின் மஹிமை எத்தகையதெனக் கூறாமலே விளங்குமன்றோ? கீதை, கங்கை, காயத்ரீ, கோவிந்தன் என்ற நான்கு ககாரங்கள் உள்ளத்தில் உள்ளோருக்கு மறுபிறப்பில்லை என வேதவ்யாஸர் கூறுகிறார்.

## விசாரம்.

ச்ரத்தையுடன் சாஸ்த்ர ஸம்மதமான விசாரம் செய்தால்தான் அரிய தத்வம் விளங்கும். அத்தகைய விசாரம் வரவேற்கத் தக்கதே. ஆனால் அர்த்தமின்றி "காக்கைக்கு எத்தனை பல்? மேஷத்தின் அண்டம் எவ்வளவு பலம்?" என்பதுபோன்ற வீண் விசாரங்களால் காலத்தை வீணாக்கி அந்நூலிலுள்ள சுவையை அறியாதார், கையிலளித்த அமிருதத்தை அருந்தாது இது எவரால் எக்காலத்தில் எதற்காக எவ்வளவு உண்டு பண்ணப்பட்டது என்று விசாரித்து அதை நழுவவிட்டவரை ஒத்தவராவர்.

இதைக் கண்ணன் சுலோகமாக சொன்னாரா? வாக்யமாக கூறி அதை வியாஸர் சுலோகமாக வரைந்தாரா?

பார்த்தனுக்குப் பகவான் நாராயணமூர்த்தியால் தானே அறிவிக்கப்பட்டு வியாஸரால் பாரதத்தின் இடையே தொடுக்கப்பட்டதென்ற வாராஹ புராண வாக்யத்தால், வியாஸரும் கண்ணனும்கூட கீதையின் கர்த்தாக்களல்ல. அநாதியான கீதையைக் கண்ணன் அறிவித்தார் என்றே தோன்றுகிறது. அநுகீதா ச்லோகமும் மற்ற புராணங்களிலும் உபநிஷத்துகளிலும் காணப்படும் கீதா சுலோகங்களும் இதை

---

*மஹாபாரத அச்வமேதபர்வ அநு கீதை.

த்ருடப்படுத்துகின்றன. ஆதலால் சுலோகமாகவே பகவான் கூறினுர் என்பது நிச்சயம்.

ஒவ்வோர் சுலோகத்திற்கும் விஸ்தாரமாக பாஷ்யமெழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு அர்த்த புஷ்டியும் பெருமையும் வாய்ந்த இந்த எழுநூறு சுலோகங்களையும் யுத்தமாரம்பிக்கும் தருவாயில் கூறினர் என்பது எப்படி பொருந்தும்? இவர் கூறும்போது ஏனையவர் எப்படி பேசாமலிருந்திருக்க முடியும்? உயிருக்கு மன்றுடும் ஸமயத்தில் மற்றவர் எப்படி கீதோபதேசமாகும் வரை சாந்தமாக இருக்கக்கூடும்?

ஆக்கவும் அழிக்கவும் ஆற்றல் பெற்ற ஸர்வேச்வரன் மற்றவர் திகைத்து நிற்கும்படிசெய்து கீதையைப் பார்த்தனுக்குக் கூறியிருக்கலாம். காலம் தேசம், நாமரூபம், மநஸ் வாக்கு இவைகளுக்கெட்டாத கண்ணன் எதைத்தான் செய்யமுடியாது? ஸஹதேவன் ஜ்யோதிச்சாஸ்திரத்தில் திறமை வாய்ந்தவன். அவனிடஞ்சென்று துர்யோதநன், தர்மர் தலை அறுந்து தரணியில் விழும்படி போருக்கோர் நல்ல நாள் பார்த்துத் தரும்படி கேட்டான். அமாவாஸ்யை திநம் அதற்கு ஸஹதேவன் நாள் வைத்தான். பாண்டவர் தைவமான பார்த்தஸாரதி சதுர்தசியன்றே எல்லோரையும் அமாவாஸ்யை என்று தர்ப்பணஞ்செய்ய அழைத்துச் சென்றுர். இந்த விந்தையைக்காண வானவரனைவரும் சூழ்ந்தனர். இன்றைக்கு எப்படி தர்ப்பணம்செய்தல் கூடும் என்று சூர்யன் வினவ, சந்த்ரனும் ஸூர்யனும் ஒன்றுகூடலே தர்சமல்லவா? இங்கு நீங்களிருவரும் ஒன்று கூடி வந்தீர்கள். அமாவாஸ்யை வந்துவிட்டது என்றுகூறி துர்யோதநன் அன்று போர் துவக்கும்படி செய்தார். அது முதல் அமாவாஸ்யைக்கு முதல் நாள் போதாயந அமா

வாஸ்யை ஏற்பட்டதாக ஓர் கதை கூறுவர். இப்படி சதுர்தசியைத் தர்சமாக்கியவரும் சூர்யனைச் சக்கரத்தால் மறைத்து ஜயத்ரதனைக் கொல்வித்தவருமான பகவானுக்கு இது ஓர் பொருட்டோ? அன்றன்று இரவில் இந்த்ரனளித்த சக்தியால் காலையில் அர்ஜுநனைக் கொல்வது என்று கூடிப் பேசிய கௌரவருக்கு அது மறக்கும்படி செய்த பகவானால் ஆகாத கார்யமுண்டோ?

ராம கீதை தேவீ கீதை கணேச கீதை அஷ்டாவக்ர கீதை முதலிய எண்ணிறந்த கீதைகளிருக்க இதற்கேன் இவ்வளவு பெருமை?

ஈச்வரன் என்ற சொல் சிவனையே குறிக்கும். புருஷோத்தமன் என்றால் ஸ்ரீ விஷ்ணுவே. வேதமெனில் ருக் யஜுஸ் ஸாம வடிவமான நம் வேதமே. அங்ஙனமே கீதை என்றால் பகவத் கீதையேயாம். ராமாயணம் பலவிருந்தும் இயற்றிய வால்மீகி ராமபுத்ரர்களைக்கொண்டு ராகவனெதிரில் பாடி அரங்கேற்றியதால் வால்மீகி ராமாயணமே ராமாயணம் எனப்படுவதுபோல், இதை உபதேசித்தவர் ஸாக்ஷாத் பரம புருஷன். கேட்ட சிஷ்யன் அர்ஜுநன், இடமோ தர்ம க்ஷேத்ரமான குருக்ஷேத்ரம். எழுதியவரோ விஷ்ணு ரூபியான வியாஸர். விஷயங்களோ மிகமிக அபூர்வமானவை. சொற்சுவையோ கூற ஒண்ணாது. ஆதலின் இதற்கு சிறப்புப் பெயர் ஏற்றதேயாம். அதே பகவான் அதே அர்ஜுநனுக்குக் கூறிய அநுகீதையில் இங்குள்ள காம்பீர்யம் மாதுர்யம் அர்த்தபுஷ்டி முதலியவை இல்லையெனில் மற்றவைகளைப் பற்றி கூறவேண்டியதில்லை. இதனால் இதர கீதைகள் தாழ்ந்தன என்று கூறுவதாகாது.

இதில் பதினெட்டு அத்யாயங்களே இருக்கின்றன. சிலர் அதிக அத்யாயங்களுடன் வெளியிட்டிருக்கின்றனரே!

கீதை மாபாரதத்தில் அமைந்துளது. அது பதி னெட்டு பர்வாக்களாக அமைக்கப்பட்டிருக்கிறது. பாரதப் போரும் பதினெட்டு நாட்களில் நடந்தன. அதில் மாண் டது பதினெட்டு அக்ஷோஹிணி ஸேனை. ஆதலின் கீதை யும் பதினெட்டு அத்யாயங்களாகவே இருத்தல்வேண்டும். "கடபயாதி" எழுத்துக் கணக்கில் பாரதத்திற்கு பதி னெட்டு என்று பொருளைத்தரும் *"ஜய" என்ற பெயரை பதினெண் புராணமெழுதிய வியாஸாசாரியர் ஓர் காரணம் பற்றியே வைத்துளார். அன்றியும் "பாரதத்தில் எது இருக்கிறதோ அதுதான் மற்ற விடங்களிலிருக்கிறது. இங்கு எது இல்லையோ அது வேறெங்குமில்லை" என அவரே கூறுகிறார். பக்தி ஞானம் கர்மா ராஜ்ய தந்த்ரம் முதலிய ஒவ்வொன்றிலும் பதினெட்டு தத்துவங்கள் அமைந் திருக்கின்றன. ஆதலின் இக்கருத்துக்களை உள்ளடக்கியே ஜய என்ற பெயரளித்தார் போலும். பாரதத்தில் கூறப் படுவதெல்லாம் தர்மமே. தர்மமுள்ளவிடத்தில் ஜயம்உண்டு என்பதையும் ஜய என்ற சொல் எண்பிக்கின்றது. ஆதலின் கீதை பதினெட்டு அத்யாயங்கள் கொண்டதுதான்.

மூன்று ஷட்கங்களாக (ஆறுகளாக) பிறிக்கப்பட்ட தேன்?

ஸகல சாஸ்த்ரங்களுக்கும் மூலகாரணமான வேதம் ருக் யஜுஸ் ஸாம, என்ற மூன்றாகப் பிறிந்துளது. வேத ஸாரமான காயத்ரீ மூன்று பாதமுள்ளது. உபநிஷத் ஸார மான மஹாவாக்யம் மூன்று பதமுள்ளது. இவ்வெல்லா வற்றிற்கும் விதையான ப்ரணவம் மூன்று எழுத்துகள்

*1 க முதல் 10, ட முதல் 10, ப முதல் 5, ய முதல் 10, எழுத்துக்கள். ஜ என்பது கவிலிருந்து 8வது. அதை முன்னே வைத்து ய என்ற ஒன்றைப் பின்னால் சேர்த்தால் 18 என்றாகும்.

அமைந்தது. இவைகளெல்லாவற்றையும் இக்கீதையில் அடக்கி இருந்தலால் இதை மூன்று ஆறுகளாகப் பிறித்தார். கர்ம காண்டம் பக்தி அல்லது உபாஸனு காண்டம் க்ஞாந காண்டமென இப்பிறிவு முறையே மஹாவாக்யத்தின் மூன்று பதங்களின் அர்த்தத்தை விளக்குகின்றன. அன்றியும் இம்மூன்றும் மும்மூர்த்திகளது ஸ்வரூபமாம். ஆதலின் மூப்பிறிவாக வகுக்கப்பட்டது மிகப் பொருத்தமானதேயன்றோ?

## பயன்.

அன்றன்று ஜலத்தில் மூழ்குவது உடலிலுள்ள அழுக்கை அகற்றும். ஓர் முறை கீதையில் ஸ்நானம் செய்தால் ஸம்ஸார மலம் அகலும். என வராஹ புராணம் கூறுகிறது. கீதாகீதா என்று ஓயாமல்கூறிவந்தால் த்யாகீ த்யாகீ என்ற சொல் தோன்றும். த்யாக புத்தியும் உண்டாகுமென ஓர் ஆசார்யர் கூறுகிறார். இதிலுள்ள எழுநூறு சுலோகங்களுக்கும் ஒவ்வொன்றினுலும் யார் என்ன பயன் அடைந்தனர் என்று எழுநூறு கதைகளைக்கொண்ட ஓர் க்ரந்தம் ஓலையில் இருப்பதாக ஓர் ஆசார்யர் கூறினுர். தேவீ ஸப்த சதீ என்ற நூலைப்போல் இது எழுநூறும் எழுநூறு மந்த்ரங்கள். ஒவ்வொரு சுலோகத்திற்கும் யந்த்ரம், இததினை முறை ஜபித்து இன்ன நிவேதனம் செய்தால் இன்ன பலனை அடையலாம் எனக் காட்டும் நூலொன்று நேபாலததிலிருக்கிறது.

பூர்ணமாக பதினெட்டு அத்யாயங்களையும் ப்ரதி தினமும் பாராயணஞ்செய்தால் க்ஞானஸித்தி; ஒன்பது அத்யாய பாராயணம் செய்தால் கோதான பலன்; ஆறு அத்யாய பாராயணத்தால் கங்காஸ்நான பலன்; மூன்று அத்யாய பாராயணம் செய்தால் ஸோமயாக பலன்; ஓரத்

யாய பாராயணத்தால் ருத்ரலோக பலன். பத்து, ஏழு, ஐந்து, நான்கு, மூன்று, ஒன்று, பாதி, கால்சுலோகம் பாராயணம் செய்தால் கூட சந்திரலோக ப்ராப்தி என்றும் கீதா ச்ரவணம் சிறிதேனும் செய்தால் மானிட ஜன்மம் நிலைக்குமென்றும் வராஹ புராணம் கூறுகிறது. பாத்ம புராணமோ ஓரத்யாயத்திற்கு ஓர் கதை கூறுகிறது.

இந்த கதைகளுடன் ஒவ்வோர் அத்யாயத்தின் சுருக்கத்தையும் விசேஷார்த்தங்களையும் நிகமாந்த தேசிகன் ஸாதித்த கீதார்த்த ஸங்க்ரஹ தமிழ் பாட்டுகளையும் பதினெண் புராணங்களிலிருந்து சில உதாஹரண கதைகளையும் இங்கு காணலாம்.

சுபம்.



भक्त्या त्वनन्यया शक्य अहमेवंविधोऽर्जुन । ज्ञातुं द्रष्टुं च तत्त्वेन प्रवेष्टुं च परंतप ॥



मत्कर्मकृन्मत्परमो मद्भक्तः सङ्गवर्जितः । निर्वैरः सर्वभूतेषु यः स मामेति पाण्डव ॥

ஸ்ரீ கீதாஸாரமும், பாத்ம புராண கீதா கதைகளும்.

*கீதா கங்காச காயத்ரீ கோவிந்தேதி ஹ்ருதிஸ்திதே |*
*சதுர் ககாரஸம் யுக்தே புநர்ஜன்ம நவித்யதே ||*

---

# ஸ்ரீ பாத்ம கதை.

---

*ஸுசர்மா என்று ஓர் அந்தணனிருந்தான். அவன் மஹா பாபி. பிராமணருக்குரிய ஓர் வைதிக கர்மாவையும் செய்தறியான். கலப்பைகொண்டு பூமியை உழுவான். மதுபாநமும் மாம்ஸாஹாரமும் அவனுக்கு மிகப்ரியமானவை. ஒரு நாள் அரவந்தீண்ட அவன் இறந்தான். பின்னர் தன் பாபத்திற்கேற்ற நரகங்களை அனுபவித்து அவனியில் ஒரு காளையாகப் பிறந்தான். அதை ஓர் நொண்டி, விலைக்குவாங்கி அதன் மீதேறி தனது வேலைகளைக் கவனித்துவந்தான். இங்ஙனம் ஏழெட்டாண்டுகள் சென்றபின் ஒரு நாள் அவசரமான வேலையின்பொருட்டு நொண்டி மிக கடும் வெய்யிலில் இக்காளையைத் துரத்தி ஓட்டினான். உணவும் ஜலமுமின்றி கடும் வெய்யிலில் ஓடிய களைப்பால் காளை கீழே விழுந்தது. கண்கள் சுழலமிட பெருமூச்சுவாங்க வாயில் நுரைதள்ள அது சாகாமலும் பிழைத்தெழுந்திருக்க முடியாமலும் ஸஹிக்கமுடியாத துன்பத்தை அனுபவித்தது.*

*இதைக்கண்டு மநமிறங்கி சிலர் தன் தன் புண்யத்தை இதற்களித்து இது நற்கதி பெறட்டுமென்றனர். ஆனால் அது முன்னைவிட பன்மடங்கு துன்பத்தை அனுபவித்ததே*

தவிர மரிக்கவுமில்லை. பிழைக்கவுமில்லை. தனது புண்ய மின்னதென்றறியாத தாஸி ஒருவள் மற்றவரைப்போல் விளையாட்டாக தன் புண்யத்தை அளித்தாள். காளை கஷ்ட மின்றி உயிரைவிட்டது. யமன் இவளது புண்யத்தை மதித்து மரியாதையுடன் வரவேற்று யாதொரு நரகத்தை யும் கண்ணில் காட்டாமல் அவனியில் ஓர் அந்தண குலத் திலே பிறக்கச்செய்தார். ஆங்கு அவருக்குத் தக்க வயது வந்தவுடன் முற் பிறவியின் ஞாபகமும் வந்தது.

உடனே தனக்கு உபகாரம் செய்த வேசியின் வீட்டிற் குச் சென்று நீ செய்த புண்யம் யாதென வினவினார். அவள் நான் யாதொன்றையுமறியேன். எனது கிளி ஏதோ ஒன்றைக் கூறும். அது என் மனதை இழுக்கும். அதை அன்புடன் கேட்பது தவிர யாதொரு ஸுக்ருதமுமறியேன் என்றாள். ஸுசர்மா அக்கிளியிடஞ் சென்று நீ யார்? நீ கூறுவது யாது? அதை எங்கு கற்றாய்? என வினவினார். யான் முற் பிறவியில் ஓர் மஹா வித்வான். கல்விக்கேற்ற ஒழுக்கமின்றி வித்வான்களிடம் பொறாமை கொண்டு அவர் கள் குணத்தையும் தோஷமாகக் கூறிவந்தேன். காலகதி அடைந்தபின் பாபத்திற்கேற்ற நரகங்களை யனுபவித்து கிளியாகப் பிறந்தேன். அங்கும் பெற்றோரை யிழந்து வெய்யிலில் வாடி உணவின்றி தவித்தேன். கருணை நிறைந்த முனிவர்கள் என்னை எடுத்து வளர்த்தனர். ஆங்கு முநி குமாரர் கூறும் கீதை முதலத்யாயத்தைக் கேட்டுக் கேட்டு யானுமதைக் கூறி வந்தேன். ஓர் வேடன் என்னைப் பிடித்து இவளிடம் விற்றுவிட்டான். இங்கு யான் கூறி வந்த இம் முதலத்யாய ச்ரவண பலத்தால் நீ காளைப் பிறவியை விட்டு உத்தமப் பிராமணனானாய். நானும் இவ் வேசியும் இதனால் நற்கதி அடையப்போகிறோமென்று கூறி கிளி உருவைவிட்டு திவ்ய உடல் பெற்று விமானத்தின்

மீதேறி வானுலகு சென்றது. வேசியும் வேதியனும் அதைப் பாராயணம் செய்து பின்னர் உத்தமகதி யடைந்தனர்.

---

## 1. விஷாதயோகம் 47 சுலோகங்கள்.

[இதில் த்ருதராஷ்ட்ரன் 1, ஸஞ்ஜயன் 19½, அர்ஜுனன் 2½, ஸஞ்ஜயன் 4½, அர்ஜுனன் 18½, ஸஞ்ஜயன் 1.]

வியாஸரருளால் திவ்யஞானம் பெற்ற ஸஞ்ஜயனை நோக்கி திருதராஷ்ட்ரன் கேட்கிறார்—தர்ம க்ஷேத்ரமான குருக்ஷேத்ரத்தில் யுத்தம் செய்வதற்காக கூடிய என் மக்களும் பாண்டவரும் என்ன செய்தனர்? பகவத்கீதைக்கு மங்கள சுலோகமான இதில் கீதாஸாரங் கூறப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் தர்ம சப்தமும் முடிவில் ஜய சப்தமும் காணப்படுவதால் "யதோ தர்மஸ்ததோஜய;" என்ற வ்யாஸ ஸித்தாந்தங் கூறப்படுகிறது. அதிகாரிக்கேற்றபடி ப்ரவிருத்தி நிவிருத்தி என இருவகை தர்மங்களுமிங்கு கூறப்படுகின்றன. இவர்களது குல புருஷரான குரு என்பவர் தங்க கலப்பையைக் கொண்டு ஓயாமல் அவ்விடத்தை உழுதார். தேவேந்த்ரன் அவரை அணுகி யாது வேண்டுமென வினவ இங்கு விதைக்கும் தர்ம விதை அக்ஷயமாய் வளரவேண்டுமென வரங்கேட்டார். ஆதலால்தான் அங்கு யுத்தம் செய்யப்பட்டது. அது தர்ம க்ஷேத்ரமாதலால் நிவிருத்தி தர்மமான அஹிம்ஸா தர்மம் தோன்றி போரை நிறுத்திவிட்டனரோ என்ற ஐயங்கொண்டு என்னசெய்தனர் என்று த்ருதராஷ்ட்ரன் கேட்ட கேள்வி மிகப் பொருத்தமானது. க்ஷேத்ரமும் தர்ம க்ஷேத்ரம். பாண்டவரும் தார்மிகர். ஆதலின் "யுத்தம் எப்படி நடந்தது?" என்று கேட்பதைவிட்டு என்ன செய்தனர் என்று "மாமகர்" என்ற மமத்வம் நிறைந்த அவர் தன் பிள்ளைகள் எப்படி

யாவது பிழைக்கலாகாதா என்று எதிர்பார்த்து கேட்டது நியாயமேயாம். ஏழே அக்ஷௌஹிணியுள்ள பாண்டவ ஸேனையைப் பார்த்து அதே ஜயிக்கும் என்று அச்சம் கொண்டு துர்யோதனன் தனதாசார்யரைப் பார்த்து கேட்கிறான். ஆசார்யரே உமது சிஷ்யனால் வகுக்கப்பட்ட பெரிய பாண்டவ ஸேனையிலுள்ள ஒவ்வொருவரும் பீமனுக்கும் அர்ஜுனனுக்கும் ஸமமாயிருக்கின்றனரே. அதைப் பாரும்! நமது ஸேனையில் *நமக்காக ப்ராணனைவிட்ட தங்களைப் போன்ற வீரர்களிருக்கின்றனர். பீஷ்மரால் காக்கப்படும் நமது ஸேனை ஜயத்திற்கு போதுமானதாயில்லை. பீமன் ரக்ஷிக்கும் சேனை சிறியதாயினும் போதுமானதாயிருக்கிறது. நீங்களனைவரும் பீஷ்மரைக் காப்பாற்றுங்கள் என்று துர்யோதனன் கூற பீஷ்மர் அவனுக்கு யுத்த உத்ஸாஹத்தை விருத்திசெய்துகொண்டு சங்கத்தை ஊதினார். பேரி முதலிய போருக்குரிய வாத்யங்கள் முழக்கப்பட்டன. வெண் குதிரைபூட்டிய ரதத்திலேறிய கிருஷ்ணனும் அர்ஜுனனும் சங்கத்தை ஊதினர். இவர் சப்தமும், சேனையின் சப்தமும் கௌரவர் மனதைப் பிளந்தது. இரு சேனைகளும் வில்லேந்தி அம்பை விடுநதருவாயில் அர்ஜுனன் தேரைச்சிறிது நிறுத்தச்சொல்லி எதிரிலுள்ள பந்துக்களைப் பார்தது கருணையால் பகவானைநோக்கிக் கூறினார். க்ருஷ்ண! யுத்தத்திற்கு வந்த இவர்களைப்பார்த்து எனது உடல் நடுங்குகிறது, வாய் உலருகிறது, காண்டீவம் கைவிட்டு நழுவுகிறது, உடல் எரிகிறதே, எனக்கு ஜயம் வேண்டாம், சுகம் வேண்டாம். ராஜ்யம் வேண்டாம். யாருக்காக இந்த ராஜ்யம் வேண்டுமோ அவர்கள் இங்கே உயிரை விடுகிறார்கள். ஆசார்யர் பந்து இவர்கள் என்னைக்கொன்றாலும் நான் அவர்களைக் கொல்லமாட்டேன். லோபத்தினால்

---

* தன்னை அறியாமல் உண்மை வெளியிடப்பட்டது.

அவர்கள் இதைக் கவனியாவிட்டாலும் குலத்தையும் குல தர்மத்தையும், ஜாதி தர்மத்தையும் அழிக்கும்படியான இந்த யுத்தத்தை நான் விரும்பேன்.

புருஷர்கள்கொல்லப்பட்டால் பெண்கள் கற்பையிழந்து வர்ண ஸாங்கர்யத்தை உண்டுபண்ணுவார்கள். அதற்குக் காரணமாயிருந்தவர் நரகத்தை அடைவது நிச்சயம். நான் ஆயுதத்தை எறிந்தபின் அவர்கள் என்னைக் கொன்றால் அதே க்ஷேமம் என்றுகூறி வில்லையுமம்பையும் எறிந்துவிட்டு தேரில் பார்த்தன் உட்கார்ந்துவிட்டான்.

விசேஷார்த்தம்:—நமது ஸகல மத நூல்களும் நேருகவோ மாருகவோ அத்வைதமான பரமாத்ம ஸ்வரூபத்தையே போதிக்கின்றன. ஒவ்வொர் நூலும் அதிகாரிகளுக்கேற்றபடி ஸ்தூலமாகவும் சூக்ஷ்மமாகவும் தத்துவத்தை அறிவிக்கின்றது. இந்த பாரத கதை அதிலும் கீதை வெகு தெளிவாக இரண்டையு மறிவிக்கின்றது.

தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே என்று ஆரம்பித்த பாண்டவ கௌரவ யுத்தம், இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ர மித்யபிதீயதே என்று பின்னர் பகவான் கூறுவதால், நமது சரீரத்தில் காம க்ரோதாதிகளுக்கும் சமதமாதிகளுக்கும் நடக்கும் யுத்தம் கூறப்படுகிறதென சிலர் கூறுவர்.

ஸ்வதர்மத்தைச் செய்யும்போது போலியான கருணை புகுந்து அர்ஜுனனையே கலக்கிற்று. பரம புருஷன் ஸ்வதர்மோபதேசம் செய்து அநுஷ்டானத்தை நிலை நாட்டினுரென கர்மாபிமானிகள் கூறுவர்.

1. விஷாதயோகம் முற்றிற்று.

## தேசிகவியற்றிய கீதார்த்த ஸங்க்ரஹம்.

1. கருமமும் ஞானமுங் கொண்டெழுங் காதலுக்கோ
ரிலக்கென்று
அருமறை யுச்சியுளாதரித் தோதுமரும் பிருமம்
திருமகளோடு வருந்திரு மாலென்று தானுரைத்தான்
தருமமுகந்த தனஞ்ஜய னுக்கவன் சாரதியே.

(கருத்து) — கர்மத்தாலும் ஞாநத்தாலும் உண்டாகும் பக்திக்கு விஷயமானது உபநிஷத்தால் போற்றப்படும் பிருமமேயாம். அந்த பிருமம் லக்ஷ்மீ நாராயணன் என்று பார்த்த ஸாரதி தார்மிகனான அர்ஜுநனுக் குரைத்தார்.

2. உகவையடைந்த வுறவுடையாருற வற்ற வந்நாள்
தகவுடையன்பு கரைபுரளத் தருமத்த ளவில்
மிகவுளமஞ்சி விழுந்தடி சேர்ந்த விஜயனுக்கோர்
நகையுடனுண்மையுரைக்க வமைந்தனர் நாரணரே.

(கருத்து)—தன்னிடமிருந்த அன்பைவிட்டு பகைவருடன் சேர்ந்துவந்த பீஷ்மர் துரோணர் முதலியவர்களைப் பார்த்து தர்மா தர்மமறியாமல் அன்புடன் இரக்கந்தோன்றி கரை கடந்தோட, தன் திருவடியில் வீழ்ந்துகதரும் அர்ஜுநனுக்கு தத்துவோபதேசஞ்செய்ய பகவானமைந்தார்.

---

## 2-வது அத்யாயம்—பாத்ம கதை.

தென் திக்கில் புரந்தரமென்றோர் பட்டணமிருந்தது. ஆங்கு அந்தணர் மாபிணிலே தேவசர்மா என்றோர் வேதியனிருந்தார். அவர் தம் ஜாதிக்கேற்ற தர்மத்தை விடாது அனுஷ்டிப்பவர். வேத சாஸ்த்ரங்களின் கரைகண்டவர். பல வேள்விகளைச் செய்தவர். தேவ பூஜை அதிதி பூஜை தவராதவர். இத்தகைய ஸத்கர்மங்களாலும் அவர் மநதிற்கு

சாந்தி தோன்றவில்லை. மனத்தை அடக்கி க்ஞானத்தைப் பெற்று மோக்ஷமடையவேண்டுமென்பது அவரவா. ஆதலின் ஞானிகளான தவஸிகளை ஆராதித்துவந்தார். இங்ஙனம் நீண்ட நாள்செல்ல அவர் தவத்தால் ஓர் அரிய ஜீவன்முக்தர் அவரருகே வந்தார். அவர் முகத்தில் சாந்தியும் ஆநந்தமும் தாண்டவமாடின. பேசிக் கொண்டிருக்கும்போது அவரை அறியாமல் அவர் மநம் ஸமாதியிலமரும். சர்மா அவரை வணங்கி நன்கு அதிதி பூஜைசெய்தார். தன் மநம் ஒடுங்க ஓர் உபாயங்கூற அவரை வேண்டினார். அந்த யோகி புரமெனும் நகரிலே உள்ள மித்ரவான் எனும் ஆட்டிடயனைக் கேள்எனக்கூறினார். அவரைத் தேடிசென்ற சர்மா ஓர் ஆரண்யத்தில் த்யாநத்தில் அவர் அமர்ந்திருப்பதைக் கண்டார். அவரைப் பணிந்து தன் விருப்பைத் தெரிவித்தார்.

அவன் வேதியனே! கோதவரீ தீரத்தில் ப்ரதிஷ்டானமெனும் நகரத்திலே துர்தமநன் என்றொருவனிருந்தான். அவன் விக்ரம ராஜனளித்த பல தாநங்களைப் பெற்று தன் வயிற்றைவளர்த்துவந்தான். அவன் இறந்தபின் தன் பாபத்திற்கேற்ற பல நரகங்களை அனுபவித்து ஓர் வேட குலத்திலே பிறந்தான். தன்னிலும் நீசகுலத்துப் பெண்ணான சண்டாளியை அவன் மணந்தான். ஜீவனத்திற்கு வகையின்றி அவன் அலையும்போது அவன் மனைவி வேசித் தொழிலைக் கைகொண்டு பணத்தைச் சம்பாதித்தாள். கொழுத்த ஓர் சண்டாளனைக் காதலனாகக் கொண்டு அவன் மூலமாக ஓர் பெண்ணைப் பெற்றாள். அக்கன்யகை யௌவன பர்வத்தை அடைந்தபின் அப்பஞ்சயன் அவளையும் மணந்தான். முதல் மனைவி இறந்து டாகினீ எனும் பூதமாகப் பிறந்து முதற் புருஷனான வேடனைப் பக்ஷித்தாள். சண்டாளியும் வேடனும் யமலோகஞ்சென்று பற்பல நரகங்களை அனுபவித்து

அவள் ஆடாகவும் வேடன் சிறுத்தையாகவும் பிறந்தனர். அச்சிறுத்தை ஆட்டைத் துறத்த ஆட்டு மந்தையுடன் யானும் பயந்தோடினேன். இவ்விடத்திற்கு வந்தபின் ஆடு ஓட்டத்தை நிறுத்தி என்னைப் புசித்து பசியாறு என்று சிறுத்தைக்கு ஆதித்யம்செய்தது. சிறுத்தையோ ஒரு ப்ராணியைக் கொன்று உடலை வளர்ப்பது பாபமன்றோவென தர்மங்கூறிற்று. இதைக்கண்டு வியந்த யான் சிறுத்தையே! இதென்ன ஆச்சரியம்! நீங்களிருவரும் இங்கு வந்தவுடன் மனிதரைப்போல் பேசுவதும் அதிலும் தர்மம் பேசுவதும் மிக ஆச்சர்யமாக இருக்கிறதே! இதற்கென்ன காரணம் என்று கேட்டேன். அது, யாதொன்றுமறியேன். அருகிலுள்ள வாநரத்தைக் கேட்போமென்று கூற மூவருமங்கு சென்று அதை வினவினோம்.

குரங்கு! ஐயா இங்கு பிரும்மனால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட திரியம்பக லிங்க மொன்றிருக்கிறது. இதை ஸுகர்மா எனும் வேதியன் பூஜித்து அதற்கு நிவேதனம் செய்த கந்த மூலங்களைப்புஜித்து ஜீவித்துவந்தான். தற்செயலாக அங்குவந்த ஓர் அதிதி ஸுகர்மாவின் புண்ணியத்தைக் கண்டு ஸந்தோஷித்து கீதையின் இரண்டாமத்யாயத்தை அங்குள்ள கல்மீது எழுதி அதைப் பாராயணம் செய்யும்படி கூறிமறைந்தார். அன்று முதல் இவ்விடத்தில் இயற்கையான பகைமை நீங்கி எங்கும் சாந்தி பரவியிருக்கிறது என்றது. ஆதலின் நீரும் இதைப் பாராயணம் செய்தால் மனச்சாந்தி உண்டாகுமென்று இடையன் கூற வேதசர்மா அவரை வணங்கி தம்மிருப்பிடஞ்சென்றார். வழியில் ஓர் ஆலயத்திலமர்ந்துள்ள ஓர் ஆத்மஞானியை யடுத்து அவரிடம் கீதை இரண்டாமத்யத்தைப் பெற்று முக்தியடைந்தார்.

---

## 2. ஸாங்க்யயோகம் 72 சுலோகங்கள்.

[ஸஞ்ஜயன் 3, அர்ஜுநன் 6, பகவான் 63.]

பகவான் :—அர்ஜுந! எங்கிருந்து இந்த ஸமயத்தில் உனக்கு இந்த எண்ணம் உண்டாயிற்று. இது மிகவும் கச்மலமானது. ஆர்யர்களுக்கேற்றதல்ல, ஸ்வர்க்கத்தையும் கீர்த்தியையும் அளிக்காது! இந்த பேடித்தனம் உனக்கேற்றதல்ல. இதைவிட்டு எழுந்திரு.

அர்ஜுநன் :—மதுசூதந! பூஜ்யரான பீஷ்மர் போன்றவர்களை எப்படி பாணத்தாலடிப்பேன்? போரிலோ ஜயம் நிச்சயமில்லை! என் புத்தி கலங்கி தர்மா தர்மம் தெரியாது தவிக்கிறேன். உம்மைச் சரணமடைந்த சிஷ்யனுக்கு இதைச் செய்! இதைச் செய்யாதேயென ஆணையிடும்.

பகவான் :—நீ பண்டிதனைப்போல் பேசுகிறாய், ஆனால் வீண் கவலைப்படுகிறாய்! ஒரே உடலில் இளமை யெளவனம் கிழத்தனம் வருவதுபோல ஓர் ஜீவனுக்குப் பற்பல உடல் தோன்றும், அழியும். ஜீவனுக்கு என்றும் மரணமில்லை. சீதோஷ்ணங்களைப்போல் அடிக்கடி வந்துமறையும் சுகதுக்கங்கள் ஜீவனுக்கில்லை. இவைகளைப் பொறுப்பவனே ஞானத்திற்குரியவன். என்றைக்கிருந்தாலும் அழியும் இச்சரீரத்திற்காக விவேகி கஷ்டப்படுவானா? நித்யனான ஜீவனுக்கு கிழிந்த வஸ்த்ரம்போய் புது வஸ்த்ரம் வருவதுபோல் பழய உடல்சென்று புதிய உடல் வருகிறது. ஜீவனெனும் ஆத்மாவைக் கத்தியால் வெட்டமுடியாது! அதை அக்னி எரிக்காது! ஜலம் நனைக்காது! வாயு உலர்த்தாது. அது எங்குமுளது, எக்காலத்துமுளது, அசைவற்றது, அழிவற்றது. ஜீவனே இறக்கிறானென்று எண்ணுவாயாகில் பிறந்ததெல்லாம் இறந்தே போகுமாதலால் அப்போதும் நீ வருந்தலாகாது.

யுத்தம் க்ஷத்திரியனான உனக்கு ஸ்வதர்மமல்லவா?

இது தற்செயலாக கிடைத்த பாக்யம். இது ஸ்வர்க்க வாயற் படி திறந்ததுபோலன்றோ? நீ போர்புரியாவிடில் தர்மத்தையும் கீர்த்தியையுமிழப்பாய். மதிப்புள்ளவர் கீர்த்தியை யிழப்பது மரணத்திலும் பெருந்துக்கமாகும். சுகதுக்கம் லாப நஷ்டம் ஜய அபஜயம் இவைகளைச் சமமாகக்கருதி யுத்தம்செய். கர்மபந்தத்தை அகற்றவல்ல யோகத்தைக் கூறுகிறேன் கேள். இதைச் சிறிது அநுஷ்டித்தாலும் மஹா பயத்திலிருந்தும் விடுபடுவாய்!

வேதத்தில் ஸ்வர்க்கத்தையளிக்கும் கர்மங்கள் கூறப் படுகின்றன. ஸ்வர்க்க லோகத்தில் பற்றுள்ளோர் அதில் மயங்கி அதைத்தவிர வேறு ஒன்றும் கிடையாதென்பர். பரிபூர்ணமாக வேதங்களில் வர்ணிக்கப்படும் கர்மபலங்கள் எவ்வளவுண்டோ அவ்வளவும் க்ஞானிக்குக் கிடைக்கும். கர்ம பலத்தில் ஆசைவைக்காமல் கர்மாவைச் செய். இதே யோகமாம். இப்படி கர்மாவைச் செய்தால் புண்ய பாபமிரண்டும் உன்னிடம் வராது. இங்ஙனம் பல ஞானிகள் அழிவற்ற பேரானந்தத்தைப் பெறுகின்றனர். உனது புத்தி அதனால் தெளிந்தபின் நிச்சலமான ஸமாதியைப் பெறுவாய்.

அர்ஜுனன்:—கேசவ! ஸமாதியிலுள்ள ஸ்த்திதப்ரக்ஞனது நிலையாது? அவன் எங்ஙனம் உலகில் நடப்பான்?

பகவான்:—அவன் ஆசைகளை அறவே ஒழிப்பான். தனக்குத் தானே ஸந்தோஷமடைவான். துக்கத்தைவெறுக்கமாட்டான். ஸுகத்தை விரும்பான். காமக்ரோத பயங்களுக்கு இடமளிக்கமாட்டான். சுபா சுபங்களில் அவனுக்குப் பற்றிராது. ஆமை தனக்குள் முகம், கை, கால்களைச் சுறுக்கிக்கொள்வதுபோல் விஷயங்களைக் கண்டு இந்திரியங்களை அடக்குவான். விஷயங்கள் அவனை அணுகாது. ஆனல் அதனிலுள்ள ரஸம்மாத்ரம் பரமாத்மாவைக் கண்டபின் தான் போகும். மிக்கபலம் வாய்ந்த பொறிகள் எவ்வளவு

ப்ரயத்நம் செய்தாலும் வித்வான்களது மனதைக்கூட பலாத்காரமாய் இழுக்கும். ஆதலின் அவைகளை அடக்கி என்னையே நினைக்கவேண்டும். எவனுக்கு இந்திரியங்கள் வசமோ அவனுக்கு க்ஞானம் ஸித்தம்.

ஓர் விஷயத்தை த்யானம் செய்தால் அதில் பற்றுண்டாகும். அதனால் காமம், கோபம், மோஹம், நல்நினைவுமறைதல், புத்திநாசம், ஆத்மநாசம் முதலியன உண்டாகின்றன. ராகத்வேஷமின்றி எந்த இந்திரிய வ்யாபாரம் செய்தாலும் மனது தெளிந்தே நிற்கும். மனது தெளிந்திடின் புத்தி நிலைத்து நிற்கும். மனம் ஏகாக்ரப்படாவிடில் சாந்தியோ சுகமோ ஸித்திக்காது. காற்று கப்பலைக் கவிழ்ப்பதுபோல் இந்திரியங்கள் மனதைக் கவிழ்க்கின்றன. ஆதலின் இந்திரியங்களை அடக்குபவனே அறிவாளி. நதிகளெல்லாம் கடலில் பாய்ந்து எங்ஙனம் மாள்கின்றனவோ! அங்ஙனம் எவனிடம் ஆசைகள் அழிகின்றனவோ அவனே சாந்திபெறுவான். ஆதலின் ஆசைகளையும் அஹங்கார மமகாரங்களையும் விடு.

2. ஸாங்க்ய யோகம் முற்றிற்று.

3. உடலமழிந்திடும் உள்ளுயி ரொன்ற ழியாதெனைப்போல்
விடுமதுபற்று விடாத தடைத்த கிரிசைகளை
கடுக வுனக்குயிர்காட்டு நினைவதனுள்ள தாம்
விடுமயலென்று விஜயனைத் தேற்றினன் வித்தகனே.

(கருத்து)—உடல் அழிவுள்ளது. உயிர் என்னைப்போல் என்றும் அழியாதது. அவனவனது நித்ய கர்மா விடத்தக்கதல்ல. ஆனால் அதன் பயனில் பற்றுவைக்கலாகாது. உனக்கு விரைவில் ஞானமுண்டாகும். அஞ்ஞானத்தைவிடு என கண்ணன் விஜயனுக்குக் கூறினான்.

## 3-வது அத்யாயம்—பாத்ம கதை.

ஜநஸ்தானமெனும் தேசத்திலே கௌசிகரது மரபினில் ஜடன் என்றோர் வேதியனிருந்தான். அவன் தன் பெயருக் கேற்றபடி தன் ஜாதிக்குரிய கல்வியோ ஆசாரமோ இல்லாது வைச்ய விருத்தியான வியாபாரஞ்செய்து வயிறுவளர்த் தான். ஓர் ஸமயம் பொருளில்லாமல் போகவே யாகஞ் செய்த பெரியோர் பொருளைக் கொள்ளையிட்டு வியாபார நிமித்தம் தூரதேசஞ்சென்றான். ஆங்கு தேடிய பொருளைக் கொண்டு மனைவியை மகிழ்விக்கத் தன்னிருப்பிடத்திற்குத் திரும்பினான். நடுவழியில் ஸூர்யாஸ்தமனமாகிவிட்டது. பகலிலேயே இருள்சூழ்ந்த காட்டைக் கடக்க நேரிட்டது. அவன் தன்னை யார் அடிப்பர் என்று அச்சமின்றி சென்றான். ஆங்கு ஓர் கொள்ளைக் கூட்டத்தினர் ஈவிரக்கமின்றி இவனை நையப் புடைத்துக் கொன்று பொருள்களை எடுத்துச் சென்றனர். வந்தபடியே தனம்போயிற்று.

துர்மரணமடைந்த ஜடனே மிக பயங்கரமான ஓர் பேய் உடலை எடுத்தான். அவனைக் கடுமையான பசியும் தாகமும் பீடிக்க, ஓரிடத்தே நிற்கமுடியாமல் அலைந்து திரிந்துக் கொண்டிருந்தான். மிக்க தார்மிகனான அவனது புத்ரன் அவர் சென்று நீண்டகாலமானதால் தந்தையை வனம் வனமாகத் தேடிச் சென்றான். ஓர் வனவாஸி கூறியதைக் கேட்டுத் தன் தந்தை கள்வரால் அடித்து கொல்லப்பட்டாரென தீர்மானித்தான். அவருக்கு நற்கதியையளிக்க காசி சென்று ஈமக்கடன்களைச் செய்யப் புறப்பட்டான். இடைவழியில் ஓர் மரத்தடியே அமர்ந்து நித்ய கருமங்களைச் செய்து முடித்து வழக்கப்படியே கீதையின் மூன்றுமத்யாயத்தைப் பாராயணம் செய்தான். அந்த மரத்தினடியில்தான் அவன் தந்தை கொல்லப்பட்டான்.

ஆங்கு அலைந்துகொண்டிருந்த ஜடப்ரேதத்தின் காதில் இது விழுந்தவுடன் ப்ரேத உடல் அகன்றது. திவ்ய

விமானத்தில் திவ்ய சரீரத்துடன் தோன்றிய ஜடன் மைந்தனை நோக்கி, அருமைக் குழந்தாய்! நீ காசி செல்ல வேண்டாம்! எதற்காக நீ செல்கிறாயோ அந்த கார்யம் இந்த கீதா பாராயணத்தினாலேயே ஸித்தித்து விட்டது என்றான். இதைக் கேட்டு ஆச்சரியமடைந்த புத்ரன் தந்தையை வணங்கி, "இப்பொழுதுதான் யான் புதல்வனானேன். இதன்றோ புத்ரர் கடமை! கீதையின் மூன்றாம் அத்யாயத்தின் பெருமை இத்தகையதெனப் போதித்து விட்டீர். யான் இப்புவியில் இனி என்ன செய்ய வேண்டுமென கட்டளையிடுங்கள் என்றான். ஜடன் தனது மூதாதைகள் தனது பாபத்தால் நரகத்தில் பல யாதனைகளை அனுபவிப்பதைக் கண்டு அவர்களையும் கீதையால் வைகுண்டமனுப்பும்படி கூறிவிட்டு வைகுண்டஞ்சென்றார். ஜடபுத்ரன் தன்னூருக்கு வந்து தேவாலயத்திலமர்ந்து கீதா பாராயணஞ் செய்து அதை அந்த பித்ருக்களுக்குத் தானம் செய்தார்.

உடனே விஷ்ணு தூதர்கள் யமனிடஞ்சென்று ஜடனது பித்ருக்களை வைகுண்டமனுப்பும்படி கூற யமதர்ம ராஜன் அங்ஙனமே திவ்ய தேஹம்பெற்ற அவர்களுடன் பகவானைத் தர்சிக்கத் தானும் கிளம்பினான். பாற்கடலிலே பன்னகசாயியாயுள்ள பரமாத்மாவைப் பணிந்து துதித்து நாத! தங்களிட்ட கட்டளையை நிறைவேற்றி விட்டேன். எனக் கூறி அவரிடம் விடைபெற்று தம்மிருப்பிடஞ் சென்றான்.

---

## 3. கர்மயோகம் 43 சுலோகங்கள்.

[அர்ஜுனன் 3, பகவான் 40.]

அர்ஜுனன்:—ஜநார்த்தன! தாங்கள் கூறியதில் கர்மாவைவிட ஞானமே சிறந்ததெனத் தோன்றுகிறது. என்னை ஏன் கோரமான கர்மாவைச் செய்யச் சொல்கிறீர்? என்

மோஹத்தை அகற்றி நன்மையை அளிக்கவல்லதான ஒரே மார்க்கத்தைக் கூறும்.

பகவான்! உலகில் க்ஞானயோகம் கர்மயோகமென இரு வழிகள் என்னால் முன்னம் வகுக்கப்பட்டன. அவை முறையே ஞானிகளுக்கும் கர்மிகளுக்கும் ஏற்றவை. கர்மாவைச் செய்யாததினாலோ கேவல ஸன்யாஸத்தினாலோ ஒருவன் மோக்ஷமடைய முடியாது. அன்றியும் ஒருவன் ஓர் க்ஷணங்கூட கர்மாவைச் செய்யாதிருக்கமுடியாது. கர்மேந்திரியங்களை அடக்கி மநதால் எவன் விஷயங்களை எண்ணுகிறானோ அவன் மித்யாசாரன். மநதை அடக்கி பற்றுதலில்லாமல் கர்மாவைச் செய்பவன் சிறந்தவன். நித்ய கர்மாவை விட்டால் ஜீவித்திருக்கவே முடியாது. கர்ம, பந்தத்தை உண்டுபண்ணுமோவெனில் யக்ஞ யாகாதிகளைத் தவிர மற்றவை பந்தகரமாம்.

ப்ரஜைகளுடன் யக்ஞத்தையும் படைத்த பரமன் காமதேனுபோல் வேண்டியதைக் கொடுக்கும் யக்ஞத்தால் நீங்கள் தேவர்களை ஆராதியுங்கள். அவர்கள் மழையால் மனிதர்களை ஸந்தோஷப் படுத்த பரஸ்பர உபகாரத்தால் பரமச்ரேயஸ்ஸை அடையுங்கள் என்றார். தேவர்கள் தந்த பொருள்களை அவர்க்களிக்காமல் புஜிப்பவன் திருடனாவன். யக்ஞத்தினாலோ நிவேதநத்தினாலோ தேவர்கட்களித்த மிகுதி யன்னத்தைப் புஜித்தால் ஸகல பாபங்களுமகலும். தனக்கென பாகம் செய்பவர் பாபத்தையே புஜிக்கின்றனர்.

ப்ராணிகள் அன்னத்தால் வளர்கின்றனர். அன்னம் மழையாலுண்டாகிறது. மழை யக்ஞத்தாலும், யக்ஞம் கர்மாவினாலும், கர்மா வேதத்தினாலும், வேதம் பிரும்மத்தினாலும் உண்டாகிறது. இது ஓர் சக்ரம் போலிருக்கிறது. இதை அநுசரிக்காதவர் ஆயுஸ்ஸும் பிழைப்பும் பயனற்றது. வெளி விஷயங்களைவிட்டு ஆத்ம ஸ்வரூபத்தில் ரமிப்பவனுக்கு இச்கர்மா வேண்டாம். பற்றுதலைவிட்டு கர்மா

செய்தால் அது மோக்ஷத்தை அளிக்கும். ஜநகன் முதலிய அநேகர் அத்தகைய கர்மாவால் முக்தியடைந்தனர். ஸமூஹத்தில் சிறந்தவர் செய்வதை மற்றவர் பின்பற்றுவர். உன்னைப் பார்த்து மற்றவர் கர்மாவைவிட்டு பதிதராகாமலிருக்க வேணும் கர்மாவைச்செய். எனக்கு இக்கர்மாவினால் ஏதேனும் பயனுண்டோ? நானதைவிட்டால் எல்லோருமதைப் பார்த்து கர்மாவை விட்டு அழிவர். அவர்களை யானே கெடுத்தவனாவேன்.

கர்மா ஒன்றுதான் கதி என்றெண்ணி அதிலேயே ஊடாடுபவரைப்போல் க்ஞாநியுமவர்கள் எதிரே கர்மாவைச் செய்யவேண்டும். அவர்கள் புத்தியைப் பேதிக்கலாகாது. கர்மா ப்ரகிருதியினது குணங்களால் செய்யப்படுகிறதென வித்வான் அறிவான். அஹங்காரியான மூடனோ நானே செய்கிறேன் என்பான். ஆதலின் ஸகல கர்மாக்களையும் என்னிடமளித்துவிட்டு அஹங்காரத்தைக் களைந்து போர் புரி. இந்த எனது அபிப்பிராயத்தை அநுசரித்து கர்மா செய்பவருக்கு கர்ம பந்தமில்லை. மற்றவர் அஹங்காரத்தால் அழிவர். நல்ல அறிவாளியைக்கூட பிரகிருதி தன் இஷ்டப்படி ஆட்டிவைக்கின்றது. ஒவ்வோரிந்திரியமும் விஷயத்தோடு சேரும்போது காமமல்லது கோபத்தை உண்டு பண்ணுகிறது. சத்ருவான அதற்கு அறிவாளி வசமாகலாகாது. பிறர் தர்மத்தை நன்றாக அனுஷ்டிப்பதைவிட ஸ்வதர்மத்தைச் சிறிது குறைவாகச் செய்தாலும் இதே மேலானது. ஸ்வதர்மத்தில் ஈடுபட்டு இறப்பதுகூட சிறந்ததே. பிறர் தர்மம் பயத்தையே அளிக்கும்.

ரஜோ குணத்தாலுண்டாகும் காமமும் கோபமும் மிக பாபிகள். பெருவயிறர், சத்ரு. அவர்கள் ஒருவர் விரும்பாவிடினும் பாபத்தைச்செய்யும்படி அவரைத் தூண்டி அதைச் செய்யச் சொல்கின்றனர். க்ஞாநத்திற்குப் பரம சத்ருவான அவை புகை அக்நியை மறைப்பதுபோலும் அழுக்கு கண்

ஞூடியைப் போலவும், கர்ப்பத்தை பைபோலவும் அறிவை மறைக்கின்றன. எவ்வளவு அனுபவித்தாலும் ஆசை அடங்காது.* அது மநஸ் இந்திரியங்கள் புத்தி இவ்விடங்களி லிருந்துகொண்டு மனிதனை மயக்குகிறது. ஆதலின் முதவில் இந்திரியங்களை அடக்கி காமனெனும் மஹா சத்ருவை ஜயி.

3. கர்மயோகம் முற்றிற்று.

4, சங்கந்தவிர்ந்து சகஞ்சஹிர்பெற்ற தனஞ்சயனே
பொங்குங்குணங்கள் புணர்ப்பனைத் தும்புக விட்டவற்றுள்
நங்கண்ணுரைத்த கிரிசை யெல்லாமென வுந்நவின்ருர்
எங்குமறிவார்களே யென்று நாதனியம்பினனே.

(கருத்து):—அறியும் ஸாமர்த்யம்வாய்ந்த அர்ஜுன! பலனில் பற்றை விட்டு முக்குணங்களால் ஏற்பட்ட எல்லா வேலைகளையும் அக்குணங்களிலும் நம்மிடமும் விட்டு விட்டு, சாஸ்த்ரவிஹிதமான கர்மங்களைக்செய் என்று பகவான் கூறினார்.

---

## 4வது அத்யாயம்—பாத்ம கதை.

பாகீரதீ கரையிலுள்ள வாராணஸீ நகரிலே விச்வேச்வராது ஆலயத்தே பாதரெனும் ஓர் யோகி வஸித்துவந்தார். அவர் எப்போதும் கீதையின் நாலாமத்யாயத்தில் அளவிலா பற்றுகொண்டு ஜபிப்பார். அதைத் தவிர வேறொன்றிலும் அவர் மநம் செல்லாது. ஓர் ஸமயமவர் தற்செயலாக உத்யாநத்தில் வஸிக்கும் தேவதைகளைத் தர்சிக்கச் சென்றார். ஆங்கு அவர் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு வளர்ந்திருந்த இரு இளந்தமரத்தடியே சிறிதுநேரம் படுத்துக்

*யயாதி இளமைபெற்று பல்லாண்டு அனுபவித்தும் ஆசை அகலவில்லை—பாரதம்.

களைப்பாறிச் சென்றார். அதுமுதல் நாலைந்து நாட்களில் அம்மரங்கள் இலை உலர்ந்து பட்டுப்போயின.

ஆனால் அவை பரிசுத்தரான ஓர் அந்தணர் வீட்டிலே பிறந்து இரு கன்யகைகளாக வளர்ந்தன. ஏழாண்டுகள் சென்றபின் அவ்வழியாக வந்த அந்த பாதயோகியைக்கண்டு இக்கன்யகைகள் அன்புடன் வரவேற்று, ஐயா! உமதருளாலே நாங்கள் மரமாயிருந்த ஜன்மாவைவிட்டு இவ்வுடலைப் பெற்றோமெனப் பணிந்தனர்.

பாதயோகி நீங்கள் யார்? ஏன் மரமானீர்கள்? எப்படி விடுபட்டீர்கள்? கூறுங்களென்றார். கன்யகைகள்—கோதாவரி தீரத்தில் *சிந்நபாபமென ஓர் தீர்த்தம் இருக்கிறது. ஆங்கு ஸத்ய தபஸ் என்றோர் மஹர்ஷி கடுந்தவம் செய்தார். வெய்யில் காலத்தில் பஞ்சாக்நி மத்தியிலும் குளிர் காலத்தில் ஜலத்தின் நடுவிலிருந்தும் கடுந்தவம் செய்தார். அவரது தபோ மஹிமையால் பழுத்த மரங்கள் வளைந்து அவர்மீது குடைபோல் நின்றன. பிராணிகள் இயற்கைப் பகைமையைவிட்டு அன்யோன்யமாக வாழ்ந்தன. ஆனால் இந்திரன் ஒருவனே அச்சங்கொண்டு பல விக்நங்களைச்செய்து அவர் தவத்தைக் கலைக்கமுயன்றான். அப்ஸரசுகளான எங்களை அவரிடம் ஏவினான். நாங்கள் திவ்ய உருவமேந்தி அவர் முன்சென்று ஆடிப்பாடி தவத்தைக் கலைக்கமுயன்றோம். அவர் சினங்கொண்டு நீங்கள் கங்கை கரையில் இளந்தமரமாக இருங்கள் என்று சபித்தார். உடனே நாங்கள் அவரடிபணிந்து நாங்கள் பராதீநர்கள், யஜமானன் உத்திரவுபடி நடந்தோம். ஆகலின் மன்னித்து சாப விமோசநம் செய்தருள வேண்டுமென பிரார்த்தித்தோம். அவர் கருணைகொண்டு பாத யோகியெனும் ஸாது கீதை நான்காமத்யாயத்தின் மஹிமையால் உங்கள்சாபத்தை அகற்றுவர் என்றார். அங்ஙனம்மே தங்களருளால் சாபத்திலிருந்து

*சிந்ந-அறுக்கப்பட்ட பாபம்—பாபத்தை உடையது.

விடுபட்டது மாத்ரமல்ல. ஸாதுக்கள் குலத்தில் உயர்ந்த மானிடப் பிறவியையும் முற்பிறப்பின் நினைவையும் பெற்றோம், கோரமான ஸம்ஸாரத்திலிருந்தும் விடுபட்டோமென்றனர். பாதயோகி அவர்கள் செய்த பூஜையை ஏற்று தம்மிருப்பிடஞ்சென்றார்.

---

## 4. ஞாநகர்ம ஸந்யாஸ யோகம் 42 சுலோகங்கள்.

[அர்ஜுநன் 1, பகவான் 41]

பகவான் :—இந்த அழிவில்லாத யோகத்தை யான் விவஸ்வானுக்கு உபதேசித்தேன். அவர் மநுவிற்கும் மநு இக்ஷ்வாகுவிற்கும் உபதேசித்தார். இங்ஙனம் பரம்பரையாக ராஜர்ஷிகளிடம் பரவிற்று. நீண்டநாட் சென்றதால் அந்த யோகம் சிறிது மறைந்தது. யான், நீ பக்தன் நண்பன் என்று ரஹஸ்யமான அதை உனக்குக் கூறினேன்.

அர்ஜுநன் :—இப்போது வஸுதேவன் வீட்டில் பிறந்த நீர், பல்லாண்டுகளுக்குமுன் தோன்றிய சூர்யனுக்கு எப்படி உபதேசித்தீர் ?

பகவான் :—எனக்கும் உனக்கும் எண்ணிறந்த ஜன்மங்கள் சென்றன. அவைகளை யானறிவேன். நீ யறியாய். யான் பிறப்பிறப்பு அற்றவன். ஸ்வதந்த்ரன். எனினும் மாயையால் உடல் எடுக்கிறேன். தர்மங்குறைந்து அதர்மம் ஓங்கும்போது ஸாதுக்களைக் காக்கவும் துஷ்டர்களைச் சிக்ஷிக்கவும் தர்மத்தை நிலைநாட்டவும் ஒவ்வோர் யுகத்திலும் யானவதரிக்கிறேன். அரியதான என் பிறப்பையும் செயலையும் உண்மையாக உணர்ந்தவர் மறு பிறப்பற்று என்னிடம் சேர்வர்.

என்னை யார் எப்படி உபாஸிக்கின்றனரோ அப்படியே அவரை யான் அடைகிறேன். தர்ம பூமியான பாரதவர்ஷத்

திலே கர்மாக்கள விரைவில் பலனை யளிக்கின்றன. ஆதலின் சிலர் யக்ஞத்தால் தேவர்களை ஆராதிக்கின்றனர். அவரவர் முற்பிறவியின் கர்மாவிற்கும் குணத்திற்கும் ஏற்றபடி யான் நாலு வர்ணங்களைப் படைத்தேன். அவர்களது முற்கர்மாவைக் கொண்டே படைத்ததால் யான் முக்ய கர்த்தா அல்ல. கர்ம ஜடம். அதற்காக யான் கர்த்தாவானேன். இப்படி ஒருவனைத் தாழ்ந்தவராகவும் மேலானவராகவும் படைத்ததால் எனக்கு யாதொரு பாபமும் கிடையாது. ஏன்? எனக்கு அந்த கர்மாவில் பற்றுகிடையாது.

இந்த ஸூக்ஷ்மத்தை அறிந்து பல முமுக்ஷுக்கள் முன்னம் கர்மாவைச் செய்தனர். நீயும் அங்ஙனமே செய். வேதம் நீ செய்யென விதித்தது, வேண்டாமென தடுத்தது, கர்மாவை விடுவதுஎன கர்மா பலவகைப்படும். மிகவுங் கடினமான கர்மாவை நன்கு உணரவேண்டும். நான் ஓர் கர்மாவையுஞ் செய்யவில்லையென்று ஒருவன் கை கால்களை அசைக்காமலிருக்கலாம். நான் கர்மாவைச் செய்யவில்லை யென்றவன் ஸங்கல்பம், கர்த்ருத்வமும் சேர்ந்தது கர்மாவாம். ஒருவன் யாதொரு பற்றுமின்றி கடமையென கர்மாவைச் செய்தால் அது அகர்மாவாம். பற்றும் ஸங்கல்பமும் இல்லாமல் செய்யுங் கர்மாவின் விதையை க்ஞானாக்நி வறுத்துவிடுவதால் அது கர்மாவல்ல. நாம் செய்யும் கர்மாவிலீடுபட்ட ஒவ்வொன்றையும் பிரும்மமாகவே கருதல்வேண்டும். ஹவிஸ்ஸும் அக்நியும் ஹோமமும் செய்பவனும் இக்கர்மத்தால் அடையவேண்டியதும் பிரும்மமே. திரவ்ய யக்ஞம், தபோ யக்ஞம், யோக யக்ஞம், வேதக்ஞாந யக்ஞமென யக்ஞம் பலவகைப்படும். இவை பாபத்தை அகற்ற வல்லவை. யக்ஞ சேஷத்தைஉண்பவர் பாபத்திலிருந்து விடுபடுவர். யக்ஞமில்லாதவனுக்கு இவ்வுலகமேகிடையாது, பரலோகமேது? எல்லாவற்றிலும் க்ஞாந யக்ஞமே சிறந்தது. அதை ஸத்குருவையடைந்து வணங்கி தொண்டுசெய்து பல கேள்விகளைக் கேட்

டால் உபதேசிப்பார்கள். அதையடைந்தபின் இத்தகைய மோஹம் உனக்கு இராது. அதனால் ஸகலப்ரபஞ்சத்தையும் உன்னிடத்தில் காண்பாய். உன்னையும் என்னிடத்தில் காண்பாய். எத்தகைய மாபாபங்களையும் க்ஞாநாக்நி எரித்துவிடும். அறிவைப்போல் பாவநமானது வேறில்லை. முற்கூறிய யோகத்தைச் செய்பவன் சிறிது காலஞ்சென்றபின் இந்த க்ஞாநத்தைப் பெறுவான். ச்ரத்தையுள்ளவனுக்கு க்ஞாநமும் சாந்தியும் உண்டாகும். அறிவில்லாதவனும் ச்ரத்தையில்லாதவனும் ஸந்தேஹப் படுபவனும் நாசமடைவான். அக்ஞாநத்தாலுண்டான ஸந்தேஹத்தை ஞாநக் கத்தியாலறுத்து பற்றற்று கருமத்தைச் செய்! எழுந்திரு.

4. ஞாநகர்ம ஸன்யாஸமெனும் கர்ம ப்ரம்மார்ப்பணயோகம் முற்றிற்று.

5. *பிறவாமை தந்திடத்தானே பிறக்கும் பெருமைகளும்*
*துறவாக் கிரிசைகள் தூர்மதிதன்னால் துலங்குகையும்*
*இறவா வுயிர்நிலையுங் கண்டிடுமுலை கின்னிலையும்*
*மறைவாழி மாயவனே யெனக்கின்றறிவித்தான்.*

(கருத்து)—ஜீவனுக்கு மோக்ஷமளிக்க பிறப்பில்லாத தான் அவதாரம் செய்ததையும் விடாமல் செய்யவேண்டிய கர்மாக்களையும், அதனால் தோன்றும் மநச் சக்தியையும் ஜீவனழியாமையையும், தோன்றிய உலக நிலையையும் வேதத்தில்கூறிய மாயா கார்யங்களைச்செய்த மாதவன் கூறினான்.

---

## 5வது அத்யாயம்—பாத்ம கதை.

மத்ர தேசத்திலே புருகுத்ஸ புரத்திலே பிங்களன் என்றோர் வேதியனிருந்தான். அவன் தனது குலோசிதமான வேத வித்யைகளைவிட்டு காந வித்யை கற்றுவந்தான். அதில் அவன் ஒப்பற்ற கீர்த்திபெற்று ராஜ ஸபைகட்குச்

சென்றான். பல ராஜாக்களாலும் நன்கு மதிக்கப்பட்டு ஏராளமாக பொருள்தேடினான். கருமத்தால் நீச குலத்தே பிறந்த ஓர் பெண்ணை அழகிற்சிறந்தவளென மணந்தான். அரசரிடமுள்ள செல்வாக்கால் பல குல ஸ்த்ரீகளைக் கெடுத்தான். அவன் மனைவி அருணையென்பவள் இவனை விரும்பாது பர புருஷரிடம் ஆசைகொண்டாள். அதைக்கண்ட கணவன் கடிந்துவிழுந்து அவளை ஹிம்ஸித்தான். அருணை அவன் குடித்து மெய்மறந்து உறங்கும்போது சோர புருஷனைத் துணைகொண்டு அவனைக்கொன்று பூமியில் புதைத்துவிட்டாள்.

பிங்களன் யமலோகஞ்சென்று பற்பல நரகங்களையனுபவித்து ஓர் கழுகாகப் பிறந்தான். அருணை பகந்தரமெனும் நோய்வாய்ப்பட்டு பலநாட் துன்புற்று இறந்தாள். அவளும் பற்பல நரகங்களிலிடர்பட்டு சொல்லொணுத் துன்பங்களையனுபவித்து காட்டில் ஓர் கிளியாகப் பிறந்தாள். இருவருக்கும் பூர்வ ஜன்ம பகைமை மாத்திரமகலவில்லை. கிளியைக் கழுகு மூக்கால் குத்தித் துறத்தி துறத்தி ஹிம்ஸித்தது. கிளியோ தனக்கு பலமில்லாமையால் பயந்தோடி ஓரிடத்தே வீழ்ந்தது. அங்கு ஓர் மண்டை ஓட்டில் நீர் தங்கிநிற்க அதன்மீது கிளி உடல்பட்டது.

அக்கழுகை ஆங்குள்ளோர் கல்லாலடிக்க அதுவும் தத்தித் தத்தி அம்மண்டை ஓட்டருகே வீழ்ந்து உயிரைவிட்டது. யமதூதர் ஏககாலத்தில் இவ்விருவரையும் யமனிடஞ் சேர்த்தனர். யமதர்மராஜன் சிறிது ஆழ்ந்து யோசித்து உங்கள் பாபமகன்றது. நீங்கள் இஷ்டமான உலகிற்குச் செல்லலாமென்றார். இதைக்கேட்டு பரமாச்சர்யமடைந்த இருபறவைகளும் ஐயா! மஹா பாபிகளான எங்கள் பாபம் எப்படியகன்றது? என்ன புண்யத்தால் நல்லுலகம் கிட்டிற்று? என்றுகேட்டனர். தர்மராஜன், பக்ஷிகளே! கங்கா தீரத்தில் வடுவெனும் ஓர் பிரும்ம வித்து இருந்தார். அவர்

எப்பொழுதும் மிக பவித்ரமான கீதையின் ஐந்தாமத்யாயத்தையே ஜபிப்பவர். அதனால் நிர்மலமான சரீரம் வாய்ந்த அவர் ப்ராரப்த கர்மம் ஒழிந்தபின் இவ்வுடலைவிட்டு மோக்ஷமடைந்தார். அவர் அந்த மண்டை ஓட்டில் தங்கிய ஜலம் இறக்கும்போது உங்கள் உடல்மீது பட்டதால் உங்கள் பாபம் பறந்தோடியது. அளவிலா புண்யமுண்டாயிற்று. என்றார். இதைக்கேட்டு ஆனந்தமடைந்த அவ்விருவரும் திவ்ய தேஹம்பெற்று அருகில்வந்த விமானத்தின்மீதேறி வைகுண்டம் சென்றனர்.

ஐந்தாமத்யாயம் பாராயணம் செய்தவர் மண்டை ஓட்டின் ஜலத்திற்கே இத்தகைய பெருமையெனில் அவ்வத்யாயத்தின் பெருமையைக்கூற எவரே வல்லவர்?

---

## 5. கர்ம ஸந்யாஸ யோகம் 29 சுலோகங்கள்.

[அர்ஜுனன் 1, பகவான் 28.]

அர்ஜுனன் :—க்ருஷ்ண! ஸந்யாஸத்தையும் போற்றுகிறாய். கர்மயோகத்தையும் போற்றுகிறீர். இவ்விரண்டில் எது சிறந்ததென எனக்கு நிச்சயமாக சொல்லும்.

பகவான் :—இரண்டும் நல்லதே! அதில் கர்மயோகம் மிகச்சிறந்தது. விருப்பு வெறுப்பு இல்லாதவன் நித்ய ஸந்யாஸி. க்ஞானம் வேறு, கர்மா வேறென குழந்தைகளே கூறும். பண்டிதர் கூறார். இரண்டில் ஒன்றை நன்கு அநுஷ்டித்தால் இரண்டின் பலன்களையும் பெறலாம். ஆனால் ஸந்யாஸத்தைக் கைகொள்வது மிக்க கஷ்டம். கர்மயோகியோ விரைவில் மோக்ஷமடைவான்.

கர்மயோகி கர்மாவை ப்ருஹ்மார்ப்பணம் செய்து மனதில் பரமாத்மாவை த்யானம் செய்துகொண்டு கண் பார்த்தாலும் காது கேட்டாலும் மூக்கு முகர்ந்தாலும் வாய் உண்டாலும் பேசினாலும் கை வாங்கினாலும் கால் நடந்தாலும் கர்ம

லேச ஸம்மந்தமில்லாமலிருக்கிறான். இவன் ஜல[illegible]ருந்தா லும் தாமரை இலைமீது ஜலம் ஒட்டாதது[illegible]பான். பற்றின்றி மனச்சுத்தியின்பொருட்டு யோகி[illegible]களைச் செய்து சாந்தி அடைகின்றனர். [illegible]ளவனோ கர்ம பாசத்தால் கட்டப்படுவான். ஒன்பது [illegible] பட் டணமான தேஹத்திலே ஜீவன் தானொன்றைச் செய்யாம லும் செய்விக்காமலுமிருக்கிறான். மாயைதான் செய்விக் கின்றது. அது சுத்தமான ஞானத்தை மறைத்துவிடுகிறது. அதனால் உலகம் மோஹமடைகிறது. அஞ்ஞானமழிந்தால் ஆத்ம ஸ்வரூபம் ஆதித்யனைப்போல் விளங்கும். அதற்கு எப் போதும் பகவானிடத்திலே புத்தியைச் செலுத்தி தன்மய மாகி ஆத்ம நிஷ்டையிலீடுபட்டு அதே வேலையாயிருக்கவேண் டும். அத்தகையவரே மோக்ஷமடைவர். அத்தகையவருக்கு வித்யையும் விநயமும் நிறைந்த வேதியனிடத்தும் சண்டாள னிடத்தும் பசுவினிடத்தும் நாயினிடத்தும் யானையினிடத் தும் ஆத்மா காணப்படும். நீச சரீர ஸம்பந்தத்தால் யாதொரு தோஷமுமில்லாத ஆத்ம ஸ்வரூபத்திலீடுபட்டவர் வெளி யிலிருந்துவரும் இன்ப துன்பங்களை மதியார்.

அவர்கள் பெறும் ஆநந்தம் அக்ஷயமானதல்லவா? முடி வில் துன்பத்தையே தருவதுமழிவுள்ளதுமான பாஹ்ய இன்பங்கள் அவர் மனதைக் கவருவதில்லை, காமக்ரோதத் தினால் வரும் வேகத்தை ஸஹித்துக்கொள்ளும் யோகியே ஸுகம் பெறுவான். தனக்குள் தானே ரமித்துத் தனது ஜோதிஸ்ஸைத் தானேகண்டு ஸகல பாபங்களையுங் களைந்து இரு புருவங்களுக்கிடையே பிராணனை நிறுத்தி ப்ராணா பானன்களை மூக்கு நடுவே ஸஞ்சரிக்கும்படிசெய்து பரமாத் மாவை த்யானம் செய்வோர் மோக்ஷஸாம்ராஜ்யத்தைப் பெறுவர்.

5. கர்மஸன்யாஸயோகம் முற்றிற்று.

6. கண்டெளிதாங் கருமம்முயிர் காட்டுங்கடுக தலும்
மண்டிய தன்படி யின்மநங் கொள்ளும் வரிசைகளும்
கண்டறியா வுயிரைக்காண லுற்ற நினைவுகளும்
வண்டுவரீசனியம் பினன் வாஸவன் மைந்தனுக்கு.

(கருத்து)—ப்க்வ்தாராதந ரூபமான நிஷ்காம்ய கர்மாவானது ஞாந மார்க்கத்தைவிட சீக்ரமாக ஆத்ம தர்சனத்திற்கு உபயோகமாகிறதென்றும், அதைச் செய்யும்போது யான் செய்யவில்லையென்று எப்படி நினைப்பதென்றும் ஆத்ம ஸ்வரூபத்தைக்காண எப்படி த்யாநம் செய்வதென்றும் த்வாரகநாதன் இந்த்ர புத்ரனுக்குரைத்தார்.

---

## 6வது ஆத்யாயம்—பாத்ம கதை.

கோதாவரீ தீரத்திலே ப்ரதிஷ்டானமென்றோர் நகரமுண்டு. ஆங்கு பிப்பலேசன் என்ற பெயரோடு பரமசிவன் விளங்குகிறார். அங்கு ஜாநச்ருதி என்றோர் வேந்தன் அரசு புரிந்துவந்தான். அவன் பற்பல வேள்விகளையும் எண்ணிறந்த தானங்களையும் செய்து ஒப்பற்ற கீர்த்திபெற்றான். ஜனங்களால் காதில் கேட்கப்பட்டவனென்ற காரணப்பெயர் அவனுக்கு உண்டாயிற்று. அவனது நாட்டில் பஞ்சமோ ஈதிபாதையோ களவோ கலஹமோ கிடையாது. குடிகளை அவர் தனது மைந்தர்போல கருதினர். அவர்கள் அரசனைத் தந்தையென மதித்தனர்.

இவரது உயர்ந்த குணத்தைக்கண்டு வியந்த விண்ணவர் இவர் வேண்டாமலே அவருக்குப் பேருதவி புரியக் கருதினர். உடனே அழகிய அன்னப்பறவையின் உடலெடுத்து மாடிமீது உலவும் ஜாநச்ருதியின் தலைமீது பறந்தனர். பின்னே செல்லும் பறவைகள் முன் செல்பவைகளை நோக்கி "என்ன வேகமாகச் செல்கிறீர்களே! இக்கடினமான இடத்தில் சேர்ந்தல்லவோ செல்லவேண்டும்! முன்னே ஓர்

தேஜோமண்டலம் நிற்பதையும் அதனிடையே தார்மிக ஜாநச்ருதி நிற்பதையும் நீங்கள் காணவில்லையா?" என்றன. இதைக்கேட்டு அவைகள் "என்ன அஞ்சுகிறீர்கள்? ரைக்வ ரெனும் பிரும்மவித்தைவிட இவர் உயர்ந்தவரா என்ன?" என்று பதில்கூறின.

இங்ஙனம் பக்ஷிகள் தன்னைப் போற்றுவதையும் தூற்று வதையுங்கேட்ட வேந்தன் வியந்து ஸாரதியையழைத்து ரைக்வரெனும் மஹாத்மாவைத் தேடியழைத்துவாவென கட்டளையிட்டார். ஸாரதி உடனே புறப்பட்டு பற்பல நாடு களைக்கடந்து காசி, கயை, இமயமலைச்சாரல், கௌடதேசம், த்வாரவதி, ஸோமநாதபுரம், அவந்திபுரி, ஓங்காரம், அச்வ மேதம், விஷ்ணுகயா, கொல்ஹாபுரம், பஞ்சநதம், அமலகிரி, நந்திகேசம், துங்கபத்ரா, ஸ்ரீசைலம், விட்டலபுரம், கோதா வரீ, மதுரா, காலிந்தீ, கோவர்த்தநம், குருக்ஷேத்ரம் முதலிய விடங்களில் அவரைத்தேடி ஆங்குள்ள நதிகளில் மூழ்கி பக வத் தர்சநம் செய்துவிட்டு காச்மீரஞ் சென்றான்.

அந்நாடு நீர்வள நிலவளத்துடன் கல்விக்களஞ்சியமா யிருந்தது. அந்நாட்டை ஆண்டுவந்த அரசன் வநத்திலே வேட்டையாடும்போது ஓர் ஸ்வயம்பு லிங்கத்தைக் கண் டான். அங்கு விதிப்படி ஆலயமமைத்து மாணிக்கத்தால வரை அர்ச்சித்தான். அதுமுதல் மாணிக்கேச்வரரென அவர் அழைக்கப்படுகிறார். அந்த ஆரண்யத்திலே ஓர் வண் டிக்கருகே அமர்ந்து சொறிநிறைந்த தன்உடலைச் சொறிந்து கொண்டிருக்கும் ஒருவரைக்கண்டான். அவரது உடலொளி யைக் கண்டு அவரே ரைக்வரென உணர்ந்தாலுமருகிலுள் ளோரைக்கேட்டு நிச்சயித்தான். பின்னர் ஸாரதி அவர் திருவடிபணிந்து ஸாதோ! தாங்கள் யார்? ஏனிங்கு தனியே அமர்ந்திருக்கிறீர்கள்? தமக்கென்ன வேண்டும்? என்று கேட்டான். ரைக்வர்—நாம் பூர்ணகாமர். நமக்கொன்றும் தேவையில்லை! ஆனால் நமது உள்ளத்திலுள்ளதையறிந்து

பலர் செய்யக்கூடிய தொண்டை ஒருவராக இருந்துசெய்யும் ஓர் உத்த பரிஜனமே தேவையென்றார். இதைக் கேட்ட ஸாரதி வேந்தனிடம் விரைந்துசென்று நடந்ததைக் கூறினான்.

மன்னன் எண்ணிறந்த ஆடை ஆபரணங்களையும் ஆயிரக்கணக்கான கோக்களையும் மிக அழகிய இருகுதிரைகள் பூட்டிய ஓர் ரதத்தையும் ரைக்வருக்குக் காணிக்கையாக அளித்துப் பணிந்து நின்றான். இவைகளில் சிறிதும் விருப்பில்லாத ரைக்வர் ஏ சூத்ரா! நமது ஸமாசாரத்தை நீ அறியாய், இவைகளை நீயே எடுத்துக்கொள்! என்றார். இதைக் கேட்டு பார்த்திவன் தன்னைச் சபித்து விடுவாரோவென்று பயந்து அவர் திருவடியில் பலமுறைப் பணிந்து க்ஷமிக்கும் படி வேண்டினான். அன்றியும் இத்தகைய காந்தி தமக்கு உண்டாகக் காரணமென்னவென்று வினவினான். அவர் கீதையின் ஆறுமத்யாயத்தின் பெருமை இது என்றுரைத்தார். ஜாநச்ருதி அவரை ஆசார்யனாக அடுத்து ஆறுமத்யாயத்தை உபதேசம்பெற்று அந்த பாராயணத்தால் முக்தி பெற்றான். ரைக்வரும் மாணிக்கேச்வரர் ஆலயத்தில் ஆறுமத்யாய பாராயணம் செய்துகொண்டிருந்தார். ஹம்ஸ வடிவங்கொண்ட அமரரும் தம் பணி தீர்ந்ததென வானூடு சென்றனர்.*

---

## 6. ஆத்மஸம்யம யோகம் 47 சுலோகங்கள்.

[அர்ஜுநன் 5, பகவான் 42.]

பயனைக் கருதாது கர்மாசெய்பவன் ஸன்யாஸியும் கர்மயோகியுமாவன். ஸங்கல்பத்தை விடாதவன் யோகியாக மாட்டான். யோகத்தையடைய ஆசைப்படுபவன் கர்மாவைச்

---

*இக்கதை சாந்தோக்ய உபநிஷத்திலும் பிரும்ம ஸூத்ரம், அபசூத்ராதிகாணத்திலுமிருக்கின்றன.

செய்யவேண்டும். யோகாரூடனுக்கு ஸந்யாஸம் காரணமாம். இந்திரியங்களுக்குரியதான விஷயங்களிலும் கர்மாவிலும் பற்றைவிட்டு ஸங்கல்ப மில்லாதிருப்பவன் யோகாரூடன் ஆவான். நமக்கு நாமே பந்து, நமக்குநாமே சத்ரு. ஆதலின் நம்மை நாமே மேலுக்குக் கொண்டுவரவேண்டும். இந்திரியங்களை ஜயித்தவன் தன்னைத்தான் முன்னுக்குக் கொண்டு வந்தவனாவான். இந்திரியங்களை ஜயிக்காதவன் தனக்குத் தானே சத்ருவாவான். ஜிதேந்திரியன், மிக சாந்தமானவன், சீதோஷ்ணம் ஸுக துக்கம் மாநாவமாநம் இவைகளில் ஸமமாயிருப்பவன், க்ஞாந விக்ஞாநங்களிலே த்ருப்தியுள்ளவன், கல்லையும் காஞ்சநத்தையும் ஒன்றாக நினைப்பவன் ஆகிய இவர்கள் முக்திபெறும் யோகி எனப்படுவர். நண்பன் பகைவன் உதாஸீனன் மத்யஸ்தன் பந்து ஸாது பாபி இவர்களிடம் ஒரே ஆத்மாதானென ஸமமான புத்தியுள்ளவர் சிறந்தவராவர்.

யோகி ரஹஸ்யமாயும் ஏகாந்தமாயும் சுத்தமாயுமுள்ள விடத்தில் மிக்க உயர்வும் தாழ்வும் இல்லாத, தர்ப்பை அதன் மீது (மான்) தோல் அதன்மீது வஸ்த்ரம் இங்ஙனமாஸன மமைத்து அதிலமர்ந்து மநோவ்யாபாரங்களை அடக்கி மநதை ஏகாக்ரப் படுத்தி சித்தசுத்திக்காக யோகஞ்செய்ய வேண்டும். உட்காரும்போது உடல் தலை கழுத்து இவை வளையாமலும் அங்கு இங்கு பாராமல் தனது மூக்கின் நுனியையே பார்த்துக்கொண்டும் அச்சமின்றி பிரும்மசர்ய விரதத்துடன் மநதையடக்கி என்னையே த்யாநம் செய்ய வேண்டும்.

இங்ஙனம் ஸதா யோகஞ்செய்பவர் என்னையடைந்து சாந்தியுடன் பேரின்பம் பெறுகின்றனர். மிதமிஞ்சி உண்பவனும் தூங்குபவனும் அடியோடு பட்டினி கிடப்பவனும் விழித்திருப்பவனும் யோகத்திற்கு ஏற்றவனல்ல. ஆஹார

வ்யவஹாரம் கார்யம் தூக்கம் விழித்தல் ஆகியவை மிதமா யிருந்தால்தான் யோகம் துக்கத்தையகற்றும். காற்றில்லாத விடத்திலுள்ள தீபம்போல் அசைவற்ற மநமுள்ளவனே யோகியாம். யோகத்தால் அடக்கப்பட்ட மநம் ஒடுங்கி தன்னைத் தானே பார்த்து பரம ஸந்தோஷமடையவேண்டும். அச்சுகம் பஞ்சேந்திரியங்களுக் கெட்டாமல் புத்தியால் மாத்ரமறியத்தக்கது. அதற்குமிஞ்சிய சுகம் வேறில்லை. அதைப்பெறின் எவ்வளவு துக்கம்வந்தாலும் நம்மை அசைக்காது. ஆதலினதை யடைவதற்கு ஸாதநமான யோகத்தைப் பெறவேண்டும். ஸங்கல்பத்தால் உண்டாகும் காமனைகளைவிட்டு மநதினாலே இந்திரியங்களை யடக்கவேண்டும். தைர்யமாய் புத்தியைக்கொண்டு மெதுவாக அடக்கவேண்டும். ஆத்மாவினிடத்தில் மநதைக்கொண்டு வைத்துவிட்டு வேறொன்றையும் நினைக்கலாகாது. மநம் எழுந்து ஓடும். அதை மெதுவாகத் திருப்பி ஆத்மாவினிடத்திலேயே சேர்க்கவேண்டும். மநம் சாந்தமாகி ரஜோ குணமகன்று பாபமில்லாமல் பிரும்ம ஸ்வரூபியாய் நிற்பவனை உத்தம சுகம் தேடி வரும்.

ஸமதர்சியான யோகி தான் எல்லா பிராணிகளிடமும் அவை தன்னிடமுமிருப்பதாக எண்ணுவான். என்னை எல்லாவிடத்திலும் எல்லாவற்றையும் என்னிடத்திலும் பார்ப்பவனுக்கு நான் நாசமாவதில்லை. எனக்குமவன் அழிவதில்லை. எங்குமுள்ள என்னை ஏகாந்தமாக உபாஸிப்பவன் எப்படியிருந்தாலும் யோகியே ஆவான். தன்னைப்போலவே பிறரை நினைப்பவன் உத்தம யோகியாவான்.

அர்ஜுநன் :—மதுசூதந! நீர் கூறிய ஸமயோகம் எனக்கு விளங்கவில்லை! மநம் மிக்க பலமுள்ளது. சஞ்சலமானது. காற்றைப்போல் கட்டுக்கு அடங்காதது.

பகவான்:—ஓமஹாபாஹோ! அடக்கமுடியாதது மநஸ்

என்பது உண்மையே.* அப்யாஸத்தினாலும் வைராக்யத்தினாலுமே அதையடக்கவேண்டும். மநஸை யடக்கினாலல்லது யோகத்தை அடைய முடியாது.

அர்ஜுனன்:—கிருஷ்ண! ஸன்யாஸமில்லாத ஒருவன் ச்ரத்தையுடன்கூடி யோகத்தைச் செய்யும்போது அதிலிருந்து நழுவி அதன் சித்தியை யடையாமல்போனால் யோகம் ஸன்யாஸமிரண்டுமில்லாமல் கூட்டத்திலிருந்து பிரிந்துவந்த மேகம்போல் நாசமடைவானா? அல்லது என்ன கதியை யடைவான்?

பகவான்:—பார்த்த! அவனுக்கு இங்குமங்கும் நாசமென்பதில்லை. நல்லதைச் செய்பவன் ஒருநாளும் கெடமாட்டான். † புண்ய லோகங்களில் பல்லாண்டு சுகம்பெற்று யோகப்ரஷ்டன் தனது பரிபாகத்திற்கேற்றபடி சுத்தமான தனிகர் வீட்டிலோ மேதாவிகளான யோகிகள் வீட்டிலோ மிக துர்லபமான பிறவியைப்பெற்று முற்பிறவியில் விட்ட குறையைப் பூர்த்திசெய்வான். அவன் முயற்சி செய்யாமலிருந்தாலும் பூர்வாப்யாஸமவனைப் பரவசமாக யோகத்தில் இழுத்துச் செல்லும். அந்த யோகத்தை அறியவேண்டுமென்று ஆசைகொண்டவன்கூட கர்ம பலத்தை விரும்பாது மேலே செல்கிறான். அன்றியும் பலமான முயற்சிசெய்து அநேக பிறவிகளில் சித்தியைத்தேடி பின்னற் உத்தம கதியைப் பெறுகிறான். ஆதலின் தபஸ்விகளைவிடவும் க்ஞானி

---

* வியாஸர் ஜைமினிக்கு மநஸ் வித்வானைக்கூட இழுக்குமென்றபோது அவர் ஸந்தேஹித்தார். வியாஸரே பெண்ணுருவந்தாங்கி பாட ஜைமினி மயங்கி ஏமாந்தார். (ஜைமினி பாரதம்.)

† 7 முனி குமாரர்கள் யோகாப்யாஸ காலத்தில் பசியால் குருபசுவைக் கொன்று ச்ரார்த்தம் செய்தனர். அவர்கள் வேடர்களாகவும், மான்களாகவும், ஹம்ஸங்களாகவும் பிறந்து, பரிபாகமுள்ளவர் யோகி குலத்திலும் சிலர் ராஜ குலத்திலும் பிறந்து பின் நற்கதி பெற்றனர். (நாரத புராணம்.)

களைவிடவும் கர்மிகளைவிடவும் யோகி சிறந்தவனென்பது எனது தீர்மானம். நீ யோகியாயிரு. யோகிகளிலும் என்னையே ஸதாநினைத்து ஸேவிப்பவன் யுக்ததமனுவான்.

ஆத்மஸம்யம யோகம் முற்றிற்று.

7. யோகமுயற்சியும் யோகிற்சமநிலை நால்வகையும்
யோகினுபாயமுப யோகுதன்றால்வரும் பேறுகளும்
யோகுதனில்தன் திறமுடையோகு தன்முக்கியமும்
நாகணையோகி நவின்றனன்நன் முடிவீரனுக்கே.

(கருத்து)—யோக முயற்சியும் யோகத்தில் நால்வகை சமதர்சனமும், மனதையடக்கும் உபாயமும் யோகபலன்களும் யோகத்தைவிட தன்னை உபாஸிக்கும் யோகம் சிறந்ததெனவும் சேஷசாயி கிரீடிக்கு உபதேசித்தான்.

முதல் ஷட்கம் முற்றிற்று.

## 7வது அத்யாயம்—பாத்ம கதை.

நீர்வளம் நிலவளம் நிறைந்த பாடலீபுத்ரமெனற நகரத்தில் சங்குகர்ணன் என்றோர் வேதியனிருந்தான். அவனுக்குப் பணத்தில் பேராசை தோன்றவே வைச்ய விருத்தியான வியாபாரத்தைக் கைகொண்டு பெருஞ்செல்வம் சேர்த்தான். வேதியருக்குரிய, தேவபூஜை பித்ருபூஜை செய்தறியான். பொருள் தேடும் நிமித்தம் அரசரையும் இதர உத்யோகஸ்தர்களையுமழைத்து விருந்தளிப்பான். மூன்று மனைவிகளை மணந்து சிற்றின்பத்தை அனுபவித்தான். ஆசைக்களவேது? தநமதத்தால் நான்காம் மனைவியை மணக்கத் தன் பரிவாரத்துடன் கிராமாந்தரஞ்சென்றான். நடுவழியில் ஓர் மரத்தடியே அவன் படுத்துறங்கும்போது. கொடிய ஸர்ப்பமவனைத் தீண்டியது. சில நிமிஷங்களுக்குள் கண் இருட்ட காதடைக்க நாவு உலர உயிரைத் துறந்தான்.

அவன் உடலை இலைகளால் மூடி புத்ரர்கள் தனது ஊருக்குக் கொண்டுவந்து தீயிலிட்டார்கள். இங்ஙனம் அபமிருத்யுவால் இறப்பவற்கேற்றபடி பிரேத உடலை எடுத்தான். தக்க காலத்திலே தநயர்கள் விதிப்படி பரலோகத்திற்கு உசிதமான சடங்குகளைச் செய்தனர். சங்குகர்ணன் பாம்பை நினைத்தே இறந்ததற்கேற்க பாம்பாகவே பிறந்தான். புத்ரர்களுக்குத் தெரியாமல் அவன் கோடிக் கணக்கான தனத்தை எந்தவிடத்தில் புதைத்து வைத்திருந்தானோ அவ்விடத்திலேயே தங்கி அதைக் காத்துவந்தான். ஓரிரவு தான் பாப ஜன்மமெடுத்ததை நினைத்து வருந்தி தன் பிள்ளைகளிடம் கனவில்தோன்றி அப்பொருளை எடுத்துக்கொண்டு எனக்கு நல்ல கதியை அளியுங்கள் என்றான். மறுநாட் காலையில் புத்ரரனைவரும் ஒன்றுகூடி ஒரே மாதிரியாக ஸ்வப்னம் ஆனதைக்கூறி இது வெறுங்கனவல்ல, உண்மையே! தந்தையை எப்படி நற்கதி பெறும்படி செய்வது என யோசித்தனர். அதில் ஒருவன் உண்மையாகவே பித்ரு பக்திகொண்டு அவரை எப்படி கரை ஏற்றுவதென எண்ணி உள்ளம் உருகினான். ஒருவன் அரவத்தை அடித்துக்கொன்று பொருளை அனுபவிக்கலாமென்று கருதினான். மற்றொருவன் தந்தை கதியை எண்ணி எண்ணிக் கதறினான். மத்யம புத்ரன் பொருளாசையால் ஒருவரிடமும் கூறாமல் அன்றிரவே அங்குசென்று அவ்விடத்தைத் தோண்ட முயற்சித்தான். அதற்குள் அங்கிருந்த பாம்பு சீறிக்கொண்டு ஏ! மூட நீ யார்? ஏனிதைத் தோண்டுகிறாய் என்றது. யான் தங்களது சிவனெனும் குமாரன். ஸ்வர்ணத்தில் உள்ள மோஹத்தால் இதை எடுக்கவந்தேன், என்று அவன் கூற, தந்தை அவனை நோக்கி நீ என் புதல்வன் ஆனால் என்னை இப்பிறவியிலிருந்து விடுவிப்பதன்றோ உனது முதற்கடமையென்றான். இதைக்கேட்ட சிவன் அருமைதந்தாய்! அங்ஙனமே செய்கிறேன். அதற்கேற்ற உபாயத்தைக் கூறும்

என்றான். தந்தை, புத்ர! தீர்த்தமோ தானமோ தவமோ என்னை இதிலிருந்து விடுவிக்காது. ஸ்ரீ பகவத்கீதையின் ஏழாமத்யாயம், ஒன்றே என்னை விடுவிக்கவும் ஜனன மரணம் முதலியவற்றை அகற்றவும்வல்லது. ஆதலால் எனது திதியில் கீதை ஏழாமத்யாயம் பாராயணம் செய்பவரைப் பிராமணனாக வரித்து அன்னமிடு என்றார். இதைக் கேட்ட மத்யம புத்ரன் தன் ஸஹோதரர்களிடம் தனக்கும் தந்தைக்கும் நடந்ததைக்கூறினான். அனைவரும் அங்ஙனமே ச்ராத்தம் செய்ய சங்குகர்ணன் திவ்ய தேஹப்பெற்று புத்ரர்களுக்குத் தனத்தைப் பிறித்துத்தந்தார். புத்ரர்களும் அப்பொருளைக்கொண்டு குளம்வெட்டி கோயில் கட்டி அன்னதானம் முதலிய தர்மங்களையே செய்தனர். அன்றியும் ஏழாமத்யாத்தின் பெருமையை உணர்ந்து அவர்களும் அதைப் பாராயணம் செய்து நற்கதி பெற்றனர்.

---

## 7. க்ஞான விக்ஞான யோகம்
## 30 சுலோகங்கள்

பகவான் :—பார்த்த! என்னிடத்தில் பற்றுகொண்டு என்னையே ஆச்ரயித்துப் பூர்ணமாக நீ என்னை அறியும்படியான வழியை உபதேசிக்கிறேன் கேள்! இதற்குமேல் நீ கேட்க வேண்டியதே இல்லாதபடி அனுபவத்துடன்கூடிய க்ஞானத்தைக் கூறுகிறேன். ஆயிரத்திலொரு மனிதனே ஸித்தி அடைய முயற்சிக்கிறான். அப்படி முயற்சிக்கும் ஸித்தர்களில் ஒருவரே என்னை நன்கு அறிகிறார். பூமி ஜலம் அக்நி காற்று ஆகாயம் மகஸ் புத்தி அஹங்காரம் என எனது ப்ரகிருதி எட்டாகும். இது அபரா ப்ரகிருதி. பரா அல்லது விசேஷமான பிரகிருதி ஜீவனாம். அதனால்தான் உலகைத் தரித்துக்கொண்டிருக்கிறேன். அபரா பரா எனும் இவ்விரண்டுமே ஸகல பூதங்களுக்கும் காரணம்.

ஸகல ஜகத்தும் என்னிடமே தோன்றி என்னிடமே லயிக்கின்றது. நூலில் மணிகள் கோர்க்கப்பட்டிருப்பது போல் என்னிடத்திலேயே எல்லாம் சேர்க்கப்பட்டிருக்கிறது. என்னைத் தவிற வேறு வஸ்துவே கிடையாது. ஜலத்தில் யான் ரஸமாகவும் சந்த்ர சூர்யர்களிடம் ஒளியாயும் ஸர்வ வேதங்களிலும் ஓங்காரமாயும் ஆகாயத்தில் சப்தமாகவும் மனிதர்களிடத்தில் பௌருஷமாகவும் பூமியில் நல்ல வாஸனையாகவும் அக்னியில் தேஜஸாகவும் ஸர்வ ப்ராணிகளிடத்திலும் ஜீவநமாகவும் தவஸிகளிடத்தில் தபஸ்ஸாகவும் ஸர்வ பூதங்களுக்கும் அழியாத விதையாகவும் இருக்கிறேன். புத்திமான்களிடம் புத்தியாகவும் தேஜஸ் உள்ளவரிடம் தேஜஸாகவும் பலமுள்ளவரிடம் பலமாகவும் தர்ம விரோதமில்லாத காமமாகவுமிருக்கிறேன்.

ஸாத்விக ராஜஸ தாமஸமான பூதங்கள் என்னிடமிருந்தே தோன்றின. ஆனால் நான் அவைகளுக்கு வசமாவதில்லை. இம்மூன்று குணங்களாலும் மோஹமடைந்த உலகம் உலகத்தைக்கடந்த என்னை அறிவதில்லை. † என்னிடமிருந்து தோன்றிய குணமயமான இந்த மாயையை ஜயிக்க எவராலும் இயலாது. என்னையே எவர் சரணமடைகின்றனரோ அவரே அதைக்கடப்பர். அந்த மாயையால் மதிஇழந்து அசுர குணமுள்ள பாபிகளான அதமர் என்னை அடையமாட்டார். ‡ துன்பம் உள்ளவர் என் தத்வத்தை

---

† நாரதர் மாயையைத் தர்சிக்க வேண்டுமென்று பகவானை வேண்டினார். ஓர் குளத்தில் நாரதர் முழுகியவுடன் ஸ்த்ரீ ஆனார். ஓர் அரசனை மணந்து 60 புத்ரர்களைப் பெற்றார். பிறகு புத்ரர் சண்டையில் மடிய ராஜ்யத்தையும் பதியையுமிழந்து அழுதார். பகவான் அவளை அதே குளத்தில் முழுகசொல்லி ஆணாக்கிய உடன் நாரதர் மாயா தர்சனம் செய்ததை நினைத்துப் பணிந்தார். பகவானாலேயே மாயை அகன்றது—தேவீ பாகவதம்.

‡ ஆர்த்த-திரௌபதி 2 ஜிக்ஞாஸு: உத்தவர் 3 அர்தார்த்தீ-த்ருவர் 4 க்ஞானீ-ப்ரஹ்லாதர்.

அறிய ஆவலுள்ளவர் செல்வத்தை விரும்புபவர் எனது தத்வமறிந்தவர் என நான்கு வகையாக என்னை அடைகின்றனர். இவர்களில் என்னிடமே அன்புக்கொண்ட க்ஞானி சிறந்தவன். எனக்கு க்ஞானி மிகப்ரியமானவன். அவனுக்கு யான் பிரியமானவன். இன்னுமெல்வரும் சிறந்தவரே. ஆனாலும் க்ஞானி என்னையே அடைந்தவன். க்ஞானி எனது ஆத்மாவாவான். அநேக ஜன்மங்களுக்குப் பிறகு க்ஞானி என்னை அடைகிறான். வாஸுதேவனே எல்லாம் என்று நினைக்கும் மஹாத்மா கிடைப்பது துர்லபம். புத்ரன் செல்வம் முதலியன வேண்டுமென்ற ஆசையால் தன் பூர்வ ஜன்ம வாஸனைக்கேற்க இதர தேவர்களை உபாஸிக்கின்றனர். யார் எந்த தேவதையை உபாஸித்தாலும் நானே அவர்களுக்கு அந்த ச்ரத்தையை உண்டுபண்ணுகிறேன். ஆதலின் அந்த பலனை அடைகின்றனர். அந்த அல்ப பக்தியுள்ளவர்கள் பெறுகிற பலன் விரைவில் அழியக்கூடியதே. தேவரைப் பூஜிப்பவர் தேவரையும் என்னை அர்ச்சிப்பவர் என்னையுமடைகின்றனர். அழிவற்ற எனது உத்தம ஸ்திதியை அறியாதவர்கள் இதுவரை யான் ப்ரகாசமில்லாமலிருந்து இப்போதுதான் பிரகாசமாயிருப்பதாக எண்ணுகின்றனர்.

யோகமாயையால் மறைக்கப்பட்ட யான் எல்லோருக்கும் ப்ரகாசமாக இல்லை. அழிவற்ற என்னை மூடர் அறிவதில்லை. யான் முக்காலத்திலுமுள்ள பிராணிகளை அறிவேன். என்னை ஒருவருமறிவதில்லை. விருப்பாலும் வெறுப்பாலுமுண்டாகின்ற ஸுகதுக்கங்களால் பிறக்கும்போதே ஸகல ப்ராணிகளும் மோஹத்தை அடைகின்றன. புண்ய கர்மாவினால் யாருடைய பாபங்கள் அழிகின்றனவோ அவரே த்வந்த்வ மோஹத்தைவிட்டு என்னை அடைகிறார். எவர் ஜராமரணங்களை ஒழிக்க என்னை ஆச்ரயித்து முயற்சிக்கின்றனரோ அவர் பிரும்மத்தையும் ஆத்மாவைப்பற்றியும் கர்மாவைப் பற்றியும் ஸகல விஷயங்களையுமறிவர். அதிபூதத்

துடன் கூடியவனுகவும் அதிதைவத்துடன் கூடியவனுகவும் அதியக்ஞத்துடன் கூடியவனுகவும் மரண காலத்திலாவது என்னை அறிந்தவர் யோகியாவார்கள்.

க்ஞான விக்ஞான யோகம் முற்றிற்று.

8\. தானின்ற உண்மையைத் தன்தனி மாயை மறைத்
தமையும்
தானன்றி மாயைதனைத் தவிர்ப்பான் விரகற்றமையும்
மேனின்ற பக்தர்கள்நால்வரின் ஞானிதன்
மேன்மைகளும்
தேனின்ற செங்கழலான் தெளிவித்தனன்
பார்த்தனுக்கே.

(கருத்து)—தனது உண்மையான ஸ்திதியையும் மாயையால் அது மறைக்கப்படுறதையும், அதை அகற்ற தன்னையே அடையவேண்டும் என்பதையும். தன்னை வந்தடையும் நால்வரில் க்ஞானியே சிறந்தவனென்பதையும் தாமரைபோன்ற பாதமுடைய பகவான் பார்த்தனுக்குரைத்தான்.

---

## 8-வது அத்யாயம்—பாத்ம கதை.

தக்ஷிண பதமெனும் ப்ரதேசத்தில் ஆமர்த்தகம் என்றோர் பட்டணமிருக்கிறது. அங்கு பாவசர்மா என்றோர் பிராமணிருந்தான். அவன் பர ஸ்த்ரீகளிடம் மோஹங் கொண்டு மது அருந்தி மாம்ஸம் உண்டுவந்தான். அச் செலவிற்கு, ஸாதுக்களுடைய சொத்தைத் திருடுவான். வேட்டையாடுவான். ஒரு நாள் அவன் கழுத்துவரை பனங் கள்ளைப் பருகி அஜீர்ணத்தினுல் இறந்தான். அதனுல் அவன் ஓர் வநத்திலே பனைமரமாகப் பிறந்திருந்தான். அதே ஸமயத்தில் குசீலன் என்றோர் வேதியனிருந்தான். அவன்

மனைவிக்கு குமதி என்று பெயர். இருவரும் தநத்தில் பேராசைஉள்ளவர்கள். அவன் வைதிகனுதலால் எருமை காலபுருஷன் குதிரை முதலிய பல பாபதாநங்களை ப்ரதி கிரகம் வாங்குவான். அதில் சிறிதளவுகூட நல்ல காலத்திலும் நற்பாத்திரத்திலும் கொடுக்கமாட்டான்.

இங்ஙனம் பலநாட்கள் சென்றபின் இருவரும் இறந்தனர். பாபத்திற்கேற்றபடி பிரும்மராக்ஷஸர்களாக பிறந்து பசி தாஹத்துடன் அலைந்து திரிந்துக்கொண்டிருந்தனர். ஒரு நாள் முன்கூறிய பனை மரத்தினடியேவந்து தங்கினர். மனைவி கணவனை நோக்கி எத்தினை நாள் இத்துன்பத்தை அனுபவிப்போம்? இதிலிருந்து விடுபட வழிஇல்லையா? என்றுள். பிரும்ம வித்யோபதேசம், அத்யாத்ம விசாரம், கர்மவிதி, இவைகளைத் தவிர இந்த ஸங்கடத்திலிருந்து கரை ஏற நமக்கேதுவழி என்று கணவன் உரைத்தார். இதைக் கேட்ட மனைவி அந்த ப்ரும்மம் என்பதென்ன? அத்யாத்மம் எது? கர்ம எது? என வினவினுள். இந்த கேள்விகள் கீதையின் எட்டாவது அத்யாயத்தில் முதல் பகுதியில் அர்ஜுநனுல் கேட்கப்பட்டவை. இதை அவள் கூறியவுடன் அப்பனைமரம் முறிந்துவிழுந்தது. அதிலிருந்து பாவசர்மா திவ்ய தேஹம்பெற்று எழுந்தான்.

இந்த பிரும்ம ரக்ஷஸ் தம்பதிகளும் அந்த பாப உடலை விட்டு தேவ சரீரம்பெற்றனர். அருகில்வந்த அழகிய விமாநத்தின்மீதமர்ந்து தம்பதிகள் வைகுண்டஞ்சென்று அழியாத சுகமெய்தினர். பாவசர்மா ஏனைய பாபிகளும் நற்கதி அடையட்டுமென்றெண்ணி அங்குநடந்த கதையையும் எட்டாவதத்யாயத்தின் முதல் பகுதியையும் அங்கு நன்றுக எழுதி வைத்தான். அன்றியும் பூமியில் மிகஉயர்ந்த க்ஷேத்ரமான காசிமாநகரஞ் சென்று ஸ்ரீ மாதவனை ஆராதிக்கக் கருதினுன். அங்ஙனமே பகவானுடைய ஸன்னதியி

லமர்ந்து இந்த கீதையின் பகுதியை ஓயாமல் ஜபம் செய்து வந்தான்.

இதனிடையில் வைகுண்டத்தில் தூக்கத்தை விட்டெழுந்து பகவான் எதையோ யோசனை செய்து கொண்டிருந்தார். நாராயணனை நோக்கி பிராட்டி "நாத! தூக்கத்தைவிட்டு என்ன யோசிக்கிறீர்கள்" என்று கேட்டாள். காசியில் பாவசர்மா என்பவர் பக்திரஸம் ததும்ப என்னைக் கீதையின் பாதி சுலோகத்தால் ஆராதிக்கிறான். அதற்கேற்ற பலனளிக்கவேண்டுமே! எதைத் தருவது? என யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்று பகவான் உரைத்தார். அவர் உடலை விட்டபின் பகவான் தனது அரண்மனையில் தன்னருகே அவருக்கு ஸ்தானமளித்து சாச்வதமான பேரானந்தத்தைத் தந்தார். அத்துடன் அவன் செய்த பாபத்திற்காக நரகத்தில் பல யாதனைகளை அனுபவித்து வந்த அவனது பித்ருக்களுக்கும் உத்தமகதி யளித்தார்.

---

## 8. அக்ஷர ப்ரம்மயோகம் 28 சுலோகங்கள்.

[அர்ஜுனன் 2—பகவான் 26.]

அர்ஜுநன் :—புருஷோத்தம! பிரும்ம அத்யாத்மம் கர்ம அதிபூதம் அதிதைவம் என்பன யாவை? இவ்வுடலில் அதியக்ஞும் யாது. பிரயாண காலத்தில் எப்படி உம்மை த்யாகம் செய்யவேண்டும்.

பகவான் : — அழிவே இல்லாமல் எல்லாவற்றிலும் சிறந்ததாயிருப்பது பிரும்மம். ஒவ்வோர் உடலிலும் அந்த ப்ரும்மம் தனித்திருக்கும் ஸ்வபாவம் அத்யாத்மமாம். வேள்வியே கர்மாவாகும். அழியக்கூடிய பூதங்கள் அதிபூதமாம். ஹிரண்யகர்ப்பனே அதிதைவமாம். ஸர்வ தேஹத்திலும் அதியக்ஞுமா யிருப்பது நானே. கடைசி காலத்

தில் என்னையே நினைத்துக்கொண்டு உடலைவிட்டால் என்னை அடைவது நிச்சயம். *எதை எதை எண்ணிக்கொண்டு உயிரை விடுகிறானோ அதனையே அடைகிறான். ஆதலால் எப்போதும் என்னையே நினைத்துக்கொண்டு யுத்தம் செய்! என்னையே அடைவாய். ஸர்வக்ஞனாய் புராணனாய் எல்லோரையும் அடக்கி ஆளுபவனாய் அணுவிலுமணுவாக எல்லாவற்றிற்கும் காரணனாக சிந்திக்க முடியாத ரூபவானாக இருளைக்கடந்து சூர்யனைப்போல் இருக்கும் திவ்ய புருஷனை நினைக்கவேண்டும்.† இறக்கும்போது சலிக்காத மனதினால் இருபுருவங்களுக்கிடையே பிராணனை நிறுத்தி பக்தியுடன் நினைப்பவர் பரம புருஷனை அடைவர். வேத வித்துக்கள் எவரை அக்ஷரமென்கிறார்களோ வைராக்யமுள்ள துறவிகள் எதில் ப்ரவேசிக்கின்றனரோ எதை விரும்பி குருகுல வாஸஞ் செய்கிறார்களோ அந்த ஸ்தானத்தைச் சுருக்கமாகச் சொல்கிறேன்.

எல்லா த்வாரங்களையும் அடைத்து மனதை ஹிருதயத்தில் அடக்கி பிராணனைத் தலையில் வைத்து யோகத்தை அனுஷ்டித்து பிரும்ம வடிவமான ப்ரணவத்தைச் சொல்லி என்னை நினைத்துக்கொண்டே உடலை விடுபவன் நற்கதிபெறுவான். வேறொன்றையும் நினைக்காமல் என்னையே நினைப்பவனுக்கு நான் ஸுலபமானவன். என்னை அடைந்த மஹாத்மாக்கள் பரமஸித்தியை யடைந்தவராவர். அழிவுள்ளதும் துக்கத்திற்கு இருப்பிடமுமான ஜன்மாவை அடைய

---

* பரதர் மானை நினைத்தே இறந்தார். மானாக பிறந்தார். —பாகவதம்.

ப்ரஹ்லாதன் எனும் பிராமணோத்தமன் இறக்கும்போது ராக்ஷஸன் என்று ஒருவன் கூறியதைக்கேட்டு உடலைவிட்டார். ராக்ஷஸனாக பிறந்தார்.—பாத்ம புராணம்.

† துரோணர் அங்ஙனம் அச்வத்தாமா இறந்தானெனக் கேட்டு ரதத்திலமர்ந்து உடலைவிட்டார்.

மாட்டார்கள். பிரும்மலோகத்திலுள்ளவர் வரை உலகில் எல்லோருக்கும் மறுபிறப்புண்டு. என்னை அடைந்தவர் திரும்புவதில்லை. ஓராயிரம் யுகம், பிரும்மாவிற்கு பகல். மற்றோராயிரம் யுகம் இரவாகும். பகலில் அவ்யக்தத்தி லிருந்து வயக்தமெல்லாம் தோன்றி இரவில் ஆங்கேயே லய மாகின்றன. ஸ்தாவரஜங்கமமான அதே பிராணிகள் பரவ சர்களாக பகலில் பிறந்து இரவில் இறக்கின்றன. இந்த அவ்யக்தத்திற்கு மேலானது பிரும்மம். அது அநாதியாய் பிராணிகள் இறக்கும்போது இறக்காமலிருக்கிறது. அவ் யக்தமாய் அக்ஷரமாயிருக்கும் பிரும்மமே உயர்கதியாம். அதை அடைந்தவர் திரும்புவதில்லை. அதே நமது பரமபத மாகும். எவனால் உலகெலாம் வியாபிக்கப்பட்டதோ, எவன் பூதங்களுக்குள் இருக்கிறானோ அந்த பரம புருஷன் பக்தி ஒன்றால்தான் அடையத்தக்கவன். எப்போது இறந் தவர் திரும்பமாட்டார், எப்போது இறந்தவர் திரும்புவர் என்பதைக் கூறுகிறேன் கேள். *பிரும்மக்ஞானி உத்தரா யணத்தில் இறக்கும்போது அக்நி ஜ்யோதிஸ் சுக்லபக்ஷம் உத்தராயணம் என்ற கால அதிஷ்டான தேவதைகள் அவனைப் பிரும்மலோகத்தை அடைவிக்கின்றனர். அவர்கள் திரும்புவதில்லை. கர்மமார்கத்தைக் கைகொள்பவரைப் புகை ராத்திரி கிருஷ்ணபக்ஷம் தக்ஷிணாயநம் என்ற இவைகளின் அதிஷ்டான தேவதைகள் சந்த்ரலோகத்திற்கு அழைத் துச் செல்கின்றனர். அங்கிருந்து புண்யம் ஆய்விட்டபின் திரும்பவேண்டியதுதான். இந்த இரண்டு வழிகளும் உல கில் என்றைக்கு மிருக்கின்றன. ஒன்று திருப்பியனுப்பு வது. மற்றொன்று திருப்பாததாகும். இதில் யோகி மோஹமடைய மாட்டான். ஆதலால் நீ எப்போதும் யோகியாயிரு. ஸகல வேதங்களையும் நன்றாக அத்யயனம்

---

* பீஷ்மர் உத்தராயண மரணத்தை எதிர்பார்த்து சரதல் பத்தில் படுத்திருந்தார்.—பாரதம்.

செய்வது, யக்ஞங்களைச் செய்வது, தபஸ் செய்வது, தானங்களைச் செய்வது ஆகிய இவைகளுக்கு என்ன புண்யம் உண்டோ அவைகளைக் கடந்து, இதையுணர்ந்த யோகி பிரும்மாநந்தத்தைப் பெறுகிறான்.

8. அக்ஷர ப்ரம்மயோகம் முற்றிற்று.

9. ஆராதசெல்வமு மாருயிர்காணுமரும் பயனும்
பேராததன் கழற்கீழமரும் பெருவாழ்ச்சிகளும்
சோராதுகந்தவர் தூய்மதிகொள்வதுஞ் செய்வனவும்
தோராவிசயனுக்குத் திருநாரணன் செப்பினனே.

(கருத்து)—போதுமென்ற எண்ணந்தோன்றாத செல்வத்தையும் ஆத்ம ஸ்வரூபத்தைத் தர்சிப்பதெனும் பெரும் பயனையும் பகவானது திருவடியையடைந்து திரும்பாத சிறந்த புருஷார்த்தத்தையும் விடாமுயற்சியுள்ளவர் பெறும் சுத்த அறிவையும் அவர் செய்யவேண்டியதையும், தோல்வியுறாத விஜயனுக்கு நாரணன் கூறினான்.

## 9-வது அத்யாயம்—பாத்ம கதை.

நர்மதா நதீ தீரத்தில் மாஹிஷ்மதீ என்றோர் பட்டணமுண்டு. அன்னகரில் சிவத்விஜ மரபினிலே தோன்றிய மாதவன் என்றோர் வேதியரிருந்தார். வேதவேதாந்தங்களின் கரைகண்ட அவர் கல்விக்கேற்ற செயல் உள்ளவர். அவர் ஓர் ஸமயம் சிறந்த வேள்வி ஒன்றைச் செய்தார். அதில் விதிப்படி அஜத்தினது வபையை எடுப்பதற்கான காரியத்தைச் செய்யும்போது அது மனிதனைப்போல் சிறித்துகொண்டு, ஸ்வல்ப பயனைத் தரும் இவ்வேள்விகளால் என்ன பயன்? எனது நிலையைப்பாரும் என்றது. இதைக் கேட்டு எல்லோரும் ஆச்சர்யமடைந்தனர். மாதவன் அத-

னருகேசென்று அஞ்ஜலிசெய்து "ஐயா! நீர் யார்? ஏன் இப்பிறவி பெற்றீர்" என்று கேட்டார்.

ஆடுகூறிற்று. யான் நிர்மலமான பிராமண குலத்திலே பிறந்தவன். நன்றாக வேதாத்யயநம் செய்து பல வேள்விகளைச் செய்தேன். எனக்கு ஸந்ததி இல்லாதிருந்து இறைவனருளால் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அது நோய்வாய் பட்டபொழுது அந்நோய் அகல என் மனைவி சண்டிதேவிக்கு ஓர் ஆட்டைப் பலியிடச்சொன்னாள். நானும் புத்ரவாஞ்சையால் அங்ஙனம் செய்துவிட்டேன். அவ்வாட்டின் தாய், அதனால் துக்கமடைந்து சாஸ்த்ர ஸம்மதமில்லாத வழியில் என் மகனைக் கொன்றதால் நீ ஆடாகப்பிறப்பாய் என என்னைச் சபித்தது.

யான் பற்பல பிறவிகளைப் பெற்று பல துன்பங்களை அநுபவித்து முடிவில் இவ்வாடாகத் தோன்றினேன். ஈசனருளால் ஒவ்வோர் பிறப்பும் எனக்கு நினைவிருக்கிறது என்றது. இதைக்கேட்ட ஸதஸ்யர்கள் குதூஹலத்தால் நீ என்னென்ன ஜன்மமெடுத்தாய் கூறென வேண்டினர். ஆடு கூறிற்று. ஒரு ஸமயம் யான் குரங்காகப் பிறந்தேன். என்னைக் குரங்காட்டி பிடித்து வீடுவீடாக ஆட்டிவைத்தான். ஒரு நாள் எனது மனைவி மக்களைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்தேன். அச்சமயம் என் யஜமானனிட்ட கட்டளைப்படி யான் ஆடாதிருந்ததால் அவன் கோபங்கொண்டு என்னைத் தடியாலடித்தான். அந்த வலியால் நீரருந்தாமலும் உண்ணாமலும் இறந்தேன். பின்னர் நாயாக பிறந்து வீடு வீடாக ஓடி எச்சிலைத் தின்று ஜீவித்துவந்தேன். ஒரு நாள் பசியால்வருந்தி ஒருவருமில்லாத ஓர் வீட்டிற்குள் நுழைந்து உணவிருந்த பாத்ரத்தில் வாயை வைத்தேன். அதற்குள் அவ்வீட்டுக் கிழவியும் சிறுவர்களுமாக ஓடிவந்து என்னைத் தடியாலடித்தனர். எனது எலும்புகள் முறிந்து ஸந்திபந்தங்கள் கலகலக்க ஊளையிட்டுக்கொண்டே வெளியில் வந்து

வீழ்ந்தேன். அடிபட்டவிடத்தில் புண் பலமாகி புழுக்கள் தோன்ற இறந்தேன். அதன்பின் குதிரையாகப் பிறந்தேன். ஒருவன் பலமுள்ளவரை என்னிடம் வேலை வாங்கிக்கொண்டு விற்றான். அங்கோர் கிழவி யாத்திரைக்குச்செல்ல என்னை ஸ்வல்ப விலைக்குவாங்கினாள். இரண்டு மூன்று பிள்ளைகளை என்மீதேற்றி கிழவியும் ஏறிக்கொண்டு த்வாரகைக்குக் கிளம்பினாள். நடுவழியில் சேற்றில் எனது கால்கள் மாட்டிக் கொண்டன. சிறுவர்கள் என்னை வேகமாக எழுந்தோடும்படி பலமாக அடித்தார்கள். யான் அடிதாளாமல் சேற்றில் வீழ்ந்து உயிரைத் துறந்தேன். அதன்பின் சாபத்தின்படி ஆடாகப்பிறந்து உன்னிடம் சிக்கினேன்.

இதைக்கேட்டு ஆச்சர்யமடைந்த பிராமணன் அதிருக்கட்டும். ஸ்வல்ப பலத்தை அளிக்கும் யாகத்தினால் என்ன பயன் என்றாயே! நித்யமான சுகத்தை அளிக்கும் உபாயம் யாது அதைக்கூறு என்றார். ஆடு, ஓர் ஆச்சர்யமான விஷயத்தைக் கூறுகிறேன் கேள் என்று, கதைகூற ஆரம்பித்தது.

மோக்ஷத்தை அளிக்கவல்லதான குருக்ஷேத்ரத்தில் சூர்யவம்சத்தில் உதித்த சந்த்ரசர்மா என்றோர் அரசனிருந்தான். அவன் சூர்ய கிரஹண காலத்தில் காலபுருஷ தானம் செய்யக்கருதி அதற்கேற்ற பொருள்களைப் பரப்பி காலபுருஷனை ஆவாஹநம்செய்தான். தக்க தக்ஷிணையையும் வைத்து வேதவேதாந்தங்களை அறிந்த அந்தணோத்தமரை அதை வாங்குவதற்கு ஸன்னத்தமாயிருக்கும்படி செய்தான். அரசன் புரோஹிதருடன் ஸ்நாநம் செய்யக்கிளம்பினான். அச்சமயம் காலபுருஷன் உறக்கச்சிரித்துக்கொண்டு ஓ பிராமண! இந்த க்ஷேத்ரத்தில் எவரும் அணு அளவுகூட தானம் வாங்கமாட்டார். பண ஆசையால் நீர் எப்படி இதை வாங்கத் துணிந்தீர் என்றது. பிராமணன் இத்தகைய மஹாபாபதாநங்களால் வரும் பாபம் பெருங்கடலை ஒத்ததென

பதை அறிவேன். அதைத்தாண்ட என்னிடம் ஓர் உபாய மிருக்கிறது என்று அலக்ஷ்யமாக கூறிக்கொண்டே ஸ்நாநத்திற்குச்சென்றான். மன்னன் ஸ்நாநாடி சுத்த வஸ்த்ரமணிந்து விதிப்படி அவ்வேதியருக்குக் காலபுருஷ தாநம்செய்தான்.

காலபுருஷன் ஹ்ருதயத்திலிருந்து அரசனது பாபங்கள் ஓர் சண்டாள வடிவமெடுத்துக் கிளம்பியது. பரநிந்தை என்பது சண்டாளி ரூபமெடுத்துவந்தது. இருவரும் அவ்வந்தணனருகேவந்து அவர் அங்கத்தில் நுழைய ஆரம்பித்தனர். உடனே அவர் தன் மநதிலுள்ள பகவத்கீதையின் ஒன்பதாமத்யாயத்தைப் பாராயணம்செய்தார். அவர் உடல் கடல்லையைப்போல் அசைந்தது. அனைவரும் ஆச்சரியத்துடன் அவருக்கு என்ன நேருமோஎன அஞ்சினர். அவர் ஜபம் செய்த கீதாக்ஷரங்களிலிருந்து விஷ்ணு கிங்கரர்கள் கிளம்பி அச்சண்டாள தம்பதியை வெறட்டினார்கள். அவர்கள் கண்ணுக்கெட்டாமல் மறைந்தபின் ஆச்சர்யமடைந்த அரசன் அவரை நோக்கி த்விஜோத்தமரே! இந்த பேராபத்திலிருந்து எப்படி விடுபட்டீர்? எந்த மந்திரம் ஜபித்தீர்? எந்த தேவதையை வேண்டினீர்? அச்சண்டாள புருஷன் யார்? அச்சண்டாளி யார்? எப்படி அவர்கள் அடங்கினர்? என்று கேட்டார். அதற்கு அந்தணன்! அரசே உமது பாபமெல்லாம் சண்டாளனாகவும் பிறநிந்தை சண்டாளியாகவும் வந்தன. கீதையின் ஒன்பதாமத்யாயத்தை ஸ்மரித்தேன். அதனால் இவ்வாபத்து என்னை விட்டகன்றது. என்றுகூறி காலபுருஷ தானத்தில் கிடைத்த அபரிமிதமான பொருளை எடுத்துக்கொண்டு தன்னிருப்பிடஞ் சென்றார். என்று ஆடு இக்கதையின் மூலமாக கீதா நவமாத்யாயம் எத்தகைய பாபத்தையும் அகற்றி நற்கதியை யளிக்கவல்லது என்பதை எடுத்துக் காட்டிற்று. அதைக்கேட்ட மாதவனும் ஆடின்றியே யாகத்தைப் பூர்த்திசெய்து நவமாத்யாயத்

தைப் பாராயணம்செய்து அவர் நற்கதி அடைந்ததுடன் தனக்கு வழிகாட்டிய அவ்வாட்டிற்கும் கீதையால் நற்கதி வருமாறுசெய்தார்.

---

## 9. ராஜவித்யாராஜ குஹ்யம்
## 34 சுலோகங்கள்.

பகவான்:—அஸூயையில்லாத உனக்கு மிகமிக ரஹஸ்யமான அனுபவத்துடன்கூடிய க்ஞானத்தைக் கூறுகிறேன். அதை அறிந்தால் ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுவாய். இது வித்தையில் சிறந்தது. மிகமிக குஹ்யமானது. பவித்ரமானது. உத்தமமானது. ப்ரத்யக்ஷமாக அறியத்தக்கது. தர்மம் நிறைந்தது. அநுஷ்டானத்திற்கு மிகவும் ஸுலபமானது. இதில் நம்பிக்கை இல்லாதவர் என்னை அடையாமல் மரணத்துடன்கூடிய ஸம்ஸாரத்தில் உழலுவர். இவ்வுலகெலாம் யான் ஸூக்ஷ்மமாக வியாபித்திருக்கிறேன். ஸர்வ பூதங்களும் ஆத்மாவான என்னிடத்திலிருக்கின்றன. எனக்கு அவைகள் ஆத்மாவல்ல. ஆதலின் நானவைகளில் இல்லை. என்னிடத்தில் அந்த பூதங்கள் (பாத்ரத்தில் வஸ்துகளிருப்பது போல்) இல்லை. ஈசன சக்தியுமுள்ள எனது யோகத்தைப் பார்! பூதங்களை யான் பரிக்கிறேன். ஆனால் பூதங்களில் யானில்லை. ஆகாசத்திலே காத்து எங்கும் ஸஞ்சரித்துக் கொண்டிருந்தாலும் அது எப்படி ஆகாசத்தில் பற்றில்லாமலிருக்கிறதோ அங்ஙனம் ஆகாசம்போன்ற என்னிடத்தில் பூதங்கள் இருக்கின்றன. ஓர் கல்பம் முடியும்போது ஸகல பூதங்களும் எனது அபரா ப்ரகிருதியையடைகின்றன. கல்பத்தின் ஆதியில் அவைகளை யான் படைக்கிறேன். அந்த ப்ரகிருதி எனக்கு வசமானது. அதைக்கொண்டு கர்மத்திற்கு வசமான பூதங்களைப் பலமுறை படைக்கிறேன். ஆனால் ஒருவனை நீசனாகவும் மற்றவனை உயர்ந்தவனாகவும்

படைக்கும் தோஷம் எனக்கு ஏற்படுவதில்லை. ஏன்? அந்த கர்மாவில் எனக்கு பற்றில்லை. உதாஸீநனைப் போலிருக்கிறேன். நான் தலைவனாக இருக்க ப்ரகிருதி சராசரங்களைப் படைக்கிறது. யான் நிமித்த மாத்ரமே. மனித உடலெடுத்த என்னை மூடர்கள் அவமதிக்கின்றனர். (சிசுபாலன்) எனது பரமாத்ம ஸ்வரூபத்தை அவர்கள் அறிவதில்லை. அத்தகையவர்கள் கோரிக்கையும் அவர் செய்யும் யக்ஞமும் அவர் அறிவும் வீணே. அன்றியும் அவர்கள் ராக்ஷஸ குணமுள்ளவர்கள் ஆவர்.

சமதமாதி தைவகுணம் வாய்ந்த மஹாத்மாக்கள் ஸகல பூதங்களுக்கும் காரணமான என்னை ஏகாந்தமநதுடன் உபாஸிக்கிறார்கள். எப்படி? எப்போதும் என்னைக் கூறிக்கொண்டு என்னையடைய த்ருடமான விருதங்களைச்செய்து ஸதா என்னை நமஸ்கரித்துக்கொண்டு உபாஸிக்கின்றனர். விச்வரூபியான என்னை ஒன்றாகவும் பலவாகவும் க்ஞான யக்ஞத்தினால் சிலர் ஸேவிக்கின்றனர். நான் மூன்றக்நிகளால் செய்யப்படும் யாகம். ஓரக்நியால் செய்யப்படும் ஸ்மார்த்த யக்ஞம், பித்ருக்களுக்கு அளிக்கும் ஸ்வதா, ப்ராணிகளுண்ணும் நெல் முதலியனவாக இருக்கிறேன். மந்திரம் ஹோமம் செய்யப் படும் ஆஜ்யம், அக்நி, ஹோமம் ஆகிய எல்லாமாயிருக்கிறேன். இவ்வுலகிற்கு யான் பிதா, மாதா, தாதா, அறியத் தக்க பவித்ரமான ஓங்காரம் ருக் யஜுஸ் ஸாமம். கர்ம பலன், போஷிப்பவன், ஸாக்ஷீ, எல்லோரும் தங்குமிடம் சரணம், நண்பன், உற்பத்தி, ப்ரலயம், ஸ்தாநம், நிக்ஷேபம் அழிவற்ற பீஜம் ஆகிய எல்லாமாயிருக்கிறேன். சூர்யனாக இருந்து கொளுத்துகிறேன். மழையைப் பெய்கிறேன். அதை நிறுத்துகிறேன். தேவர்களுக்கு யான் அமிருதம். மனிதர்களுக்கு மிருத்யு. ஸத்தாயும் அஸத்தாயுமிருக்கிறேன். மூன்று வேதங்களையுமறிந்து ஸோமபாநம் செய்யும்

சிலர் யக்ஞங்களால் தங்கள் பாபத்தை அகற்றி ஸ்வர்கத்தை வேண்டுகின்றனர். அப்படியே அவர் புண்ய லோகங்களை அடைந்து இந்திராதி சுகத்தை அடைகின்றனர். ஆனால் விசாலமான ஸ்வர்க்கலோகத்தில் சுகத்தை அனுபவித்து புண்யம் ஆயினபின் மனுஷ்ய லோகத்திற்கே வருகின்றனர். இங்ஙனம் கர்மாவை மாத்ரம் செய்பவர் ஆசைக்காளாகி ஸ்வர்க்கம் போவதும் பூமிக்கு வருவதுமாகவே இருப்பார்கள். * என்னைவிட வேறில்லாதவர்களாய் என்னையே உபாஸிக்கும் துறவிகளது யோகக்ஷேமத்தை யானே வஹிக்கிறேன். இதர தேவர்களை ச்ரத்தையுடன் பூஜிப்பவரும் என்னையே முறை தவறி உபாஸிப்பவர்களாவர்.

ஸகல யாகங்களுக்கும் போக்தா நான். பிரபுவும் நானே. அப்படி என்னை அறியாதவர் யாக பலத்தை அடையமாட்டார். தேவர்களைப் பூஜிப்பவர் தேவர்களையும் பித்ரு பூஜகர் பித்ருக்களையும் பூதங்களை அர்ச்சிப்பவர் பூதங்களையும் என்னை பஜிப்பவர் என்னையுமடைவர். †இலை அல்லது கீரை புஷ்பம்

---

* பகவானையே நம்பி நித்யநைமித்திக கர்மாக்களைச் செய்துவரும் ஓர் பக்தன் மனைவி, குழந்தைகள் பசியுடன் வாடுவதைக் கணவனுக்கு அறிவித்தாள். அவர் பகவான் படியளப்பார் என்றார். பலநாள் பட்டினியால் குழந்தைகள் இறக்கும் ஸமயத்தில் இந்த சுலோகம் பொய் என அவர் அதை முள்ளால் அடித்தார். கீறிய காயத்துடன் பகவான் வண்டி நிறைய பொருளைத் தந்து மறைந்தார்.—ஸ்ரீ வாசுதேவ யதீந்த்ராள்.

† **பத்ரம்.** துர்யோதனன் சொற்படி தூர்வாஸர் பல மாணவருடன் வநத்தில் அக்ஷயபாத்ரத்தைக் கவிழ்த்தபின் அதிதியாக வந்தார். திரௌபதி அப்பாத்திரத்திலுள்ள கீரையைக் கண்ணனுக்களிக்க, வந்தவர் வயிர் நிறைந்தது. பாரதம். 2. **புஷ்பம்.** கஜேந்த்ரன் பகவானுக்களித்து முதலையிடமிருந்து விடுபட்டது. 3. **பழம்.** சபரி ராமனுக்களித்து நற்கதி பெற்றாள். 4. **ஜலம்.** ரந்திதேவர் பிராணன்போகும் ஸமயத்தில் கிடைத்த ஜலத்தை அதிதிக்களித்து நற்கதி

பழம் தீர்த்தம் இவைகளைப் பக்தியுடன் கொடுக்கும் சுத்த மனதுடைய பக்தர்களிடமிருந்து அதைவாங்கி அன்புடன் சாப்பிடுகிறேன். ‡ ஆகையால் நீ எதைச் செய்கிறாயோ எதைப் புசிக்கிறாயோ எதைஹோமஞ்செய்கிறாயோ எதைத் தானம் செய்கிறாயோ எதைத் தவம் செய்கிறாயோ அவை எல்லாவற்றையும் எனக்கு அர்ப்பணம் செய். அப்படி செய்தால் கர்மபந்தம் உன்னைவிடும். ஸன்யாஸ யோகத்திலிறங்கி என்னை அடைந்து இன்பம் பெறுவாய். நான் எல்லோருக்கும் சமமானவன். எனக்கு சத்துருவுமில்லை மித்ரனுமில்லை. என்னை எவர் அன்புடன் பஜிக்கிறார்களோ அவர்களிடத்தில் நானிருக்கிறேன். என்னிடத்தில் அவர்களிருக்கிறார்கள். வேறொன்றையும் எண்ணாமல் என்னையே அடைந்தவன் எவ்வளவு துராசாரமுள்ளவனாயிருந்தாலும் அவன் ஸாதுவே! ஏன்? அவன் நல்ல விஷயத்தில் எண்ணங்கொண்டு விட்டான். விரைவில் அவன் தர்மாத்மாவாக ஆவான்.

---

பெற்றார்—பாகவதம். பக்தி நிறைந்த கோபிகை ஒருவள் வேறொன்றும் பகவானுக்களிக்க தன்னிடமில்லாது மனமுருகி பகவான் வேட்டையாடி வரும்போது தண்ணீர் பந்தல் வைத்து, தாஹமடங்கி பகவான் போய்விடுவாரோ என்று கொஞ்சம் கொஞ்சமாக நீர் விட்டாள். கண்ணன் அவளன்பைக்கண்டு நீரருந்தாமல் இருமுழங்கைகளாலும் நீரைக் கீழேவிட்டார். பிறகு அவள் கோரிய பேரானந்தமளித்தார். (கிருஷ்ணதாஸர்.)

‡ அன்னதானம் செய்யும் ஓர் ஸாது தனது நெல்லைத் தின்ன பசுவை அடித்தான். அது இறந்தது. எல்லோரும் நீ கோஹத்தி செய்தவன் என நிந்தித்தனர். ஸாது எனக்கேது பாபம்? எதைச் செய்தாலும் யான் கிருஷ்ணார்ப்பணம் செய்பவன். அது கிருஷ்ணனைச் சார்ந்ததென்றார், இதைக் கேட்ட ருக்மிணி பகவானிடம்கூற அவர் ஓர் கிழக் குஷ்டரோகியாகி ஸாது வீட்டில் முதல் இலையில் உட்கார்ந்தார். எஜமானன் சொன்னாலல்லது எழுந்திருக்க மாட்டேனென்றார். ஸாது நான்தான் அன்னதானம் செய்பவன் எழுந்திருமென்றார். பசுவைக்கொன்றது மாத்ரம் கிருஷ்ணனா என்று கிழவர் கூறி மறைந்தார். ராமகிருஷ்ணர்.

சாச்வதமான சாந்தியை அடைவான். *குந்தீ புத்ர! எனது பக்தன் நாசமடையமாட்டான் என நிச்சயமாக ப்ரதிக்ஞை செய். என்னைச் சரணமடைந்தவர் பாபப் பிறவிகளான †ஸ்த்ரீ வைச்யர் சூத்ரர்கூட பரமகதி அடைவர். புண்யசீலர்களான பிராமணர் ராஜர்ஷி முதலியவர்களைப் பற்றி கேட்கவேண்டுமோ? அழிவுள்ளதும் துக்கம் நிறைந்தது மான இம் மானிடப்பிறவி பெற்ற நீ என்னை அடை! என்னை மநதில் வை! என் பக்தனாயிரு! எனக்காகவே யக்ஞம் செய்! என்னையே நமஸ்கரி! மனதை அடக்கி என்னை த்யாநம் செய்து என்னையே அடைவாய்.

9. ராஜவித்யா ராஜகுஹ்யம் முற்றிற்று.

10. தன்மேன்மையுந் தன்பிறப்பில் தளராத் தனிமையையும்
பன்மேனி நண்ணினன் பால்பிரியாவன்ப ராசைகளும்
புன்மேனி விண்ணவர்பால் புரியாததன் பத்தியையும்
நன்மேனி நாரணன் தான் நரனுக்கு நவின்றனனே.

(கருத்து).—தனது மேன்மையையும் தனது அவதாரங்களில் குறையாமல் வருகின்ற குணங்களையும், பலவிதமான தனது உடல்களிலும் பிரியாத அன்புள்ள பக்தர்களின் ஆசைகளையும் அல்ப உடலுள்ள தேவர்களிடத்தில் செல்லாது தன்னிடம் செய்யும் பக்தியையும் நல்ல அழகுள்ள நாராயணன் நரனுக்கு உபதேசித்தான்.

---

* பகவான் தன் ப்ரதிக்ஞையைத் தவறினும் பக்தன் ப்ரதிக்ஞையை நிறைவேற்றுவார். ஆதலால் தான் ப்ரதிக்ஞை செய்யாமல் அர்ஜுநனை ப்ரதிக்ஞை செய்யச் சொன்னார். அதன்படி ஆயுதமெடுப்பதில்லை என்ற தன் ப்ரதிக்ஞையைவிட்டு ஆயுதமெடுக்கச் செய்கிறேனென்ற பீஷ்மர் வாக்கை நிறைவேற்றினார். பீஷ்மரை சிக்ஷிக்கப்போனபோது அர்ஜுநன் ப்ரதிக்ஞையை நிலைநாட்ட சிக்ஷிக்காதுவிட்டார்.

† ஸ்திரீயக்ஞபத்நி, வைச்யர்ஸமாதி, சூத்ரர் ஸஞ்ஜயர். பாபயோநி—குஹன்.

## 10-வது அத்யாயம்—பாத்ம கதை.

காசி பட்டணத்தில் தீரதீரன் என்றோர் பிராமணோத்தமனிருந்தான். அவன் மிக்க அடக்கமுள்ளவன். புண்ய சாலி. நிவிருத்திமார்க்கத்தி லீடுபட்டவன். சிவபக்தன். ஜிதேந்திரியன். எப்போதும் சிவனையே மநதில் தியாநம் செய்வான். உடல்பொருள் ஆவி எல்லாவற்றையும் சிவார்ப்பணம் செய்து பற்றில்லாமல் ஒப்புக்கு உலகவியவகாரத்தி லீடுபடுவான். உடலை மறந்து அவன் வெளியில் செல்லும் போது அன்புடன் சிவன் அவனது கையைப் பிடித்துக் கொண்டு போவது வழக்கம். ஒரு ஸமயம் அவர் தியான நிஷ்டையில் அமர்ந்தபோது பிரிங்கிரிடி எனும் கணன் பரமனை வணங்கி பகவன்! இந்த தீரதீரன் என்ற ஸாது என்ன விசேஷ புண்யஞ் செய்தான்? எவருக்கும் கிட்டாத தங்கள் கரகமலம் அவருக்கு எப்போதும் சுலபமாகக் கிடைக்கின்றதே! என்று கேட்டான். அதற்கு மஹாதேவன் கூறினர்.

யான் ஒரு ஸமயம் கைலயங்கிரியில் புன்னக வநத்திடையே ஸகல கணங்களும் சூழ வீற்றிருந்தேன். இனிய மந்தமாருதம் வீசிற்று. பக்தர்கள் பணிந்து துதித்துக் கொண்டிருந்தனர். இதனிடையே ஆகாயத்திலிருந்து ஓர் பக்ஷி என்னெதிரே வீழ்ந்தது. அதை எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும்போது அது திடீரென்றெழுந்து மனிதரைப்போல் ஸ்பஷ்டமான வாக்கினால் என்னைத் துதித்தது. யான் அதைப் பார்த்து நீ யார்? பார்வைக்கு ஹம்ஸம்போல் காணப்படுகிறாய்! ஆனால் கறுப்பாக இருக்கிறாய்! உண்மையைச் சொல் என்றேன்! பக்ஷி என்னை வணங்கி; தேவ! பிரம்மாவின் வாஹநமான யான் மானஸ ஸரஸிலிருந்து பூலோகத்தை நாடிக் கிளம்பினேன். இடையே ஸௌராஷ்ட்ர நாட்டிற்கருகிலுள்ள தாமரைத் தடாகத்திலிறங்கி தாமரைத் தண்டுகளையும் கிழங்குகளையு

முண்டு வழிக்கும் சிறிது எடுத்துக்கொண்டு கிளம்பினேன். அச்சமயம் திடீரென்று புவிமீது விழுந்தேன். சிறிது நேரஞ் சென்றபின் மோஹமகன்று நிஜ அறிவு வந்தது. என்னுடல் கறுப்பானதற்கு காரணமும் தெரியவில்லை. ஏன் நான் விழுந்தேன்? என்று யோசித்துக்கொண்டிருந்தேன். அதற்குள் தாமரை மலரிலிருந்து "எழுந்திரு ஹம்ஸமே நான் காரணங் கூறுகிறேன்" என்று ஓர் குரல் எழுந்தது. ஆச்சரியமடைந்து அதனருகே சென்றேன். ஆங்கு ஐந்து கமலங்களை அவயவமாகக்கொண்டு ஓர் பெண் கிளம்பினாள். அவள் தலைமீது ஆகாயத்திலே சங்க சக்ர கதாபாணிகளாய் பீதாம்பரதாரிகளாய் மஹாவிஷ்ணுவைப் போல் அறுபது ஆயிரம் உருவங்கள் காணப்பட்டன. இதைக்கண்டு பேராச்சர்யமடைந்த யான் நான் ஏன் விழுந்தேன்? என்று முதலில் கேட்டேன். அதற்கு அவள், நீ என்னைத் தாண்டிச் சென்றாய். அந்த பாபத்தினால் வீழ்ந்து கறுப்பாகவும் ஆனாய் என்றாள். பிறகு விஷ்ணு வடிவந்தாங்கிய இவர்கள் யார் என்று கேட்டேன். இந்த ஸரஸின் கரைமீது தவம் செய்த மஹர்ஷிகளிவர்கள். ஒரு நாள் அதிரூபலாவண்யம் வாய்ந்த ஓர் யுவதி இவர்களெதிரே அழகாக வீணாகானம் செய்தாள். இதைக்கேட்டு பரவசர்களாகி அவளருகே ஓடினார்கள். அவளது ஒப்பற்ற உருவம் இவர்களது தவத்தைச் சாந்தியை மறக்கும்படி செய்தது. நான்தான் முதலில் அவளைப் பார்த்தேன். நானே அவளை மணப்பேன். நீ என் மனைவியினருகே வாக்கூடாது என பரஸ்பரம் சண்டையிட்டுக் கொண்டனர். கோபம் பலத்தது. அது எதைத்தான் செய்யாது? அருகிலுள்ள கற்களையும் கட்டைகளையும் ஆயுதமாகக் கொண்டனர். ஒருவர் கூட மிகுதி இல்லாமல் அடித்துக்கொண்டு இறந்தனர்.

எமலோகஞ் சென்று பிரும்மஹத்திக்கேற்ற பற்பல கோர நரகங்களை அனுபவித்து; பூமியில் சண்டாளர்களா

கப் பிறந்தனர். அந்த ஜாதிக்குரிய தொழிலுடன் வழிப் போக்கர்களை அடித்துப் பணத்தைக் கொள்ளையடித்தனர். தற்செயலாக ஒரு ஸமயம் வநத்திலுள்ள விஷ ஜலத்தை அருந்தி இறந்தனர். மறுபடியும் பல நரகங்களை அனுப வித்துக் கழுதை ஒட்டை பூனை நரி முதலிய பிறவிகளைப் பெற்று கடைசியாக இத்தடாகத்தில் வண்டாகப்பிறந்தனர். உனக்காக வெளியில் யான் வரும்போது எனது வாஸனையை முகர்ந்து விஷ்ணு ஸாரூப்யத்தை அடைந்து வைகுண்டஞ் செல்கின்றனர் என்றாள்.

இதைக்கேட்டு முன்னிலும் பன்மடங்கு ஆச்சரிய மடைந்த யான் இவ்வளவு பெருமை வாய்ந்த நீ யார்? உனக்கு எதனால் இப்பெருமை? என்று கேட்டேன். "பக்ஷி ராஜனே! யான் இதற்கு முந்திய மூன்றாவது பிறப்பில் ஸரோஜவதநா எனும் ஓர் பிராமண கன்யகை. எனது கண வனைத் தெய்வமாகக் கருதி பணிவிடை செய்து வந்தேன் இளமையானதால் ஓர் கிளியைப் பிடித்துக் கூட்டிலடைத்து அதற்கு அழகிய சொற்களைக் கற்பித்தேன். இதைக்கண்டு கோபங்கொண்ட என் கணவன் என்னைக் கிளியாகும்படி சபித்தார். கற்பின் சிறப்பால் மஹர்ஷிகள் ஆச்ரமத்திலேயே கிளியாகப் பிறந்தேன். ஓர் முநிகுமாரி என்னை அன்புடன் வளர்த்தாள். அவள் தந்தை ப்ரதிதிநம் காலையில் கீதையின் விபூதியோகம் எனும் பத்தாமத்யாயத்தைப் பாராயணம் செய்வார். அது காதில் விழ கிளி ஜாதிக் கேற்றபடி அவர் சொன்னதை அவ்யக்தமாகக் கூறி வந்தேன். அந்த புண் யத்தால் பத்மாவதி என்ற அப்ஸரஸாகப் பிறந்து மஹா லக்ஷ்மியின் அந்தரங்கத் தோழியானேன். தசமாத்யாயத் தைக் கேட்டதனால் இத்தகைய பெரும் பாக்யம் பெற் றேன்.

ஒரு ஸமயம் விமானத்தின்மீதேறி வந்து இந்த ஸாஸி லிறங்கி ஜலக்ரீடை செய்தேன். அச்சமயம் துர்வாஸர்

அருகே வந்துவிட்டார். உடனே ஆங்குள்ள ஐந்து தாமரை மலர்களைக்கொண்டு என் உடலை மூடிக்கொண்டேன். அவர் கோபங்கொண்டு இப்படியே நூறாண்டு ஜலத்திலிரு என்று சபித்தார். கீதையின் பலத்தினால் எனக்கு வாக்குக் கெடவில்லை. மற்றெவ்வித துன்பமும் உண்டாகவில்லை. என்னை ப்ரதக்ஷிணம் செய்யாமல் தாண்டிச் சென்ற உனக்கு இந்த கதி நேர்ந்தது என்று ஸரோஜவதனை தன் சரிதத்தைக் கூறி ஹம்ஸம் முன் போல் வெண்மையாகவும் திவ்யகதி பெறவும் கீதை தசமாத்யாயத்தை ஓர் முறை பாராயணம் செய்தாள். உடனே அது அவனளித்த கமலத்தை என் திருவடியில் ஸமர்பித்து உடலை விட்டது என்று பரமசிவன் கூறியதைக்கேட்டு ஆச்சர்யமடைந்த ப்ருங்கிரிடி, நாத! அது முற்பிறவியில் யார்? என்ன தவம் செய்தது? என்று கேட்டார்.

பரமசிவன்—பிரும்ம வாஹனமாய் அமர்ந்த அந்த பக்ஷி முற்பிறவியில் ஓர் பிராமண பிரும்மசாரி. தவராமல் குருவிற்குப் பணிவிடைசெய்து நியமத்துடன் வேதமோதி வந்தான். ஒருநாளிரவு தூக்கத்தில் அவன் தன்னையறியாமல் குருவின் படுக்கையைக் காலால் தொட்டுவிட்டான். அந்த பாபத்தினால் அவன் பறவையாக பிறந்தான். எனினும் குருவிற்குச்செய்த பணிவிடையால் பிரும்மாவை வஹிக்கும் உத்தம ஹம்ஸமாக ஆனான். அந்த உடலை விட்டபின் அந்தணகுலத்திலே தீரதீரன் என்ற பெயருடன் பிறந்தான். பத்மினியால் கூறப்பட்ட கீதை தசமாத்யாயத்தை மறவாமல் இளமைமுதல் ஜபித்து வருகிறார். அவருக்கு எப்போதும் வாசுதேவன் கண்முன்னே தோன்றிக்கொண்டே இருக்கிறார். தீரதீரன் யாரைக் கண்ணால் பார்க்கிறானோ அவன் செய்த பஞ்சமாபாதகங்களும் பறந்துபோம். அத்தகைய ஸாது ஸஞ்சரிக்கும்போது காசியை விட்டு அவர் வெளியில் போகாதபடி அவர் காத்தை யான் எப்போதும்

பிடித்துக்கொண்டே அவருடன். போகிறேன். இதைக் கேட்டவர்கூட உத்தமகதி அடைவர் என! கூறினர்.

---

## 10. விபூதியோகம் 42 சுலோகங்கள்.

[அர்ஜுநன் 7, பகவான் 35.]

பகவான்—எனது சொல்லை அன்புடன் கேட்கும் உனக்கு ஹிதம் செய்யவேண்டுமென மறுபடியும் கூறுகிறேன் கேள். எனது பெருமையைத் தேவர்களும் மஹரிஷிகளுங்கூட அறியமாட்டார்கள். நான் அவர்கள் எல்லோருக்கும் ஆதியானவன். எவர் என்னைப் பிறப்பில்லாதவனுகவும் அநாதியாகவும் லோகங்களுக்கு மஹேச்வரனுகவும் அறிகிருரோ, அவன் மோஹத்தை விட்டு ஸர்வ பாபங்களிலிருந்தும் விடுபடுகிருன். புத்தி, க்ஞானம், க்ஷமா (ஏமாறு)மை, பொருமை, ஸத்யம், இந்திரிய அடக்கம், சமம், துக்கம் உண்டாதல், அழித்தல், பயம், அபயம், அஹிம்ஸை, ஸமமாயிருத்தல், ஸந்தோஷம், தவம், தாநம், யசஸ், அபயசஸ் ஆகிய பல வகையான மநோபாவங்கள் என்னிடமிருந்தே தோன்றுகின்றன. ஸப்த ரிஷிகளும் நான்கு மனுக்களும் என் மனதினுல் படைக்கப்பட்டவர்கள். எனது விபூதியையும் யோகத்தையும் உண்மையாக அறிபவன் ஸ்திரமான யோகத்தை அடைவான். தத்வமறிந்த பண்டிதர்கள் என்னிடமிருந்தே எல்லாம் உண்டாயின என்று உபாஸிக்கிருர்கள். என்னை ஸதா மநதில் நினைத்துக்கொண்டு என்னிடமே ப்ராணனை வைத்து, ஒருவர்க்கொருவர் என்னை அறிவித்துக்கொண்டு என் பெருமையைக் கூறிக்கொண்டும் ஸந்தோஷமடைகின்றனர். அன்புடன் எப்போதும் என்னையே நினைத்துக்கொண்டிருக்கும் அவர்களுக்கு, என்னை வந்தடையும்படியான புத்தியோகத்தைத் தருகிறேன். தயையினுல் அவர்கள் மனதிலேயான் இருந்துக்கொண்டு ப்ரகாசமுள்ள

க்ஞானதீபத்தால் அக்ஞானத்தால் உண்டான இருளைப்போக்கு கிறேன்.

அர்ஜுநன்—நீர் பரமாத்மா. பரஞ்ஜோதிஸ். பரம பவித்ரமானவர். நித்ய புருஷன். திவ்யன். ஆதிதேவன். பிறப்பிறப்பில்லாத பிரபு. என ரிஷிகளும், நாரதரும், அஸித ரும், தேவலரும், வியாஸரும் கூறுகின்றனர். நீரும்கூறுகிறீர். தாங்கள் கூறுவதெல்லாம் உண்மை என்றே எண்ணுகிறேன். தங்களது பிறப்பைத் தேவரும் அஸுரரும் அறியமாட்டார் கள். ஏ, பூதபாவனு! பூதேச! தேவதேவ! ஜகத்பதே! புருஷோத்தம! உன்னை உனக்குத்தான் தெரியும். ஆதலால் எதனுல் இந்த உலகங்களை வ்யாபித்துக்கொண்டிருக்கிறீரோ அந்த திவ்ய விபூதிகளைப் பூர்ணமாகக்கூறும். ஓ யோகியே! உம்மை ஸதா சிந்தித்துக்கொண்டிருக்க எந்தெந்த வஸ்துக் களை எப்படி த்யானிப்பது? விஸ்தாரமாய் உமது யோக சக்தியுடன் கூடிய விபூதியை மறுபடியும் விஸ்தாரமாகக் கூறும். அதில் போதுமென்ற த்ருப்தி எனக்கு வரவில்லை.

பகவான்—குருச்ரேஷ்ட! எனது திவ்யமான ஆத்ம விபூதிகளில் பிரதானமானதைச் சொல்கிறேன். அதற்கு முடிவே இல்லாததால் எப்படி விஸ்தரிக்க முடியும்? தூக்கத்தை ஜயித்த அர்ஜுந! நான் ஸகல பூதங்களுடைய ஹிருதயத்திலும் ஆத்மாவாக இருக்கிறேன். அவைகளுக்கு ஆதியாகவும் நடுவாகவும் முடிவாகவும் இருக்கிறேன். ஆதித்யர்களுக்குள் யான் விஷ்ணு. ஜ்யோதிஸ்ஸுகளுக்குள் ரவி. ஏழு மருத்துகளுக்குள் மரீசி. நக்ஷத்ரங்களுக்குள் சந்திரன். நான்கு வேதங்களுக்குள் ஸாமவேதம். தேவர் களுக்குள் இந்திரன். இந்திரியங்களுக்குள் மநஸ். பிராணி களுக்குள் புத்தி. 11-ருத்திரர்களுக்குள் சங்கரர். யக்ஷ ராக்ஷஸர்களுக்குள் குபேரன். 8-வஸுக்களுக்குள் பாவ கன். மலைக்குள் மேரு. புரோஹிதர்களுக்குள் பிரஹஸ் பதி. ஸேனபதிகளுக்குள் ஸ்கந்தன். ஸரஸுக்களுக்குள்

ஸமுத்ராம். மஹரிஷிகளுக்குள் பிருகு. வாக்குகளுக்குள் பிரணவம். யக்ஞங்களுக்குள் ஜபயக்ஞம். அசையாப் பொருள் களுக்குள் ஹிமாலயம். மரங்களுக்குள் அரசமரம். தேவ ரிஷிகளுக்குள் நாரதர். கந்தர்வர்களுக்குள் சித்ராதன். ஸித்தர்களுக்குள் கபிலர். குதிரைகளுக்குள் உச்சைச்ரவஸ். கஜேந்திரங்களுக்குள் ஐராவதம். நரர்களுக்குள் அரசன்.

ஆயுதங்களுக்குள் வஜ்ரம். தேனுக்களுக்குள் காம தேனு. குழந்தைகளை உண்டுபண்ணுபவர்களுக்குள் மன் மதன். ஸர்ப்பங்களுக்குள் வாஸுகி. நாகங்களுக்குள் அநந் தன். ஜலதேவதைகளுக்குள் வருணன். பித்ருக்களுக்குள் அர்யமா. அடக்குபவர்களுக்குள் யமன். தைத்யர்களுக் குள் ப்ரஹ்லாதன். கணிப்பவர்களுக்குள் காலம். மிருகங் களுக்குள் மிருகேந்த்ரான். பக்ஷிகளுக்குள் கருடன். சுத்தம் ஆக்குபவைகளுக்குள் பவநன். வில்லாளிகளுக்குள் ராமன். மத்ஸயங்களுக்குள் முதலை. நதிகளுக்குள் கங்கை. ஸிருஷ்டி க்கு ஆதிமத்யம் முடிவு. வித்யைகளுக்குள் வேதாந்தவித்யை. வாதம் செய்பவர்களுக்குள் வாதம். அக்ஷரங்களுக்குள் அகா ரம். ஸமாஸத்திற்குள் த்வந்த்வஸமாஸம். அக்ஷயமான காலம் நான். கர்மபலத்தை அளிப்பவன். எங்கும் முகமுள்ள வன். எல்லோரையும் கொண்டுபோகும் மிருத்யு. பிறப்ப வர்களுக்கு உற்பத்திகாரணம். கீர்த்தி, ச்ரீ, பெண்க ளுடைய வாக் ஸ்மிருதி, மேதை, தைர்யம், பொறுமை ஸாமாக்களுக்குள் பிருஹத்ஸாம. மாஸங்களுக்குள் மார்கழி. ருதுக்களுக்குள் வஸந்தம். பாசைக்காய் ஆடுகிறவர் களுக்குள் அந்த ஆட்டம். தேஜஸ்விகளுக்குள் தேஜஸ், ஜயம், முயற்சி நற்குணமுள்ளவருக்குள் நற்குணம், யாதவர் களுக்குள் கிருஷ்ணன். பாண்டவர்களுக்குள் அர்ஜுநன். முனிகளுக்குள் வியாசர். கவிகளுக்குள் உசநஸ்.

தன்னை அடக்குபவர்களுக்குள் தண்டம். ஜயிக்கும் ஆசை உள்ளவர்களுக்குள் நீதி. மறைக்கத்தகுந்தஹற்குள்

மௌநம். அறிவாளிகளுக்குள் அறிவு. ஸகல ப்ராணி களும் உண்டாவதற்கு யான் வித்து. சராசரமான பொருள் களில் நானில்லாதது ஒன்றுமில்லை. சத்ருக்களை ஜயிப்பவனே எனது திவ்ய விபூதிக்கு முடிவே இல்லை. ஓர் உத்தேசமாக உனக்குச் சொன்னேன். உலகில் எது எது மஹிமையுள்ள தோ, ப்ரகாசமும், உத்ஸாஹமும் உள்ளதோ அதெல்லாம் எனது தேஜஸின் ஓர் அம்சத்தாலுண்டானது. அர்ஜுந! இப்படி நீ ஒன்றொன்றாக அறிந்து கஷ்டப்படுவதேன்? இந்த ஜகத்தை எல்லாம் ஒரே அம்சத்தினால் வியாபித்துக் கொண் டிருக்கிறேன்.

10. விபூதி யோகம் முற்றிற்று.

**11.** எல்லை யில்லாத தன் சீலமுமின்ன முதக்கடலும்
எல்லை யில்லாத விபூதி யெல்லாந்தன தானமையும்
எல்லையில்லாத பத்தி யெழு விக்கத் திருவருளால்
எல்லையி லீசனியம்பினான் இந்திரன் மைந்தனுக்கே.

(கருத்து) எல்லையில்லாத தனது சீலத்தையும் அமிருதக் கடல் போன்ற தன் குணங்களையும், எல்லா வஸ்துக்களும் தனது விபூதி என்பதையும் விசேஷமாக பக்தி உதிப்ப தற்கும் அது விருத்தியாவதற்கும் அநந்தனான பகவான் கருணை கொண்டு இந்திர புத்ரனுக்குக் கூறினார்.

---

## 11-வது அத்யாயம்—பாத்ம கதை.

விச்வ ரூபாத்யாயமெனும் இவ்வத்யாயத்தின் பெருமை யைக்கூறும் கதைகள் நூற்றுக்கணக்காக இருக்கின்றன. அதில் ஒன்றைக் கூறலாம். வட நாட்டிலே ப்ரணீதா என்ற நதிதீரத்தில் மேகங்கரம் என்றோர் நகரமுளது. அது ஸதா சாரமுள்ள கோடீச்வரர்களுக்கு இருப்பிடம். அங்கு பக

வான் சார்ங்கபாணி திருவிக்கிரமராக ப்ரகாசிக்கிறார். அவ ரருகே மேகல மென்றோர் புண்ய தீர்த்தமிருக்கிறது. அதில் புனலாடி பகவானைத் தர்சிப்பவர் வைகுண்டஞ் செல்வர். அந்நகரில் ஸுநந்தன் என்றோர் பிராமணனிருந்தார். கல்வி கேள்விகளில் சிறந்தவர் அவர். இந்திரியங்களை அடக்கி பகவானிடத்தல் ஸதா மநதைச் செலுத்துவார். வாஸுதேவனருளால் திவ்விய க்ஞாநம்பெற்று பிரும்மாநந்தத்தை அனுபவித்து வந்தார். அதற்குக்காரணம் அவர் ஸதா பாராயணஞ்செய்யும் கீதை பதினொரு மத்யாயமே. அவருக்குக் கோதாவரீ யாத்திரை செய்ய வேண்டுமென்று ஆசை தோன்றி கிளம்பினார். ஆங்குள்ள விரஜம் தாரா தீர்த்தம் முதலிய எட்டு புண்ய தீர்த்தங்களில் விதிப்படி புனலாடி பித்ரு தர்ப்பணம் செய்து லக்ஷ்மீ நரசிம்மன் முதலிய தேவர்களைத் தர்சனம்செய்தார். யாத்ரிகர்களுடன் கூட, மஹாலக்ஷ்மி ப்ரத்யக்ஷமாய் அமைந்துள்ள காஸ்தாநமெனும் நகரத்திற்கு வந்தார். அங்கே இரவு தங்கி உறங்க ஒரு வீட்டிலும் இவர்களுக்கு இடங்கொடுக்க மறுத்தனர். அங்கு தற்செயலாக வந்த நகரபாலகன் விசாலமான ஓர் மடத்தைக் காட்டி 'அங்கு தங்கும்படி கூறினான். அங்ஙனமே அவர் அவ்விடத்தில் இரவைக்கழித்து காலையில் எழுந்தார்.

தன்னுடன் வந்த ஒருவரையுங் காணாது தான் மாத்ரம் வீதியிலே எரியப்பட்டிருந்ததைக் கண்டு அவர் சிந்திக்க ஆரம்பித்தார். அச்சமயம் நகரபாலகன் அவரிடம் வந்து ஸ்வாமி தாங்கள் தைவப்பிறப்போ? நீர் என்ன மந்த்ரம் வைத்திருக்கிறீர்? எந்த தேவதையை உபாஸிக்கிறீர்? இல்லையேல் நீர் பிழைத்திருக்க முடியாது என்றார். இதைக் கேட்டு வியந்த ஸுநந்தர் அதிருக்கட்டும்; இங்கு என்ன விசேஷம்? என்னுடன் வந்தவரெங்கே? ஏன் எங்களுக்கு ஒருவரும் தங்கயிடமளிக்க வில்லை? என்று கேட்டார்.

நகரபாலன்—ஐயா, இங்கு ஓர் ராக்ஷஸனிருக்கிறான். அவன் இரவில் வந்து நகர ஜனங்களை விழுங்கிவந்தான். நகர ஜனங்கள் அவனை வணங்கி மடத்தில் வரும் யாத்ரிகர்களை மாத்திரம் சாப்பிட்டுவிட்டுத் தங்களை ரக்ஷிக்கும்படி வேண்டினர். அவனதை ஏற்றுக்கொண்டு மடத்தில் தூங்கு பவர்களைப்ரதிதினம் உண்பது வழக்கம். நேற்றிரவில் எனது புத்ரனது நண்பனொருவன், இதை அறியாது இந்த மடத்தில் தங்க அவனை அழைத்துவர என் புத்ரன் சென்றான். ராக்ஷஸன் அவ்விருவர்களையும் விழுங்கிவிட்டான். இன்று காலை யான் புத்ரசோகத்தால் வருந்தி அவ்வரக்கனைத் தேடி, ஐயோ! எனது ஏக புத்ரனையுங் கொன்றுவிட்டாயே!! அவன் பிழைத்துவர ஏதேனும் உபாயமிருந்தால் கூறென் றேன். யானறியாமல் யாத்திரிகனென அவனையும் விழுங்கி விட்டேன். அவனையும் என்னால் கொல்லப்பட்ட அனைவரையும் என்னையும் காக்க கீதையின் ஏகாதசாத்யாயத்தைப் பாராயணம் செய்யும் ஒருவரால்தான் முடியும் என்றார்.

அதற்கென்ன அவ்வளவு சக்தி என்று யான் கேட்க ராக்ஷஸன், ஓர் கழுகு தனது மூக்கினால் எலும்புகளைக் கவ்வி ஆகாயமார்க்கமாகச் சென்றது. அதிலிருந்து ஒரு துண்டு தற்செயலாக ஓர் குளத்தில் விழ அங்கு ஓர் யோகி இதுமிக உத்தம புண்யதீர்த்தமென அதில் மூழ்கி தர்ப்பணம் செய்தார். அருகிலுள்ளோர் நேற்றுவரை இது ஸாதாரண தீர்த்தமல்லவா? இன்று எப்படி இதற்கு இவ்வளவு பெருமை என, அவரைக்கேட்டனர். அதற்கு யோகி கீதையின் ஏகாதசாத்யாயத்தைப் பாராயணம்செய்யும் வித்வான் என்ற வேதியன், திருடர்களால் கொல்லப்பட்டார். அவரது எலும்புதுண்டு இங்கே கழுகால் போடப்பட்டது. அதனால் இதற்கு மஹிமை என்றார். ஆதலால் பதினொரும் அத்தியாயத்தை எழுமுறைஜபித்து ஜலத்தை என்மீது ப்ரோக்ஷித் தால் எனது சாபமகலும். நேற்றிரவு மடத்தில் படுத்தவரில்

ஒருவர் அத்தகையவர் ஆதலின் அவரைச் சாப்பிட முடிய வில்லை. அவரை வெளியில் போட்டுவிட்டேன். அவரைக் கொண்டு எனது சாபத்தை அகற்றி உனது புத்ரன் அவனது நண்பன் முதலியவர்களைப் பிழைப்பிப்பாய் என்றான்.

இதைக் கேட்ட ஸநந்தர் அவருக்கு யார் என் சாபங்கொடுத்தது? என்று கேட்டார். நகரபாலன்—இவ் வூரில் அவன் ஓர் அந்தணனாகப் பிறந்து உழுதுண்டு ஜீவித் தான். அவன் நிலத்தைஉழுதுக்கொண்டிருக்கும்போது அவ் வழியே செல்லும் ஒருவனை ஓர் கழுகு குத்திக்கொன்றது. அவனை ரக்ஷிக்கத்தக்க சக்தி இருந்தும், இறந்தவன் ஐயோ! என்னை ரக்ஷி! என்று கத்தி அழைத்தும் அவ்வேதியனதைக் கவனிக்காமல் உழுதுவந்தான். வெகு தூரத்திலிருந்து இதைக் கவனித்து வந்த தவசி ஒருவர், அவனைப்பார்த்து சரணாகதி என்பவனைக்காக்காமல் சுயநலம் பாராட்டியதால் நீ ராக்ஷஸனாவாய் என்று சபித்தார். அவ்வேதியன் அவர் காலில் விழுந்து சாபவிமோசனத்திற்கு வழி கேட்டான். தபஸி, கீதையின் ஏகாதசாத்யாயத்தைத் தினந்தோறும் பாராயணம் செய்பவர் உன்னை ஜலத்தினால் ப்ரோக்ஷித்தால் உனக்கு நற்கதி உண்டாகும் என்று கூறிச்சென்றார். என்று சொன்னான்.

அதைக்கேட்ட ஸநந்தர் அங்ஙனமே ஏழுமுறை ஜபித்து தீர்த்தத்தை அவ்வரக்கன்மீது தெளித்தார். உடனே அவனும் அவனால் பக்ஷிக்கப்பட்ட அனைவரும் சங்குசக்ர கதாபாணிகளாகவும் பீதாம்பரதாரிகளாகவும் விஷ்ணுவின் ஸாரூப்ய முக்தியடைந்து விமானத்திலமர்ந்து வைகுண்டம் கிளம்பினர். இதைக் கண்ட நகரபாலன் தான் செய்த உதவிக்கு நன்றிகூறி விடைகேட்க தன்னிடம் வந்த அரக்கனை நோக்கி, ஐயா! இவர்களில் எனது புத்ரன் யார்? என்று கேட்டார். அவர்காண்பிக்க, புத்ரனைநோக்கி அப்பா! நமது வீட்டிற்குச் செல்வோம்வா என்றழைத்தார். புத்ரன்

நகரபாலனைப்பார்த்து தந்தையே! ஸம்ஸாரத்தில் யான் எத்தனையோ தந்தையை மைந்தனைப் பார்த்தாய்விட்டது. முன்னர் செய்த புண்ணியத்தால் தற்செயலாக ஸம் ஸாரம் அகன்று நற்கதிகிடைத்தது. நீரும் இவ்வுத்தம பிராமணனிடம் உபதேசம்பெற்று நற்கதி அடை என்று கூறி அனைவருடனும் வைகுண்டஞ்சென்றார். அங்ஙனமே, நகரபாலகனும் ஏகாதசாத்யாயத்தால் நற்கதி அடைந்தார்.

---

## 11. விச்வரூபதரிசனம் 55 சுலோகங்கள்.

[அர்ஜுநன் 37. பகவான் 10. ஸஞ்ஜயன் 8.]

அர்ஜுநன்—தாங்களே அநுக்ரஹித்த மிக ரஹஸ்ய மான வேதாந்த உபதேசத்தால் எனது மோஹம் அகன்றது. புண்டரீகாக்ஷ! தங்களிடமிருந்தே உலகம் உண்டாவதையும் ஒடுங்குவதையும் தங்கள் மஹிமையையும் விஸ்தாரமாகக் கேட்டேன். பரமேச்வர! நீங்கள் கூறியது வாஸ்தவமே. புருஷோத்தம! உமது ஈசஸம்பந்தமான ரூபத்தைத்தர்சிக்க வேண்டுமென ஆசை கொண்டிருக்கிறேன். ப்ரபோ! யோகேச்வர! நான் அதைப் பார்க்கக்கூடுமென தாங்கள் நினைத்தால் உமது அழிவற்ற ஆத்ம ஸ்வரூபத்தைக் காட்டும்.

பகவான்—பார்த்த! ஆயிரக்கணக்காய் பலவகையாய் பல வர்ணங்களுள்ளதும் பல ரூபமுள்ளதுமான எனது திவ்யஸ்வரூபத்தைப்பார். பாரத! ஆதித்யன் வஸு ருத்ரர் அச்விநி மருத்து முதலியவர்களையும் பாராத பல ஆச்சரியங் களையும் பார். அன்றியும் சராசரமான ஸமஸ்தஉலகும் என்னிடத்தே இருப்பதையும்பார். வேறு எதைக்காண ஆசைப்படுகிறாயோ அதையும் என் உடலில் காணலாம். இந்த ஊனக்கண்ணால் என்னைப் பார்க்கமுடியாது. ஆதலின் திவ்யமான கண்ணைத்தருகிறேன். எனது யோகத்தைப்பார்.

ஸஞ்ஜயன்—ஓ திருதராஷ்ட்ர! பகவான் இப்படிக் கூறி பார்த்தனுக்கு மிக சிறந்ததான *ஈச்வர ரூபத்தைக் காட்டினார். அது அநேக முகமும் கண்ணுமுள்ளதாகவும் மிக ஆச்சரியமானதாகவும் அநேக திவ்யாபரணமுள்ள தாகவும் அநேக திவ்யாயுதமுள்ளதாகவும் திவ்யமான மாலை வஸ்திரமணிந்ததாகவும் திவ்ய கந்தமுள்ளதாகவும், ஸர்வாச்சர்யமயமாகவும் முடிவே இல்லாததாகவும் எங்கும் முகமுள்ள தாகவும் இருந்தது. ஆயிரம் ஸூர்யன் ஒருமிக்க உதயமானால் எவ்வளவு தேஜஸ் இருக்குமோ அவ்வளவு பிரகாச முள்ளதாக அது இருந்தது. அநேக வகையாக பிரிக்கப்பட்ட ஜகத்தைப் பாண்டவன் பகவானுடைய சரீரத்திலே பார்த்தான். ஆச்சர்யமடைந்து மயிர்க்கூச்சலெடுக்க பத்தாஞ்ஜலி புடனாக தநஞ்ஜயன் நமஸ்காரம் செய்து பகவானை வேண்டினார்.

அர்ஜுனன்— தேவ! உமது உடலிலே தேவர்களையும் ஸமஸ்தபூதங்களையும் பிரும்மாவையும் ஈசனையும் ரிஷிகளையும் நாகங்களையும் காண்கிறேன். அநேக கை வயிற் முகம் கண் உள்ளவராகவும் எல்லையில்லாதவராகவும் உம்மைப் பார்க்கிறேன். விச்வேச்வர! விச்வரூப! உமக்கு ஆதியும் நடுவும் முடிவும் இல்லை. கிரீடம் கதை சக்ரமிவைகளை ஏந்தி எங்கும் ஒரே தேஜோமயமாக ப்ரகாசிக்கின்ற பார்க்கமுடியாத உம்மை, தகதகவென்று ஜ்வலிக்கின்ற சூர்யனைப் போலவும் அக்நியைப்போலவும் பார்க்கிறேன். நீரே அறியத்தக்க அக்ஷரப்ரும்மம். உலகிற்கு நீரே ஆச்ரயம். நீர் சாச்வதமான தர்மத்தை ரக்ஷிப்பவர். நீர் ஸநாதந புருஷர் என எண்ணுகிறேன். ஆத்யந்த மற்றவராய் எல்லை

---

* 3 ரூபமைச்வரம், 9 ரூபமைச்வரம். இங்கு ஈசசப்த மிருப்பதால். 32 காலோஸ்மிலோக க்ஷயக்ருத். 47 நத்ருஷ்டபூர்வம் இவைகளால் அர்ஜுனன் கண்ட விச்வரூபம் ஈச ஸம்பந்தமானதென்றும் உதங்கர்யசோதை முதலியவர் கண்டது விஷ்ணு ஸம்பந்தமானதென்றும் தெரிகிறது.

இல்லாத வீர்யமுள்ளவராய் கணக்கில்லாத கைகளுள்ளவரா யும் சந்த்ர ஸூர்யரைக் கண்ணாக உடையவராகவும் ஜ்வலிக் கும் அக்நியையே வாயாக உள்ளவரும் தேஜஸால் உலகை ப்ரகாசப் படுத்துபவராகவும் காண்கிறேன். உம்மால் ஆகாசமும் திக்குகளும் வியாபிக்கப்பட்டிருக்கின்றன. மஹாத்மாவே உமது உக்ரமான உருவைக்கண்டு உலகெலாம் நடுங்குகிறது. இந்த தேவக்கூட்டம் உம்மிடத்தில் நுழை கிறது. சிலர் பயந்து அஞ்ஜலிசெய்து துதிக்கிறார்கள். மஹர்ஷிகளும் ஸித்தர்களும் ஸ்வஸ்தி என்றுகூறி ஸம்பூர்ண மான துதிகளால் போற்றுகின்றனர். ருத்ரர் ஆதித்யர் வஸுக்கள் ஸாத்யர் விச்வேதேவர் அச்விநீ மருத்துகள் பித் ருக்கள் கந்தர்வர் யக்ஷர் அஸுரர் ஸித்தர் ஆகிய அனைவரும் ஆச்சர்யமடைந்து உம்மைப் பார்க்கின்றனர். ஆகாசத்தை வியாபித்திருப்பவரும் பிரகாசமுள்ளவரும் அநேக வர்ண முள்ளவரும் திறந்த வாயுள்ளவரும் பிரகாசமாய் விசாலமா யுள்ள கண்களுள்ளவருமான உம்மைப் பார்த்து என்து அந்தராத்மா நடுங்குகிறது. விஷ்ணோ! எனக்கு தைர்ய மில்லை. சாந்தியுமில்லை. கோரப்பற்களால் பயங்கரமாக இருப்பதும் காலாக்நிபோல் இருப்பதுமான உமது முகங் களைப் பார்த்து திக்கு தெரியவில்லை. மிகவும் துன்புறு கிறேன். தேவேச! ஜகந்நிவாஸ! தயைசெய்யும்.

இந்த திருதராஷ்ட்ரனது புத்ரர்கள் ராஜக்கூட்டத் துடன்கூட, பீஷ்மர் த்ரோணர் கர்ணன் ஆகிய இவர்கள் நமது வீரர்களுடன்கூட, கோரப் பற்களால் பயங்கரமா யிருக்கிற உமது முகங்களில் வேகமாக பிரவேசிக்கின்றனர். சிலர் உமது பற்களின் இடுக்குகளில் கடித்து நசுக்கப்பட்ட தலைகளுடன் காணப்படுகின்றனர். ஸமுத்ரத்தில் நதீ ஜலம் வேகமாக நுழைவதுபோல் ராஜ வீரர்கள் ஜ்வலிக்கின்ற உமது முகங்களில் நுழைகின்றனர். தீபத்தில் வெட்டுக் கிளிகள் விழுந்து மடிவதுபோல் ப்ராணிகள் உம்மிடத்தில்

வந்து மாள்கின்றனர். உமது உக்ரமான தேஜஸினால் எல்லா லோகங்களையும் வியாபித்து உள்ளே தள்ளி விழுங்குகிறீர். விஷ்ணோ! உமது உக்ரமான தேஜஸ் கொளுத்துகிறது. உக்ர ரூபமான நீர் யார் சொல்லும். ஓ தேவச்ரேஷ்ட! உமக்கு நமஸ்காரம். தயை செய்யும். ஆதி புருஷனான உம்மை அறிய ஆவல் கொண்டிருக்கிறேன். உமது பிரவிருத்தி என்னவென்று தெரியவில்லை.

பகவான் :—நான் உலகை ஒடுக்குவதற்காக விருத்தியான காலன். உலகத்தை ஸம்ஹாரம் செய்யவே ஆரம்பித்திருக்கிறேன். உன்னைத் தவிர சேனையிலுள்ள அனைவரும் இறக்கப் போகின்றனர். ஆதலால் நீ எழுந்திரு! யசஸ்ஸைப் பெறு! சத்ருக்களை ஜயித்து செழிப்பான ராஜ்யத்தை அநுபவி! இடது கையாலும் பாணத்தை ப்ரயோகிப்பவனே! இவர்கள் முன்னமே என்னால் கொல்லப் பட்டவர்கள். நீ நிமித்த மாத்ரமாக இரு! துரோணர் பீஷ்மர் ஜயத்ரதன் கர்ணன் மற்ற வீரர், அனைவரும் என்னால் கொல்லப்பட்டவர்களே. அவர்களைக்கொல். துக்கப்படாதே! யுத்தம் செய், சத்ருக்களைச் சண்டையில் ஜயிப்பாய்!

ஸஞ்ஜயன் :— கேசவனுடைய இவ்வார்த்தையைக் கேட்டு நடுங்கிய அர்ஜுநன் அஞ்ஜலியோடு நமஸ்காரம் செய்து மிகவும் பயந்து நடுக்கத்துடன் மறுபடியும் பகவானைக் கூறினான்.

அர்ஜுநன் :—ஹ்ரிஷீகேச! உமது மஹிமையைக் கேட்டு உலகம் ஸந்தோஷமடைவதும் ஆசைப்படுவதும் நியாயமே! ராக்ஷஸர்கள் பயந்து ஓடுகின்றனர். எல்லா ஸித்தர்களும் நமஸ்கரிக்கின்றனர். ஓ! மஹாத்மாவே! பிரும்மாவிற்கும் ஆதிகர்த்தாவாய் பெருங் குருவான உமக்கு ஏன் நமஸ்காரஞ் செய்யமாட்டார்கள்? ஓ! அநந்த! தேவேச! ஜகந்நிவாஸ! ஸத் அஸத் என்பதற்குமேலான அக்ஷரம் நீர். நீர் ஆதிதேவன். புராண புருஷன். நீரே

இவ்வுலகிற்கு சிறந்த ஸ்தாநம். அறிகிறவனும் அறியத்தக்க தும் நீரே! பரமபதமும் நீரே! அநந்த ரூப! உம்மால் உலகம் வியாபிக்கப்பட்டிருக்கிறது. காற்று யமன் கனல் வருணன் சந்திரன் கச்யபாதி பிரஜாபதி பிரும்மா ஆகிய எல்லாம் நீரே! நமோநம: உமக்கு ஆயிரம் நமஸ்காரம்! மறுபடியும் பலமுறை உம்மை நமஸ்கரிக்கிறேன். ஓ எல்லா மாயிருப்பவரே! உமக்கு முன்னும் பின்னும் நமஸ்காரம். எல்லையில்லாத வீர்யமுள்ளவர். பராக்ரமமுள்ளவர். எல் லாவற்றையும் ஆத்ம ஸ்வரூபத்தால் வியாபித்திருக்கிறீர். அதனால் நீ ஸர்வன். உம்மைத தோழனென்று எண்ணி விளையாட்டாக ஹே கிருஷ்ண! ஹே யாதவ! ஹே தோழ! என்று உமது மஹிமையை உணராமலோ நட்பினாலோ கூறினேன். விளையாட்டு படுக்கை ஆஸநம் சாப்பாடு முதலிய காலங்களில் தனியாக இருக்கும்போது விளையாட் டாக அவமதித்தேன். அவைகளை மன்னிக்கும்படி உம்மை வேண்டுகிறேன். சராசரமான உலகிற்கு நீர் பிதா. பூஜிக் கத்தக்க உயர்ந்த குரு. உமக்கு ஸமமானவரேயில்லை. மூவ் வுலகிலும் உம்மைவிட அதிகமானவர் யாரிருப்பர்? ஆதலின் பணிவுடன் நமஸ்கரித்து ஈசனான உம்மை வேண்டுகிறேன். மைந்தனைத் தந்தைபோலும் தோழனைத் தோழன்போலும் பிரியனான என்னை நீர் மன்னிக்கவேண்டும். அபூர்வமான விச்வரூபத்தைப் பார்த்து ஆநந்தமடைந்தேன். ஆனால் மநம் நடு நடுங்குகிறது. தயைசெய்து அந்த திவ்யமாய் கிரீடம் கதை சக்ரங்களோடு நான்கு கைகளுடன் கூடியது மான ரூபத்தையே காட்டும். அதைத் தர்சிக்க விரும்பு கிறேன்.

பகவான் :—அர்ஜுந! உன்னிடமுள்ள அநுக்ரஹத் தால் எவரும் பாராத தேஜோமயமான இந்த ரூபம் எனது யோகத்தால் காட்டப்பட்டது. வேதாத்யநத்தாலும் தாநத் தாலும் கர்மாக்களாலும் உக்ரமான தவத்தினாலும் உன்னைத்

தவிர ஒருவராலும் இவ்வுலகில் காணமுடியாது. கோரமான இவ்வுருவைக்கண்டு அஞ்சாதே! மோஹமடையாதே! அச்சமின்றி ஸந்தோஷமாக பழய அழகிய ரூபத்தையே பார். என்று பயந்த அர்ஜுனனை ஆச்வாஸப்படுத்தி திவ்ய ரூபமுள்ளவராக ஆனார். அர்ஜுனன் அந்த இனிய மனித உருவைக்கண்டு மனச்சாந்தியுடன் பழய நிலைக்கு வந்தான்.

பகவான் :—எவருக்கும் காணக்கிடைக்காத நீ பார்த்த இந்த உருவைத் தர்சிக்க தேவர்களும் நித்யம் வேண்டுகின்றனர். வேதத்தினாலோ தவத்தினாலோ இத்தகைய ரூபத்தைக் காணமுடியாது. அர்ஜுந! ஏகாந்த பக்தியினால் தான் இந்த ரூபத்தைத் தர்சிக்கவும், நன்கு அறியவும், என்னை அடையவும் முடியும். *எனக்காக கர்மாவைச்செய்! என்னையே சிறந்தவனாக எண்ணு! எனது பக்தனாய் இரு! பற்றுதலை விடு! ஸர்வ பிராணிகளிடத்தும் வைரத்தைவிடு! இப்படியாயின் என்னை அடைவாய்!

11. விச்வரூப தர்சநம் முற்றிற்று.

12. எல்லாந்தனக் குருவாயிலங்கும் வகைதானுரைத்துச்
சொல்லாலறிந்தது சோராமற் கண்டிடவேண்டுமென்ற
வில்லாளனுக்கன்று மெய்க்கண்கொடுத்திதுவேறு
முண்டோ
நல்லார்கள் காண்பரென்றும் நவின்றனங்கள்நாயகனே.

(கருத்து)—உலகிலுள்ள எல்லா வஸ்துக்களும் தனக்கு உரு என்று பகவான் உபதேசித்ததை, ஒன்றும் விடாமல் தர்சிக்கவேண்டுமென்று வேண்டிய காண்டீபனுக்கு திவ்ய சக்ஷுஸ்ஸைத் தந்து, வேறெவரும் இதைக்காணார், பக்தனே காண்பான் என நமது பகவான் கூறினார்.

---

* கீதாஸாரமானது இந்த சுலோகம்—ஸ்ரீ சங்கராசார்யாள்.

## 12-வது அத்யாயம்—பாத்ம கதை.

தக்ஷிணாபதமெனும் பிரதேசத்தில் கோல்ஹாபுரம் என்றோர் நகரமிருக்கிறது. அது ஸாதுக்களுக்கு விரைவில் ஸகல ஸித்திகளையும் அளிக்கவல்லது. பராசக்திக்கு உயர்ந்த பீடஸ்தானம். அங்கு கோடிக்கணக்கான தீர்த்தங்களும் லிங்கங்களுமிருக்கின்றன. ருத்ர கயா எனும் பிரஸித்தமான இடமும் அங்குதானிருக்கின்றது. ஒரு ராஜபுத்ரன் அந்நகரை அடைந்து மணிகுண்டமெனும் தீர்த்தத்தில் மூழ்கி மஹாலக்ஷ்மியின் ஸன்னதிக்கு வந்து தர்சநம் செய்து அம்பாளைத் துதித்தான். அன்னையே! உமக்கு பிராணிகளிடம் அவ்யாஜமான கருணை. உமது அருளைக் கொண்டே பிரும்மா படைக்கிறார். விஷ்ணு காக்கிறார். ருத்ரன் உப ஸம்ஹாரம் செய்கிறார். உமது பெருமையைக் கூற எவரே வல்லவர்? ஸகுணமாகவும் நிர்குணமாகவுமிருக்கிறாய். பக்தர்களுக்குக் கல்ப விருக்ஷமான நீ எனக்கு அருள் செய்வாய்!

இதைக் கேட்டு ஸந்தோஷமடைந்து அவனெதிரில் தோன்றி மகாலக்ஷ்மி, ராஜகுமார! உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்றாள். ராஜ புத்ரன், அன்னையே! எனது தந்தை அச்வமேத மெனும் மஹா யாகத்தைச் செய்தார். அது முடிவதற்குள் நோயால் அவர் இறந்தார். அவர் உடலைத் தீயிலிடாமல் காய்ந்த எண்ணைக் கொப்பரையிலிட்டு ஜாக்ரதையாக வைத்தேன். ஓராண்டு திக் விஜயம் செய்து வந்த குதிரையையும் யூப மரத்தில் கட்டினேன். இரவில் அக்குதிரையை யாரோ கொண்டு போய் விட்டார். தேடித் தேடி அதைக் காணாமல் ரித்விக்குகளிடம் விடை பெற்று தங்களிடம் வந்தேன். தாங்கள் அக் குதிரையைத் தேடித் தந்து வேள்வியையும் நிர்விக்நமாக பூர்த்தி செய்விக்க வேண்டும். அப்படி செய்தால் தான் யான் தந்தைக்கு என் கடமையைச் செய்தவனாவேன் என்றான். லக்ஷ்மி

பிராட்டி எனது வாயற் படியில் ஸித்த ஸமாதி என்றோர் பிராமணனிருக்கிறான். அவனை அழைத்துப் போய் உனது கார்யத்தை ஸாதித்துக்கொள் எனறாள்.

உடனே ராஜபுத்ரன் அவரைத் தேடி வணங்கி தாயின் கட்டளையைக் கூறினான். அந்தணர் அவ்வாணையைச் சிரஸாவஹித்து, ஓரிடத்தே அமர்ந்து ஏதோ ஒரு மந்திரத்தை ஜபித்தார். ஸமஸ்த தேவர்களும் பத்தாஞ்ஜலி செய்து கொண்டு அவரருகே வந்து நின்றனர். அவர்களைப் பார்த்து ஸித்த ஸமாதி இவ்வரசனது தந்தையின் அச்வமேதக் குதிரை இந்திரனால் அபஹரிக்கப் பட்டது. விரைவில் அதை இங்கு கொண்டு சேருங்கள் என்றார். உடனே தேவர்கள் அக்குதிரையை அவரிடம் ஸமர்ப்பித்து வணக்கத்துடன் விடை பெற்றுச் சென்றனர். இதைக் கண்டு ஆச்சர்யமடைந்த ராஜகுமாரன் அவரை வணங்கி, முனிச்ரேஷ்டரே! உமது தவமே தவம்! ஆஹா! என்ன ஸாமார்த்யம்! தேவர்களைப் பலாத்காரமாக இங்கு இழுத்து வந்து எனக்கு அச்வத்தை அளித்தீர். உம்மால் ஆகாத கார்யம் உலகில் ஒன்றுமில்லை. என் தந்தை பிருஹத்ரதன் எனும் அரசன், இந்த அச்வமேதக் குதிரை உலகைச்சுற்றி வருவதற்குள் நோய்வாய் பட்டிறந்தான். தயை கூர்ந்து அவரையும் எழுப்பி விடும். அவர் உடலைக் காப்பாற்றி வைத்திருக்கிறேன் என்றான்.

இதைக் கேட்டு முனிவர் சிறித்துக் கொண்டே ராஜகுமார! ஆனால் அரசனது உடலுள்ள விடத்திற்குப் போவோம் வா என்றார். இருவரும் யாகசாலைக்குக் சென்றனர். முனிவர் கையில் சிறிது ஜலத்தை எடுத்து ஜபித்து அவ்வுடல் மீது தெளித்தார். வேந்தன் தூங்கி எழுந்தவனைப் போல் கண்களைக் கசக்கிக்கொண்டே புத்ர! உனது அருகில் மஹா தேஜஸ்வியாய் விளங்கும் இவர் யார்? என்று கேட்டான். ராஜகுமாரர் மஹாலக்ஷ்மியினால் அனுப்பப்பட்ட

இவ்வுத்தமயோகி தேவர்களை அழைத்துக் குதிரையைக் கொண்டு வந்ததையும் இறந்த அவரை எழுப்பியதையும் கூறினன். ஆச்சர்யமடைந்த அரசன் அவர் திருவடியை வணங்கி, ஸாதோ! உமது சக்தி அபாரமானது. எதனுல் இத்தகைய சக்தி உமக்கு உண்டாயிற்று? என்று கேட்டான். மஹாராஜ! பகவத் கீதையின் பனிரண்டாமத்யாயத்தைச் சோம்பலின்றி இடை விடாது யான் ஜபித்து வருகிறேன். அந்த புண்யத்தால் இவை மாத்ர மல்ல! இன்னும் அதி விசித்ரமான கார்யங்களையும் செய்யக் கூடும் என்ருர். பூபாலன் அவரடி பணிந்து தனக்கு அதை உபதேசம் செய்யும்படி வேண்ட அவர் அருள் புரிந்தார். அரசன் அதனுல் வேள்வியையும் விக்னமின்றி முடித்து ஸத்கதி பெற்ருன்.

---

## 12. பக்தி யோகம். 20 சுலோகங்கள்.

[அர்ஜுனன் 1—பகவான் 19.]

அர்ஜுநன்:—உம்மை ஸதா பக்தியுடன் பூஜிப்பவர் சிலர். அவ்யக்தமான அக்ஷர பிரும்மத்தை உபாஸிப்பவர் சிலர். இவர்களில் யார் சிறந்தவர்?

பகவான்:—என்னிடம் மநதை வைத்து சிரத்தையுடன் ஸதா என்னையே உபாஸிக்கின்றவர்களே சிறந்தவர். அக்ஷரமாய் அவ்யக்தமாயுள்ளதும் எங்கு முள்ளதும் சிந்திக்க முடியாததும் கூடஸ்தனுயுள்ளதும் சலிக்காததுமான என் ஸ்வரூபத்தை இந்திரியங்களை அடக்கி ஸம புத்திகளான சிலர் உபாஸிக்கின்றனர். அவர்களும் என்னையே அடைகிருர்கள். என்ருலும் அவ்யக்த ஸ்வரூபத்தை உபாஸிப்பவர்களுக்கு கஷ்டம் அதிகம். யார் ஸகல கர்மாக்களையும் என்னிடம் அர்ப்பணம் செய்து என்னையே சிறந்தவனுகக் கருதி இடை விடாது த்யாநத்துடன் உபாஸிக்கிருர்களோ

என்னிடமே மநம் வைத்த அத்தகையவர்களை நானே மரணத்துடன் கூடிய ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கரை ஏற்றுகிறேன். ஆகலால் என்னிடமே மநதையும் புத்தியையும் வை. என்னிடமே வஸிப்பாய். ஸந்தேஹமில்லை.

தநஞ்ஜய! என்னிடமே மநதை நிறுத்த முடியாவிடில் அப்யாசம் செய்து என்னிடம் மநதைச் செலுத்த முயற்சி செய். அதுவும் முடியாவிடில் எனக்காக கர்மாவைச் செய். எனக்காக கர்மாக்களைச் செய்து ஸித்தி அடைவாய் அதுவும் முடியாவிடில் மநதைக் கண்ட விடத்தில் செலுத்தாமல் நீ செய்யும் கர்மாவின் பலனை தியாகம் செய். அப்யாஸத்தைவிட அறிவும் அறிவைவிட தியாநமும் தியாநத்தைவிட கர்மபல தியாகமும் சிறந்தது. தியாகத்திற்குபின் சாந்தி உண்டாகும். எவரையும் வெறுக்காதவனும் அன்பும் கருணையும் நிறைந்தவனும் *அஹங்கார மமகார மில்லாதவனும் சுக துக்கங்களை ஸமமாக நினைப்பவனும் பொறுமையுள்ளவனும் நித்ய ஸந்தோஷ முள்ளவனும் அடக்க முள்ளவனும் திருடமான நிச்சயமுள்ளவனும் என்னிடத்திலே மநதையும் புத்தியையும் வைத்தவனுமான பக்தன் எனக்கு மிக பிரியமானவன். எவனைக்கண்டு உலகம் நடுங்கவில்லையோ எவன் உலகைக்கண்டு நடுங்கவில்லையோ ஸந்தோஷம் பொறுக்காமை பயம் நடுங்குதல் ஆகிய இவைகளை விட்டவனும் அபேக்ஷையே யில்லாதவனும் சுத்தனும் ஸாமர்த்யமுள்ளவ

---

* அர்ஜுநன் தான் உயர்ந்த பக்தனென கர்வங்கொண்டான். அதை அகற்ற பகவான் அவனைக் காட்டிற்கழைத்து சென்றார். ஆங்கு அஹிம்ஸையே உருவாய் வந்ததுபோன்ற ஓர் முநி கையில் கூறிய கத்தி வைத்திருந்தார். அர்ஜுநன் இதென்னவென்று கேட்க அவர் பகவானை தேரோட்டச் சொன்ன அர்ஜுநனையும் வஸ்த்ரம் வேண்டும் அன்னம் வேண்டுமென பகவானைத் தொந்திரவு செய்த திரௌபதியையும் கொல்லப்போகிறேன் என்றார். ஸ்வாமியிடம் ஒன்றையும் அபேக்ஷிக்கக் கூடாதென அவனறிந்தான்.—ராம. கிருஷ்ண பரமஹம்ஸர்.

னும் விருப்பு வெறுப்பு சோகமில்லாதவனும் சுபாசுபங்களை விட்டவனும் மித்ரன் சத்ரு மாநம் அவமாநம் சீதம் உஷ்ணம் சுகம் துக்கம் இவைகளைச் சமமாக நினைப்பவனும் பற்றற்றவனும், நிந்தை ஸ்துதிகளை ஸமமாக எண்ணி எது கிடைத்தாலும் ஸந்தோஷங்கொண்டு வீட்டைவிட்டு ஸ்திர புத்தியுடன் இருப்பவனுமான பக்தன் எனக்கு மிகப்பிரியமானவன். தர்மமாய் மோக்ஷமளிக்கத் தக்கதாயுள்ள இதைச் சொன்னபடி சிரத்தையுடன் உபாஸிப்பவர் எனக்கு மிக்க பிரியமானவர்.

12. பக்தியோகம் முற்றிற்று.

13 தன் கழலிற் பக்தி தாழாததுமதின் காரண
இன் குணர் சிந்தையு மீதறி யார்க்கவ் வடிமை
தன் கருமங்க ளறியாதவர்க்கிலகுநி லையும்
தன் கழலன்பர்க்கு நல்லவன் சாற்றினன் பார்த்தனுக்கு

(கருத்து). பகவத் பக்தி சீக்ரம் பலன் கொடுக்கும். அதைச் செய்ய முடியாதவர் பகவத் விக்ரஹத்தை தியாநம் செய்யவேண்டும். அதுவும் முடியாதவர் பகவத் கைங்கரியம் செய்யவேண்டும். அதுவும் முடியாதவர் கர்மாவைச் செய்யவேண்டும் என பகவான் பார்த்தனுக் குரைத்தார்.

இரண்டாம் ஷட்கம் முற்றிற்று.

---

## 13-வது அத்யாயம்—பாத்ம கதை.

தென்னாட்டிலே துங்கபத்ரா நதீ தீரத்திலே ஹரிஹரபுரம் என்றோர் நகரமிருக்கிறது. தர்சநமாத்திரத்திலே ஸகல பாபங்களையுமகற்றக் கூடிய ஹரிஹரன் ஆங்கு ஆலயங்கொண்டிருக்கிறார். அங்கே ஹரி தீக்ஷிதர் என்றோர் உத்தம வேதியரிருந்தார். அவர் மிக்க உயர் குணம் வாய்ந்தவர்.

அவர் மனைவி பெயர் துராசாரா. பெயருக்கேற்றபடி மிகவும் துராசாரம் உள்ளவள். ஒரு நிமிஷங்கூட வீட்டில் தங்க மாட்டாள். வியபிசாரிணிகளுடன் தான் அவளுக்கு நட்பு. புருஷனும் அவனது பந்துக்களும் பரம சத்ருக்கள். ஓயாமல் மதுபானம் செய்வாள். பல விட புருஷர்களைக் கொண்டு தன் காமவெறியைப் பூர்த்திசெய்வாள். கணவனே பந்துக்களோ வாயைத் திறந்தால் போதும் மல்லுக்கு ஆரம்பித்து விடுவாள். மானத்திற்கும் தர்மத்திற்கும் அஞ்சிய தீக்ஷிதர் அதைக் கவனியாமல் அவளில்லாமலே தனது நித்ய நைமித்திக கர்மங்களைச் செய்து வந்தார்.

வஸந்த ஸமயம் வந்தது. புஷ்பங்கள் மலர்ந்து மாலையில் எங்கும் மணம் வீசியது. பூர்ண சந்திரன் தனது பூர்ண கலைகளுடன் காமிகளின் உள்ளத்தை மகிழ்வித்தான். துராசாரையின் மனம் விடர்களின் வீட்டை நாடிச் சென்றது. கணவன் தூங்கும் வரை அவளால் பொறுக்கமுடியவில்லை. நள்ளிரவில் உத்யானத்தில் வந்திருக்கும்படி ஆசைநாயகனுக்கு தூது அனுப்பினாள். தீக்ஷிதரும் கண்ணயர்ந்தார். கதவைத் தாளிட்டுக்கொண்டு துராசாரை உத்யானம் சென்றாள். அளவுகடந்த மதுபானமும் காமவெறியும் அவளைப் பயித்தியக்காரியாக்கிற்று. ஆசைநாயகனங்கு வரவில்லை. மரங்களை யெல்லாம் கணவனே எனக் கட்டித் தழுவினாள். என்மீது கோபமா? ஏன் மறைந்திருக்கிறீர்? என் வாய்விட்டுக் கதறினாள். இதைக்கேட்டு அங்கு தூங்கிக்கொண்டிருந்த ஓர் புலி விழித்தெழுந்தது. அது அவளை அறைந்து நகத்தால் பூறிய போதுதான் அவள் அது நாயகனல்ல புலி! தன்னை ஆலிங்கனம் செய்யவில்லை. அறைந்துக் கொல்கிறது. என்று உணர்ந்தாள். ஐயோ! என்னை ஏன் கொல்கிறாய் என்று அலறினாள். புலி அவளைச் சிறிது நேரம் விட்டுத் தனது விருத்தாந்தத்தைக் கூறியது.

மலாபஹா எனும் நதி தீரத்தில் மூநிபூர்ணு என்றோர் நகரமிருக்கிறது. அங்கு யான் ஓர் பிராமணனுகப் பிறந்து, தகாத பல பாபங்களைச் செய்தேன். பலரை ஏமாற்றிப் பொருள் தேடினேன். பல பாபதானங்களை வாங்கினேன். கிழத்தன்மை வந்து பல்கள் உதிர்ந்தும் பார்வை குறைந்தும் தன ஆசை மாத்ரம் குறையவில்லை. கையில் தர்ப்பையை எடுத்துக்கொண்டு யாசகம்செய்ய நதி தீரஞ்சென்றேன். அங்கு என்னை நாய் கடித்தது, இறந்தேன். பாபத்திற் கேற்க புலியாக பிறந்தேன். இங்குள்ள பஞ்ச லிங்கத்தின் மஹிமையால் எனக்கு முற்பிறவியின் நினைவுவந்தது. ஆதலின் என் வயிற்வளர்க்க ஸாதுக்களைவிட்டு பாபிகளையே கொல்கிறேன். என்று கூறி அவளைக் கொன்று தின்றது. அவளை யம கிங்கரர்கள் அழைத்துச்சென்று ரௌரவம் முதலிய பற்பல நரகங்களிலே தள்ளினுர்கள். பின்னர் அவள் சண்டாளனது வீட்டிலே பிறந்தாள். அங்கும் பூர்வ பாபத்தினுல் குஷ்டரோகியாகவும் கண்ணேய் உள்ளவளாகவும் பிறந்தாள். அவள் ஊர் ஊராகச்சென்று பிச்சை எடுத்து ஹரிஹர க்ஷேத்ரத்திற்கே வந்தாள். உடல் மெலிந்து உணவின்றி ஓர் மரத்தடியில் வீழ்ந்தாள். தற்செயலாக கீதையின் பதிமூன்றுமத்யாயத்தை ஓயாமல் பாராயணம் செய்யும் வாசுதேவரெனும் ஸாது அதனருகே அமர்ந்து வழக்கப்படி பாராணயஞ்செய்தார். அது அவள் காதில் வீழ்ந்து கொண்டிருக்கும்போதே ஆவியைத் துறந்தாள். யம கிங்கரர் அணுகுவதற்குள் விஷ்ணு கிங்கரர், அவளுக்கு திவ்ய தேஹத்தைத் தந்து விமாநத்தில் ஏற்றி வைகுண்டத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

---

## 13. க்ஷேத்ர க்ஷேத்ர க்ஞ விபாகயோகம்
## 34 சுலோகங்கள்.

பகவான் :—கௌந்தேய! இந்த சரீரம் க்ஷேத்ரமெனப்

படுகிறது. இதை அறிபவன் க்ஷேத்ரக்ஞன். எல்லா க்ஷேத்ரங்களிலும் க்ஷேத்ரக்ஞனாக இருப்பவன் யானே. இதை அறிவதே ஞானம். க்ஷேத்ரம் எத்தகையது! எதனாலுண்டானது? க்ஷேத்ரக்ஞன் யார்? எத்தகையவன்? என கூறுகிறேன் கேள்! ரிஷிகளால் அது அநேக வகையாகக் கூறப்பட்டது. பல்வகை சந்தங்களாலும் பிரும்ம ஸூத்ர பதங்களாலும் நிச்சயமாகக் கூறப்பட்டது. மஹா பூதங்கள், அஹங்காரம், புத்தி, அவ்யக்தம், பத்து இந்திரியங்கள், மநஸ், சப்தாதி விஷயங்கள், ஆசை, த்வேஷம், சுகம், துக்கம், தேஹேந்திரியங்களின் கூட்டம், சேதனை, தைர்யம் ஆகிய இவைகள் க்ஷேத்ரமாகும்.

கர்வமில்லாமை, டம்பமில்லாமை, அஹிம்ஸை, பொருமை, கபடமில்லாமை, ஆசார்யனை உபாஸித்தல், சௌசம், ஸ்திரமாயிருத்தல், உடலை அடக்குதல், விஷயங்களில் வைராக்யம், அஹங்காரமில்லாமை, பிறப்பிறப்பு, ஜரை நோய், துன்பம் இவைகளிலுள்ள தோஷத்தைப் பார்த்தல், பற்றில்லாமை, மனைவி மக்களிடம் அதிகப் பற்றில்லாமை, இஷ்டா நிஷ்டங்களில் சமமாயிருத்தல், என்னிடத்தில் ஏகாந்தமான பக்தி, ஏகாந்தமான இடத்தில் வசித்தல், ஜநக் கூட்டத்தில் வெறுப்பு, வேதாந்தத்தில் ஸதா விசாரம், தத்வக்ஞாநத்தை அறிதல் ஆகிய இவைகள் ஞாநம். மற்றவை அக்ஞாநம். அறியத் தக்கதைக் கூறுகிறேன். அதை அறிந்தால் மோக்ஷமடைவாய். அது அநாதி பரப்ரும்மம். ஸத்தென்றும் அஸத்தென்றும் சொல்ல முடியாதது. அதற்கு எங்கும் கை கால் கண் தலை வாய் காதுகள் உண்டு. எல்லாவற்றையும் வியாபித்து நிற்கிறது. ஸர்வ இந்திரியங்களின் குணத்தையும் பிரகாசப் படுத்துவது. ஆனால் அதற்கு இந்திரியமில்லை. பற்றில்லாதது. எல்லாவற்றையும் பரிப்பது, குணமற்றது, குணத்தை அனுபவிப்பது, உலகில் உள்ளும் புறமுமுள்ளது, அசையாப் பொருளும், அசை

பொருளுமானது, சூக்ஷ்மமாயிருப்பதால் அறிய முடியாதது. தூரத்திலும் ஸமீபத்திலுமுளது. அது ஒன்றுயினும் பிராணிகளிடத்து வேவ்வேருகவும் உலகைப் படைத்துக் காத்து விழுங்குவதாகவுமிருக்கிறது. ஒளிக்கெல்லாம் ஒளி, இருளுக்கு மேலானது. அறிவாய் அறியத் தக்கதாய் அறிவினுலேயே கிட்டுவதாய் எல்லோருடைய உள்ளத்திலுமிருக்கிறது. யான் கூறிய க்ஷேத்ரம் க்ஞாநம் அறியத் தக்கது. இவைகளை அறிந்த பக்தன் மோக்ஷமடைகிருன்.

பிரகிருதியும் புருஷனும் அநாதி. விகாரங்களும் குணங்களும் பிரகிருதியிலிருந்து தோன்றுகின்றன. உடல் அதன் காரணமான ஐம்பூதம் முதலியவைகளுக்கு பிரகிருதி காரணம். ஸுக துக்க அனுபவத்திற்கு புருஷன் காரணம். புருஷன் பிரகிருதியிலிருந்துகொண்டு ஸுக துக்கங்களை அனுபவிக்கிருன். நற்பிறவியோ தீய பிறவியோ எடுக்க குணஸம்பந்தமே காரணமாம். இவ்வுடலினுள்ள புருஷன், அருகிலிருந்து பார்ப்பவன் அநுமதிப்பவன் அனுபவிப்பவன் மகேச்வரன் பரமாத்மா என்றும் அழைக்கப்படுகிருர். இங்ஙனம் புருஷனையும் பிரகிருதியையும் குணங்களையும் அறிபவன் *பதிதனுனலும் மறுபடி பிறக்கமாட்டான். †சிலர் புத்தியில் ஆத்மாவை த்யானத்தினுல் பார்க்கின்றனர். சிலர் ஸாங்க்ய யோகத்தாலும் சிலர் கர்ம யோகத்தாலும் பார்க்கின்றனர். இதை அறியாத சிலர் மற்றவரிடம் கேட்டு உபாஸிக்கின்றனர். கேள்வியையே முக்யமாகக்கொண்ட அவர்களும் மிருத்யுவைத் தாண்டுகின்றனர். பரதர்ஷப, உலகினுண்டாகும் சராசரங்கள் க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ ஸம்மந்தத்தினுலேயே உண்டாகிறதென்று அறி. ஸகல பிராணிகளிட

---

* இந்திரன் அஹல்யா காமுகனுயினும் மறுபிறப்பில்லை நீலகண்டர்,

† சுகர், வாமதேவர், ஜநகர், நாரதர் முறையே உதாஹரணமாவர்.

மும் ஸமமாயிருப்பவனும் ‡அவை அழிந்த பின்னும் அழியா திருப்பவனுமான பரமேசனைப் பார்ப்பவனே பார்ப்பான். சமமாக பார்ப்பவன் தனது ஆத்மாவே எங்கும் ஈசனுயிருப்பதால் தனக்குத் தான் ஹிம்சை செய்யமாட்டான். அதனுல் பரகதி அடைவான். பிரகிருதியே கர்மாக்களைச் செய்கிறது. ஆத்மா அல்ல என்று பார்ப்பவன் பார்ப்பான். எப்போது தனித் தனியான வஸ்துக்களை ஆதமா ஒன்றினிடமே பார்க்கிருனே அதனிடமிருந்தே எல்லாம் விஸ்தாரமானதென பார்க்கிருனே அப்போது அவனே பிரும்மமாகிவிடுவான். கௌந்தேய! ஆத்மா அநாதியாய் நிர்க்குணமாயிருப்பதால் அழிவற்றது. நமது சரீரத்திலிருந்தாலும் அது ஒன்றையும் செய்வதில்லை. அதற்கு கர்மபல ஸம்பந்தமுமில்லை. எல்லாவிடத்திலுமிருந்தாலும் சூக்ஷமமாயிருப்பதால் ஆகாசம் எப்படி ஒன்ருேடும் ஒட்டுவதில்லையோ, அப்படியே உடலிலிருந்தாலும் ஆத்மா ஒட்டுவதில்லை. சூர்யன் ஒருவனே ஸமஸ்த உலகையும் எப்படி பிரகாசப் படுத்துகிருனே அப்படியே க்ஷேத்ரியான ஆத்மா ஸமஸ்த க்ஷேத்ரத்தையும் பிரகாசப் படுத்துகிருன். இங்ஙனம் ஞானக் கண்ணுல் க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞர்களின் வேற்றுமையையும் பிராணிகளின் மாயையையும் அது அகலும் வழியையும் உணர்ந்தவன் மோக்ஷமடைவான்.

13. க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாகயோகம் முற்றிற்று.

14. ஊனின்படியும் உயிரின் பிரிவும் உயிர்பெறுவார்
ஞாநம் பெறுவகையும் ஞாநமீன்ற உயிர்ப்பயனும்,
ஊனினின்றதற்கடியும் உயிர்வே றிடுமுள் விரகும்

‡ அபிமன்யு மரணத்திற்காக அர்ஜுநனழுதான். பகவானழ ஏனென அர்ஜுநன்கேட்க, உடலழிந்துமாத்மா அழிவதில்லை என்ற கீதோபதேசம் இறந்ததே என அழுகிறேனென்ருர்.

தேனின்ற பாதன் தெறிவித்தனன் சிலைப்
பார்த்தனுக்கே.

(கருத்து)—உடலின் இயற்கை. அதைவிட உயிர்வேருனது, ஞானத்தை அடைய விரும்புபவர் கைக்கொள்ள வேண்டிய குணங்கள், அதனுலுண்டாகும் பயன். ஆத்மா தேஹத்துடனிருப்பதற்குக் காரணம். பிறித்தறியும் உபாயம் ஆகியவைகளைப் பத்மபாதன் காண்டீவனுக்குச் சொன்ஞன்.

---

## 14-வது அத்யாயம்—பாத்ம கதை.

காச்மீரமெனும் தேசம் ஸரஸ்வதீ தேவிக்குப் பிறந்த வீடுபோன்றது. ஆங்குள்ள ஸரஸ்வதீ தேவியைப் பூஜித்துப் பலர் பிரும்ம லோகஞ்சென்றனர். சௌர்ய வர்மா எனும் அரசன் அதை ஆண்டுவந்தான். அவனுக்கு விக்ரம வேதாளன் என்ரூர் நண்பனுண்டு. அவன் கலைகளை நன்கறிந்த ஸிம்ஹள தேசத்தரசன். இருவர்களும் அடிக்கடி அபூர்வமான வஸ்துக்களை நண்பருக்கு அளித்து நட்பை வளர்த்துவந்தனர். ஒருநாள் சௌர்யவர்மா மிக அழகானதும் சுறு சுறுப்புள்ளதும் யஜமான விச்வாஸமுள்ளதுமான இரு நாய்களை நண்பனுக்கு அனுப்பினுன். அதைப்பெற்று அதற்கீடாக உத்தம கஜத்தை ஸிம்ஹளத்தரசன் அவனுக்களித்தான். விக்ரம வேதாளன் இன்னுய்களுடன் காட்டிற்கு சென்ருன். அவனைத் தொடர்ந்து பல ராஜகுமாரர்கள் தன் தன் நாய்களுடன் கிளம்பினர். அங்கு பற்பல விளையாட்டுகளை விளையாடி, முதல் முதல் விரைவாக முயல் மாம்ஸத்தைக்கொண்டு வருபவருக்கு இவ்வளவு வெகுமானம் என ஏராளமான பொருளைப் பந்தயமாகவைத்து முயல் வேட்டையாடிஞர்கள். வேதாளனது நாய்களில் பெண் நாயை அழைத்து ஓர் புதரின் அருகே சென்று

மோப்பத்தால் முயல் இருக்கிறதா என கண்டறியச்சொன்னான். அறிவுள்ள அது முயலிருப்பதாக ஸம்க்ஞை செய்தது. உடனே வேடர்களைவிட்டு புதரைக் கிளப்ப அங்கிருந்து முயல் ஒன்று ஓடிற்று. அதைப் பிடித்து வரும்படி வேந்தன் நாயுக்கு உத்தரவிட்டான். அது விரைந்து ஓட முயல் ஓர் சந்தில் புகுந்தது. நாய் மெதுவாக கால்களால் சந்தைப்பெரிதாக்கி உள்ளே நுழைந்து முயலின் கழுத்தைக் கவ்விக் கொண்டுவந்தது. அதன் ஸாமர்த்யத்தைக்கண்டு அனைவரும் ஸந்தோஷ ஆரவாரம் செய்தனர். அரசனுக்கே வெற்றி! வெற்றி! என பலர் புகழ்ந்தனர். இந்த கோலாஹலத்தைக்கண்டு நாயும் ஸந்தோஷமடைந்து வாயைத் திறந்தது. அதிலிருந்து விழுந்த முயல் கழுத்தில் ரத்தம் பெருக, மெதுவாக இரண்டு முழ தூரம் ஓடி விழுந்தது. அது வத்ஸரெனும் மஹரிஷியினுடைய புண்ய ஆச்ரமம். அங்கு துஷ்ட மிருகங்கள்கூட இயற்கையான தூர்க்குணத்தைவிட்டு பகைவரிடம் நண்பர்போல் பழகுகின்றன. புலியும் பசுவும், ஸிம்மமும் யானையும், பாம்பும் கீரியும் ஒன்று மேல் ஒன்று வீழ்ந்து விளையாடுகின்றன. அங்கு ஸ்வகந்தார் எனும் மாணவர் காலைக் கழுவிக்கொண்டிருந்தார். இம் முயல் அந்த ஜலத்தில் வீழ்ந்து பெரு மூச்சுவிட்டது. நாயும் அதனருகே ஓடி அந்த நீரில் காலைவைத்தது. இரண்டும் உடனே தன் தன் உடல்களைவிட்டு திவ்யமான தேஹத்துடன் விமானத்தின்மீது காணப்பட்டன. இதைக்கண்டு எல்லோரும் பேராச்சர்யமடைந்தனர்.

வேதாள ராஜன், முனி மாணவனை நோக்கி இது என்ன ஆச்சர்யம்? இவர்கள் யார்? எதனால் இவர்களுக்கு இக்கதி என வினவினர். வேந்தே! மஹாராஷ்ட்ர தேசத்திலே ப்ரத்யுதகமெனும் நகரத்திலே கேசவன் என்றோர் பிராமணன் இருந்தான். அவன் கபடமுள்ளவன். சொல்வதொன்று, செய்வதொன்று. விலோபநா என்ற அவன் மனைவி வியபி

சாரிணீ. இதை ஒரு சமயம் கணவன் கண்ணுல் கண்டுவிட்டான். கோபம் அதிகமாகி பெண் வதம் என்றுகூட கவனியாமல் அவளைக் கொன்றுவிட்டான். சிலகாலஞ் சென்றபின் இவனுமிறக்க இருவரும் யமபுரியில் சொல்லொணுத் துன்பங்களை அனுபவித்தனர். கேசவன் முயலாகவும், விலோபநா நாயாகவும் பிறந்தனர். இப்பிறவியிலும் அவர்களை வைரம்விடவில்லை. முற்பிறவியில் மனைவியைக் கொன்ற புருஷன் இப்போது அவளால் கொல்லப்பட்டான்.

எனது குரு பகவத்கீதையின் பதினுன்காமத்யாயத்தை ஓயாமல் பாராயணம் செய்பவர். அவர் எனக்கும் அதையே இஹலோக பரலோக ஸாதகமானதென உபதேசித்தார். நானுமதைப் பாராயணம் செய்துவருகிறேன். எனது கால் அலம்பிய ஜலம் பட்டவுடன் இவ்விரண்டும் பாபம் அகன்று உத்தம கதியை அடைந்தன. என்று சீடன் கூறினுன். அதைக்கேட்டு அரசன் கீதா ப்ரபாவத்தை உணர்ந்து, மஹரிஷியிடம் சென்று பதினுன்காமத்யாயத்தை உபதேசம்பெற்று ஜபித்து நற்கதி அடைந்தான்.

---

## 14. குணத்ரய விபாக யோகம்
## 27 சுலோகங்கள்.

[அர்ஜுனன் 1, பகவான் 26].

பகவான்:—எதை அறிந்து மஹர்ஷிகள் ஸித்தி அடைந்தார்களோ அந்த உத்தம ஞானத்தைச் சொல்கிறேன். இதை ஆச்ரயித்து என் ஸ்வரூபத்தை அடைந்தவர்கள் ஸ்ருஷ்டி காலத்திலும் பிறக்கார். ப்ரளயத்திலும் துன்புறார். பெரியதாய் எல்லோரையும் ஆட்டிவைப்பதான மாயை எனக்கு பத்நிபோன்றது. அதில் யான் கர்ப்பாதாநம் செய்ய, ஸகல ஜகத்தும் உண்டாகிறது. தேவபித்ரு மநுஷ்யாதி ஸகல ஜாதிக்கும் அது தாய். யான் பீஜதாதாவான தந்தை.

தேஹத்திலுள்ள அழிவற்ற ஜீவனை ஸத்வம் ரஜஸ் தமஸ் எனும் மாயையின் முக்குணங்களே தேஹத்தில் கட்டுகின்றன. அதில் மலமில்லாமல் ப்ரகாசமாய் உபத்ரவமில்லாத தான ஸத்வம் ஸுகத்தாலும் ஸுக க்ஞாநத்தாலும் கட்டுகிறது. சிவப்பாய் ஆசை பற்றுகளைப் பிறப்பிக்கும் ரஜஸ் கர்ம ஸங்கத்தால் கட்டுகிறது. அக்ஞாநத்தாலுண்டாகி எல்லோரையும் மோஹிக்கும்படி செய்யும் தமஸ் தவறுதல் சோம்பல் தூக்கம் இவைகளால் கட்டுகிறது. ஸத்வம் ஸுகத்திலும் ரஜஸ் கர்மாவிலும் தமஸ் ஞாநத்தை மறைத்து தவறுதலிலும் ஆத்மாவைச் சேர்த்துவிடுகிறது. ஸத்வம் ரஜஸ் தமஸ்ஸுகளையும், ரஜஸ் ஸத்வ தமஸ்ஸுகளையும் தமஸ் ஸத்வ ரஜஸ்ஸுகளையும் சில ஸமயம் அடக்கிவைக்கிறது.

*ஸகல இந்திரியங்களிலும் ஞாநம் ப்ரகாசமாயிருந்தால் ஸத்வம் மேலாக இருக்கும். ரஜஸ் மேலாயிருந்தால் லோபம் பிரவிருத்தி கர்மாவைச் செய்தல் ஆசை இவைகளுண்டாகும். தமஸ் மேலாக இருந்தால் அப்ரகாசம், பிரவிருத்தி இல்லாமை, தவறுதல் மோஹம் இவைகளுண்டாகும். ஸத்வம் மேலாக இருக்கும்போது இறந்தால் தத்வமறிந்தவர்களுக்கேற்ற நிர்மலமான லோகங்களை அடைவான். ரஜஸ் மேலானபோது இறந்தால் கர்மிகளிடத்தும் தமஸ் மேலிட்டபோதிறந்தால் விலங்குகளிடத்தும் பிறப்பான். ஸத்வ பலன் நிர்மலமானது, ரஜஸின் பலன் துக்கம், தமஸின் பலன் அக்ஞாநம். ஸத்துவத்தால் ஞாநம் †ரஜஸால் லோபம்

---

* விபீஷணன் ராவணன் கும்பகர்ணன்.

† பிருஹஸ்பதி மாந்தாதாவின் யக்ஞத்தை நடத்த ஏற்றுக்கொண்டார். இந்திரன் மநிதனுக்கும் தேவர்க்கும் புரோஹிதராயிருக்கக் கூடாதென்றார். அரசனைக் கைவிட்டார். அரசன் துக்கத்தை அறிந்த நாரதர் அவதூதரான ஸம்வர்த்தரிடமனுப்பி, யார் கூறியதெனில் நாரதர் கூறிவிட்டு நெருப்பில் வீழ்ந்தாரனெ கூறச்சொல்லி யாகத்தை நடத்தினர்—பாரதம்.

தமஸால் தவறுதல் மோஹம் அக்ஞாநம் உண்டாகின்றன. ஸாத்விகர் தேவலோகத்திலும் ராஜஸர் பூலோகத்திலும் தாமஸர் மிருக ஜாதியிலும் பிறப்பர். குணங்களைத் தவிர வேறு கர்த்தாயில்லை. குணங்களுக்கு மேலானவன் ஆத்மா என்று அறிபவர் மோக்ஷமடைவர். உடலிலுண்டாகும் முக்குணங்களைக் கடந்த தேஹி ஜநந மரண ஜரா துக்கங்களிலிருந்து விடுபட்டு அமிருதத்தைப் புஜிப்பான். அர்ஜுநன்—முக்குணங்களைக் கடந்தவனை எப்படி அறியலாம்? என்ன ஆசாரமுள்ளவனாக இருப்பான்?

பகவான்:—பாண்டவ! ப்ரகாசம் ப்ரவிருத்தி மோஹம் இவைகளையும் இவைகளின் கார்யங்களையும் வெறுக்க மாட்டான். தன்னைவிட்டுப் போனதை விரும்பமாட்டான். உதாஸீநனைப் போலிருப்பான். குணங்களால் சலிக்கமாட்டான். குணங்களே செய்கின்றன என்று அசையாதிருப்பான். ஸுக துக்கம், மண்கட்டி ஸ்வர்ணம் பிரியம் அப்பிரியம் நிந்தை ஸ்துதி இவைகளைத் தீரனாயிருந்து ஸமமாகக் கருதுவான். †மாந அவமாநங்களிலும் மித்ரன் சத்ரு இவர்களிடத்திலும் துல்யனாக இருந்து ஸர்வ கார்யத்தையும் விட்டவன் குணாதீதன். என்னை அசஞ்சலமான பக்தியால் உபாசிப்பவன் குணங்களைக் கடந்து மோக்ஷம் பெறுவான். அமிருதமாய் அழிவற்றதாயுள்ள ப்ரத்யகாத்மாவிற்கும் சாச்வதமான தர்மத்திற்கும் ஏகாந்தமான சுகத்திற்கும் யான் ஆச்ரயமானவன்.

14. குணத்ரயவிபாக யோகம் முற்றிற்று.

15. முக்குணமே உயிர் முற்றவுங்கட்டிட மூண்டமையும்
முக்குணமே அனைத்தும் வினைகொள்ள முயன்றமையும்
முக்குண மாயைகடத்தலும் முக்தி தந்தளிப்பும்

† ஜடபரதன் குணாதீதன்.

முக்குண மற்றபிரான் மொழிந்தான் முடியோன்
றனுக்கே.

(கருத்து)—முக்குணமே உடலில் ஜீவனைக் கட்டுகிறது. முக்குணமே எல்லா வேலைகளையும் செய்விக்கிறது. முக்குணமுள்ள மாயையைக் கடக்கும்வழி, மூன்று வகையான கதியை அளிக்கின்றது என முக்குணத்தைக் கடந்தவன் கிரீடிக்கு உபதேசித்தான்.

---

## 15-வது அத்யாயம்—பாத்ம கதை.

கௌட தேசத்தில் கிருபாண நரஸிம்ஹன் என்றோர் வேந்தனிருந்தான். அவன் கத்தி ஒன்றையே ஸஹாயமாகக் கொண்டு பகைவர் அனைவரையும் வென்றான். ஆதலின் கிருபாண (கத்தி) நரஸிம்மன் என பெயர் வழங்கிற்று. அவனுக்ஷியில் பதஞ்ஜலியாகத் தோன்றிய ஸர்ப்பராஜன் வியாகரண ஸூத்ரங்களுக்கு மஹாபாஷ்யம் இயற்றினார். அவ்வரசனுக்கேற்ற ஸேநாதிபதி ஸரப பேருண்டன் என்பவன். சஸ்த்ரத்திலும் சாஸ்திரத்திலும் கரைகண்டவன். ஸேநாபதிக்கு அரசனைப் பரிவாரத்துடன் கொன்று தானே தரணியை ஆளவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. அதற்குத் தக்க ஸமயத்தைத் தேடிக்கொண்டிருந்தான். தைவச்செயலாக, விஷூசீ (வாந்திபேதி) எனும் நோய் கண்டு அவன் இறந்தான். அவன் குதிரை ஏற்றத்தில் மிக ஆசை கொண்டவன். இறக்கும்போது குதிரையை நினைத்தே இறந்தான். ஆதலின் சிந்து தேசத்தில் மிக்க லக்ஷணம் வாய்ந்த உத்தம குதிரையாகப் பிறந்தான். அரசனிடம் அன்புள்ள ஓர் வியாபாரி அதை விலைக்கு வாங்கிவந்து நரசிம்ம ராஜனுக்களித்தான். அரசன் அதன் மதிப்பிற்கேற்ற விலையுந்தந்து தனக்கே இதைக் கொடுக்கவேண்டுமென்ற அன்பிற்கேற்ற ஸம்மானம்செய்தான். அன்று முதல் வேந்தன்

அதைப் பட்டத்துக் குதிரையாகக் கருதி தக்க அலங்காரம் செய்து போஷித்துவந்தான். ஒரு நாள் அதன்மீதேறி வேட்டைஆட வனஞ்சென்றான். மான் கூட்டமொன்று அரசனை வெகுதூரம் வனத்தில் இழுத்துச்சென்றது. பரிவாரங்கள் பின்னே தங்கிவிட்டன அரசன் தாகத்தால் வருந்தி அச்வத்தை ஓர் ஆலமரத்திலே கட்டிவிட்டு அருகிலுள்ள ஓர் சிலைமீதேறி எங்கேனும் தீர்த்தமிருக்கிறதோ என்று பார்த்தான்.

அதற்குள் அவன்மீது விசாலமான ஓர் இலை வீழ்ந்தது. அதைக் கையில் எடுத்தான். அதில் ஓர் பாதி சுலோகம் எழுதப்பட்டிருந்தது. அதைப் படித்தான். அருகிலுள்ள அச்வம் உடனே அவனியில் வீழ்ந்தது. ஓர் திவ்ய புருஷன் விமானத்திலேறி வானுலகஞ் செல்லக்கண்டான். அந்த இலையுடன் கீழே இறங்கி குதிரையை எழுப்பிப் பார்த்தான். என்ன பாடுபட்டும் அது எழுந்திருக்கவில்லை. பாதசாரியாக அவ்வனத்தினுள்ளே சிறிது தூரஞ்சென்றான். ஆங்கு மஹர்ஷி ஆச்ரமம் காணப்பட்டது. அங்குள்ள மாமுனிவரைப் பணிந்து நடந்த ஆச்சரியத்தைக்கூறி இதற்கென்ன காரணமென்று கேட்டான். முனிவர் அரசனுக்கு அதிதி பூஜைசெய்து ஆஸநத்திலமர்த்தி ஞானக்கண்ணால் அதை நன்றாக அறிந்துகூறினார். வேந்தே! உம்மைக் கொன்று உமது ராஜ்யத்தை ஆளக்கருதிய உமது ஸேனாபதி விஷூசியால் இறந்து இவ்வச்வமாகப் பிறந்தான். கர்மவசத்தால் உம்மையே சுமந்தான். உம்மீது விழுந்த இலையின்மீது எனது சிஷ்யன் விளையாட்டாக கீதையின் பதினைந்தாமத்யாயத்தின் ஓர் பகுதியை எழுதினான். அதை நீர் படிக்க அது அச்வத்தின் காதில் வீழ்ந்தது. உடனே அதன் பாபமனைத்தும் அகன்று வைகுண்டஞ்சென்றது. ஓர் பகுதியின் ச்ரவணத்தால் குதிரைக்கே உத்தம கதி எனில் அவ்வத்யாயத்தின் பெருமையை யார் கூறமுடியும்? என்று

முனிவர் கூறினர். அரசன் தன் நாட்டிற்கு இம்முனிவரை அழைத்துச்சென்று தன் புதல்வனுக்குப் பட்டஞ் சூட்டி பதினைந்தாமத்யாயத்தை அவரிடம் உபதேசமாகப் பெற்று நற்கதி அடைந்தான்.

---

## 15. புருஷோத்தமயோகம் 20 சுலோகங்கள்.

பகவான்—†மேலே வேரும் கீழே கிளைகளுமுள்ள அழிவற்ற ஓர் அச்வத்த மரமுளது. அதன் இலைகள் வேதங்கள். இதை அறிபவன் வேதவித்தாவான். குணங்களால் விருத்தி அடைந்ததும் விஷயமாகிற துளிர்களுள்ளதுமான கிளைகள் மேலுங்கீழும் பரவி இருக்கின்றன. கர்ம ஸம்மந்தமுள்ள சில வேர்கள் மநுஷ்ய லோகத்தில் தொடர்ந்து தொங்குகின்றன. இதற்கு ரூபமில்லை. ஆத்யந்தமில்லை. ஸ்திதியுமில்லை. நன்றாக வேர் ஊன்றிய இந்த ஸம்ஸாரமரத்தைப் பற்றில்லாமை என்ற கத்தியால் வெட்டி, எங்கு சென்றால் ஸம்ஸாரத்திற்கு திரும்பமாட்டோமோ, எங்கிருந்து இது முளைத்ததோ அதைத் தேடவேண்டும். மானம், மோஹம், காமம், ஸுகதுக்கமெனும் இரட்டையைவிட்டு ஆத்ம விஷயத்திலீடுபடுபவர் மோக்ஷமடைவர். அதென்ன? அதை சூர்யனோ சந்த்ரனோ அக்நியோ ப்ரகாசப்படுத்துவதில்லை. அங்கு சென்றவன் திரும்புவதுமில்லை. அதே எனது பரமபதம். அழிவற்றதான ஜீவலோகம் எனது அம்சமே. மனம் முதலிய ஆறு இந்திரியங்களையும் அது இழுக்கிறது. எப்போது? ஓர் உடலைவிட்டு மற்றதைப் பெறும்போது காற்று கடலில் கப்பலை இழுத்துச் செல்வதுபோல் ஜீவன் இந்திரியங்களை இழுத்துச் செல்கிறான்.

காது, கண், துவக், நாக்கு, மூக்கு, மனஸ் இவைகளைப்

---

† கடவல்லியில் இங்ஙனம் வர்ணிக்கப்படுகிறது. மேல் என்பது சிறந்த பிரும்மமாம், அச்வத்தம் அறிந்தபின் நாளைக்கு இருது.

பற்றிக்கொண்டு ஜீவன் விஷயங்களை அநுபவிக்கிறான். ஒரு உடலைவிட்டு மற்றொன்றுக்குக் கிளம்பும்போதும், இருக்கும் போதும் விஷயங்களைப் புஜிக்கும்போதும், குணங்கள் கூடி இருக்கும்போதும் ஜீவனை மூடர்கள் அறியமாட்டார்கள். * க்ஞானிகளே பார்ப்பர். பிரயத்நம்செய்யும் யோகிகள் உடலில் அவனைக்காண்பர். தபசும் இந்திரியஜயமுமில்லாதவர் முயற்சித்தாலும் காணார். சூர்யனிடமிருந்து உலகைப் பிரகாசப்படுத்துவதும், சந்திரனிடமும், அக்நியினிடமும் உள்ளது எனது தேஜஸே. பூமியில்யான் நுழைந்து பூதங்களைத் தரிக்கிறேன். ரஸமுள்ள சந்திரனாக இருந்து எல்லா ஓஷதிகளையும் போஷிக்கிறேன். ‡நான் அக்நியாக இருந்து பிராணிகளின் உடலை ஆச்ரயித்து பிராண அபாநாதிகளுடன் கூடி நால்வகையான அன்னத்தைப் பாகம் செய்கிறேன். *எல்லோருடைய ஹிருதயத்திலும் இருக்கிறேன். என்னிடமிருந்தே நினைவு, அறிவு, மறத்தல் உண்டாகின்றன. ஸர்வ வேதங்களாலுமறியப்படுபவன் யானே. வேதாந்தத்தைச் செய்தவனும் வேதவித்தும் யானே. இந்த உலகில் க்ஷரன், அக்ஷரன் என இருபுருஷர்கள் இருக்கின்றனர். ஸர்வ பூதங்களும் க்ஷரம். கூடஸ்தன் அக்ஷரன். உத்தம புருஷன் வேறு. அவன் பரமாத்மா. மூவுலகிலும் நுழைந்து அழிவற்றவனாக அதை ரக்ஷிக்கிறான். க்ஷரத்தையும் அக்ஷரத்தையும்விட யான் உத்தமன் ஆதலால் உலகிலும் வேதத்திலும் புருஷோத்தமன் என பிரஸித்தனாக இருக்கிறேன். யார்

* ஸஞ்ஜயன் துரோணரது ஜீவன் கிளம்பிப் போவதைத் தானும் சிலரும் பார்த்ததாக கூறினார்—பாரதம்.

‡ சாப்பிடும்போது இந்த சுலோகத்தைச் சொல்வது சிஷ்டாசாரம்.

* ஜலத்தில் மூழ்கியுள்ள குருவை. சிஷ்யன் ஆத்மா எங்கே இருக்கிறதென்றான். அவர் இரு ஸ்நாநம் செய்து வருகிறேனென்றார். ஜலத்திலே இருப்பவருக்கு ஸ்நாநமேன்? மநதிலேவைத்து ஆத்மாவைத் தேடுவதேன்—ராமகிருஷ்ணா.

என்னை இங்ஙனம் மோஹமின்றி அறிகிறானோ அவன் ஸர்வக்ஞன். ஸர்வ பாவத்துடன் என்னை அடைகிறான். குற்றமற்ற பாரத! மிகமிக ரஹஸ்யமான சாஸ்திரத்தைக் கூறினேன். இதை அறிந்த நீ புத்திமான். கிருதகிருத்யனாவாய்.

15. புருஷோத்தமயோகம் முற்றிற்று.

16. மூவெட்டிலும் அதின் மோஹமடைந்த உயிர்களிலும்
நாவெட்டெழுத்தோடு நல்வீடு நண்ணின் நம்பரிலும்
மேவெட்டு வன்குண விண்ணோர்களிலும் விஜயனுக்குத்
தாவிட்டு உலகளந்தான் தன்னை வேறென்று
சாற்றினனே.

(கருத்து)—இருபத்துநான்கு வகையான க்ஷரத்தைக் காட்டிலும் அதில் மோஹமடைந்தவரைக் காட்டிலும அஷ்டாக்ஷரத்தால் முக்திபெற்றவரைக் காட்டிலும் எட்டு நற்குணமுள்ள நித்ய ஸூரிகளைக்காட்டிலும் புருஷோத்தமன் வேறு என உலகளந்தான் விஜயனுக்கு உபதேசித்தான்.

---

## 16—வது அத்யாயம்—பாத்மகதை.

கூர்ஜரநாட்டிலே ஸௌராஷ்ட்ரம் எனும் நகரத்தைக் கட்கபாஹு எனும் அரசன் ஆண்டுவந்தான். அவனுக்கு அரிமர்த்தனன் என்றோர் பட்டத்து யானை இருந்தது. அது ஒரு சமயம் மதங்கொண்டு கட்டுத்தறியிலிருந்து சங்கிலியை அறுத்துக்கொண்டு கட்டடக்கடங்காமல் கிளம்பிற்று. பல மாவுத்தர்கள் அதைப்பிடிக்க முயற்சித்தும் அவர்களைத் துதிக்கையால் வாரி தூர எரிந்துவிட்டுக் கிளம்பிற்று. வீதியில் நடமாடுபவர் அனைவரும் பயந்து உள்ளே புகுந்து கதவைத்தாளிட்டுக் கொண்டனர். சிலர் ஜன்னலில் ஒளிந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அரசன் இதைக்கேட்டு

ஆச்சர்யமடைந்து ராஜபுத்ரர்களுடன் அரண்மனைமாடி மீதிருந்து வீதியில் அந்த யானை செய்யும் அட்டஹாஸத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அது வீலிட்டுக் கத்திக் கொண்டும் அருகிலுள்ள மரங்களையும் தூண்களையும் பிடுங்கி எறிந்துக்கொண்டும் சென்றது. அது இன்னும் என்ன செய்யுமோ என்று ஜனங்கள் நடுங்கினர். அதற்கு எதிராக ஓர் பிராமணன், ஸ்நானம்செய்து சுத்தனாக கீதையின் பதினொருமத்யாயத்தைப் பாராயணம் செய்துகொண்டே வந்தார். ஜனங்கள் மேலிருந்தபடியே ஐயா! உள்ளே வாரும், பதுங்கிக்கொள்ளும், கட்டுக்கடங்காமல் யானை மதம் பிடித்துவருவது உமக்குத் தெரியவில்லையா? என்று கூக்குரலிட்டனர். பிராமணன் அவர்களைப்பார்த்து அவர்கள் செய்த உதவிக்கு ஜாடையாக நன்றி செலுத்திவிட்டு அதே வழியாய் தைரியமாகச் சென்றார். இவ்வளவு அட்டஹாஸஞ் செய்த அந்த யானை இவரைக்கண்டவுடன் மிக சாந்தமாகி அவரை முட்டியிட்டுப் பணிந்து எழுந்திருப்பதற்குக் கூட அவராணையை எதிர்பார்த்து நின்றது. அவர் ஸம்க்ஞை செய்தவுடன் மாவுத்தர்கள் வழக்கப்படி சங்கிலியால் அதைக் கட்டி கஜசாலைக்கு அழைத்துச் சென்றனர்.

அரசனும் மற்றவர்களும் பரம ஆச்சர்யபரிதர்களாகி அந்த பிராமணனிடம் வந்து வணங்கி ஸாதோ! உம்மிடத்தில் என்ன வச்யமந்த்ரமிருக்கிறது? என்று கேட்டனர். அவர் கீதையின் பதினொருமத்யாயத்தில் சில சுலோகங்களை ஸதா பாராயணம் செய்வேன். அந்த பெருமையால் இன்னும் இதைவிட உயர்ந்த எத்தனையோ ஸித்திகளைக் கண்டேன் என்றார். இதைக்கேட்ட அரசன் அவரை அரண்மனைக்கு அழைத்துவந்து லக்ஷக்கணக்கான திரவ்யத்தைக் கொடுத்து உபசரித்து பதினொருமத்யாயத்தை உபதேசிக்கும்படி செய்தான். பின்னர் பல ஆண்டுகள் சென்றபின் அதே யானைக்கு முன்போல் மதமுண்டாயிற்று.

மாவுத்தன் தன்னால் ஆனவரை அடக்க முயற்சித்தும் பயனில்லாது பயந்து ஓடினான். வேந்தன் தைர்யமாக கீதா பலத்தைக்கொண்டு அஞ்சாமல் அதனருகே சென்றான். உடனே அது அடங்கி வணங்கிற்று. அரசன் மதம்பிடித்த யானையையே அடக்கிய கீதை மநதை அடக்காதோ என்று புத்ரனிடம் ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டு ஸதா கீதை பதினாருமத்யாய பாராயணம்செய்து மோக்ஷமடைந்தான்.

---

## 16. தேவாஸுர ஸம்பத் விபாகயோகம். 24 சுலோகங்கள்.

பகவான் :—அஞ்சாமை, அந்தக்கரண சுத்தி குருமுகமாக கேட்டறிந்த ஞாநத்தைச் சிந்தித்தல், தாநம் வெளி இந்திரியங்களை அடக்குதல் யக்ஞம் வேதமோதல் சாரீரகமான தவம், கபடமின்மை, அஹிம்ஸை ஸத்யம் கோபமில்லாமை, ஸன்யாஸம் மநச்சாந்தி கோள் சொல்லாமை, தயை, இந்திரிய சபலமில்லாமை, மிருதுவாயிருத்தல் வெட்கம் சபலமின்மை, தேஜஸ் க்ஷமை தைர்யம் சௌசம் துரோஹமில்லாமை தன்னை அளவுகடந்து மதியாமை, இவைகள் தைவ ஸம்பத்துள்ளவர்களுக்கு இருக்கும் குணங்கள். டம்பம் கர்வம் தன்னை மிக உயர்ந்தவனாக எண்ணுதல் கோபம் க்ரூரமாக பேசுதல் அக்ஞாநம் இவை ஆஸுரஸம்பத் உள்ளவர் குணமாம்.* பாண்டவ! தைவ ஸம்பத்து மோக்ஷமளிக்கும். அசுர ஸம்பத்து பந்தத்தை அளிக்கும். உனக்கு தைவ ஸம்பத்திருக்கிறது, அஞ்சாதே. இவ்வுலகில் தைவம் ஆசுரம் என இருவகையான பிறவி உண்டு. தைவ ஸருஷ்டி விஸ்தாரமாக கூறப்பட்டது. அசுர ஸ்ருஷ்டியைக் கேள்! அசுர குணமுள்ளவர், தர்மத்தைக் கூறும் விதியையும்

---

*இது துர்யோதனன் முதலியவரிடம் பூர்ணமாக இருந்தது.

அநர்த்தத்தைத்தரும் நிஷேதத்தையும் அறியமாட்டார். சௌசம் ஆசாரம் ஸத்யம் இவை அவர்களிடம் இராது. உலகம் பொய்யானது. தர்மாதர்மம் இதற்குக் காரணமில்லை. இதற்கு ஈசன் காரணமல்ல. ஸ்திரீ புருஷர்களது சேர்க்கையால் பிராணிகள் உண்டாகின்றன. காமம் தவிர வேறு காரணமேது. என்ற எண்ணங்கொண்டு பரலோக சாதனமொன்றுமில்லாமல் அல்ப புத்திகளாகவும் உக்ரமான கார்யஞ்செய்பவர்களாகவும் இருந்துகொண்டு உலகை அழிக்கின்றனர்.

எவ்வளவு அனுபவித்தாலும் போகாத ஆசையைக் கைகொண்டு தம்பம் மானம் மதம் உள்ளவர்களாய் அசுத்தமான விருதத்தை ஆச்ரயித்து மோஹத்தினால் அசத்தான கார்யங்களை ஆரம்பிப்பர். இறக்கும்வரை ஓயாத எண்ணங்களை எண்ணி காமபோகத்திலீடுபட்டு, இதற்குமேல் வேறொன்றுமில்லை என்று எண்ணுவார்கள். ஆயிரக்கணக்கான ஆசாபாசங்களால் கட்டப்பட்டு காம க்ரோதவசர்களாய் காமபோகத்திற்காக அக்ரமமாக பணந்தேடுவார்கள். இந்த ஆசையை அடைந்துவிட்டேன். இதை அடையப்போகிறேன். இது இருக்கிறது. இவ்வளவு தநம் இனி வரப்போகிறது. இந்த சத்ருவைக்கொன்றேன். மற்றவர்களையுங் கொல்லப் போகிறேன். நான் அடக்குபவன், போகி, ஸித்தன், பலவான், ஸுகீ, தனிகன், நற்குலத்தில் பிறந்தவன், எனக்கு ஈடு யார்? யாகஞ்செய்கிறேன், தாநமளிப்பேன், சந்தோஷமடைவேன். என அக்ஞாநத்தால் மோஹமடைவர். இங்ஙனம் பல எண்ணங்களால் பிராந்தராகி மோகத்தால் மூடப்பட்டு காமபோகத்திலீடுபட்டு அசுத்தமான நரகத்தில் வீழ்வர். *நானே உயர்ந்தவன் என்று தநமாந மதத்தினால் கர்வங்கொண்டு சாஸ்திரத்தை அனுசரிக்காமல் தம்பத்துடன் பேருக்கு யக்ஞம் செய்வர். அஹங்காரம் பலம்

*மஹாபலி.

கொழுப்பு காமம் குரோதம் இவைகளைக் கைக்கொண்டு அவர் உடலிலும் மற்றவர் உடலிலுமுள்ள என்னை அசூயா குணத்துடன் வெறுக்கிறார்கள். அத்தகைய க்ரூர அதம மனிதர்களை நரகத்தை அளிக்கும் அசுபமான அசுர பிறவியிலேயே தள்ளுகிறேன். அசுரப்பிறவியை அடைந்த அவர்கள் ஒவ்வோர் பிறப்பிலும் என்னை அடையாமலே அதிலும் நீசமான பிறவியை அடைகின்றனர்.

†ஆத்மாவை நாசஞ்செய்து நரகத்திற்கு வாயற்படியாயுள்ளது காமம், குரோதம், லோபம் என்பன. ஆகலின் இவைகளை விடவேண்டும். நரகத்வாரமான இம்மூன்றையும் விட்டவன் ஆத்ம சிரேயஸ்ஸைத் தேடி நற்கதி அடைவான். சாஸ்த்ர விதியைவிட்டு இஷ்டப்படி நடப்பவன் ஸித்தியையும் சுகத்தையும் உயர்கதியையும் அடையமாட்டான். ஆதலால் செய்யவேண்டியதற்கும் செய்யத் தகாததற்கும் சாஸ்த்ரமே ப்ரமாணமாகும். அந்த சாஸ்த்ர விதியை நன்கு அறிந்து கார்யத்தைச்செய்!

16. தைவாசுர ஸம்பத் விபாகயோகம் முற்றிற்று.

17. ஆணைமருதவர் தேவர் அல்லாவழக்கோர் அசுரர்
கோணைமருத குணச்செல்வ நீகுறிக்கொள் மறையைப்
பேணிய தத்துவமும் பிணியற்ற கிரிகைகளும்
காணிதனால் விஜயாவென்று கண்ணனியம் பினனே.

(கருத்து)—பகவதாக்ஞையை மீருதவர் தேவர். அதைச்செய்யாமல் விரோதமாகப் பேசுகிறவர் அசுரர். கோணலைவிட்டு பகவதாக்ஞையை விடாத குண சம்பத்துள்ள விஜயா! இதைச் செய்யலாம், இதைச் செய்யக் கூடாது என்பதற்கு வேதமே ப்ரமாணம். அதனால் தத்

---

†இந்நான்கு சுலோகங்களும் மிகமிக அரிய உபதேசத்தைச்செய்து நல்வழி காட்டுகின்றன. சாஸ்திர விதியை மீறிய செயல் ஏற்கத்தக்கதல்ல.

துவமும் நிஷ்காம்ய கர்மாவும் அறியத்தக்கதுஎன கண்ணன் உபதேசித்தார்.

---

## 17-வது அத்யாயம்—பாத்ம கதை.

முன்கதையில் ஸௌராஷ்ட்ரபதியான கட்கபாஹு வின் யானைக்கு மதம்பிடித்தது என்று கூறினோமல்லவா? அச்சமயம் ராஜ குமாரனுக்குப் பணிவிடைசெய்யும் துச்சாஸனன் என்றகிங்கரன், தன்னுடன் உள்ள பாலர்களிடம் இந்த யானைமீது யான் ஏறி அதை அடக்கிவிடுகிறேன். என்ன பந்தயம் கொடுக்கிறீர்கள் என்று வீரம்பேசி அதனிடம் சென்றான். மற்றவர் வேண்டாம்! வேண்டாம்! அது கொன்றுவிடும் என்று கூறிக்கொண்டே இருக்கும் போது அதன்பின் ஓடினான். அருகிலுள்ளோர் அவனை பலாத்காரமாக தடுக்கும்போது ஓ கஜமே! எனக்கு நீ பணியத்தான்வேண்டும். இல்லையேல் உன்னை அங்குசத்தால் குத்துவேன். என்று கூறிக்கொண்டே ஓடினான். இதைக் கேட்டு யானை பின்னால் திரும்பிற்று. எல்லோரும் பயந்து ஓடினார்கள். துச்சாஸனன் இடறிவிழுந்தான். யானை அவனைத் துதிக்கையால் தூக்கித் தலைகீழாக சிறிதுநேரம் நிறுத்தி பூமியில் அறைந்தது. அவன் இறந்தபின்பும் கோபத்தால் யானை அவன் கைகால்களைத் தனித்தனியாகப் பிய்த்து எறிந்தது. யானையால் இறந்த அவன் கர்மவசத்தால் ஸிம்மல த்வீபத்தில் ஓர் யானையாகவே பிறந்தான். ஜயதேவன் எனும் அத்தேச அரசன் தனது நண்பனான கட்கபாகுவுக்கு அந்த யானையைப் பரிசாக அளித்தான். அது தனது ஊருக்கே வந்து தனது பந்துக்களைப் பார்த்தவுடன் பூர்வ ஜன்ம நினைவு உண்டாகி தனது செயலை நினைத்து வருந்திக்கொண்டே இருந்தது.

ஒரு மகாகவி கட்கபாகுவின் ஸபைக்குவந்து அரசன் சொன்ன ஓர் பகுதியைக்கொண்டு சொல்சுவை நிறைந்த

ஓர் சுலோகத்தைச் சொன்னார். தன் கருத்துக்கிசைந்த அதைக்கேட்ட அரசன் அளவிலாமகிழ்ச்சி அடைந்து கவிக்கு அந்த யானையையும் நூறு பவுனையும் ஸந்மானம் செய்தான். கவி சிறிதுகாலம் கௌரவத்திற்காக அதை வீட்டில் வைத்திருந்தார். யானைக்குத் தீனிபோட யாரால் முடியும்? கவி மாலவதேச மன்னனிடம் அதை விற்றுவிட்டார். அங்குசென்று சில ஆண்டுகள் சென்றபின் யானைக்கு ஜ்வரம் உண்டாயிற்று. எவ்வளவு சிகித்ஸை செய்தும் நோய் அகலவில்லை. நீருமருந்தாமல் உணவும் உட்கொள்ளாமல் அது நாளுக்குநாள் இளைத்து இறக்கும் தருவாயில் இருந்தது. பாகர்கள் அரசனை நேரில் அழைத்துவந்து அதைக்காட்டினார்கள். அரசன் அதைக் கவலையுடன் பார்த்துக்கொண்டிருக்கும்போது எல்லோருமாச்சர்யப்படும்படி அது மனுஷ்யனைப் போல் பேசிற்று. அரசே! எதற்காக கவலைப்படுகிறீர்! என்னோய் எந்த சிகித்ஸையாலும் அகலாது. யான் நற்கதி பெற உமக்கு விருப்பமிருந்தால் கீதை பதினேழாமத்யாயம் பாராயணம்செய்யும் ஸாதுவை அழைத்துவாரும் என்றது. அரசன் அமாத்யர்களை அனுப்பி நாடு நாடாகத்தேடி அத்தகைய பெரியோரை அழைத்துவந்தான். யானையின் சொற்படி அவர் அதைப் பாராயணம்செய்யும்போது, யானை உடலைவிட்டு திவ்ய தேஹம்பெற்று விமானத்தின்மீதேறியது. முன்னிலும் பன்மடங்கு ஆச்சரியமடைந்த வேந்தன் அவரைப்பார்த்து நீர் யார்? ஏன் யானையானீர்? எப்படி இவ்வுடல் கிடைத்தது என்று கேட்க, அவர், தான் துச்சாஸநனாக இருந்து யானையால் கொல்லப்பட்டு யானையாக பிறந்ததையும், கீதை பதினேழாமத்யாய மஹிமையால் தான் வைகுண்டம் போவதையும் கூறினார். மாலவதேசாதிபதியும் அன்றுமுதல் கீதை பதினேழாமத்யாய பாராயணம் செய்து உத்தமகதி அடைந்தான்.

---

# 17. ச்ரத்தாத்ரய விபாக யோகம்
## 28 சுலோகங்கள்.

*[அர்ஜுனன் 1. பகவான் 27.]*

*அர்ஜுனன் :—சாஸ்த்ர விதியை அறியாமல் அதைவிட்டு ச்ரத்தையோடு யார் பூஜிக்கிறார்களோ அவர்களது நிலை ஸாத்விகமா ராஜஸமா தாமஸமா?*

*பகவான் :—பிராணிகளுக்கு இயற்கையாகவே ஸாத்விக ராஜஸ தாமஸ ச்ரத்தை உண்டு. அதைக் கேள், பாரத! மனதின் பரிபாகத்திற்கேற்றபடி எல்லோருக்கும் ச்ரத்தை உண்டாகிறது. ஜீவன் ச்ரத்தாமயமாகவே இருக்கிறான். ஆதலின் எவருக்கு எதில் சிரத்தையோ அந்த ஜீவன் அதே ச்ரத்தைக்கு அனுகூலமாக இருக்கிறான். ஸாத்விகர் தேவர்களையும் ராஜஸர் யக்ஷர்களையும் ராக்ஷஸர்களையும், தாமஸர் பூதப்ரேதகணங்களையும் பூஜிக்கின்றனர். தம்பமும் அஹங்காரமும் கொண்டு காமராகங்களின் பலத்தால் சாஸ்த்திரங்களில் கூறப்படாத கோரமான தவத்தைச்செய்து சரீரத்திலுள்ள இந்திரியங்களையும் உள்ளே இருக்கும் என்னையும் கஷ்டப்படுத்துபவர் அசுர எண்ணங்கொண்டவராவர். ஆஹாரமும் எல்லாப் பிராணிகளுக்கும் மூவகை. யக்ஞம் தபஸ் தானமிவைகளும் மூவகை. அதன் பேதத்தைக்கேள்!*

*ஆயுஸ், ஸத்வம், பலம், ஆரோக்யம், ஸுகம், பிரீதி இவைகளை விருத்திசெய்வதும் ரஸமுள்ளதும் எண்ணெயுள்ளதும் ஸ்திரமானதும் மனதிற்கிசைந்ததுமான ஆஹாரம் ஸாத்விக பிரியமானது. காரம், புளிப்பு, உப்பு, உஷ்ணம், தீக்ஷ்ணம், உக்ரம், எறித்தல் ஆகியவை அதிகமாக இருப்பதும் துக்கம் சோகம் நோய் இவைகளை அளிப்பதுமான ஆஹாரம் ராஜஸப்ரியமாம். கொஞ்சம் பாகமானது, ரஸமில்லாதது, துர்கந்தமுள்ளது, பழையது, சாப்பிட்டமிகுதி, யக்ஞத்திற்கு உதவாததுமான ஆஹாரம் தாமஸப்ரியம். பயனைக்கோராமல் சாஸ்த்ர விதிப்படி அது கூறுவதால் யாகம் செய்யவேண்டும், என்று மனது ஏகாக்ரப்படசெய்யும் யாகம் ஸாத்விகமானது. பயனைவிரும்பி தம்பமாக செய்வது ராஜஸம். விதியைவிட்டு அன்னமளிக்காமல் மந்திரங்களை*

விட்டு சிரத்தையுமில்லாமல் செய்வது தாமஸம். தேவ பிராமண குருவித்வான் ஆகியவர்களை அர்ச்சிப்பது சௌசம் ருஜவாயிருத்தல் பிரும்மசர்யம், அஹிம்ஸை, இவை *சாரீரகமான தவம். பிறர்க்கு துக்கம் விளைவிக்காததும் ஸத்யமாயும் பிரியமாயும் ஹிதமாயுமிருக்கிற சொல்லும் வேதமோதுதலும் வாசிகபஸ்,† மனச்சாந்தி தெளிந்திருந்தல் மௌனம் மனதை அடக்கல் களங்கமில்லாமை இவை மாணஸதபஸ்.‡ சிரத்தையுடன் பலனைக்கோராமல் செய்யப்படும் மூவ்வகையான தபசும் ஸாத்விகமாம். நற்பெயருக்காகவும் கௌரவத்திற்காகவும் பூஜிக்கப்படுவதற்காகவும் தம்பத்துடன் செய்யப்படும் தபஸ் ராஜஸமாம். அது ஒரு ஸமயம் பலனைத்தந்தாலும் தருமாதலால் சலமானது. த்ருவமில்லாதது. மூடத்தனத்தால் தன்னைக் கஷ்டப்படுத்திக்கொண்டு பிறரைக் கொல்வதற்காகச் செய்யப்படும் தபஸ் தாமஸமாகும்.

தானம் செய்யவேண்டுமென்று முழு மனதுடன் தனக்கு ப்ரத்யுபகாரம் செய்ய முடியாதவருக்கு நல்லதேசத்தில் நற்காலத்தில் நற்பாத்திரத்தில் கொடுப்பது ஸாத்விக தானம்.|| பதில் உபகாரத்தை எதிர்பார்த்தோ *பலனைக் கோரியோ வருத்தத்தோடு கொடுப்பதோ ராஜஸமாம். மிலேச்சாதிகள் நிறைந்த அசுத்தவிடத்தில் புண்யமில்லாத காலத்தில் மூடன் திருடன் முதலிய அபாத்ரத்தில் அளிப்பதும், ஸத்பாத்ரமாயினும் பூஜிக்காமல் அவமரியாதையாகக் கொடுப்பதும் தாமஸமாம்.

ஓம் தத்ஸத் என பிரும்மத்திற்கு மூன்று பெயர்கள் உண்டு. அதனால்தான் பிராமணர்வேதம் யக்ஞம் இவைகள்

---

* மார்க்கண்டேயர்.

† நாரதர் பரத்வாஜர்.

‡ மாண்டவ்யர்.

|| ஸத்துப்ரஸ்ததாநம்.

* தர்மர் ராஜசூயத்தில் சிறிது கர்வங்கொண்டார். தங்கமயிருள்ளகீரி, ஸத்து தாநத்தில் சிந்திய மாவால் என் பாதி உடல் ஸ்வர்ணமாயிற்று. உன் தாநத்தால் பாதி ஸ்வர்ணமாகவில்லை என்றது—பாரதம்.

முன்னம் படைக்கப்பட்டன. ஆதலால் எப்போதும் பிரும்மவாதிகள் வேதோக்தமான யக்ஞம் தானம் தபஸ் ஆகிய இவைகளை ஓம் என்று சொல்லி ஆரம்பிக்கின்றனர். மோக்ஷத்தை விரும்புபவர் தத் என்றுகூறி பலனைக்கோராமல் யக்ஞம் தபஸ் பல்வகையான தானம் இவைகளைச் செய்கின்றனர். பார்த்த! ஸத்தெனும் சப்தமானது, உண்டாக வேண்டும், நல்லது, உயர்ந்தகர்மா, என்ற பொருளிலும் கூறப்படுகிறது. யக்ஞம் தாநம் தபஸ் இவைகளின் ஸ்திதியிலும் பகவதர்ப்பணமாக செய்யும் இக்கர்மாக்களிலும் ஸத் என்ற சொல் கூறப்படுகிறது. ஆதலால் அச்ரத்தையுடன் செய்யப்படும் ஹோமம் தாநம் தபஸ் இவை அஸத் எனப்படும். அது இங்கும் இறந்த பின்பும் பயனைத்தரா.

**17.** ச்ரத்தாத்ரய விபாக யோகம் முற்றிற்று.

**18.** மறைபொருந்தாதவை வல்லசுரர்க்கு வகுத்தமையும்
மறைபொருந்தும் நிலையும் வன்குணப்படி மூவகையும்
மறைநிலை தன்னை வகுக்கும் குறிமூன்றின் மேன்மையையும்
மறையுமிழ்ந்தா னுரைத்தான் வாஸவன் தன் சிறுவனுக்கே.

(கருத்து)—வேத விரோதமானவை அசுரர்களுக்கு ஏற்பட்டன. வேதோக்த கர்மாக்கள் முக்குணங்களால் வேறுபடுகின்றன. வேதோக்தமானதை மூன்று அடையாளங்கள் மற்றதைவிட இது வேறெனக் காட்டுகின்றன. என்று வேதங்களைக்கூறிய பகவான் இந்திரன் புத்ரனுக்கு உபதேசித்தார்.

---

## 18-வது அத்யாயம்—பாத்ம கதை.

இந்த அத்யாயம் ஸமஸ்த சாஸ்த்ரங்களின் தத்வம். ஸநகர் முதலிய யோகிகளுக்கு இன்பந்தருவது. இதைப் படிக்க ஆரம்பித்தவுடன் யம கிங்கரர் பயந்தோடுவார். நூற்றெட்டு நோய்களை அகற்ற கைகண்ட அருமருந்து.

இதைத் தவிர வேறு ரஹஸ்யமானது கிடையாது. மஹா பாதகங்களை அகற்றவல்லது. அமிருதமிது. மலைகளில் கைலாஸம், தேவர்களில் இந்த்ரன், தீர்த்தங்களில் புஷ்கரம், புஷ்பங்களில் தாமரை, பதிவிருதைகளில் அருந்ததி, யாகத்தில் அச்வமேதம், தானத்தில் பூதானம் எப்படி சிறந்ததோ அப்படி எல்லா நூல்களிலும் கீதை சிறந்தது. கீதையிலும் பதினெட்டாமத்யாயம் மிகமிக உயர்ந்தது. மேரு மலைமீது அமராவதீ எனும் அழகிய பட்டணம் பரமசிவனது லீலையின்பொருட்டு விச்வகர்மாவால் படைக்கப்பட்டது. பின்னர் அது திருலோகாதிபதியான இந்திரனுக்களிக்கப்பட்டது. வேண்டிய வரத்தை அளிக்கும் சிந்தாமணிகளாலேயே அங்கு அரண்மனை கட்டப்பட்டிருக்கிறது. ஒரு ஸமயம் இந்திரன் இந்திராணியுடன் ஸிம்மாசனத்தில் வீற்றிருக்க தேவகணங்களனைவரும் அங்கு சூழ்ந்திருந்தனர். அச்சமயம் விஷ்ணு தூதர்களும் அங்குவர இந்திரன் அவர்களை அழைத்து அர்ச்சித்து ஆஸனத்தில் அமர்த்தினான். அவர்களுடன் சசீபதி யோகக்ஷேமம் விசாரித்துக்கொண்டே இருக்கும்போது ஆயிரங் கண்கொண்ட மற்றோர் இந்திரன் அங்கு வரக்கண்டான். அவனுடைய தேஜஸ் எல்லோரையும் பிரமிக்கச்செய்தது. அவனைக் கண்டவுடன் விஷ்ணு தூதர் எழுந்து வரவேற்று தேவ கணங்களுடன் இந்திரன் சிம்மாஸனத்தருகே அழைத்துச் சென்றனர். பழைய இந்திரன் திடீரென ஆஸனத்திலிருந்து பூமியில் விழ, அந்த ஆஸனத்திலே புதிய இந்திரனை உட்காரவைத்து பட்டாபிஷேகம செய்தனர். இந்திரனுக்குரிய ஸகல உபசாரங்களும் அவனுக்கே செய்யப்பட்டன. இந்திராணியும் அவர் மடிமீது அமர்ந்தாள்.

இதைக்கண்டு பழைய இந்திரன் சிந்தித்தான். இவன் யார்? இப்பதவிக்குரிய நூறு அச்வமேதங்களை இவன் செய்யவில்லை. தண்ணீர்பந்தல் தடாகம் சாலையில் மரம் வைத்தல் விந்த்ய மலைமீதுள்ள தேவனைத் தேவியுடன் தர்சித்தல் விரஜாநதி ஸ்நாநம் காசி யாத்ரை மாதா புரத்தில் வசிக்கும் ரேணுகாதேவி தர்சநம், காவேரிக் கரையிலுள்ள ரங்கநாத தர்சநம், துர்பிக்ஷ காலததில் அன்னதாநம், வெயில்

காலத்தில் தண்ணீர்பந்தல் தேவாலயங்கட்டல், சரணாகதர் களை ரக்ஷித்தல் முதலிய எந்த புண்யத்தையும் இவன்செய்ய வில்லை. எப்படி இவன் விஷ்ணு தூதர்களால் இந்திர பதவி யில் அமர்த்தப்பட்டான். என்று பகவானையே கேட்போம் என வைகுண்டஞ்சென்றான். அங்கு பகவானைப் பணிந்து போற்றி பகவன்! நூறு வேள்விகளைச்செய்து யான் இப் பதவி பெற்றேன். இப்போது புதிதாக வந்து எனது ஸ்தா நத்தில் அமர்ந்தவன் வேள்விகளைச் செய்யவில்லை. இதர புண்யங்களையும் செய்யவில்லை. அவன் எப்படி இந்திரன் ஆனான் என வேண்டினான்.

பகவான் புன்னகைபுரிந்து கூறினார். இந்திரா! அவன் செய்த புண்யத்தின் எதிரே யாகங்களோ மற்ற புண்யங் களோ என்னசெய்யும்? கீதையின் பதினெட்டாமதயாயத் தில் ஐந்து சுலோகங்களை ப்ரதி திநம் ச்ரத்தையுடன் பாரா யணஞ்செய்து அவன் என்னைப் பரவசப் படுத்திவிட்டான். அதற்காக இப்பதவி அளிக்கப்பட்டது. இதைக் கேட்டு கீதையின் மஹிமையை உணர்ந்த இந்த்ரன் பிராமண வேஷம் பூண்டு பூமியில் பதினெட்டாமத்யாய பாராயணம் செய்யும் ஸாதுவைத் தேடினான். கோதாவரீ தீரத்தில் காலிகா க்ராமத்தில் அத்தகைய ஓர் பிராமணோத்தமர் கிடைத்தார். அவரைப் பணிந்து உபதேசம்பெற்று ச்ரத் தையுடன் பூர்ணமாக பதினெட்டாமத்யாயத்தைப் பாராய ணம் செய்துவந்தான். அந்த புண்யத்தால் பிரும்ம பதவி வரை உள்ள எல்லாம் துச்சம், நச்வரம் என்று எண்ணி அவைகளைவிட்டு மஹா விஷ்ணுவின் ஸாயுஜ்ய பதவியைப் பெற்றார்.

18-வது அத்யாய கதை முற்றிற்று.

ஸ்ரீ பாத்ம புராணம் உத்தரகண்டம் கீதாமாஹாத்மயம் 188 அத்யாயம் முற்றிற்று.

# 18. மோக்ஷ ஸன்யாஸ யோகம் 78 சுலோகங்கள்.

[அர்ஜுனன் 2, பகவான் 71, ஸஞ்ஜயன் 5.]

அர்ஜுனன் :—மஹா பாஹோ! ஹ்ருஷீகேச! கேசியைக் கொன்றவனே! ஸந்யாஸம் தியாகம் இவைகளின் தத்துவத்தை அறிய ஆசைப்படுகிறேன்.

பகவான் :—காம்ய கர்மாக்களை விடுவது ஸந்யாசம் என்று கவிகளும் ஸர்வகர்மபலத்தையும் விடுவது தியாகமென்று பண்டிதர்களும் கூறுகிறார்கள். சிலர் பந்தகரமானதால் கர்மா செய்யத்தக்கதல்ல என்கிறார்கள். மற்றவர் யக்ஞம் தாநம் தபஸ் எனும் கர்மா அவச்யம் செய்யத்தக்கது, விடத்தக்கதல்ல என்கிறார்கள். பரத ச்ரேஷ்டனே! அந்த தியாக விஷயத்தில் நிச்சயத்தைச் சொல்கிறேன், கேள். புருஷ ச்ரேஷ்ட! தியாகம் மூவ்விதமாக கூறப்படுகிறது. புத்திசாலிகள் பாவநமான யக்ஞம் தாநம் தபஸ் என்ற மூன்றையும் செய்யவேண்டும், விடக்கூடாது. இவைகளைப் பற்றில்லாமலும் பயனைக் கோராமலும் செய்யவேண்டும் என்பது எனது நிச்சயமாயும் உத்தமமாயும் உள்ள கொள்கை.* நித்ய கர்மாவை விடக்கூடாது. மோஹத்தால் அதை விட்டால் அது தாமஸ த்யாகமாகும். உடல் கிலேசத்தை அடையுமோ என்ற பயத்தால் கர்மா துக்ககரமானதென்று அதைவிட்டால் அது ராஜஸ த்யாகமாகும். தியாக பலத்தை அளிக்காது. இது நம் கடமை என்று பற்றையும் பலனையும் விட்டு நித்ய கர்மாவைச் செய்தால் அது ஸாத்விக தியாகமாகும். அந்த தியாகி க்ஞானமுள்ளவனாகி ஸம்சயங்களைவிட்டு காம்யகர்மாவை வெறுக்கமாட்டான். நித்ய கர்மாவில் பற்றுக் கொள்ளமாட்டான். மனிதனால் எல்லா கர்மாவையும் விடமுடியாது. கர்ம பலனைவிட்டவனே தியாகி எனப்படுவான். நரகத்தையளிக்கும் அநிஷ்டகர்மா, தேவ சரீரமளிக்கும் இஷ்ட கர்மா, மநித சரீரமளிக்கும் மிச்ர கர்மா ஆகிய இம்மூன்றும் கர்மபலனை த்யாகம் செய்யாதவர் இறந்தவுடன் அவரைப் பிடித்துக்கொள்ளும். தியாகியினிடம் வராது.

---

*ஜநகர், ஜாநச்ருதி, ஜடபரதர் முறையே உதாஹரணம்.

மஹாபாஹோ! கர்மாவின் முடிவான வேதாந்தத்தில் ஸகலகார்ய ஸித்திக்கும், சரீரம், கர்த்தா, நானாவிதமான இந்திரியங்கள்! பலவகையான சேஷ்டைகள், ஐந்தாவதான தைவம். என ஐந்து காரணங்கள் கூறப்படுகின்றன. அவைகளைச்சொல்கிறேன். சரீரம் வாக்கு மனஸ் இவைகளால் மனிதன் எதைச்செய்கிறானோ அது நியாயமாயினும் சரி, அநியாயமாயினும்சரி, அதற்கு இவ்வைந்து காரணங்களுமுண்டு. அப்படியிருக்க ஆத்மாவைமாத்ரம் புத்தியில்லாமல் கர்த்தாவாக நினைப்பவன் துர்புத்தியுள்ளவன். அவன் கண்ணில்லாதவன். எவனுக்கு அஹங்காரமில்லையோ எவன் புத்தி பற்றில்லாதிருக்கிறதோ அவன் இவ்வுலகைக் கொன்றாலும் கொன்றதாகாது. அந்த கர்மா அவனைப்பாதிக்காது. கர்மாவைச் செய்யும்படி ஒருவனைத் தூண்டுவது, அறிவு அறியத்தக்கது, அறிபவன் என்ற மூன்றுமாம். கர்மாவும் காது முதலிய கரணம், கர்மா கர்த்தா என மூன்றால் ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கிறது. ஞானம் கர்மா கர்த்தா இவைகள் குணபேதத்தால் கபில சாஸ்த்திரத்தில் மூன்றாக வகுக்கப்பட்டிருக்கின்றன. அதையுங்கேள்! ஸர்வபூதங்களிடமும் அழிவற்ற ஆத்மா ஒன்றாகவே இருக்கிறான். தேஹபேதமிருந்தாலும் ஆத்மபேதமில்லை என்று எண்ணுவது ஸாத்விகஞானம். பல வகையான பிராணிகளிடம் வெவ்வேறாகவே ஆத்மா இருக்கிறான் என்று அறிவது ராஜஸமாம். ஓர் உடலில் ஆத்மா அந்த அளவில் பூர்ணமாக பற்றி இருக்கிறது. அதற்குக் காரணம் கிடையாது. என்று தத்துவத்தை அறியாத அல்ப அறிவு தாமஸமாகும். பற்றில்லாமலும் ராகத்வேஷமில்லாமலும் செய்யப்படும் கர்மா ஸாத்விகமாகும். பயனை விரும்பி அஹங்காரத்துடனும் செய்யப்படுவது ராஜஸமாம். பின்னால் வருவதை கவனியாமல் தன்சக்தி குறைவதையும் ஹிம்ஸையையும் தனது ஸாமர்த்யத்தையும் கவனியாமல் மோஹத்தினால் செய்யப்படும் கர்மா தாமஸமாகும். பற்றுதலைவிட்டு அஹங்காரமில்லாமல் தைர்யமும் உத்ஸாஹமும் உள்ளவனாய் ஸித்தித்தாலும் ஸித்திக்காவிடினும் மாறுதலில்லாத கர்த்தா ஸாத்விகன். ஆசையுடன் கர்மபலனை விரும்பி லோபியாய் ஹிம்ஸை

செய்பவனாகவும் அசுத்தனாகவும் ஸந்தோஷத்துடனும் சோகத்துடனும் கூடியவனான கர்த்தா ராஜஸன். ஏகாந்த சித்தமில்லாமல் புத்தி ஸம்ஸ்காரமில்லாமலும் வணங்காதவனாய் மாயாவியாய் பிறர் ஜீவனத்தைக் கெடுப்பவனாய் எப்போதும் துக்கமுள்ளவனாய் மந்தஸ்வபாவமுள்ளவனாயுமிருக்கும் கர்த்தா தாமஸன்.

தநஞ்ஜய! முக்குணங்களால் வேறுபடும் புத்தியையும் கூறுகிறேன் கேள். கர்மமார்க்கம் வேதாந்தம் செய்யத்தக்கது பயம் அபயம் பந்தம் மோக்ஷம் இவைகளை அறிவது ஸாத்விக புத்தியாம். தர்மம் அதர்மம் செய்யத்தக்கது, செய்யக்கூடாதது, இவைகளை உள்ளபடி அறியாதது ராஜஸ புத்தி. அதர்மத்தைத் தர்மம் என்றும் ஸர்வ கார்யங்களையும் விபரீதமாக எண்ணுவதும், தாமஸ புத்தியாம். மனஸ் பிராணன் இந்திரியங்கள் இவைகளைச் சாஸ்திரவிதியை மீறாமல் அடக்குவது ஸாத்விகதைர்யம். தர்மார்த்தகாமங்களைப் பயனைவிரும்பிச் செய்யவேண்டியவை என தரிப்பது ராஜஸ தைர்யம். தூக்கம் பயம் சோகம் துக்கம் மதம் இவைகளைவிடாமல் மனதில் கொள்வது தாமஸ தைர்யமாம். ஓ பரதர்ஷப! அப்யாசத்தால் இன்பமளிப்பதும் துக்கத்தின் முடிவாயுமிருக்கிற ஸுகத்தின் மூவகையைக் கூறுகிறேன் கேள்! ஆரம்பத்தில் விஷம்போன்றதும், முடிவில் அமிருதத்திற்கு சமமானதும் புத்திதெளிவினால்உண்டாவதுமானசுகம் சாத்விகம். விஷயங்களுடன் இந்திரியம் சேருவதாலுண்டாவதும் ஆரம்பத்தில் அமிருதம் போன்றதும் முடிவில் விஷம்போன்றதுமான சுகம் ராஜஸம். முதலிலும் முடிவிலும் மோஹகரமானதும் நித்ரை சோம்பல் தவறுதல் இவைகளால் உண்டாவதுமான சுகம் தாமஸம். பூமியிலோ ஸ்வர்க்கத்திலோ தேவரிடமோ பிரகிருதியினிடமிருந்துண்டான குணங்களில்லாதது ஒன்றுகூட கிடையாது. ஓ பரந்தப! பிராமண க்ஷத்ரிய வைச்யர்களுக்கு இயற்கையான குணங்களால் கர்மாக்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்திரியங்களை அடக்குதல் மனதை அடக்குதல் சௌசம் பொறுமை கபடமில்லாமை ஞானம் விக்ஞானம் ஆஸ்திக்யம் இவை பிராமண ஜாதியின் ஸ்வபாவகர்ம. சௌர்யம தேஜஸ்

தைர்யம், ஸாமர்த்யம், சண்டையில் ஓடாமை, தானம் க்ஷத்ரியகர்மா பசுவைக்காத்தல், வியாபாரம் வைச்யகர்மா. சூத்ரனுக்குப் பணிவிடைசெய்வது ஸ்பாவ கர்மாவாம்.

அவரவர் கர்மாவில் அன்புகொண்டு ஸ்வகர்ம நிரதனாகயிருப்பவன் எப்படி ஸித்தி அடைகிறான் கேள். எவனிடமிருந்து உலகம் உண்டாயிற்றோ எவனால் வியாபிக்கப் பட்டிருக்கிறதோ அவனை ஸ்வகர்மாவால் அர்ச்சித்து மனிதன் சித்தி அடைகிறான். *ஆதலால் நன்றாக பிறர்தர்மத்தை அனுஷ்டிப்பதை விட ஸ்வதர்மத்தைச் சிறிது குறைவாகச் செய்தாலும் ஸ்வதர்மமே சிறந்தது. ஸ்வபாவமாக உண்டான †ஸ்வதர்மத்தைச் செய்வதால் எந்தபாபமும் வராது. *கூடப் பிறந்த கர்ம தோஷமுள்ளதாயினும் விடத்தக்கதல்ல. புகை அக்னியைச் சூழ்ந்திருப்பதுபோல் எல்லா கார்யங்களுக்கும் ஏதேனும் ஓர் தோஷமிருக்கத்தானிருக்கும். பற்றைவிட்டு ஜிதேந்திரயனாய் ஆசையை அகற்றி சர்வகர்ம சன்யாசத்தால் ஞானசித்தியை அடைவான். ஞான நிஷ்டையை அடைந்தவன் எப்படி மோக்ஷமடைகிறான் என்பதையும் ஞான நிஷ்டையின் உயர்ந்த நிலையையும் தெரிந்துகொள். சுத்த புத்தியுடன் கூடியவனாய் தைர்யத்தினால் மனதையடக்கி சப்தம் முதலிய விஷயங்களையும் ராகத்வேஷத்தையும் விட்டு ஏகாந்தமான இடத்திலிருந்து கொஞ்சமாக ஆஹாரம் ஏற்று வாக்கு, உடல், மனஸ் இவைகளை அடக்கி வைராக்யத்தைக் கைகொண்டு தியானபரனாய் அஹங்காரம் பலம் கொழுப்பு காமக்ரோதம் மனைவி முதலியவைகளை விட்டு மமகாரத்தை அகற்றி சாந்தனாக உள்ளவன் மோக்ஷமடைவான்.

பிரும்மஸ்வரூபியானவன் தெளிந்த மனதுடையவனாய் துக்கப்படமாட்டான். ஒன்றையும் விரும்பமாட்டான். ஸர்வ

---

* அர்ஜுனன் துறவி தர்மத்தைக் கைகொள்ள ஆசைப்பட்டான். இவ்வுபதேசத்தால் க்ஷத்ரிய கிருஹஸ்த தர்மமான யுத்தத்தைச் செய்தான்.

† விஷத்தில் தோன்றிய புழுவை அவ்விஷம் கொல்வதில்லை—சங்கரானந்தர்.

* ஸ்வதர்மத்தை அநுஸரித்த தர்ம வியாதன் நற்கதி பெற்றான்—மஹாபாரதம்.

பிராணிகளிடமும் ஸமமாகயிருந்துகொண்டு, என்னிடம் உத்தமபக்தி செய்வர். பக்தியால் நான் எவ்வளவு இருக்கிறேன் யாராகயிருக்கிறேன் என்று நன்கு அறிகிறான். பிறகு எனது ஸ்வரூபத்தை நன்கு உணர்ந்து என்னிடத்தில் பிரவேசித்துவிடுகிறான். என்னை ஆச்ரயித்தவன் ஸகல கர்மாக்களைச் செய்தாலும் எனது அருளால் சாச்வதமான பதத்தை அடைகிறான். மனதினால் ஸகல கர்மாக்களையும் என்னிடம் அர்ப்பணம் செய்து என்னையே சிறந்தவனாகக் கருதி புத்தியோகத்தைக் கைக்கொண்டு எப்போதும் என் நினைவாகவே இரு. என்னையே எண்ணு. என் அருளால் சர்வ கஷ்டங்களையும் கடப்பாய். அஹங்காரத்தினால் இதைக் கேட்காவிடில் நாசமடைவாய். எந்த அஹங்காரத்தைக் கொண்டு யுத்தம் செய்யமாட்டேன் என்கிறாயோ அந்த முடிவு பொய்யானது. ஏன்? உனது ஸ்வபாவம் உன்னை யுத்தம் செய்யத்தூண்டப்போகிறது. மோஹத்தால் எதை நீ செய்யமாட்டேன் என்கிறாயோ அதைப் பரவசனாக ஸ்வபாவமான கர்மாவால் கட்டப்பட்டு செய்யப்போகிறாய். அர்ஜுந! ஸர்வ பிராணிகளுடைய ஹிருதயத்தில் ஈச்வரனிருந்துகொண்டு மரப்பொம்மைகளை மனிதர் ஆட்டுவதுபோல் மாயையால் ஆட்டிவைக்கிறார்! பாரத! ஸர்வ பாவத்துடனும் அவரையே சரணமடை! அவர் அருளால் உத்தம சாந்தியையும் சாச்வதமானபதவியையும் அடைவாய். இங்ஙனம் மிகமிக ரஹஸ்யமான ஞானத்தைச் சொன்னேன். நன்றாக யோசித்துப் பார்த்து உன் இஷ்டப்படி செய்.

மறுபடியும் எல்லாவற்றிலும் மிகவும் குஹ்யதமமான உத்தமமான, உனக்கு ஹிதமான வார்த்தையை, நீ உத்தமமான பிரியன் என்றுகூறுகிறேன். என்னையே மநதில் வை! என் நினைவாகவே இரு. எனக்காக யாகஞ்செய். என்னை நமஸ்காரஞ்செய். ஸத்யமாக ப்ரதிக்ஞை செய்கிறேன். என்னையே அடைவாய். நீ என் நண்பனல்லவா? *ஸர்வ தர்மங்களையும் என்னிடம் அர்ப்பணம்செய்து, என்னையே சரணமடை! நான் ஸர்வ பாபங்களிலிருந்து உன்னை விடு

---

* இது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் சரமச்லோகமெனப்படும்.

விக்கிறேன். கஷ்டப்படாதே! இதைத் தபஸ் இல்லாத வருக்கும் பக்தி இல்லாதவருக்கும் பணிவிடை செய்யா மல் கேட்க விருப்பமில்லாதவனுக்கும் என்னை வெறுப் பவனுக்கும் சொல்லக்கூடாது. பரம ரஹஸ்யமான இதை என்னிடம் பரம பக்திசெய்து பக்தர்களுக்குக் கூறுபவன் என்னை அடைவான். ஸந்தேஹமில்லை. அப்படி கூறுபவனை விட மனிதர்களில் எனக்கு மிக ப்ரியமானவன் கிடையாது. இனி உண்டாகப்போகிறதும் இல்லை. தர்மம் நிறைந்த நம் மிருவரது ஸம்வாதத்தை யார் படிக்கிறானோ அவன் க்ஞான யக்ஞத்தால் என்னை ஆராதித்ததாக எனக்கு எண்ணம். சிரத்தையுடன் அஸூயை இல்லாமல் யார் இதைக் கேட் கிறானோ அவன் பாபத்திலிருந்து விடுபட்டு புண்யவான் களுடைய லோகத்தை அடைவான். பார்த்த! ஏகாக்ர மனத்துடன் இதைக்கேட்டாயா? தநஞ்ஜய! அக்ஞானத்தால் வந்த மோஹம் அகன்றதா?

அர்ஜுநன் :—மோஹம் அழிந்தது. அச்யுத! உனது அருளால் ஞானமும் பெற்றேன். ஸந்தேஹமற்றவனாயிருக் கிறேன்.

ஸஞ்ஜயன் :—இங்ஙனம் மஹாத்மாவான வாஸுதேவ னுக்கும் பார்த்தனுக்கும் நடந்த மயிர்க்கூச்சலை உண்டுபண் ணத் தக்க அத்புதமான ஸம்வாதத்தைக்கேட்டேன். வியா ஸருடைய அருளால் யோகேச்வரனான ஸாக்ஷாத் க்ருஷ் ணன் தானே கூறும்போது இந்த யோகத்தைக் கேட்டேன். அரசே! கேசவார்ஜுநர்களுடைய இந்த அத்புதமாய் புண்ய மாயுமுள்ள ஸம்வாதத்தை நினைத்து அடிக்கடி ஸந்தோஷம் அடைகிறேன். அரசே! அந்த பகவானுடைய அத்யத்புத மான விச்வரூபத்தை நினைக்க பேராச்சர்யமுண்டாகிறது. பேரானந்தமடைகிறேன். எங்கே யோகேச்வரனான க்ருஷ்ண னிருக்கிறானோ, எங்கு வில்லாளியான பார்த்தனிருக்கிறானோ அங்கே! ஸ்ரீ: விஜயம் சாச்வதமான ஐச்வர்யம் நீதி இருக் கும் என்பது எனது எண்ணம்.

18. மோக்ஷ ஸன்யாஸ யோகம் முற்றிற்று.

மூன்றாம் ஷட்கமும் ஸ்ரீ பகவதகீதையும் முற்றிற்று.

19. ஸத்துவ வீடுடை நற்கருமந்தானுகந் தமையும்
ஸத்துவமுள்ளது தான் குறிக்கொள்வகை செய்தனவும்
ஸத்துவ நற்கிரிசைப் பயனுஞ் சரணாகதியும் [கே.
ஸத்துவமே தரு வானுரைத்தான் தனிப்பார்த்தனுக்

(கருத்து)—ஸாத்துவிக த்யாகத்துடன்செய்யும் சத் கர்மாவால் பகவான் சந்தோஷப்படுகிறார். ஸத்வ குணமுள்ளதையே செய்வதென தீர்மானித்து செய்யவேண்டும். ஸத்துவ குணத்தால் கர்மாவைப் பகவதாராதநமாக செய்து சரணாகதி அடையவேண்டும், என ஸத்துவத்தையே அளிக்கும் பகவான் பார்த்தனுக்கு உபதேசித்தார்.

பல ச்ருதி.

20. வன்பற்றறுக்குமருந்தென்று மாயவன் தானுரைத்த
இன்பக்கடலமுதாமென நின்றவிக் கீதைதன்னை
அன்பர்க்குரைப்பவர் கேட்பவரா தரித்தோதுமவர்
துன்பக்கடலில் துளங்குகை நீங்கித் துலங்குவரே.

(கருத்து)—விஷய வாஸனையை அகற்றும் மருந்துகீதை என பகவானே கூறினான். இன்பக்கடலான பாரதத்தில் கடைந்தெடுத்த அமிருதமிது. இதைப் பக்தருக்குரைப்பவர் அனைவரும் ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு சுகம்பெறுவர்.

21. தீதற்ற நற்குணப்பாற்கடல் தாமரைச்செம் மலர்மேல்
மாதுற்ற மாயன்மருவிக் கீதையின்வண் பொருளைத்
தோற்ற நான்மறை மௌலியின் ஆசிரியன்குறித்தான்
காதற்று ணிவிடையார் கற்கும்வண்ணம் கருத்துடனே.

(கருத்து) — திருப்பார்க் கடலில் செந்தாமரைமீது அமர்ந்த குற்றமில்லாது நற்குணமமைந்த பிராட்டியுடன் கூடிய மாதவன் சந்தோஷமடைய கீதையின் சிறந்த பொருளைக் குற்றமற்ற வேதாந்த தேசிகன் பக்தர்கள் ஊக்கமாகப் படிக்க சுருக்கமாக இயற்றினார்.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் இயற்றிய
கீதார்த்த ஸங்க்ரஹப்பாட்டு முற்றிற்று.

ஓம் தத் ஸத் பிரும்மார்ப்பணமஸ்து.

கௌண்டின்ய குலதிலகமான மஹா மஹோபன்யாஸி

வெங்கந்தூர் கணபதி சாஸ்திரிகள்

திருதீய ஔரஸனும்

ஸ்ரீவத்ஸ குலதிலக மஹாக்நி சித் அன்னையூர்

யாகதீக்ஷிதரின் ஸ்வீகிருத புத்ரனும்

பிரும்மஸ்ரீ அபிநவ வியாஸ சுவேதாரண்யம்

ஸ்ரீ நாராயணயஜ்வா அவர்களின் சிஷ்யனும்

முத்யால்பேட்டை உயர்தர கலாசாலை ஸம்ஸ்கிருத

மதபோதகாசிரியருமான

ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா இயற்றிய

ஸ்ரீ கீதாஸாரமும் பாத்ம புராண கதைகளும் என்ற

நூல் முற்றிற்று.

ஓம் தத் ஸத்.



# ஸ்ரீ கீதா மாஹாத்ம்யம்.

1. ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்ட விரும்பினால் கீதை எனும் கப்பலைக் கைக்கொள். கீதை கற்காதவன் நராதமன். ஏகாதசியில் கீதாபாராயணம் செய்தால் சத்ருக்கள் (காம க்ரோதாதிகள்) அழிவார்கள். கீதை விசாரம் நடக்குமிடத்தில் ஸ்ரீ ராதையுடன் க்ருஷ்ணன் ப்ரஸன்னமாயிருக்கிறான். கீதையை அலக்ஷ்யம் செய்பவன் பன்னியாகப் பிறப்பான்.—ஸ்ரீ வைஷ்ணவீய தந்த்ரஸாரம்.

2. பதினெண் புராணங்களையும் நான்கு வேதங்களையும் கடைந்தெடுத்து வேதவ்யாஸர் அதன் ஸாரமாக பாரதத்தை இயற்றினார். அதன் ஸாரத்தைப் பகவான் அர்ஜுனனுக்களித்தார். கண்ணன் எனும் மரத்தின் பழம் கீதை எனும் கடுக்காய். அதை அருந்தினால் ஸம்ஸாரமெனும் மலம் அகலும். கலியில் இதே கைகண்ட மருந்து.—ஸ்காந்த புராணம்.

3. கீதை நூல்உள்ள விடத்தில் ப்ரயாகை முதலிய புண்ய தீர்த்தங்களும் நான்கு வேதங்களும் ரிஷிகளும் யோகிகளும் கோபாலர்களும் கோபிகைகளும் நாரதர் உத்தவர் முதலியவர்களும் வஸிக்கின்றனர். கீதை என்று கூறிக் கொண்டே உயிரைவிட்டால் வைகுண்டமடைவர்.--வாராஹ புராணம்.

4. மஹா விஷ்ணுவிற்கு மிக்க பிரியமான கீதையில் ஒரு ச்லோகமாவது பாராயணம் செய்தால் அது யமலோக வழிக்குக் கட்டுச் சாதமாகும்.—ஆக்நேய புராணம்.

5. பத்மநாபனது முகாரவிந்தத்திலிருந்து தானே வெளிக்கிளம்பிய ஸர்வ சாஸ்த்ரமயமான கீதை ஒன்றை

னன்றாய்க் கற்றால்போதும். மற்றவை எதற்கு?—மஹா பாரதம்.

6. கீதை என்பது மஹாமந்த்ரம். இம்மாலா மந்திரத்தை ப்ரதி தினம் ஜபம்செய்தால் மோக்ஷம் சுலபம். ஒவ்வோர் தனி மந்திரத்தையும் அதற்குக் கூறப்பட்டுள்ள விதிப்படி ஜபம் ஹோமம் தர்ப்பணம் அன்னதானம் செய்தால் கோரியபலன் கைகூடும்.—மந்த்ரஸாரம்.*

7. உலகிற்கு அநுக்ரஹம் செய்யவேண்டும் என்ற எண்ணத்தால் பகவான் ப்ரவிருத்தி நிவிருத்தி என இரு வகையான தர்மத்தை சோகமோஹக் கடலில் மூழ்கிஉள்ள அர்ஜுனனுக்கு உபதேசித்தார். அதிக குணமுள்ளவர் ஒரு தர்மத்தை அனுஷ்டித்தால் அந்த தர்மம் பிரசுரமாகும். அந்த தர்மத்தைப் பகவான் உபதேசித்தபடி ஸர்வக்ஞரான ஸ்ரீ வேதவியாஸர் பகவத்கீதை என்ற எழுநூறு சுலோகங்களால் கிரந்தமாகச் செய்தார். அதில் சிறிது கற்றாலும் யமபயமில்லை.—ஸ்ரீ சங்கர பகவத்பாதாள்.

8. பாரதமெனும் பாரிஜாத புஷ்பத்தில் கீதை எனும் தேனிருக்கிறது.—மத்வர்.

9. ஸ்வதர்மம் க்ஞானம் வைராக்யம் பக்தி இவைகளால் அடையத்தக்க பரப்பிரும்மமான நாராயணனே கீதையில் கூறப்படுகிறான்.—யாமுனாசார்யர்.

10. பரபிரும்மமான பகவான் அங்கிலேயிலேயே இருந்தால் எல்லோருக்கும் தியானம்செய்ய முடியாதென கண்ணனாக உருவெடுத்தார். அவர் செய்த துஷ்டநிக்ரகசிஷ்டபாலநாதி தத்வங்களே கீதையில் வர்ணிக்கப்படுகின்றன. பகவத்விபூதியைக் கண்ணால் பாராதவர் கீதைமூலம் அனுபவிக்கலாம்.—ஸ்ரீ ராமாநுஜாசார்யர்.

---

* இங்ஙனம் 51 சுலோகம் விதியுடன் கோரக்பூர் கீதா பிரஸில் வெளியான கீதாங்கத்தில் காணப்படுகின்றன. இங்கு அதையும் பின்னால் காணலாம்.

11. கீதை, விஷயங்களில் நமக்கு உண்டாகும் ஸர்வ அனர்த்தங்களுக்கும் காரணமான பற்றெனும் நோயை அகற்ற உத்தமமருந்து. பக்தியுடன் கீதையைக் கைகொண்டு ஸம்ஸாரத்தைவிட்டு சுகம்பெறுக.—வேதாந்ததேசிகர்.

12. செய்யத்தகாதத்தைச் செய்தாலும் புஜிக்கத்தகாததைப் புஜித்தாலும் கீதையைப் பாராயணம் செய்பவன் நரகத்தைக் கண்ணால்கூட காணமாட்டான். வேதக்கடலைக் கடைந்து கண்ணனால் எடுக்கப்பட்ட கீதாமிருதரஸாயனத்தை ஸாதுக்கள் எப்போதும் அருந்துவார்கள்.-ஸ்ரீஹநுமான்.

13. பாரதத்தில் ஸகல வேதாந்தங்களும் இருக்கின்றன. பாரதத்தின் அர்த்தமெல்லாம் கீதையிலிருக்கிறது. ஆதலால் கீதை ஸர்வ சாஸ்த்ரமயமானது.—ஸ்ரீ நீலகண்டர்.

14. சோகமெனும் சேற்றில் சிக்கியபக்த அர்ஜுனனை ஸாங்யயோக உபதேசத்தால் கரையேற்றிய கண்ணன் எனக்கு சரணம்.—ஸ்ரீ தரஸ்வாமி.

15. தனது முகாரவிந்தத்திலிருந்து கிளம்பிய கீதையால் ஸகல உலகும் நன்மைபெறவேண்டுமென்று இது ஸாத்யம் இது ஸாதனம் என்றுகாட்டிய வாசுதேவனை நமஸ்கரிக்கிறேன்.—ஆனந்தகிரி.

16. மூலகாரணமான அக்ஞானத்துடன் ஸம்ஸார துன்பத்தை அறவே அகற்றி பேரானந்தத்தை அளிப்பதே மூன்று காண்ட வடிவமான கீதையின் பிரயோஜனம்.—மதுஸூதனஸரஸ்வதி.

17. வேதவேதாந்த வேத்யனான பரமாத்மா தானே தனது ஸ்வரூபம் இன்னதென்று எல்லோருக்கும் எளிதில் புரியும்படி கூறிய நூல் பகவத்கீதை. பாக்யவானே அதைப் படிப்பான்.—கேசவபட்டாசார்ய.

18. பரமபுருஷார்த்தத்தை அளிப்பதும் ஸகல சாஸ்த்திரங்களையும் பிழிந்தெடுத்த ஸாரமும் வேததத்துவமுமான ஸ்ரீ கிருஷ்ணனால் கூறப்பட்ட கீதையைப் பாராயணம்

செய்தாலும் அதன் பொருளைத்தியானம் செய்தாலும் அதை அறிந்தாலும் கேட்டாலும் நல்லபுத்தி உள்ளவர்களுக்கு மோக்ஷத்தை அளிக்கும்.—ஸதானந்தர்.

19. கிருஷ்ணபக்தி எனும் தோணியைக்கொண்டு கீதை எனும் கடலில்சென்று மூழ்கினால் ஆங்குள்ள அதிவிசித்ரமான உபதேசமெனும் ரத்னங்களை அடையலாம். ஆனால் அதிலிருந்து எழுந்து வெளியில்வர இயலாது.—ஸ்ரீ பலதேவ வித்யாபூஷண.

20. கிருஷ்ணமலையிலிருந்து பார்த்தனது பிரார்த்தனைக்கிணங்கி ஆத்மாநந்தமெனும் ஜலப்ரவாஹத்தால் கீதை எனும் கங்கை உலகெனும் மரத்தை அடிவேரோடு பிடுங்கி அதில் முழுகுவோரது மலத்தை அகற்றுகிறது.—தைவக்ஞ பண்டிதர்.

21. கீதை விவேகமரத்தின பூங்கொத்து. தத்வரத்னம் நிறைந்த பொக்கிஷம். நவரசம் நிறைந்த அமிருதகடல். ஸகல வித்யைகளுக்கும் பிறப்பிடம். ஸர்வ தர்மங்களுக்கும் தாய் வீடு. விவேக பாற்கடலில் தோன்றிய மகாலக்ஷ்மி.—விக்ஞாநேச்வரர்.

22. கீதை உலகிற்கே ஒளியையளிக்கும் முதல்நூல். ஈசனை அடைவதற்கு வழிகாட்டும் நூல். ஸனாதந தர்மத்தின் ஸாரமே கீதை. இணையில்லாத அமிருதம். மனிதனது லக்ஷ்யத்தைக் குறிக்கும் நூல்.—ஸ்ரீ பாரதி கிருஷ்ணதீர்த்த.

23. நமது வைதிக தர்மங்களை வெளியிடும் நூல்களில் அண்டம் பிண்டம் இரண்டிலுமுள்ள தத்துவங்களை ஸ்பஷ்டமாக எடுத்துக்காட்டும் நிர்மலமான விலையில்லா முத்து கீதை.—லோகமான்யதிலகர்.

24. பகவானது பாதத்திலிருந்து தோன்றிய கங்கை தன்னிடம் வந்து முழுகியவர்களைக் கரையேற்றுகிறது. முகத்திலிருந்து கிளம்பிய கீதையோ எல்லோரையும் கரை ஏற்றுகிறது. கங்கை ஜல ரூபமானது. கீதை ஆனந்த

அமிருத மயமானது. இதன் மஹிமை வாக்கிலடங்காதது.—ஸ்ரீ வேங்கடநாதர்.

25. கீதையில் வேதங்களின் ஸாரம் மாத்ரமல்ல, யோகம் நியாயம், ஸாங்க்யம், வேதாந்தம், வைசேஷிகம், வியாகரணம் மந்த்ரசாஸ்திரம், ஸாஹித்யம் முதலியவைகளும் இருக்கின்றன —ஸ்வாமி பாகவதானந்தர்.

26 வர்ணாச்ரம தர்மம், மானஸிகவாசிக சாரீர தர்மம், அவனுடையவன் நான், என்னுடையவன் அவன், அவனே நான் எனும் அதிகாரிகளுக்கேற்றபடி மூவகை சரணாகதியும் கூறப்பட்டிருக்கிறது.—ஸ்வாமி மஹேச்வரானந்தர்.

27. சித்தசுத்தி உண்டாகி ஞானம் பிறந்து மோக்ஷம் அடையும்வரையில் தன் தன் கர்மாவை விடக்கூடாது. அவச்யம் செய்யவேண்டும். கர்மா, பக்தி, ஞானம் என முக்தி ஸோபானத்தைக் காட்டும் கீதை யாருக்குதான் வேண்டாத நூல்,—வைஷ்ணவாசார்ய, ரஸிகமோஹனர்.

28. கர்மண்யேவாதிகாரஸ்தே. கர்மாவில் தான் உனக்கு அதிகாரம். 2. மாபலேஷூகதாசந. பலத்தில் எப்போதும் உனக்கு அதிகாரமில்லை. 3. மாகர்ம பலஹேதுர்பூ:-- கர்மபலத்திற்குக் காரணமாயிராதே. 4. மாதே ஸங்கோஸ்த்வகர்மணி—அகர்மாவில் உனக்கு பற்றுவேண்டாம். இவை கீதாசதுஸ்ஸூத்ரீ. இதில் எல்லாம் அடங்கியிருக்கிறது.—ஸ்ரீ ஸூதர்சநாசார்யர்.

29. கீதா, கங்கா, காயத்ரீ, ஸீதா, ஸத்யா, ஸரஸ்வதீ, பிரும்மவித்யா, பிரும்மவல்லீ, திரிஸந்த்யா, முக்திகேஹிநீ, அர்த்தமாத்ரா, சிதாநந்தா, பவக்நீ, பயநாசிநீ, வேதத்ரயீ பரா, அனந்தா தத்வார்த்தா ஞானமஞ்ஜரீ. என கீதையின் பதினெட்டு நாமாக்களை ஜபித்தால் மோக்ஷமுண்டாகும்.

30. ஸ்ரீ சங்கரர் கீதைக்கு அத்வைதமே தாத்பர்யம் என்றார். ஸ்ரீ ராமாநுஜர் விசிஷ்டாத்வைதம், ஸ்ரீ மத்வர் த்வைதம். ஸ்ரீ நிம்பகர் த்வைதாத்வைதம். ஸ்ரீ வல்லபர் சுத்தாத்வைதம். ஸ்ரீ சைதன்யர் அசிந்த்யபேதா பேதம் என்கின்றனர்.

௨

# ஸ்ரீ கீதாநுஷ்டாநம்.

கீழ்கண்டபடி நியமத்துடன் ஜபித்தால் குறிப்பிட்ட பலன்களை அடையலாம்.

| | கணக்கு அ. சு. | சுலோகம் | ஜப சங்க்யை | ஆ. கணக்கு | லௌகிக பலன் | அத்யாத்ம பலன் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1—1 | தர்ம க்ஷேத்ரே | 25000 | 21 | ஸர்வகார்யஸித்தி | மநசுத்தி |
| 2 | 2—2 | குதஸ்த்வா | 25000 | 11 | ரோகநாசம் | மந:தாபநாசம் |
| 3 | 2—7 | கார்ப்பண்ய | 51000 | 22 | ஸ்வப்னசித்தி | சரணுகதியோக்யதா |
| 4 | 3—2 | வ்யாமிச்ரேணேவ | 11000 | 11 | ஸ்வப்நாதேச | மநச்சுத்தி |
| 5 | 3—3 | லோகேஸ்மிந் | 125000 | 41 | ஆபத்நாசம் | மநஸ்சஞ்சலநாசம் |
| 6 | 3—43 | ஏவம்புத்தே: | 41000 | 21 | காமஜயம் | காமாதிஜயம் |
| 7 | 4—4 | அபரம்பவத: | 500000 | 150 | பூர்வஜந்மஞாநம் | ஸ்திரவிச்வாஸ |
| 8 | 4—5 | பகூநிமே | 600000 | 51 | அந்யஜந்மஞாநம் | த்ருடபக்தி |
| 9 | 5—5 | யத்ஸாங்க்யை: | 40000 | 31 | எதிர்பாராமல் தநவரவு | ஸாங்க்யநிஷ்ட யோக்யதா |
| 10 | 5—29 | போக்தாரம் | 43000 | 21 | ஸர்வஆபத்நாசம் | ஸாதநவிக்நநாசம் |
| 11 | 6—6 | பந்துராத்மா | 21000 | 21 | சத்ருஜயம் | த்வேஷநாசம் |
| 12 | 6—25 | சனைச்சனைருப } | 23000 | 26 | சத்ருஜயம் | மநோஜயம் |
| 13 | 6—26 | யதோயதோ } | | | | தியாநயோக்யதா |
| 14 | 6—30 | யோமாம்பச்யதி | 510000 | 150 | ஸர்வப்ரிய | பக்திபரிபாக |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15 | 6—31 | ஸர்வபூதஸ்திதம் | 510000 | 157 | கடனகலும் | ஞானபரிபாக [யதா |
| 16 | 7—7 | மத்த:பிரியதரம் | 125000 | 75 | அஸாத்ய ரோகநாச | பகவத்தர்சநயோக் |
| 17 | 8—8 | அப்யாஸயோக | 150000 | 50 | சத்ருபயமின்மை | காமாதிநாசம் |
| 18 | 9—9 | நசமாந்தாநி | 190090 | 210 | ஸந்தானம் | கர்மயோகபரிபாகம் |
| 19 | 9—22 | அநந்யாச்சிந்தய | 125000 | 74 | யோகக்ஷேம | யோகக்ஷேமம் [யதா |
| 20 | 9—26 | பத்ரம்புஷ்பம் | 150000 | 50 | சுகம் | பகவத்தர்சநயோக் |
| 21 | 9—27 | யத்கரோஷி | 150000 | 50 | ஸத்கார்யஸித்தி | பகவத்கிருபா |
| 22 | 9—32 | மாம்ஹிபார்த்த | 15000 | 50 | பயநாச | சரணாகதியோக்யதா |
| 23 | 9—34 | மந்மநா பவ | 210000 | 75 | ஸித்தி | சரணாகதியோக்யதா |
| 24 | 10—3 | யோமாமஜமநாதிம் | 150000 | 50 | துக்கநாச | பாபநாச [தா |
| 25 | 10—10 | தேஷாம்ஸதத | 36000 | 31 | விபத்நாச | யோகயுக்தயோக்ய |
| 26 | 10—16 | வக்துமர்ஹஸி | 36000 | 31 | லக்ஷ்மி | பகவத்கிருபா |
| 27 | 11—11 | திவ்யமால்ய | 13000 | 15 | விக்நநாச | விக்நநாசம் |
| 28 | 11—16 | அநேகபாஹூதர | 13000 | 15 | தநம் | விவேகம் |
| 29 | 11—38 | த்வமாதிதேவ | 15000 | 15 | ப்ரேம | ப்ரேமவிருத்தி |
| 30 | 11—39 | வாயுர்யம: | 15000 | 15 | பிரேதபாதைநாசம் | மநஅடக்கம் |
| 31 | 11—40 | நம:புரஸ்தாத் | 150000 | 50 | தரித்ரநாசம் | மோஹநாசம் |
| 32 | 11—42 | யச்சாவாஹாஸ | 150000 | 50 | லக்ஷ்மி | விவேகம் |
| 33 | 11—43 | பிதாஸிலோக | 15000 | 15 | ப்ரஸன்னதா | பகவத்ப்ரஸன்னதா |
| 34 | 11—44 | தஸ்மாத்ப்ர | 150000 | 50 | அபராதக்ஷமை | பகவதபராதக்ஷமா |
| 35 | 11—45 | அத்ருஷ்ட | 150000 | 50 | ஐச்வர்ய | பகவத்தர்சநம் [யதா |
| 36 | 12—7 | தேஷாமஹம் | 150000 | 50 | கடன்நிவிருத்தி | பகவத்பிராப்தியோக் |

| | கணக்கு அ. சு. | சுலோகம் | ஜப சங்க்யை | ஹோம கணக்கு | லௌகிக பலன் | அத்யாத்ம பலன் |
|---|---|---|---|---|---|---|
| 37 | 12—12 | ச்ரேயோஹி | 15000 | 21 | துக்கமின்மை | தோஷநாசநம் |
| 38 | 13—12 | ஞேயம்யத்தத் | 500000 | 250 | ஸர்வகார்யஸித்தி | பகவத்பக்தி |
| 39 | 13—13 | ஸர்வத:பாணி | 25000 | 25 | கார்யஸித்தி | மநச்சுத்தி |
| 40 | 14—14 | யதாஸத்வே | 100000 | 51 | மரணகால அறிவு | மரணகாலத்தில்பகவ |
| 41 | 15—14 | அஹம்வைச் | 150000 | 15 | உதரரோகநாசம் | விவேக [த்ஸ்மரணம் |
| 42 | 15—15 | ஸர்வஸ்யசாஹ | 110000 | 110 | சத்ருஹாநி | குரோதசமநம் |
| 43 | 15—19 | யோமாமேவம் | 150000 | 50 | வைபவப்ராப்தி | பக்தி |
| 44 | 16—16 | அநேகசித்த | 10000 | 11 | சத்ரு அலைச்சல் | தோஷநாசம் [ஜய |
| 45 | 16—21 | திருவிதம் | 150000 | 150 | சத்ருஜயம் | காமக்ரோதலோப |
| 46 | 17—17 | ச்ரத்தயாபரயா | 75000 | 15 | சத்ருபயநாசம் | காமாதி ஆறுசத்ரு ஜ |
| 47 | 18—18 | க்ஞாநம்ஞேயம் | 150000 | 21 | ப்ரேமவிருத்தி | பிரேமவிருத்தி [யம் |
| 48 | 18—48 | மச்சித்த:ஸர்வ | 150000 | 50 | விக்நநாசம் | விக்நநாசம் |
| 49 | 18—65 | மந்மநாபவ | 150000 | 50 | ஸித்திபிராப்தி | சரணகதியோக்யதா |
| 50 | 18—66 | ஸர்வதர்மான் | 500000 | 150 | ஸர்வகார்யஸித்தி | பகவத்ப்ராப்தி விசேஷயோக்யதா |
| 51 | 18—78 | யத்ரயோகேச்வ | 150000 | 50 | ஐச்வர்யம் | பகவத்கிருபா |

ஒவ்வோர் சுலோகத்தையும் எழுநூறு ஆவர்த்தி செய்தால் கீதையே ஸித்தியாகும்.

# ஸ்ரீ கீதோபதேச ரத்ந மாலை.

1. மனதினால் பல எண்ணலாம், வாக்கினால் பல பேசலாம். கார்யத்தைச் செய்யும்போது கலக்கமில்லாமல் செய்யவேண்டும். அர்ஜுனன் போருக்கு ஸந்நாஹம் செய்தான். போர்முனையில் வந்தபோது மனங்கலங்கிற்று.

2. தர்மம் ஸாமான்யம் விசேஷம் என இருவகை. பந்துக்களைக் கொல்லக்கூடாதென்ற தயை ஸாமான்ய தர்மம். க்ஷத்ரியனுக்கு யுத்தம் விசேஷதர்மம். விசேஷ தர்மத்தை அநுஷ்டிக்கும்போது ஸாமான்யதர்மம் மறைந்து விடும். தென்னல் வீசும்போது விசிறி எதற்கு?

3. தீயகுணங்கள் சிலஸமயம் நற்குணவேஷத்தை எடுத்துக்கொண்டு ஏமாற்றும். அர்ஜுனனது சோகமோஹம் எனும் புலி கருணை எனும் பசுந்தோலை போற்றுக் கொண்டது.

4. தான் மாத்ரம் வாழ்வது நீசகுணம். நமது செல்வத்தைப் பந்துக்களுக்கும் பங்கிடவேண்டும். பந்துக்களைக் கொன்று எனக்கு எதற்கு ராஜ்யம் என்றான் அர்ஜுனன். உடல் நோயின்றி பெருத்தால் அதை வரவேற்போம். வீக்கத்தினால் பெருத்தால் இளைக்கவே மருந்துண்ணவேண்டுமென்றார் பகவான்.

5. தன்னைக் கொல்லவந்தவனையும் கொல்லாமை உத்தம குணம். ஆனால் தர்மநெறி தவறியவனை எவராயினும் என்னைச்சார்ந்தவனென்ற அஹங்காரம் மமகாரங்களைவிட்டுக் கொல்லத்தான் வேண்டும். உடலில்தோன்றிய கட்டியைக் கத்தியால் அறுத்தால்தான் நலம்.

6. பாபிகளான துர்யோதனாதிகளைக் கொல்லலாம்! பூஜ்யரான பீஷ்மதுரோணாதிகளை எப்படிக் கொல்வது?

பாபியின் அன்னத்தால் சிறிதுகாலம் வளர்ந்த உடலை அவர்களை விட்டுவிடக் கருதினார்கள். விரல் நுணியில் அரவந் தீண்டிவிட்டால் விரலையே வெட்டிவிடவேண்டும்.

7. சண்டையில் அனேக ராஜகுலம் மடியும். குல தர்மம் அழியும். குலஸ்த்ரீகள் கெடுவார்கள். வர்ண ஸாங்கர்யம் தோன்றும். அதனால் நரகம் உண்டாகும். இது உண்மைதான். எந்த ஓர் பெருந்தர்மத்தைச் செய்தாலும் அதில் சில அசௌகர்யங்கள் ஏற்படும். அது ஏற்படாமல் கூடியவரை முயற்சிக்கவேண்டுமே தவிர அதற்காக இப் பெரிய கார்யத்தை விடக்கூடாது. அன்னதானம் செய்பவர் கரிகாய்களில் உள்ள ஜீவனை வதைப்பதைப்பற்றி வருந்தலாமா? அதற்கு பஞ்ச மஹாயக்ஞம் செய்யவேண்டும்.

8. மனம் தர்மபலத்தைக் கைபிடித்தபோது அதனிடம் துர்க்குணம் வாரா. சரீரம் இளைத்தால் எல்லா நோயும் கிளம்பும்.

9. நாம் ஒரு கார்யத்தைச் செய்யும்போது நமக்கு அது தர்மமென்று தோன்றுகிறது. அதைப் பிறர் நமது கொள்கைக்கு மாறாக அதர்மமெனக் கூறுகிறார். அச்சமயம் இவ்விவாத விஷயத்தில் ஆசார்யனைப் பணிந்து அவன் சொற்படியே நடக்கவேண்டும்.

10. இறந்தவனைப் பற்றியும் இருப்பவனைப் பற்றியும் பண்டிதர் கவலையடையமாட்டார். சிலர் இருந்தால் நலம். சிலர் இறந்தால் நலம். வியாசர் பிராமணனைச் சீக்ரம் இறக்கும்படியும் க்ஷத்ரியனை நீண்டநாள் இருக்கும்படியும் மற்றவனை இருந்தால் இரு இறந்தால் இற என்றும் ஆசீர்வதித்தார். ஏன்? பிராமணருக்கு நித்ய நைமித்திக கர்மாவால் இங்கு கஷ்டம். ஸ்வர்க்கத்தில் சுகம். க்ஷத்ரியன் இங்குதான் சுகமனுபவிக்கலாம். இறந்தபின் கஷ்டமே. மற்றவன் இருந்தாலும், இறந்தாலும் கஷ்டமே.

**11.** உயிரும் உடலும் சேர்ந்தே நாம். என்றைக்கு இருந்தாலும் உடல் ஒருநாள் அழியும். என்றைக்கும் அழியாதது உயிர். நாம் கிழிந்ததுணியை எரிந்து புதிய வஸ்திரத்தை உடுத்துவதுபோல், பழைய உடலைவிட்டு புது உடலை உயிர் எற்கும். இளமைபோய் யௌவனம் வந்தால் எவரேனும் அழுவரா? பல்பு உடைந்தாலும் வித்யுத் சக்தி அழியாது.

**12.** ஸ்வதர்மத்தை விட்டால் பாபம் அபகீர்த்தி முதலியன தோன்றும். உலகமதிப்பு வாய்ந்தவருக்கு கீர்த்தியே பிராணனைவிட ரக்ஷிக்கத்தக்கது. அபகீர்த்திக்கஞ்சியேராகவன் உயிரிலும் உயர்ந்த உத்தம ஜாநகியைவிட்டார்.

**13.** வேதத்தில் கூறிய ஸ்வர்க்காதி சுகத்தோடு ஏமாறுபவர், மணமும் குணமுமில்லாத வெறும் புஷ்ப சுமையைச் சுமந்தவராவர். வேதக்கடலின் காற்று சுகத்துடன் திரும்பாமல் உள்ளே புகுந்து வேதாந்த ரத்நங்களைத் தேடிப் பிடிப்பவரே உத்தமர்.

**14.** உபநிஷத் என்ற உருவிற் சிறிய கிணற்றில் ஜீவனெனும் பானை எவ்வளவு ஜலத்தைப் பெறமுடியுமோ அவ்வளவு தான் வேதக் கடலில் அமிழ்ந்தாலும் அடையப் போகிறது. ஆதலின் அது பெரிதோ? அங்கு அதிகம் கிட்டுமோ என்று ஓடாதே!!

**15.** எப்போதும் உனது கடமையைத் தவறாமல் செய். பலனைக் கருதாதே! அதை அளிப்பவனுக்கு எப்போது எதைக்கொடுப்பதென்று நன்கு தெரியும். ஒரு பலனைக் கோரி ஒருவனிடஞ்சென்றால் நம்மை அவர் மதிப்பதில்லை, ஸமயமில்லை, அப்புரம் வரச்சொல் என்பார். நமக்கு எதைக் கேட்கவேண்டுமென்றும் தெரிவதில்லை. காலையில் எவர் முகத்தில் விழிக்கிறேனோ அவன் கேட்டதைத் தருகிறேன் என்றார் ஓர் அரசன். உஞ்ச விருத்திக்

காரனை ஒரு நாள் பார்த்துவிட்டார். உமக்கென்ன வேண்டுமென்று கேட்டபோது சொம்பு நிறைய அரிசி கேட்டார்!!

16. மநதில் தோன்றும் ஆசைகளை எல்லாம்விட்டு வெளிப் பொருளில்லாமல், ஆத்ம ஸ்வரூபத்தையே கண்டு ஆநந்திப்பவனே ஞானி. துக்கத்தில் கலங்காதவனும் சுகத்தில் ஆசையில்லாதவனும் ஆசை பயம் கோபம் இவைகளை விட்டவனே முநி.

17. பாட்டைக் கேட்டவுடன் காதும் மநமும் ஓடும். அதை இழுத்து ஆத்மாவிடம் அடக்கவேண்டும். பிறரைக் கண்டவுடன் ஆமை தன் முகம் கை கால்களை உள்ளே இழுத்துக்கொள்கிறது. அதற்கு சத்ரு பயம் இல்லை. முதுகு ஓட்டை எவ்வளவு அடித்தாலும் உடையாது. ஆமையைத் திருப்பிப்போட்டு விரலால் தட்டினாலும் இறக்கும். விஷயத்துடன் கலந்த இந்திரியங்களை அவை சுலபமாக ஜயிக்கும். பகவத்யாநம் ஆமை ஓடு.

18. கண் காது நாக்கு மூக்கு த்வக் எனும் இந்திரியங்கள் பலமுள்ளவை. இதில் ஒவ்வொன்றுமே மநதைச் சந்தியில் இழுத்துவிடும். கலி பிறந்தவுடன் வியாஸர் பக்தியால் விரைவில் முக்திபெறலாமென ஸந்தோஷித்தார். கலி நாக்தையும் ஆண்குறியையும் பிடித்துக்கொண்டு இதை ஜயிக்க முடியுமா என கூத்தாடினான். உயர்ந்த பக்ஷணத்தைக் கண்டவுடன் நாக்கில் தண்ணி ஊறுகிறது.

19. ருச்யச்ருங்கர் விஷய ஸம்மந்தமில்லாவலே வளர்க்கப்பட்டவர். தாஸிகளது காநம் அவர் காதையும் ரூபம் கண்ணையும் வாஸனை மூக்கையும் பக்ஷயங்கள் நாக்கையும் ஸ்பர்சம் த்வக்கையும் இழுத்தது. இவைகளைவிட உயர்ந்த அழிவற்ற துக்க கலப்பில்லாத சுகம் பகவானிடமிருக்கிறதென்று மநதை அங்குவை.

20. விஷயத்தை நினைத்தால் போதும் பிடித்துக்கொள்ளும். அதனால் ஆசை கோபம் மோஹம் நல்ல நினைவு

மறைதல் புத்திஅழிதல் நாசம் முதலியன ஒன்றன்பின் ஒன்றாகவரும். அரண்மனையில் சாதுர் மாஸ்யம் செய்யவந்தனர் நாரதரும் பர்வதரும். ராஜகுமாரி அழகு என எண்ணினார் நாரதர். பற்றும் காமமும் உண்டாயிற்று. பர்வதர் அவரைச் சபித்தார். கோபமும் ஸ்மிருதி நாசமும் புத்தி நாசமும் வந்து குறங்காக ஆனார்கள்.

**21.** இந்திரியங்கள் எனும் பசுக்கள் நமக்குப் பாலைத் தருமல் உதைத்துப் பிறர் பயிர்களை மேய்ந்து பெருந் துன்பத்தை விளைவிக்கின்றன. அவைகளை அடக்கினாலல்லது இன்பமில்லை. அவை அடங்கினால் பாலைப்பருகலாம்.

**22.** உலகிலுள்ள பிராணிகளுக்கு ஆத்ம ஸூர்யன் கண்ணில் படுவதில்லை. அங்கு நன்கு உறங்குவர். பகலில் கோட்டான் பதுங்கி இருக்கும். ஞானிக்கோ அது பகல். அதில் நன்கு ஸஞ்சாரம் செய்வான். உலகத்திற்கு பகல் போன்றது நச்வரமான விஷயங்கள். அவை இருள் சூழ்ந்தவை ஞானிக்கு. இருட்டில் தான் கோட்டானுக்கு வெகு ஸந்தோஷம்.

**23.** ஸமுத்ரத்தில் எவ்வளவு நதிகள் வந்து விழுந்தாலும் அவை தன் ஸ்வரூபத்தை இழந்துமடிகின்றன. கடல் அதற்கு வசமாவதில்லை. காமங்கள் பற்பல தோன்றி ஞானியின் மநக்கடலிலே மடியும். அவன் அசைவற்றிருப்பான். இந்நிலை ப்ரஹ்ம நிலை எனப்படும்.

**24.** உன் குரு சொல்வது ஸரியல்ல என்று உனக்குத் தோன்றினால், விநயமாக அது என்புத்தியில் சரியில்லை போல் தோற்றுகிறதே! இன்னொரு முறை நன்றாகக் கூறுங்கள் என்று கேள். குருவை நீ என்றாலும் விவாதத்தினால் ஜயித்தாலும் ஸ்மசாநத்தில் காக்கையுங் கழுகும் வஸிக்கும் மரமாவாய் என மநுகூறுகிறார்.

**25.** ஒருவன் ஒரு கர்மாவையும் செய்யாமலிப்பது

என்பது முடியாதகார்யம். வாக்கு கை கால் முதலியதை அடக்கி மனம் வேலைசெய்யும்படி விட்டால் அவன் உலகை ஏமாற்றுபவன். திருப்பதி ஆலயம் காளஹஸ்தி மன்னனிடம் இருந்தது. அவர் கோவில் புல்லை முள்ளை எடுக்கும் பரதேசி களுக்கு ஓர் பட்டைசாதம் அளிப்பார். ஓர் துறவி சும்மா யிருப்பது கஷ்டம், எனக்கு இரண்டு பட்டைகொடு என மணியாரிடம் கேட்டார். அவரும் கொடுத்தார். அரசன் இதைத் தடுத்தபோது துறவி தன்னுடன் அரசனைச் சும்மா யிருக்க அழைத்தார். இது கஷ்டமா? என அரசன் கை கால்களை அடக்கினன். மனம் வெளியிற் சென்றது. துறவி அவரை ஏன் சும்மாவில்லை என்று கேட்க கோயிலை வைராகி யிடமே விட்டான். அது முதல் அதுமஹந்துவிடமிருக்கிறது.

26. மனதை அடக்கிப் பற்றில்லாமல் ஒருவன் கர்மா வைச் செய்தால் அவனுக்குக் கர்மா துக்கத்தைத் தராது. யக்ஞம் முதலியஸத்கர்மாவைத் தவிர மற்றவை பந்தத்தை அளிக்கும். அதையும் மனம் மொழி, மெய் என மூன்றும் ஒருமித்து செய்தல் வேண்டும். மனம் எதையாவது எண்ண உடல் பூஜைசெய்தால் பயனில்லை. ஓர் குடும்பத்தில் அண் ணன் மனதையடக்காமல் பூஜை செய்பவன். தம்பி மனதை அடக்கி குடும்ப கார்யத்தைச் செய்பவன். தம்பியைப் பார்த்து ஒருவர் அண்ணு என்னசெய்கிறார் என்றார். அவர் மதனிகாலுக்கு செருப்புதைக்கிறார் என்றார். நிவேதனம் எடுத்துவரும் மனைவி கால் சுடுகிறதே என தமயன் நினைத் தார்.

27. எல்லோருக்கும் பொதுவான பிரும்மா, தேவர்க்கு மாத்ரம் காமதேனு கல்பவிருக்ஷத்தை அளித்ததேன்? அவர் மனிதரைநோக்கி உங்களுக்கு யக்ஞமெனும் தேனுவைக் கொடுத்திருக்கிறேன் என்றார். தசரதர் வேள்வியால் புத்ரனைப்பெற்றார். ஜநகன் மோக்ஷமடைந்தான். பாஞ்சாலன் துரோணரைக்கொல்ல ஓர் புத்ரனைப் பெற்றார்.

28. கடவுள் மிக்க தந்த்ரசாலி. யக்ஞம் செய்தால் தான் தேவர்களுக்கு ஆஹாரம். மனிதருக்கு யக்ஞத்தால் சந்தோஷமடைந்த தேவர் மழையளித்தால்தான் ஜீவநம் என இருவரையும் பிணைத்துவிட்டிருக்கிறார். பூமியில் யக்ஞம் இல்லையேல் தேவலோகத்தில் துர்பிக்ஷம். தேவர் மழையளிக்காவிடில் பூமியில் துர்பிக்ஷம். பரஸ்பரம் க்ஷேமம் அடையலாம்.

29. தேவர்கள் மழை மூலம் நமக்குத்தந்த அன்னத்தை அவர்கட்கு அறிவிக்காமல் சாப்பிட்டால் நாம் திருடனுவோம். அவர்கட்கு நிவேதநம் செய்த மிகுதியைப் புசித்தால் பாபம் அகலும். பாபத்தால் வரும் பிணியும் அகலும்! ஆதலால் அன்றன்று புஜிக்குமுன் இஷ்டமான தேவதையைப் பூஜித்துப்புசி!

30. ஆத்மாவினிடமே மநதைச்செலுத்தி அதிலேயே ஸந்தோஷமடைந்தவனுக்கு கர்ம வேண்டாம். கரையை அடைந்தவனுக்குத் தோணியால் யாது பயன்?

31. கர்மாவை அலக்ஷ்யஞ்செய்யாதே! ஜநகர் கர்மாவினுலேயே ஸித்தி அடைந்தார். கர்மாவே சிறந்த மார்க்கமென்று நம்புவோர் நம்பிக்கையைக் கெடுக்கலாகாது. அதனுல் அடையவேண்டியதை அடைந்தவர்கூட உலக நன்மையை நாடி கர்மாவைச் செய்யவேண்டும்.

32. ஓர் தலைவன் எதைச்செய்கிருனே அதைப் பிறர் பின்பற்றுவது ஸஹஜம். ஆதலால் தலைவன் தன் கடமையிலிருந்து சிறிதுகூட வழுவக்கூடாது. அவன் தவறுசெய்தால் பிறர் தவறுசெய்ய வழிகாட்டிய பாபத்தை அடைவான். ரோகியின் எதிரில் பக்ஷ்யங்களைத் தின்றுல் அவனும் உண்பான். பகவான் ராமகிருஷ்ணுதி அவதாரங்களில் நித்ய கர்மா பூஜைசெய்தார். அதனுல் அவர்கட்கு ஆவதென்ன?

33. ஒருவன் ஒரு கார்யத்தைச் செய்யும்போது

தத்துவமறியாத அஹங்காரி நான் செய்கிறேன், என்கிறான். ஆத்மா செயலற்றது. மாயையின் குணங்களே செயலுக்குக் காரணமாம். அரசன் எதையும் செய்வதில்லை. வேலைக்காரனே செய்பவன். ஆத்மா அரசன்.

34. எவ்வளவு தோஷமுள்ளதாயிருந்தாலும் ஒவ்வொருவனுக்கும் அவனவன் சொந்த தர்மமே மேலானது. பிறர் தர்மம் துன்பத்தையே தரும். கௌசிகன் பெற்றோரை பரிபாலிக்கும் ஸ்வதர்மத்தை விட்டு தவம்செய்தான். தன் தலைமீது எச்சமிட்ட கொக்கை எரிக்கும் பலனை கிட்டிற்று. ஸ்வதர்மத்தைச் செய்யும் பதிவிருதையிடம் அவன் தவம் செல்லவில்லை. ஸ்வதர்மத்தை விடாத காசிதர்மவியாதனிடமே அறிவு பெற்றான்.

35. நாம் விரும்பாவிடினும் நம்மைப் பாபத்தைச் செய்யும்படி தூண்டுவது காமக்ரோதம். காமமெனும் பெருவயிறான பாபிசத்ருவை அடியோடு கொன்றால்தான் நலம். அவனுக்கு பரிதானம்கொடுத்து முடியாது. காமம், மாப்பிள்ளை வயிற், மனைவி ஸமுத்ரம், அக்நி இவைகளுக்கு எவ்வளவு கொடுத்தாலும் திருப்தியிராது.

36. பிறப்பு இறப்பு பகவானுக்கில்லை. ஆயினும் சாதுக்களைத் துஷ்டர்களிடமிருந்து காப்பதற்காக ஒவ்வோர் ஸமயத்திலும் உசிதமான உடலை எடுக்கிறார். தர்மத்தை நிலைநாட்டுகிறார். அதர்மம் அழிகிறது. சமுத்ரஜலம் பகவான். மழைஜலம் அவதாரம்.

37. நான்கு வர்ணமென்பது மண்ணுலகில் அதிசீக்ரமாக சித்திபெறுவதற்கு பகவானால் அளிக்கப்பட்ட ஓர் சிறந்த ஸோபானம். (படிக்கட்டு) ஆதலின் நமது முன்னோர் நீண்டநாளாக அனுஷ்டித்துவரும் தர்மத்தைக் கைவிடாதே! படியில் ஏறமுடியாத சிசு அது ஆபத்தானது அதை இடி, வேண்டாமென்று அழும். சக்தியும் புத்தியும் வந்தபின் அதில் ஏறும்.

38. ஒருவன் தான் நற்கதிபெற மதநூல் எதைச் செய்யச்சொல்லுகிறது? எதை வேண்டாமென தடுக்கிறது? எப்போது ஸகல கர்மங்களையும் விடச்சொல்கிறதென நன்கு அறியவேண்டும். யக்ஞத்தில் அஜம் முதலியவைகளை ஹிம்ஸிப்பது பாபம் என நினைப்போர் நரகமடைவர். பொய்யே சொல்லக்கூடாதென்று ஒரு மிருகம் பதுங்கிய இடத்தை வேடனுக்குக்கூறின ஸத்யவாதி நரகமடைந்தான். கர்மா கஹனமானது.

39. யக்ஞம் பலவகை, அதைவிட ஞானமே சிறந்தது. ஏன்? எல்லா கர்மாவும் ஞானத்திலே அடங்கிவிடுகிறது. அந்த ஞானம் குருவை அடுத்துப் பணிந்துப் பணிவிடைசெய்தே அடையத்தக்கது. அத்தகைய ஞானமே கர்மாக்களைஎரிக்கும்.

40. அறியாமை நம்பிக்கை இல்லாமை ஸந்தேஹம் இதில் ஒவ்வொன்றுமே மநிதனை அழிக்கவல்லது. மூன்றும் சேர்ந்தால் வேறு வினைவேண்டாம். ஏற்கனவே மநம் குரங்கு. அதற்கு கள்ளும்வார்த்து பேயும் பிடித்து தேளும் கொட்டினுல்?

41. ஸன்யாஸம் காமனையற்ற கர்மயோகம் இரண்டும் முக்தியையே அளிக்கும். ஸன்யாஸம் தந்தை. கர்மயோகம் தாய். தாயின்றி தந்தையை அடையமுடியாது.

42. கண்பார்த்தாலும் காது கேட்டாலும் எது எந்த வேலைசெய்தாலும் யோகியின் மநது கடவுளிடமே இருக்க வேண்டும். இடைச்சி தலைமீது பால் தயிர் மோர் பானைகளை அடுக்கிவைத்துப் போகும்போது கால் நடந்தாலும் வாய் பேசினுலும் கண் பார்த்தாலும் மநதைப் பானைமீதே வைப்பாள்.

43. ஞானிக்கு எல்லோரும் ஸமம். எங்கும் ஆத்மாவைக் காண்பான். ஆனால் உலக வியவஹாரத்தில் தாய், மனைவி, பெண், பரதாரம் இவர்களிடத்தில் பேதபுத்தியே வைப்பான்.

**44.** ஒன்றின் சேர்க்கையால் வரும் சுகமெல்லாம் ஒரு சமயம் அழியும். துக்கத்தையும் கொடுக்கும். அதில் ஞானி ஆசைவைக்கமாட்டான். நித்ய நிரதிசய ஆனந்தத்திலே அவன் மனம் ஓடும். ஜில்லாகலெக்டர்வேலை கிடைப்பதாயின் பில்கலெக்டர் வேலையை யார் விரும்புவர்?

**45.** நமக்கு நாம்தான் பந்து. நாம்தான் சத்ரு. இந்திரியங்களை ஜயித்து முக்திமார்க்கத்தில் மனம்சென்றால் அப்போது பந்து. இந்திரியங்களைப் போனவழியில்விட்டு உலகில் மனம் ஈடுபட்டால் அது சத்ருவாகும்.

**46.** சீதம் உஷ்ணம் மானம் அவமானம் ஸ்வர்ணம் ஓடு நண்பன் சத்ரு ஸாது பாபி இவைகளிடம் மனம் யாருக்கு சமமாக இருக்கிறதோ அவனே சிறந்தயோகி. ஜனகன் ஓர் காலைத் தீயினருகேவைத்து மற்றொன்றைச் சந்தனம்பூசி ஸமநிலையைக் கற்றார். ராமகிருஷ்ணர் சவரனையும் ஓட்டையும் ஒன்றாக கங்கையில் போட்டார்.

**47.** மிதமாக புஜி! மிதமாக உறங்கு! மனதைச் சுத்தமாக வைத்துக்கொள்! ஏகாந்தமான இடத்தில் நல்ல ஆஸனத்தில் அமர்! மனதையும் உடலையும் அசையாமல் ஒருமைப்படுத்து! கண்ணை அடியோடு மூடாதே! கொஞ்சம் திற! ஹிருதயகமலத்தில் கண்ணனைத்யானம் செய்!

**48.** எதிலும் ஆசைவைக்காதே! மனத்தை அசைவற்ற தீப சிகைபோல் செய்! சிலகாலம் சென்றபின் அந்த மனமே பகவானிடம் லயமாகிவிடும். அதே ஸமாதி. அந்த ஆனந்தத்திற்கு மேலான ஆனந்தம் கிடையாது.

**49.** மனம் அப்படி நிற்பது கஷ்டம். கொஞ்சம் கொஞ்சமாக வெளியில் போகும்போது அதை இழுத்து அப்யாஸம் செய்யவேண்டும். அப்படி ஆரம்பம்செய்து இப்பிறவியில் முடியவில்லையாயின் அடுத்தபிறப்பில்விட்ட குறை பூர்த்தியாகும். யோகிக்கு ஒருநாளும் அழிவில்லை. தரித்ரனை யோகிகுலத்திலோ சுத்தமான சக்ரவர்த்தி குலத்

திலோ பிறப்பான். பரதர் யோகிகுலத்தில் ஜடபரதனாக பிறந்தார்.

50. பகவானிடத்தில் ஸகல பூதங்களும் நூலில் மணிகள் போல் கோர்க்கப்பட்டிருக்கின்றன! ஆனால் பாம்பும் கொலைக்காரனும் பகவானிடம் இருக்கிறார்களா? அவர்களைச் சிக்ஷிப்பது பாபமல்லவா? ஸ்வாமி சைதன்யமாத்ரமாகத் தானிருக்கிறார். தீயனசெய்வது அவனவன் கர்மவாஸனையே! மழை நல்பயிர்களுக்கும் விஷப்பூண்டுக்கும் ஸமமாகவே பெய்கிறது.

51. மாயைக்கு இருக்கும்சக்தி அபாரமானது. அதை வெல்ல எவராலும் முடியாது. மாயையை அடக்கிவைத்துள்ள மாதவனைச் சரணமடைந்தால்தான் அது அகலும். நாரதர் பெண்ணாகி பல புத்திரர்களைப்பெற்று, பறிகொடுத்துக் கதற, பகவான் ஒரு கையை உயரேதூக்கி ஜலத்தில் முழுகச்சொன்னார். நாரதர் தன் ஸ்வரூபத்தையடைந்து பெண்கைபோன்ற ஒரு கையைப்பார்த்து மாயையின் ஸ்வரூபத்தை உணர்ந்தார்.

52. துன்பம் வந்தபோது கடவுளை வேண்டுபவர், அறிய ஆவலுள்ளவர், செல்வத்தை விரும்புபவர், ஞானி என நான்குவகை பக்தர்களுண்டு. திரௌபதி, உத்தவர், த்ருவன், பிரஹ்லாதன் என்பவர் முறையே உதாஹரணமாவர். பஞ்சம பக்தன் ஒருவனுண்டு, ஸ்வாமி! நானிழந்த பொருளைத் தந்தால் உனக்கு ஒரு தேங்காய் உடைக்கிறேனென்பவன். அவன் அதமனில் அதமன். அவரையே நினையாதவன் யார்?

53. யார் எந்த தெய்வத்தைப் பூஜித்தாலும் கடவுள் ஏற்று அந்த சிரத்தையையும் பலனையும் அளிக்கிறார். எங்கு மழைபெய்தாலும் அது ஸமுத்திரத்திலேயே போய்ச் சேருகிறது. என் ஊர் நதி தான் சிறந்தது! ஏரிதான்! பெரிது! அலைதான் பெரிது! சுழல்தான் சிறந்தது! என்பவர்

உண்மை அறியாதவர். இந்த பாந்த உபதேசம் வேறெந்த மதத்திலுண்டு?

54. எதை நினைத்து பிராணனை விடுகிறோமோ அதையே அடைவோம். ஆதலால் எப்போதும் பகவானை நினை. ஆனால் ஆதியில் இல்லாமல் அந்த்யத்தில் வருமா? அப்போதைக்கிப்போதே சொன்னேன் என்றார் ஒரு பக்தர். பாபிகள் பகவானை அப்போது நினைக்கமுடியாது. ராமன் என்ற பிள்ளையைக்கூப்பிடு என்றார் இறப்பவனை நண்பர். அந்த யமனையா என்றே அவர் உயிரைவிட்டார். புண்யமில்லாதவர் ராஜாவாக பிறக்க எண்ணி இறந்தால் நாடகத்தில் ராஜ வேஷந்தான் தரிப்பர்.

55. உத்தம அதிகாரி அந்த்ய காலத்தில் இருபுருவங்களுக்கிடையே பிராணனை நிறுத்தி ஸர்வ த்வாரங்களையும் அடைத்து ஓம் என்று சொல்லிக்கொண்டே உடலைவிடுவார். அவருக்கு மறுபிறப்பில்லை. துரோணர் சுகர் ஆகியவர் இங்ஙனம் உடலைவிட்டனர்.

56. பிரும்மலோகம் வரையிலுள்ள எல்லாம் ஒரு ஸமயம் அழியும். அழியாதது ஆத்ம ஸ்வரூபம். அதை இடைவிடாத பக்தியாலும் ஸ்மரணத்தாலும் தான் ஸுலபமாக அடையலாம். அர்ச்சிராதி மார்க்கமாக சிலர் பிரும்ம லோகம் செல்வர். தூமாதி மார்க்கமாக சிலர் ஸ்வர்க்கம் செல்வர். முன்னவர் திரும்புவதில்லை. பின்னவர் திரும்புவர். சத்து சத்துப் பிறப்பவர் பலர்.

57. பகவானை அடைய மிக ஸுலபமான வழி பக்தியே! பக்தி ஒன்பதுவகை! பரீக்ஷித் பகவத் கதை கேட்டும் சுகர் கூறியும் பிரஹ்லாதன் ஸ்மரித்தும் லக்ஷ்மி பாதங்களை ஸேவித்தும் ப்ருது பூஜித்தும் அக்ரூர் நமஸ்கரித்தும் ஹநுமான் தொண்டுசெய்தும் அர்ஜுநன் நட்பினாலும் பலிஸர்வஸ்வ தானத்தாலும் முக்தி அடைந்தனர். கலியில் பக்தியே சிறந்தது!!

58. வேறொன்றையும் நினைக்காமல் பகவானையே நினைப்பவரது யோகக்ஷேமத்தைப் பகவானே நடத்துகிறார். அப்படி நம்பிய பாண்டவர்களுக்குப் போரில் பகவான் பல வகையில் உதவினார். அதைப் பரீக்ஷிக்கக்கூடாது. ஐந்து பிள்ளைகளுடன் ஒரு தம்பதி இதைப் பரீக்ஷிக்கப் பிடிவாதமாக பட்டிணி இருக்க உயிர்போகாத அளவிற்கு ஆகாயத்திலிருந்து அன்னம்வரும். அதிகம் விரும்பி இருவரை வேறிடமனுப்ப அங்கு இரண்டு சாப்பாடும் மிகுதி இங்கும் வந்ததாம்.

59. பகவானைப் பக்தியால்தான் ஸ்வாதீநப் படுத்தலாம். வசப்படின் வேண்டியதை எதேஷ்டமாகவாரி அளிப்பர். ஆனால் அன்புடன் ஏதேனும் கொடுத்துவைத்தால் தான் கொடுப்பர். திரௌபதி தூர்வாஸாதுவஸ்த்ரம் ஜலத்திலடித்துக் கொண்டுபோக தன் பட்டு வஸ்த்ரத்தைக் கிழித்து ஜலத்தில்விட்டாள். துயிலுரிந்தபோது பகவான் யதேஷ்டமாக வஸ்த்ரமளித்தார். ஓர் கீரைத் துணுக்கைப் பெற்று தூர்வாஸ கணத்திற்கன்னமளித்தார். தாமரை தந்த பின்பே கஜேந்த்ரத்தைக் காத்தார். பழமளித்த சபரியையும் ஜலமளித்த ரந்திதேவரையும் காத்தார்.

60. பஞ்சமா பாபியானாலும் பகவானைச் சரண்புகுந்தால் அன்புடன் அவனை ஏற்றுச் சுத்தமாக்குகிறார். சாக்கடை ஜலம்வந்தாலும் கங்கை அதைப் பரிசுத்தமாக்கின்றது. அத்தகைய கருணாமூர்த்திக்கு நீ பூஜைசெய்யாவிடினும் நீ செய்யும் கார்யத்தையாவது பகவதர்ப்பணம் செய்!!

61. பகவதார்ப்பணம் செய்த கர்மா கர்த்தாவைப் பிடிக்காது. பசுவைக்கொன்று ஓர் பிராமணன் கிருஷ்ணார்ப்பணம், பாபமெனக்கில்லை என்றார். அவன் அன்னதானம் செய்யும்போது பகவான் குஷ்டரோகியாகசென்று இலையில் அமர்ந்தார். எழுந்திரும் என்று அவர்கூற நீ யார் என்றார். நான் தான் அன்ன தாதா என்றார். ஆனால் நீ கோஹத்தி

யும் செய்தவன் என மறைந்தார்.

62. பகவானைச் சரணமடைந்த ஸ்திரீகள் கோபிகளும் யக்ஞ பத்நிகளும், ஸமாதி எனும் வைச்யனும் சூத்ரரான ஸஞ்ஜயரும் விதுரரும் பாப ஜன்மாவான குஹன் ஸுக்ரீவன் ஜடாயு முதலியவர்களும் நற்கதி அடைந்தனர். பக்திக்கு ஜாதி பேதமில்லை.

63. பகவானைப்பாடி பணிசெய்து அவன் பெருமையைக்கூறி கேட்டு பல பக்தர்கள் பேரானந்தமடைகின்றனர். பகவான் அவர்களுக்கு ஒப்பற்ற ஸாயுஜ்யத்தை அளிக்கிறார். ஆனால் அவர்கள் நாங்கள் கற்கண்டாகமாட்டோம். அதைப் புஜிப்பவனாகவே இருப்போமென்கின்றனர். நாரதர் உத்தவர் உதாஹரணம்.

64. பகவானை எங்கெங்கு தியாநம் செய்வதென அர்ஜுநன் கேட்டான். மரத்தில் அரசு மாதத்தில் மார்கழி என சிலது கூறினார். உடனே தன் நண்பன் குசேலன் நினைவு வந்துவிட்டது. ஸாந்தீபினி, ஸ்வாமிஇல்லாத கல்லில் உடைத்துவா என தேங்காயைக்கொடுத்தார். அவர் தேங்காயை உடைக்காமல் வந்தார். பகவான், எங்குதான் நான் இல்லைஎன கூறிக்கிமுடித்தார்.

65. எல்லாமாயுள்ள பகவானைப் பார்க்க பார்த்தன் விரும்பினான். முன்னே திவ்யக் கண்ணைத் தந்து ருத்ர ரூபமான விச்வரூபத்தைக் காண்பித்தார். உதங்கர் எனும் உத்தம மாணவருக்கு வைஷ்ணவ விச்வரூபத்தைக் காண்பித்தார். பிரும்மாவுக்குக் காட்டியது பிராம்ம வைஷ்ணவக் கலப்பு, துர்யோதநனுக்கு வைஷ்ணவ ருத்ரக் கலப்பு.

66. கண்ணால் கண்ணன் உருவைக் கண்டபின் அர்ஜுநனுக்குத் தான் சத்த பிணத்தையே அடிக்கப்போவதாகவும் அவனின்றி அணுவும் அசையா என்றும், ஆட்டிவைத்தால் ஆடாதார் உண்டோ என்றும் பல எண்ணமுண்டாயிற்று. பகவானது அருளாலேயே தானுழைக்காமல்

கிடைத்த பாக்யத்தை வெகு நேரம் அனுபவிக்கமுடிய வில்லை. பழைய ரூபத்தையே வேண்டினன்.

67. முக்திபெற இருவழிகள். ஒன்று சமதமாதி களைக் கைகொண்டு உபநிஷத் விசாரமூலமாக அகண்டமான ஆத்ம ஸ்வரூபத்தை உபாஸிப்பது. மற்றொன்று பகவதாக் ஞாரூபமான கர்மாக்களைச் செய்து அவனிடமே அர்ப்பணம் செய்து பக்திசெய்வதாம். ஒன்று பாலைக் கறந்து காச்சி தோய்த்துக்கடைந்து வெண்ணை உருக்குவது. மற்றொன்று நேராக நெய்யையே வாங்குவது. வேதக்காட்டில் அலையாதே! உபநிஷதர்த்தம் இடைச்சி உரலில் கட்டப்பட்டிருக்கிறதென்றார் லீலாசுகர்.

68. பகவானிடமே மநதை வை! தியாநம் செய்ய முடியாவிடில் திநந்தோறும் கொஞ்சநேரம் அப்யாஸம் செய்! அதுவும்முடியாவிடில் பாஹ்யமான பூஜைசெய்! அதுவும் முடியாவிடில் பூஜைசெய்வோருக்காவது பணிவிடை செய்! அதுவும் முடியாவிடில் மிருகஜன்ம மடைவாய்.

69. பக்தனுக்கு எவரிடமும் த்வேஷமிருக்காது. எங்கும் அன்பே நிறைந்திருக்கும். அஹங்கார மமகாரம் அறவே இரா. நான் அழகுள்ளவள் என்று எண்ணிய கோபிகளைக் கண்ணன் கைவிட்டார். ராதையுடன் சென்றார். அவளுக்கும் அஹங்காரம் உண்டாயிற்று. நடக்க முடியாது என்னைத் தூக்கிச்செல் என்றாள். மரக்கிளையில் உள்ள புஷ்பத்தைக் கண்ணன்மீதேறி பறிக்க ஆசைப் பிடித்தாள். அங்கேயே அவளைத் தொங்கவிட்டு பகவான் மறைந்தார்.

70. உன்னைக்கண்டு பிறர் நடுங்கும்படி செய்யாதே! நீயும் நடுங்காதே! போற்றினாலும் தூற்றினாலும் காது கொடுக்காதே! தூர்வாஸரைப் போலிராதே! நாரதரைப் போலிரு! ஸதாசிவப்பிரும்மேந்த்ரர் கையைத் தலை அணையாகவைத்துப் படுத்திருந்தார். குளத்திற்குபோகும் பெண்களில் ஒருத்தி ஞாநிக்கோ தலையணை என்றாள். உடனே

கையை எடுத்துவிட்டார். ஐயோ! அபசாரம் அன்றோ? என்றாள் ஒருத்தி. ஞானியானால் நிந்தையும் ஸ்துதியும் ஒன்றே என்றாள் மற்றொருத்தி.

71. கர்வம் டம்பம் ஹிம்ஸை இல்லாமை பொறுமை கபடமின்மை குருபூஜை சௌசம் மநதை அடக்கல் வைராக்யம் அஹங்காரமின்மை, புத்ரமித்ராதிகளிடம் பற்றின்மை எப்போதும் பக்தி இவைகளுள்ளவனே ஞானி. மற்றவர் விக்ஞானி, அக்ஞானி.

72. உள்ளும் புறமும் உள்ள தெய்வம் ஏன் எல்லோர் கண்ணிலும் படவில்லை? அது ஸூக்ஷ்மமானது. ஓர் ஔஷதி அவச்யமானபோது அதன் பெயர் அடையாளங்களைக்கேட்டுத் தேடி வருபவனுக்கு தன் வழியிலேயே கிடைக்கிறது. அவ்வழியே நித்யம் சென்றாலும் அக்கரைக் கண்ணில்லாததால் தெரியவில்லை.

73. ஞானி உடலில் பரமாத்வைக் காண்கிறான். சிலர் ஜீவனாகவும் சிலர் கர்த்தாவென்றும் சிலர் போக்தாவென்றும் சிலர் பார்ப்பான் கேட்பான் என்றும் கூறுகின்றனர். ஒருவர் பிள்ளைக்கு அப்பா. அவரே அவர் தந்தைக்கு பிள்ளை. மனைவிக்கு கணவன். அண்ணனுக்குத் தம்பி. ஆபீஸுக்கு உத்யோகஸ்தன். ரயிலுக்கு பிரயாணி.. கூத்துக்கொட்டகையில் ஸப்யர்.

74. உடலிலுள்ள ஆத்மா எப்படி அந்தந்த வேலைகளிலும் ஸம்பந்தப்படாமலிருக்கும்? வீட்டிலும் பாத்ரங்களிலும் நம்முடலிலும் எங்கும் ஆகாசமிருக்கிறது. அது எதோடு ஸம்பந்தப்படுகிறது? ஈசஸிருஷ்டியான அதற்கே அவ்வளவு ஸாமர்த்யமிருந்தால் ஈசனைப்பற்றி கூறவேண்டுமா?

75. மாயை க்ஷேத்ரம் தாய். பகவான் விதை தந்தை. உலகே பயிர், ஸந்ததி. மாயைக்கு ஸத்வம் ரஜஸ் தமஸ் என மூன்று குணங்களுண்டு. ஸத்வம் மேலிட்டால் பயிர் அறிவெனும் ப்ரகாசத்துடனிருக்கும். ரஜஸ் மேலிட்டால் லோப

மெனும் பழுப்புமே தோன்றும். தமஸ் மேலிட்டால் அக்ஞானத்தால் கருகிவிடும். ஸத்வத்தை விருத்திசெய்.

76. ஸம்ஸாரமென்பது ஓர் விசித்ர மரம். அதன்வேர் மேலே இருக்கும். அதன் பழம் சுகதுக்கம். பற்றில்லாமை எனும் கத்தியால் அதை வெட்டினால் பிறகே முக்திமார்க்கத்தைத் தேடலாம். மநம் ஐம்புலன்களது துணையைக் கொண்டு ஜீவனை உண்பது உறங்குவது நடப்பதுபோன்ற வேலைகளில் ஈடுபடுத்துகிறது. மநதை ஜயித்தவர் ஆத்மஸ்வரூபத்தை அதிலிருந்து கண்டுபிடிப்பர்.

77. மனித உடலில் தெய்வப்பிறவி, ராக்ஷஸப் பிறவி, மனிதப் பிறவி, மிருகப் பிறவிகளுண்டு. தாநம் அடக்கம் வேதம் அன்பு முதலியன தைவகுணம். கர்வம் கோபம் ஹிம்ஸை காடின்யம் முதலியன ராக்ஷஸ குணம். பேராசை லோபம் மநிதகுணம். பிறரைக்கண்டவுடன் கோபம், தனக்கும் பிறர்க்கும் பயன்படாத செயல் இவை விலங்கு குணம், மனிததேவர் தர்மர், மனித ராக்ஷஸர் துர்யோதநன். மனித ராக்ஷஸருக்கும் விலங்கிற்கும் நற்கதி துர்லபம்.

78. நரகத்திற்கு காமம் கோபம் லோபம்என மூன்று வாயற்படிகள். காமத்தால் ராவணனும் கோபத்தால் சிசுபாலனும் லோபத்தால் துர்யோதனனும் நரகத்தின் உள்ளே நுழைந்தனர்.

79. மதவிஷயத்தில் எதைச்செய்வது எதைவிடுவது என்பதை உனது அற்ப புத்தியைக்கொண்டு மாத்ரம் நிச்சயித்துவிடாதே! பண்டைய சாஸ்திரத்தை ப்ரமாணமாகக் கொள்! நீ அல்லது உனது கோஷ்டி காலத்திற்கேற்றதென ஒரு தர்மத்தைத் திருத்தினால் உனக்குப் பின்வருபவர் உன்னை முட்டாளென அதைத் திருத்துவர்.

80. ஆஹாரம் சுத்தமானால் மனம் சுத்தமாயிருக்கும். நெய் பயத்தம்பருப்பு கீரை முதலிய ஸாத்விக உணவைக் கொள். மனம் நிர்மலமாகும். அதிகாரம் கசப்பு புளிப்பு

முருங்கை வெங்காயம் முதலிய ராஜஸான்னம், காம குரோதத்தை வளர்க்கும். புளித்தபழயது எருமைத்தயிர் முள்ளங்கி ஸாம்பார் முதலிய தாமஸான்னம், மயக்கம் மோஹத்தையே தரும்.

81. தபஸ் மூன்றுவகை. தேவ குரு ஞானிபூஜை, பிரம்மசர்யமிவை சரீரத்தால்செய்யும் தவம். வேதமோதல் ஸத்யம் பிறருக்கு ரணரணகத்தைத்தரு த பிரயவாக், வாசிக தபஸ். மனந்தெளிதல், மௌனம் மன அடக்கம், மனச் சுத்தி மானஸிகதபஸ். ப்ருது பரத்வாஜர் சுகர். மானசிகமே உத்தமம். முடிந்ததைச்செய். பிறவியை வீணாக்காதே!

82. விதியென்றுபலனைக் கோராமல் பதில் உபகாரம் செய்யமுடியாத ஏழைக்கு நல்லதேசகாலத்தில் உஞ்ச விருத்திமாவு தானம்செய்தது ஸாத்விகதானம். பதில் உபகாரத்தை எதிர்பார்த்து திரௌபதி கண்ணனுக்குக் களித்தகிரை ராஜஸதானம். அதேசகாலபாத்ரத்தில் அவ மதிப்புடன் கொடுப்பது தாமஸம். பயனற்ற கிழப்பசுவை வாஜச்ரவஸரளித்தது தாமஸம்.

83. காஷாயமும் தண்டமும் ஸன்யாஸமல்ல. காம்ய கர்மாவைக் கனவிலும் கருதாததே ஸன்யாஸம். மோஹத் தால்நித்ய கர்மாவைவிடின் தாமஸ த்யாகம். செய்யமுடிய வில்லை என விட்டால் ராஜஸம். கர்மாவைச்செய்து பலனை ஈச்வரார்ப்பணம் செய்தால் அதே சரியான த்யாகமாம்.

84. யக்ஞம் தானம் தபஸ் இவை என்றும் உரியவ ரால் விடத்தக்கதல்ல என்று பகவன் இது என்னுடைய உத்தமமானமதம் என வற்புறுத்திக்கூறுகிறார். யக்ஞத்தால் ஜனகனும் தானத்தால் ஜானச்ருதியும் தவத்தால் விச்வா மித்திரரும் நற்கதிபெற்றனர்.

85. கர்ம அனிஷ்டம் இஷ்டம் மிச்ரம் என மூவ்வகை. பற்றுடன் செய்தால் அநிஷ்ட (பாப) கர்மா மிருகப்பிறவியை யும் இஷ்ட கர்மா தேவப் பிறவியையும் மிச்ர கர்மா மாநிடப்

பிறவியையும் தரும். இவை முறையே இரும்பு தங்கவெள்ளி விலங்குகளாம்.

86. பெண்ணாசை பொருளாசை புத்ரஆசை மூன்றும் மோக்ஷத்வார தாழ்ப்பாக்கள். ஸௌபரி 50-பெண்களை மணந்து வலையில்சிக்கி பூர்வவாஸனையால்விடுபட்டார். ஸதாசிவேந்த்ரர் பெண்கொடுக்கவந்தவர், விருந்துக்காக தாய், தாமதித்து அன்னமிட, மனைவிபேச்சே வேளையில் சோறுபோடவில்லையே! என்று துறவியானார். யாக்ஞவல்க்கியர் வேதாந்த பாடம் நடத்தும்போது, அரண்மனை தீப்பற்ற துறவிகள் காஷாயத்திற்காக எழுந்தோடினர். மன்னன்மிதிலை எரிந்தால் எனக்கென்ன என்றார். துறவுபூண்டசுகர்பின் வியாஸர் புத்ர ஆசையால் ஓடினார். சிவன் சுகப்ரதிமையை அளித்து ஆறுதல் கூறினார்.

87. ஸத்வபுத்திக்கு உள்ளது உள்ளபடியே தெரியும். ரஜோபுத்திக்கு சந்தேஹமாக தெரியும். தமோபுத்தி தர்மத்தை அதர்மமாக அதர்மத்தை தர்மமாக எண்ணும். ஸீதையை அபஹரித்தது தப்பென்றுவிலகினான் விபீஷணன். சந்தேஹப்பட்டும் கும்பகர்ணன் தம்பியுடன் சேர்ந்தான். ராவணன் அதுசரி என்றே எண்ணி போர்புரிந்தான்.

88. ஆரம்பத்தில் கஷ்டம்போல்தோன்றும் முடிவில் அமிருதம்போலிருக்கும் ஸாத்விக சுகம். விஷயங்களால் வரும் சுகம், ஆரம்பத்தில் அமிருதமாயும் முடிவில் விஷமாயுமிருக்கும், அது ராஜஸம். ஆரம்பத்திலும் முடிவிலும் மோஹகரமானது, நித்ரை சோம்பல் முதலியவைகளால் வரும் தாமஸசுகம். சிறிக்கச் சிறிக்கச்செய்வதை அழுது அழுது அனுபவிக்கிறோம். இனியாவது ஜாக்ரதை!

89. அந்தந்த ஜாதிக்கும் தனித்தனி தொழில் ஏற்பட்டுள்ளது. அது அவரவர்க்கு இம்மைக்கும் மறுமைக்கும் பயனைத்தரும். அதே பூஜை சமூஹத்தொண்டுமாம். ஜாதித் தொழிலைக் கற்பதும் சுலபம். பிறர் ஜீவநத்திலும் போட்டி

போடாமலிருக்கலாம். மீன்குட்டிக்கு நீய யார் கற்பிக்கிறார்? பெண்களுக்குப் பாகம் கற்பிக்கும் பள்ளிக்கூடமெங்கே?

90. கர்ம பக்தி ஞானம் இதில் ஈடுபடுவோரைக்கலி நான் உயர்ந்தவன், மற்றவர் பாமரர், என்ற அஹங்காரத்தின் மூலமாகத்தடுப்பான். அதற்குச் சிறிதும் இடமளிக்காதே! மங்கணர் எனும் யோகி எல்லாம் நானேஎன உபாஸித்தார். அவர் தர்ப்பையறுக்கும்போது கையில் கத்திபட்டு ரத்தத்திற்குபதில் வாஸனை ஜலம் வந்தது. கர்வங்கொண்டு கூத்தாடினார். உலகே ஆடிற்று. சிவன் ஆண்டிவேடம் பூண்டு கைவிரலைத் தட்டினார். சுப்ரமானவாஸனை நிறைந்த விபூதி உண்டாயிற்று. கர்வமும் அகன்றது.

91. பிறரைப்பற்றி ஒன்றும் சொல்லாதே. உதாஸீனனாயிரு. ஏகதன் த்விதன் திருதன் என மூவர். அவர்களது ஈரவஸ்த்ரம் கையால் பிடிக்காமல் அவர் தலைமீதுகுடைபோல் தானே உலர்ந்துவரும். கருடன் வழியில் பாம்பைக் கொன்றுதின்ன ஏகதர் ஐயோ பாபம்! அதைவிடு என்றார். அவர் தலைத்துணி விழுந்தது. அதைப்பார்த்த த்விதர் நன்றாக சாப்பிடு! உன் உணவது! என அவர் துணியும் விழ்ந்தது. வாயைத்திறவாத திருதர் துணியுடன் வீடு சென்றார்.

92. நமது வாழ்வு நீர்க்குமிழிபோலாம் என்பதை ஸதா நினை. எவ்வளவு அழகாக அரண்மனை கட்டினாலும் நன்றாகயில்லை என்றான் இந்திரன். விச்வகர்மாவின் வேண்டுகோளுக்கிணங்க பகவான் இந்திரனிடம் லோமசரை அனுப்பினார். அவர் தலைமீது ஓர் பாயை வைத்துக்கொண்டு உடலெலாம் மயிருடன் மாரில்மாத்ரம் சக்ரம்போல் மயிரில்லா வேஷத்துடன் வந்தார். இந்திரன் வியந்து மார்பைப் பற்றி கேட்டான். இந்திரர் எனது தாயாதி, ஓர் இந்திரன் இறந்தவுடன் ஒரு மயிரை எடுப்பேன் என்றார். இவ்வளவு இந்திரரிறக்க இவர் சிரஜீவியாயிருப்பது இன்னும் ஆச்சர்யமாயிருந்தது. தலைமீது பாய் ஏன் என்றான். அல்பாயுஸான

எனக்கு வீடு எதற்கு? இப்பாயின் கீழேயிருந்து காலத்தைக் கழிக்கிறேன் என்றார்.

93. கோபம்வரும்படியான கார்யம் நேரும்போது அடக்கமாயிருப்பதே கோபமில்லாமை. காரணமில்லாத போது யார்தான் கோபி? பார்க்கவமுநி பித்ருச்ராத்தத்திற்கு பால்காய்ச்ச ஒரு கீரி மூன்றுமுறை அதைக்கவிழ்த்தது. அப்போதும் அவர் கோபிக்கவில்லை. கீரி நான் தர்மதேவதை. உன்னைச்சோதித்தேன் என்றது. பித்ருக்கள் தர்மரைக் கீரியாகும்படி சபித்தனர். தர்மராஜயாகத்தில் சாபம் அகன்றது.

94. பற்றற்ற நித்யகர்மாவால் பாபமெனும் நோயை அகற்றிக்கொள்! பலனைவிரும்பாத பக்தியெனும் ரஸாயநத்தால் ஞானமெனும் புஷ்டியைத் தேடிக்கொள். முக்தி உன்கைமீதுளது.

95. என்னகஷ்டம் வந்தாலும் பகவானையும் பூஜையையும் விடாதே! சிலஸமயம் தேவர்களும் பகவானும் கடுமையாக பரீக்ஷிப்பார்கள். ஏமார்ந்தால் மோசம். பொறுமையுடனிருந்தால் முடிவில் கைவிடமாட்டார். கஷ்டத்தில்தான் மனமுருகபகவானைச் சிந்திப்போம். குந்தி எப்போதும் கஷ்டமேவரட்டுமென வரங்கேட்டாள்.

96. கடைசியாக கீதையின் பரமதாத்பர்யமாக பகவான் ஆழ்ந்த பக்தனென்று உனக்கு சொல்கிறேனென்று பரமாஹஸ்யமாய் ஸாரமாய் கூறும் உபதேசம், பகவானையே மனதில்வை! பகவத் பக்தனாயிரு! பகவதாக்ஞாரூபமான கர்மாவைச்செய்! பகவானை வணங்கு! பகவானையே அடைவாய்! ஸத்யம்!!

97. ஸர்வதர்மங்களையும் ஒழுங்காகச்செய்து பகவானிடத்தில் அர்ப்பணம்செய்துவிட்டு அவர் ஒருவரையே சரணமடை! ஸகல பாபங்களிலிருந்தும் அவர் உன்னைக் கரையேற்றுவார்! துக்கம்வேண்டாம்!

98. நல்லவிஷயத்தைத் தபஸ் இல்லாதவனுக்கும் பக்தியில்லாதவனுக்கும் ச்ரத்தையில்லாதவனுக்கும் வேண்டுமென ஆசார்யனைத்தேடி பணிவிடை செய்யாதவனுக்கும் கூறுதே? ஏன்? அத்தகையோரை அன்றோ நல்வழிபடுத்தல் வேண்டும்? நோய் தனக்குக் கண்டுளது, அது அகல வேண்டுமென்று கோராதவனுக்கு வைத்தியஞ்செய்தால், காசுக்காகசெய்வதாக நினைப்பான். மருந்தும் பிடிக்காது. தன்னைக் கெடுப்பதாகவும் நினைப்பான்.

99. பக்தனிடம் கீதோபதேசத்தை ப்ரசாரம் செய்தால், அது ஞானயக்ஞம் செய்ததுபோலாம். உத்தம சிஷ்யனான அர்ஜுநன் கேட்டான். சந்தேஹமகன்றது. சொன்னதைச் செய்வேனென ஸ்வதர்மமானயுத்தத்தைப் பலனைக்கோராமல் செய்து முடித்தான்.

100. எங்கு தர்மமிருக்கிறதோ அங்கு கிருஷ்ணன் இருப்பார். அவர் எங்கிருக்கிறாரோ? அவர் பக்தர் எங்கு இருக்கிறாரோ அங்கு லக்ஷ்மி, ஜயம், நீதி முதலியன இருக்கும், வேர்போன்ற தர்மத்தைக் கைகொண்டு கீதா விருக்ஷத்தின் பழமான பகவத்ஸ்வரூபத்தை அடைவோம்.

ஓம் தத் ஸத்.

ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா தொடுத்து
பகவதர்ப்பணம் செய்த
ஸ்ரீ கீதோபதேசரத்நமாலையைப் பக்தரணிந்து
பேராநந்தம் பெறுக!

கிருஷ்ணார்ப்பணம்.

# ஸ்ரீ பகவத்பாத கீதாசயம்.

உலகைப்படைத்து பகவான் அவ்வுலகின் நன்மையை நாடி பிருவிருத்தி தர்மத்தை மரீசி முதலியவர்களுக்கும் நிவிருத்தி தர்மத்தை ஸநகாதிகளுக்கும் உபதேசித்தார். நீண்ட காலமானபின் அநுஷ்டிப்பவர்களுக்கு காமமுண்டானதால் தர்மங்குறைந்து அதர்மம் தலைதூக்கிற்று. வைதிக தர்மத்தையும், பிராம்மண ஜாதியையும்காக்க தேவகியினிடத்தில் வஸுதேவனம்சத்தால் பகவான் கிருஷ்ணனாகத் தோன்றினார். வர்ணாச்ரம தர்மம் பிராம்மண அதீனமானதால் பிராமணனை ரக்ஷித்தால் உலகை ரக்ஷித்ததுபோலாம். மாயையை அடக்கிவைத்திருக்கும் பகவான் லோகாநுக்ரஹத்திற்காக உடலெடுத்ததுபோல் காட்டினரே யல்லாது அவர் வாஸ்தவமாக நம்மைப்போல் கர்மாதீனமாகப் பிறக்கவில்லை. அவருக்கு ஸ்வப்ரயோஜந மொன்றுமில்லாவிடினும் சோகமோஹக் கடலில் மூழ்கியிருக்கும் அர்ஜுநனுக்கு இருவகை தர்மத்தையும் உபதேசித்தார். அதிக குணம் வாய்ந்தவர் அனுஷ்டித்தால் அந்த தர்மம் எல்லோராலும் நன்கு அனுஷ்டிக்கப்படும். கீதா சாஸ்த்ரம், மாயையுடன் ஸம்ஸாரத்தை அறவே அகற்றி முத்தியையளிக்கும். தேவத்வம் ஸ்வர்க்கம் முதலியவைகளைத்தரும் வர்ணாச்ரம தர்மங்கூட காமனையின்றி ஈச்வரார்ப்பண புத்தியுடன் அனுஷ்டிக்கப்படின், சித்த சுத்தியைத்தந்து, ஞானம் உதயமாகி பரம்பரையாக மோக்ஷத்திற்கும் காரணமாகும்.

விஷாதயோகம் ஸம்ஸாரத்திற்கு விதைபோன்றது சோக மோஹமெனக் காட்டுகிறது. சோக மோஹங்களால், ஸ்வதர்மமான யுத்தத்தில் பிரவிருத்தித்த அர்ஜுநனுக்கு அது ஹிம்ஸாகரமானதென்றும் ஸந்யாஸ தர்மமான பரதர்மமே சிறந்ததென்றும் எண்ணந்தோன்றிற்று. முடிவே இல்லாத ஸம்ஸார துன்பத்தையளிக்குமிவை ஸர்வ கர்ம ஸன்யாஸ பூர்வமான ஆத்மஞாநம் ஒன்றால்தான் அகலும். *கர்மாவும் ஞாநமும் சேர்ந்தே மோக்ஷத்தை அளிக்கின்ற

*விருத்திகாரரது மதம்.

தென்பது பொருத்தமில்லாதது. ஏன்? ஞானம்வேறு. கர்மாவேறு. இவைகளுக்கு அதிகாரிகளும் தனித்தனி யாவர் என பகவானே, ஏஷாதே பிஹிதா, கர்மயோகே நயோகிநாம், என பிரித்துக் கூறுகிறார். இரண்டும் ஒரு வருக்கே அனுஷ்டிக்கத்தக்கதெனில், கர்மாவைவிட ஞானம் சிறந்ததெனில் என்னையேன் கோரமானகர்மாவைச் செய்யச் சொல்கிறீர் என்றும், இவ்விரண்டில் ஒன்றையெனக்கு நிச்சயமாகக்கூற் என்றும் அர்ஜுநன்கேள்வி அர்த்தமில்லாத தாம். கர்மாவினாலேயே ஜனகாதிகள் ஸித்தி அடைந்தனர் என்ற சொல்லுக்கு ஜநகன் ஞானியாயினும் லோகஸங்க்ரஹத் திற்காக கர்மாவைச்செய்தார், என்று பொருள். ஸ்வ கர்மாவால் அவனை அர்ச்சித்து மனிதன் ஸித்தியடைகிறான் என்ற சொல்லில் ஸித்தியென்பதற்கு சித்தசுத்தி என்றே பொருள். அதன்பிறகு "ஸித்தியடைந்தவன் பிரும்மஸ்வ ரூபத்தை அடையும்" வகையைப் பகவான் கூறுகிறார். ஆதலின் கீதையில் தத்வஞானத்தினால்மாத்ரம் தான் மோக்ஷப்ராப்தி. கர்மஞான ஸமுச்சயத்தாலல்ல என்பது ஸித்தம். விதிநிஷேதங்கள் இதைச்செய், இதைச்செய்யாதே என்பன.—பிரவிருத்தி சாஸ்திரத்திலேதான் பொருந்தும். நிவிருத்தி சாஸ்திரத்திலோ அநுவாதமாத்ரமாம். ஏற்கனவே யுத்தத்தில் பிரவிருத்தித்த அர்ஜுநனுக்கு சோகமோஹங் கள் அதைத்தடுத்தன. யுத்யஸ்வ சண்டைசெய் என்ற பக வானது சொல்ப்ரதிபந்தத்தை அகற்றுவது மாத்ரமே. ஆத்மா அவிக்ரியன் என்றறிந்து மோக்ஷம் வேண்டுமென விரும்புபவனுக்கு ஸன்யாஸமே விதிக்கப்பட்டுளது கர்மா வல்ல.

*நான் பிறப்பு இறப்பு இல்லாதவன். அகர்த்தா அபோக்தா என்ற அநுபவம் எவருக்கும் இல்லாததால் ஸன்யாஸவிதி பொருத்தமில்லாதது. எனில்? சாஸ்திர ஆசார்ய உபதேசங்களால் சமதமாதிகளைப்பெற்ற மனம் சிலருக்கு இத்தகைய அனுபவத்தை உண்டுபண்ணும். நானே பீஷ்மாதிகளைக்கொல்லும் கர்த்தா! அந்த பலனை அனுபவிக்கும் போக்தா! என்ற அர்ஜுநனது எண்ணம்,

* மீமாம்ஸகமத கண்டநம்.

அக்ஞானம். அதை அகற்றவே "உபௌமௌ நவிஜாநீத:" என்று ஞானத்தைக் கூறுகிறார். கீதையின் இரண்டுமூன்று இவ்விரு அத்யாயங்களால் ஸகல வேதசாஸ்திரங்களிலும் கூறப்பட்ட ஞானநிஷ்டாலக்ஷணமான ஸன்யாஸமும் கர்ம யோகமும் வர்ணிக்கப்பட்டது. இதன்விரிவே மற்ற கீதா அத்யாயங்களால் கூறப்படுகிறது, என்ற எண்ணத்தால்தான் பகவான் நான்காமத்யாய ஆரம்பத்தில் பலச்ருதிபோல் வித்யையின் வம்சத்தை வர்ணிக்கிறார்.

4-18. கர்மண்யகர்ம—த்ருஷ்டி தோஷத்தினல் ஒருவன், பழுதையிடம் பாம்பென அத்யாஸம் (விபரீதபாவனை) செய்கிறான். அதேபோல் வண்டி ஓடும்போது அருகிலுள்ள மரங்களை ஓடுவதாகவும் வெகுதூரத்தில் ஓடும் வஸ்து அசைவில்லாததாகவும் எண்ணுகிறோம். நமது உடல் வேலை செய்யும்போது நாம் கர்மாசெய்வதாக எண்ணுவது அத்யாஸம். நாம் என்பவன் என்றும் வேலைசெய்வதில்லை. இது கர்மாவில் அகர்மதர்சனம். நாம் பேசாமலிருக்கிறோம் என்று கை கால்களை அசைக்காதபோது மனம் வேலை செய்கிறது. இது அகர்மாவில் கர்மதர்சனம். இந்த க்ஞானம் உள்ளவனுக்கே பலன் கூறப்படுகிறது.

† இங்கு கர்மவாதிகள் கர்மாவில் அகர்மா என்பதற்கு ஈசனுக்ஞையென்று செய்யும் நித்யகர்மாக்களுக்கு பலன் இல்லாததால் அது அகர்மா, (கறக்காத பசுவை அது பசு அல்ல என்பதுபோல் கௌணமாக) என்றும், நித்யகர்மாவை செய்யாமல்விட்ட அகர்மாவில், அது பாபத்தை அளிப்பதால், கர்மா என்றும், பொருள்கூறுவது தவறு. இப்படி அறிவதால் "யத்ஞாத்வா மோக்ஷ்யஸே அசுபாத்" என்ற மோக்ஷம் வராது. அசுபம் எனும் மாயையும் இதனல் அகலாது.

5. கர்மஸன்யாஸத்தையும் கர்மாவையும் பகவான் ப்ரசம்ஸை செய்வதால் இரண்டில் ஒன்றைக்கூறு என்று அர்ஜுனன் கேட்கிறான். பகவானும் இரண்டும் மோக்ஷத்தை அளிப்பன. ஆனல் கர்மஸன்யாஸத்தைவிட கர்மா சிறந்தது

† வார்த்திககாரர்.

என்றார். இங்கு பகவான் முன்கூறியதிலும் இப்போது கூறியதிலும் இரண்டும் மோக்ஷத்தை அளிப்பவையென்று ஸ்தூலமாகத் தோன்றும். அன்றியும் கர்மயோகோவி சிஷ்யதே, "ஸன்யாஸமடைவதற்குக் கஷ்டமானது. யோக யுக்தன் சீக்ரமாக பிரும்மத்தை அடைகிறான்." என்ற வாக்யமும், கர்மமார்க்கமே மோக்ஷத்திற்கு ஸாதனம் என்ற எண்ணத்தை அளிக்கும். உண்மையாது? எனில் அர்ஜுனன் ஞானம்வராமல் கர்மஸன்யாஸம்செய்து பிறகு வேதாந்த விசாரத்தால் ஞானம்பெறுவது, கர்மாக்களைக் காமனையின்றி செய்து, ஈச்வரார்ப்பணம் செய்வது இவ்விரண்டில் ஒன்றை நிச்சயித்துத் தனக்குக்கூறும்படி பகவானை வேண்டினான். பகவான் இரண்டையுங்கொண்டாடி கர்மஸன்யாஸத்திலுள்ள சில கஷ்டங்களை நினைத்து இத்தகைய கர்மயோகத்தைச் சிறந்த ஸாதனமென்றார். இக்கர்ம, சித்தசுத்தியையும் பின்னர் ஞானத்தையுந்தந்து மோக்ஷஸாதனமாகும்.

கர்ம ஸன்யாஸத்திலுமப்படியே. ஆனால் அத்தகைய ஸன்யாஸி ஞானாப்யாஸம் செய்யும்போது ஸன்யாஸாச்ரம தர்மத்திலிருந்து சிறிது வழுவினால் பல துன்பங்களுண்டு. கர்மயோகிக்கு அவ்வளவில்லை. ஆதலின் அதைப்போற்றினார் பகவான். யோகயுக்தன் பிரும்மத்தை அடைவான் என்ற வாக்யத்திலுள்ள பிரும்மசப்தத்திற்கு நாராயண உபநிஷத் (78) மந்த்ரப்படி ஸந்யாஸமே பொருள். ஆதலால் கர்மயோகி விரைவில் ஸந்யாஸத்தையே அடைவான். ஞானத்துடன் கூடிய ஸன்யாஸத்தால்தான் மோக்ஷம்.

6. தியானயோகமே ஞானத்திற்கு அந்தரங்க ஸாதநமென்று (5-27) கூறிய ஸூத்ரத்திற்கு ஆறுமத்யாயம் விரிவுரை. தியானயோகத்திற்கு பாஹ்ய அங்கமான நித்ய நைமித்திக கர்மாக்களைக் கிருஹஸ்தன் தியானயோகாருடனாக ஆகும்வரை விடாமல்செய்யவேண்டும். இக்கருத்துடனே (6-3) ஆருடனுக்கு ஸன்யாஸமும் ஆருருக்ஷுவுக்கு கர்மாவும் காரணமென பகவான் உபதேசித்தார். தியான மார்க்கத்தை அவலம்பித்த கிருஹஸ்தன் ஸித்தி அடையாவிடில் (6-38) ஞானம் கர்ம இரண்டிலிருந்தும் நழுவி நாசம்

அடைவானே? என்று அர்ஜுநன் கேட்பது மிகப் பொருத்தமானது.

12. இரண்டாம் அத்யாயம் முதல் பத்தாமத்யாயம் வரை, ஸர்வ உபாதியிலிருந்தும் விடுபட்ட அக்ஷரஸ்வரூபமான பரமாத்ம உபாஸனம் கூறப்பட்டது. விச்வரூப அத்யாயத்தில் ஸகுணமான விச்வரூபத்தைக்காட்டி "மத்கர்மகிருத்" எனக்காக கர்மாவைச்செய் என்று ஓர் உபாஸனை கூறப்பட்டது. இப்படி நிர்க்குணோபாஸனம் ஸகுணோபாஸநம் செய்பவர்களில், யார் யோகமறிந்தவரில் சிறந்தவர் என்று அர்ஜுநனது கேள்வி. ஸகுண உபாஸநத்திற்கே ஏற்றவரான அர்ஜுநனைப்பார்த்து, நிர்க்குணோபாஸன விஷயமிருக்கட்டும் அது எல்லோருக்கும் பிடிபடாது. சிரமமாயிருக்கும். ஸகுணோபாஸனம் செய்பவர் என்னை அடைந்து யானளித்த ஞானத்தைக்கொண்டு முக்திபெறுவர். அக்ஷரோபாஸகர்கள் என்தயவில்லாமலே நேராக முக்திபெறுவர். ஆதலால் மந்தாதிகாரிகளனைவரும் நிஷ்காம்ய கர்மாவால் பகவானை ஆராதித்து அவர் மூலமேமுக்திபெற வேண்டும்.

13. ஏழாமத்யாயத்தில் பகவானுக்கு இரண்டு பிரகிருதிகள் உண்டென்றும் அதில் எட்டுவகையாகப் பிரிந்த அபராபிரகிருதியே ஸம்ஸாரஹேதுவென்றும் பராபிரகிருதி ஜீவ வடிவமானதென்றும் இவ்விரண்டு பிரகிருதிகளாலும் பகவான் உலகில் வியாபித்திருக்கிறாரென்றும் கூறப்பட்டது. க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞவடிவமான இரண்டு பிரகிருதிகளையும் நன்கு அலசி ஈச்வரதத்துவத்தைக் கூறவே இந்த அத்யாயம் ஆரம்பிக்கப்பட்டது. ஸர்வ க்ஷேத்ரங்களிலும் ஆத்மா ஒருவனே இருக்கிறான். வேறில்லை எனில் ஆத்மாஸம்ஸாரி, ஸுகதுக்கபோக்தா, என்றல்லவோ ஆகிறது. ஈச்வரனை நம்து ஆத்மாவுக்கில்லை ஸம்ஸாரமெனில், யாரோஸம்ஸாரி துக்கமனுபவிக்க, ஸம்ஸாரத்தை அகற்றி மோக்ஷத்தையளிக்க வல்லதான சாஸ்த்ரம் நம்மிடம் பயனற்றதாகிறது. ஆதலால் ஆத்மாவும் ஈச்வரனும் ஒன்றேயென்று கூறுவது பொருத்தமில்லை. என ஆக்ஷேபம்தோன்ற பகவத்பாதாள் ஸமாதாநம் கூறுகிறார்கள்.

ஆத்மாவும் ஈச்வரனும் ஒன்றே. அனாதியான அக்ஞானத்தினால் ஈச்வரனை ஆத்மாஸம்ஸாரி, எனஎண்ணிவருகிறோம். பலர் தன் உடலையே தான் என எண்ணுவதுபோல் ஈசனை ஸம்ஸாரியாக நினைத்து, அறிவு வந்தபின்; உடலல்ல நான். அதற்குள் வேறொன்றிருக்கிறது. அதே நான் என உணருவதுபோல், ஆத்மா என்பவன் ஈச்வரனே. அவனுக்கு ஸுகதுக்காதிகள் இல்லையென எண்ணுகிறோம். ஆதலால் மாயாகல்பிதமான ஸம்ஸாராதி துக்கங்கள், நமக்கு இல்லையென்று உணரும்வரை தன்னை ஸம்ஸாரியாக நினைத்து வருந்துபவனுக்கு சாஸ்த்ரோபதேசம் ஆத்மேச்வர ஐக்யத்தைக் கூறுவது அவச்யமே. அக்ஞானத்தால் அத்யாரோபம் செய்யப்பட்ட ஸம்ஸாரித்வம், பாலர்களால் கூறப்பட்ட கறுப்புநிறம் ஆகாயத்தில் எப்படி ஒட்டாதோ அங்ஙனமே ஆத்மாவிற்குக்கிடையாது.

அவித்யையிருப்பதால் ஆத்மாவுக்கு ஸம்ஸாரித்வம் உண்டெனில், இருளில் ஓர் வஸ்து நமக்குத்தெரியவில்லை. என்றதால் அந்த பொருளே அங்கில்லையெனத் தகுமா? ஞானம் வந்தபின் இருள்மயமான மாயை அகல்கிறது. ஆத்மஸ்வரூபம் பிரகாசிக்கின்றது. அப்படியிருக்க எப்படி ஆத்மாவை ஸம்ஸாரி என்பது? ஸம்ஸாரியல்லாதவனை ஸம்ஸாரியாக நினைப்பது ஞாதாவான ஆத்மதர்மமோ எனில் இல்லை. மஞ்சக்காமாலை உள்ள ஒருவன் உலகிலுள்ளதை மஞ்சளாகக் கண்டால் அது அவன் தோஷமுமல்ல, பொருளின் தோஷமுமல்ல. கண்தோஷமே. அப்படியே கரணங்களது தோஷமே தவிர ஞாதாவின் தோஷமல்ல. கண்ணின்தோஷம் வஸ்துக்கள் மீது ஆரோபணம் செய்யப்படுவதுபோல் கார்ய காரண ஸங்காதங்களது செயல் அவித்யையால் நிஷ்கிரியனான ஆத்மா மீது அத்யாஸம் செய்யப்படுகிறது. ஆத்மா நிஷ்கிரியனே.

ஆத்மாநித்யன், ஸம்ஸாராதி துன்பமில்லாதவன் எனில் பிரும்ம வித்யையால் ஸம்ஸாரத்தை அகற்றி மோக்ஷமடை என்ற சாஸ்த்ரம் வீணல்லவா? இல்லை. ஸம்ஸாரத்திலகப்பட்டவன்போல் துவைதநிலையில் துன்பமனுபவிப்பவனுக்கு அவன் அக்ஞானத்தை நீக்க சாஸ்த்ரம் அவச்யமே,

ஞானம்வந்தபின் அவனைப்பற்றியவரை சாஸ்த்ரம் பயனற்றதாயின் அது நமக்கிஷ்டமே.

ஓர்முக்தன் ஞாநாக்நியால் அக்ஞாநமல்லது மாயையை எரித்துவிட்டால் எல்லோருக்கும் ஏன் மோக்ஷம் வரக்கூடாது? இருட்டுவேளையில் பலர் ஓர் கட்டையைக் கண்டு யாரோ திருடன் நிற்கிறானென்று பயந்து ஓடினர். ஒருவன் திருடன் அப்படியே நிர்ப்பானா? ஓடமாட்டானா? என்று யோசித்து அவ்வழியேவந்த நண்பன்மூலம் அது கட்டையென அறிந்து அதனருகே அச்சமின்றி போகிறான். அதனால் மற்ற ஓடியவர் அக்ஞானமும் பயமும் போகாதல்லவா? அதேபோல் ஞாநிக்கே அக்ஞானம்போம். ஆத்மா நித்யஞானவடிவன். யாருக்கு அக்ஞானம்? யார் தனக்கு ஆத்மஸ்வரூபம் தெரியவில்லை. மாயை என்னைக் கஷ்டப்படுத்துகிறதென்று நினைக்கிறானோ அவனுக்கே அக்ஞானம். நாம் அவித்யையால் சூழப்பட்டிருக்கும்போது, அவித்யை நம்மைப் பீடிக்கிறதென்று அவித்யைக்கும் ஆத்மாவுக்கும் உள்ள ஸம்பந்தத்தை அறிபவன் இவ்வாத்மாவைவிட வேறானவனல்ல. வேறெனில், அந்த ஞானத்தையறிபவன் வேறு. அதை அறிபவன்வேறென அநவஸ்தை உண்டாகும்.

**13-12.** அமிருதத்தை அளிக்கத்தக்க க்ஞேயத்தைக் கூறுகிறேனென்று கூறி அது ஸத்துமல்ல. அஸத்துமல்ல, எனில் எப்படி பொருந்தும்? இருக்கிறது, இல்லை என்ற வியவஹாரம், புத்தியைச்சார்ந்தது. அதற்கு ஸாதநம் ஐம்புலன்கள். அதைக்கொண்டு இங்கு பானையிருக்கிறது இல்லை என நிச்சயிக்கிறது. ஆத்மஸ்வரூபமோ இவைகளுக் கெட்டாதது. ஆதலால் கேநோபநிஷத் (1-3.) நீ அறிந்ததையும் அறியாததையும்விட ஆத்மாவேறென்கிறது. நமது இந்திரியங்களுக்கு விஷயமானபொருள்கள் ஜாதி, குணம் கர்மா ஸம்பந்தம் இவைகளுக்கு ஆச்ரயமாக இருக்கின்றன. பசு குதிரை இது ஜாதி, வெளுப்பானது, கறுப்பானது, இது குணாச்ரயம். அவன் படிக்கிறான், போகிறான் என்பது கர்மாச்ரயம். பணக்காரன் புத்திசாலி என்பது ஸம்பந்தாச்ரயம். நிஷ்கலன், நிஷ்கிரியன், சாந்தன் என ச்வேதாச்வதரமும்,

(6-19) வாக்கும் மனது அவனிடமிருந்து திரும்புகின்றன. (2-9) என தைத்தரீய உபநிஷத்தும் ஆத்மஸ்வரூபத்தை வர்ணிப்பதால் ஸத் அஸத் என வியவஹரிக்க முடியாதது ஆத்மா. கீ. (12-23.) "நஸபூயோபிஜாயதே" அவன் மறுபடி பிறப்பதில்லை. ஞானம் வந்தபிறகு வேண்டுமானால் அதனால், எரிக்கப்பட்ட கர்ம ஜன்மாவைத் தராமலிருக்கலாம், அதற்குமுன் இப் பிறவியில் செய்த கர்மாவும், ஸஞ்சித கர்மாவும், பிராரப்த கர்மாவைப் போல் அநுபவியாமல் கர்மா போகாததாதலால் ஒவ்வோர் பிறப்பைத்தருமோ? எனில் இல்லை. அவன் கர்மாக்கள் க்ஷயிக்கின்றன. (முண்டகம். 2.2.8) அவனுக்கு அவ்வளவு தான் தாமதம். (சாந்தோக்யம் 6.14.2.) எப்படி அக்நி கட்டைகளை எரிக்கிறதோ என்ற கீதா (4-37) வாக்யங்களாலும், ஸஞ்சிதம், பிராரப்தம், ஆகாமி எனும் முவ்வகைக் கர்மாக்களும் ஒழிவதால் மறுபிறப்பென்பது ஞானிக்குகிடையாது. வில்லாளி தன் பாணப்பெட்டியிலிருந்து ஓர் பாணத்தை வில்லில் கோற்றுவிடும்வரை, அவனுக்கு அது ஸ்வாதீனமானது. அதை விடாமல் பெட்டியிலே போடலாம். நினைத்தயிடந்தவிர வேறிடத்திலும் விடலாம். ஆனால் விட்டபின் அது வேகமுள்ளவரை போய்தான் விழும். விட்ட அம்பைப்போன்றது பிராரப்தகர்மா. ஆயினும் அது ஞானியிடம், எரிந்ததுணி மடிபிரிக்காமல் அப்படியே கருகிக் காணப்படுவதுபோலிருக்கும். எரிந்த மடித்துணிமேலே போட்டுக்கொள்ள பயன்படாததுபோல் ஞானிக்கு பிராரப்த கர்மாகூட இன்பதுன்பங்களைத்தரா. ஆதலால் ஞானிக்கு மறுபிறப்பில்லை.

18. கீதா சாஸ்த்ரத்தின் எல்லா விஷயத்தையும், ஸமஸ்தவேதாந்தத்தையும் சுருக்கமாகக் கூறவே இவ்வத்யாயம் ஆரம்பிக்கப்பட்டது. பிராம்மணாதி வர்ணங்களும் அவைகட்குரிய கர்மங்களும் அந்த ஜீவனது முற்பிறவியின் ஸத்வாதி குணங்களைக்கொண்டே சாஸ்தாவான பகவானால் படைக்கப்படுகின்றன.

18-50. நிஷ்காம்யகர்ம நிஷ்டாரூபமான பகவதாராதனத்தால், ஸித்தியடைந்தவர் எத்தகைய ஞானநிஷ்டையை

அடைகிருர்? என பகவானுரைக்கிருர். இங்குள்ள ஞான நிஷ்டை எத்தகையது? நிஷ்டையெனில் ஸமாப்தியென்று பொருள். ஞானஸமாப்தி எப்படிப்பட்டது? ஒரு பொருளைக் கண்ணுல் பார்க்கும்போது கண்வழியாக புத்தி வெளியில் வந்து, அப்பொருள்ரூபமாக மாறுகிறது. ஆத்மாவோ ரூப மற்றது. ஆதலின் ஆத்மாகாரமாக புத்தி பரிணமத்தை அடைந்தபின்னல்லவோ ஆத்மக்ஞானம் வரும்? ஆத்மாரூப மில்லாததால் புத்தி ததாகாரமாகமாருததால் ஆத்மஞானத் திற்கு வழியில்லை. எனில், ஆத்மா நிர்மலமானது, அகண்ட மானது, சுத்தசைதன்யவடிவமானது. அதனிடம் செல்ல கண்ணுக்கோ, புத்திக்கோ இடமில்லை தான். புத்தி நிர்மல மாக இருக்கும்போது சுத்தசைதன்யஒளி சிறிது அதன் மேல் விழ அது மனதையும் மனது இந்திரியங்களையும் அவை உடலையும் பிரகாசப்படுத்துகிறது. அத்யாத்ம விஷயத்தின் கந்தமில்லாதவர் அந்த உடலையே ஆத்மா என்று நினைக்கின்றனர்.

தேஹாத்மவாதி, இந்திரியாத்மவாதி; மன ஆத்மவாதி, புத்யாத்மவாதி, அவ்யக்தாத்மவாதி என பலர் பல வகை யாகக் கூறுகின்றனர். ஆத்மஞான ஒளியின் லேசத்தைக் கொண்டே இவைகள் தோன்றின. உலகப்பொருள்களில் பார்க்கும் பொருள்ரூபமாக ஞானம் மாறுவது உண்மை. ஆத்மவிஷயக்ஞானம் அப்படியல்ல. ஆத்மாவின் மீது அத்யாஸத்தால் சுமத்தப்பட்ட அக்ஞானத்தை அகற்றுவது என்பதே ஆத்மஞானமாம். ஆத்மாவோ, ஆத்மஞானமோ நமது செயலுக்கு உரியதல்ல. அது எங்கும் எல்லோருக்கும் நான் நான் என பிரஸித்தமானதே. அவித்வானே ஆத்மா வெகு தூரத்திலிருக்கிறதென்பான். பாஹ்ய வஸ்துக்களில் மனதைவைத்து, குருப்ரஸாதமும், ஸத்ஸம்ப்ரதாயமும் இல்லாதவர், ஆத்மசுகத்தை எப்படிப்பெறமுடியும்? ஆத்மா ப்ரத்யக்ஷமாக அறியத்தக்கது. (கீ. 9-2) என்கிருர் பகவான். தன் உடலைப்பார்க்க எப்படி வேறுஸாதனம் வேண்டாமோ அப்படியே நம்மைப்பார்க்க வேறுப்ரமாணம் வேண்டாம். ஆதலின், ஆத்மஞான நிஷ்டைவித்வானுக்கு ஸுப்ரஸித்த மானதே. ப்ரத்யகாத்ம விஷயமான தைலதாரைபோன்ற

பிரத்யபஸ்ந்தானமும், ஞானநிஷ்டையின் பொருளாகும்.

18-66. இந்த கீதா சாஸ்த்திரத்தில் மோக்ஷஸாதன மாகக் கூறப்பட்டது கர்மாவா? ஞானமா? என விசாரித்தல் அவச்யம். என்? கீதை கேட்டபின் அர்ஜுனன் துாவறம் பூண்டு ஞானநிஷ்டனாகவில்லை. ஸ்வதர்மமான யுத்தத்தை யே, கைக்கொண்டான். அன்றியும், ஞானமும், கர்மாவும் ஸமபலமாகவே கூறப்பட்டிருப்பதுபோல் ஆங்காங்கு வாக்யங்கள் அமைந்திருக்கின்றன. யத்ஞாத்வா அமிருத மச்னுதே (13-12) ததோமாம் தத்வதோஞாத்வா (18-55) முதலியன ஞானமே மோக்ஷஸாதனமென்கின்றன. கர்மண்யேவாதிகாரஸ்தே (2-47) குருகர்மைவ (4-15) என்பன கர்மாவைப்போதிக்கின்றன. ஆகலின் ஸம்சயம். அதை விசாரித்தேதிரவேண்டும்.

ஸித்தாந்தமென்ன? கேவலஞானமே மோக்ஷஸாதனம். கர்மா அல்ல. கர்மாவோடுகூடிய ஞானமுமல்ல. என்? அகிருதம் கிருதத்தினுலில்லை எனும் ச்ருதி, நித்யமான மோக்ஷம், அநித்யமான கர்மாவினுல் வராது என்கிறது. கர்மா, நான்வேறு, பிரும்மம்வேறு, நான் இன்னவர்ணம்! இன்ன ஆச்ரமம்! என்ற பேதபுத்தியுள்ளவன் செய்யத் தக்கது! ஞானமோபேதத்தை அகற்றி பிரும்மம் ஒன்றே அதற்கு ஜாதியில்லை. எனும் தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டது. ஆதலின் பகலும் இரவும் ஒன்றுசேராதது போல் கர்மாவும் ஞானமும் ஒருநாளும் சேராது. கர்மாவின் பிரவிருத்தி நிமித்தம் வேறு. இருள் இருளைப்போக்காது. அவனை அறிவதனுல்தான் மோக்ஷம் வேறு வழியில்லை. (3-8) என ச்வேதாச்வதர உபநிஷத் கூறுகிறது. தோலை மடிப்பதுபோல் ஆகாசத்தை மடிக்க முடியாது. க்ஞாநிக்கு வருவதுபோல் அவித்வானுக்கு மோக்ஷம் வராது. அவித்வத் விஷயம் கர்மா. வித்வத்விஷயம் ஞானம், என பகவான் பகுத்துப் பல இடங்களில் ஸ்பஷ்டமாகக் கூறுகிறார். உபௌதௌ நவிஜாநீத: (2-11) வேதாவிநாசிநம் நித்யம் (2-21) ஞானயோகேந ஸாங்க்யாநாம் கர்மயோகேநயோகிநாம் (3-3) அக்ஞானாம் கர்மஸங்கினாம், மக்வா நஸஜ்ஜதே (3-28) ஸர்வகர்மாணி மநஸாஸந்யஸ்யாஸ்தே (5-13)

நைவகிஞ்சித்கரோமீதி (5-8) ஆருருக்ஷோர்முனே (6-3) ஞானீ த்வாத்மைவமேமதம் (7-18) கதாகதம் காமகாமாலபந்தே (9-21) ததாமிபுத்தியோகந்தம் (10-10) அத்வேஷ்டா ஸர்வ பூதாநாம் (12-13) இது முதலிய இடங்களில் பகவான் நேராகவே கர்மாவால் முக்தியில்லை. ஞானத்தால்தான் முக்தி. இரண்டும் ஒன்று சேராதுயென்று நன்கு விளக்கி விட்டார். தர்மம் அதர்மம் முதலிய எல்லாவற்றையும் விட்டுவிட்டு பரமஹம்ஸ பரிவ்ராஜக ஆசிரமத்தைப்பெற்று, தன்னைவிட வேறில்லாது ஸர்வபூதங்களிலும் கர்ப்பஜன்மஜரா மரணமில்லாதவனான பரமாத்மாவைச்சரணமடை. அதாவது என்னைத்தவிர அவன்வேறல்ல என்று எண்ணு! பந்தரூப மான, ஸர்வ பாபங்களிலிருந்தும் உன்னை விடுவிக்கிறேன், அதாவது ஸ்வாத்மபாவத்தை ப்ரகாசப்படுத்துகிறேன்.

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய

ஓம் தத் ஸத்

ஓம் நமோ குருப்ய:

ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா திரட்டிய

ஸ்ரீ பகவத்பாத கீதாசயம்

முற்றிற்று.